

# ஈஸ்வர...

மேலாண்மை
**பொன்னுச்சாமி**

வானதி பதிப்பகம்

# ஈஸ்வர...

மேலாண்மை. பொன்னுச்சாமி

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை—17.

முதற்பதிப்பு டிசம்பர் - 1998

இரண்டாம் பதிப்பு : : டிசம்பர் - 2010

உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ரூ. 75.00**

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

- TITLE : ESWARA
- AUTHOR : MELANMAI PONNUSAMY
- LANGUAGE : TAMIL
- SUBJECT : SHORT STORIES
- EDITION : SECOND EDITION, DECEMBER - 2010
- PAGES : 248
- PUBLISHED BY : VANATHI PATHIPPAKAM
  23, Deenadayalu Street
  Thyagaraya Nagar
  Chennai - 600 017
  Phone : 24342810, 24310769
  Email:vanathipathippakam@vsnl.net
  Website:www.vanathi.in
- PRICE : **Rs. 75.00**

Typesetting : AMARAVATHI GRAPHICS
Chennai - 33. Cell : 9444169725

*Printed at :* **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166.

# பதிப்புரை

**சூ**ரியனுக்கு விளக்குப் போட்டுக் காட்ட வேண்டியதில்லை. நல்ல எழுத்துக்களை மட்டுமே, மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிப்பாய்க்கொண்டு படைத்தளிப்பவர் மேலாண்மை. பொன்னுச்சாமி.

வானதி பதிப்பகம் முன்பே இவருடைய பல நாவல்களையும் சிறுகதைத் தொகுதிகளையும் வெளி யிட்டுள்ளது.

அந்த வகையில் 'ஈஸ்வர...' என்னும் தலைப்பிலான இந்த நெடுங்கதைத் தொகுப்பை வாசகர்களுக்கு வழங்குவதில் மகிழ்கிறோம்.

இதில் 'தைமகள்' என்ற தலைப்பிலான கதையும் இணைந்துள்ளது. வட்டார வழக்கின் சுவையோடு வலம் வரும் இந்நூலை அனைவரும் வரவேற்றுப் பயனடைய வாழ்த்துகிறேன்.

வெளியிட வாய்ப்பளித்த ஆசிரியருக்கு எங்கள் நன்றி.

அன்புடன்
**வானதி திருநாவுக்கரசு**

# உள்ளே...


| | | |
|---|---|---|
| *1.* | *ஈஸ்வர* | *5* |
| *2.* | *தைமகள்* | *125* |

# ஈஸ்வர...

## 1

"அண்ணன் ணொண்ணன்னுட்டு எந்த நாயும் வீட்டுக்குள்ளே வரக்கூடாது. வந்தா... மரியாதை கெட்டுப்போகும்'' என்று ஆங்காரமாய்ச் சீறிவிட்டுப் போகிற வேல்க்கனியின் முதுகையே வெறித்தாள் லட்சுமி.

துண்டை எடுத்து 'சட்டே'ரென்று உதறிய வேகம். தோளில் போட்டுக்கொண்டு 'தக், தக்'கென்று வெளியேறிய கோபம். போகிறபோக்கில் லட்சுமியை வெடுக்கென்று பார்த்த பார்வை. பார்வையில் தெரிந்த வெக்கை. கண்களை இடுக்கிக்கொண்டு பார்க்கிற போது... கண்ணின் இருபுறங்களிலும் நெரிபட்டு விழுந்த வரிகள்.

புருஷன் தெருவில் போய் மறைந்த பிறகும் அவன் கத்திய உஷ்ணக் கதறல் வீடு பூராவும் பரவிப் படர்ந்து கொண்டிருந்தது. அந்தச் சத்த உஷ்ணம்... அதிலிருந்த உக்கிரம் அந்த வீட்டுக் காற்றையே

கனக்கச் செய்து, உறைய வைத்துவிட்ட மாதிரியிருந்தது.

புருஷனின் முதுகையே வெறித்த லட்சுமி. முதுகு மறைந்த பின்பும் பார்வை அங்கேயே நிலைத்து நின்றது. சலனமற்ற நங்கூரவெறித்தல்.

அவளுக்குள் கொதிபானைச் சோறாக தளதளக்கிற நினைவுகள். அலைஅலையாக கொதி நினைவுகள். ஒன்றையொன்று அடித்து மோதிக் கொண்டு நெஞ்சில் வந்து தாக்குகிற நினைவுகள்.

அனல் துண்டுகளாக வார்த்தைகளை எறிந்து விட்டு சீறிச் சினந்த மனத் தெறிப்புகளோடு போகிற வேல்க்கனியின் கோபம் நியாயமானதுதான். அதில் லட்சுமிக்கும் உடன்பாடுதான்... இருந்தாலும்...

வெறி வேகத்தில் ‘எந்த நாயும்’ என்று வெடித்து விட்ட புருஷன். தன் உடன்பிறப்பை... ரத்தப் பிறப்பை என்ன பேசினாலும் தகும்தான். அவன் செய்த அக்கிரமம் நிறைய்யத்தான். இருந்தாலும்...

‘நாய்’ என்று வேல்க்கனி சொல்லியிருக்கக் கூடாது. சொல்லவிட்டு, தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கக்கூடாது.

கூடப்பிறந்த என் பிறப்பை நாய்னு... எம்புருஷன் சொன்னது... அதிகப்படி. அத்துமீறல்.

கோபப்படுங்க... ஆத்திரப்படுங்க... ஆங்காரத்துலே என்ன வேணும்னாலும் கூப்பாடு போடுங்க. வேண்டாம்னு சொல்லலே. அநியாயம்னு சொல்லலே. ஆனாலும்... என் முன்னாடியே எங்க அண்ணனை ‘நாய்’னு எப்படிச் சொல்லலாம்?

*சொல்லும்போது எனக்கு ஏன் கோபம் வரல்லே? 'என்ன வேணும்னாலும் பேசுங்க. நாய்னு மட்டும் சொல்லாதீக'ன்னு நா ஏன் சண்டைக்குப் போகலே?*

*கேட்டும் கேளாத செவிட்டுக் கழுதையா... சூடு சுரணையத்த சவமா... எப்படிக் கிடந்தேன்? கூடப் பிறந்த ரத்தம் கொதிக்கலியா?*

*உடன்பிறப்புங்குற பாசம் எனக்கு இல்லியா? அண்ணன் உடம்புலே ஓடுற அய்யாவின் அதே ரத்தம் என் உடம்புலே ஓடலியா? நா எப்படி ஊமையா கிடந்தேன்?*

*எனக்குள்ளே பாசமில்லியா? அண்ணன்ங்குற அன்பு இல்லியா? உறுத்து இல்லியா? எல்லாத்தையும் உதிர்த்துட்டேனா? பாச ஈரமே இல்லாமே உலர்ந்து சருகாகிட்டேனா?*

*என்னாச்சு? எனக்கு என்னாச்சு? ''அட மனுசா, ஆயிரம் தப்புப் பண்ணுனாலும் அவன் எங்க அண்ணன். அவனை நாய்னு எப்படிச் சொல்லலாம்''னு சண்டைக்குப் பேகாம... சவமா குளிர்ந்துபோய்க் கிடக்கேனே... எனக்கு என்னாச்சு? கட்டை வேகுற வரைக்கும் அடிமனசுக்குள்ளே பொறந்த வீட்டுப் பாசம் பொம்பளைக்கு துடியா துடிச்சுக்கிட்டிருக்குமே... எனக்கு மட்டும் அது துடிப்பத்துப் போச்சா? உயிர் அறுந்துபோச்சா? அடிமனசின் வேரே அறுந்துபோச்சா?*

*லட்சுமிக்குள் சுயவிமர்சனமாய் உள்ளோடுகிற ஒரு வெப்பநினைவு. தன்னைத்தானே சுட்டுக் கொள்கிற சுயநெருப்பு.*

சுற்றிலும் பார்த்தாள். துண்டும் துக்காணியுமாக காகிதச் சிதறல்கள். நீலநிறச் சிதறல்கள். ஆகாயத் துண்டுகள். கோபமும் குமுறலுமாய் வேல்க்கனி கிழித்துப் போட்ட காகிதம், 'மச்சினன் அனுப்பிய கடிதம்' என்று அறிந்தவுடன், சரியாக வாசித்துக்கூடப் பார்க்காமல் கந்து கந்தாக கிழித்தெறிந்த வெறிவேகம்.

அவளுக்குக் கல்யாணமாகி எட்டு வருஷமா யிற்று. ஆறு வயது ஆவடையப்பன் ரெண்டாப்பு படிக்கிறான். இத்தனை வருஷ காலத்தில் இவள் வீட்டுக்குக் 'காயிதம்' என்று எந்தப் பாவி மட்டையும் வந்து தந்ததில்லை.

'நாதியத்த நாய்க்கு யாரு காகிதம் எழுதப் போறாக?' என்று அவலமாய் நினைத்து அங்கலாய்த்துக் கொள்வாள்.

அன்றைக்கும் அப்படித்தான்...

## 2

பொழுதுக்கால் சாய்ந்துவிட்டது. மணி மூன்று இருக்கும். மதிய வெயிலின் உக்கிரம் குறையாமல் அந்த வெயிலும் சுள்ளென்று அறைந்தது. புஞ்சையில் களைவெட்டு லட்சுமிக்கு. 'கூலியாட்களை விட்டால் கட்டாது' என்று அவளே தினம் களைவெட்டுகிறாள்.

ஒற்றையாள் களைவெட்டு, பேச்சுத்துணை யில்லாத வறண்ட வேலை. சுற்றிலும் ஆளரவமற்ற

தனிமையின் மௌனமே பேய்க் கூப்பாடு போட... தனது ஒற்றைக் களைச் சுரண்டியின் 'பர்ர்ட், பர்ர்ட்' டென்று வெட்டுச் சத்தம். காது நிறைய்ய பகல் பூராவும் 'பர்ர்ட், பர்ர்ட்' தான். அந்த உணர்வு, அதன் லயிப்பு, ஈடுபாடு, தனக்காக தானே உழைக்கிற உழைப்பின் உத்வேகம், முற்றுப்புள்ளியற்ற தொடர் உத்வேகம். அந்த உத்வேகமே முடிவற்ற துணையாக உடன்வர... ஓடி ஓடி களைவெட்டினாள், ஆவல் ஆவலாக.

இருந்தாலும் சொந்தப் பாடு, சொந்த நிலத்தில் சொந்த வியர்வையைச் சிந்துகிறாள். விளையும் விளைச்சல் யாவும் இவளுக்கே சொந்தம்.

காலடி நிழல் தரையில் கிழக்காக நீண்டது. 'போதும் இன்னைக்கு' என்ற நினைவோடு சேர்ந்து வெளிப்பட்ட பெருமூச்சு. ஆடு குட்டிகளுக்குத் தேவையான ஆமணக்கு, அகத்திக்கொழையை ஒடித்துக்கொண்டு... அடுப்புக்குத் தேவையான காய்ந்த மிளகாய்மாறை ஒரு கட்டு கட்டிக்கொண்டு..

லட்சுமியின் நெற்றியெல்லாம் உலர்ந்த வியர்வையின் உப்புக்கோடுகள். காதோர ரோமத்தை நனைத்து அப்புகிற வியர்வை. ஊர்ப்பட்ட வெயில் பூராவும் வந்து மோதிய முகம். கறுத்து வாடிக் கிடந்தது - அறுத்துப் போட்ட கீரைத்தண்டாக.

கண்ணெறிந்த தூரமெல்லாம் வெயில். வெள்ளை வெயில். அலை அலையாக ஓடி, மாயம் காட்டுகிற கானல்.

எரியும் கண்ணை மூடி மூடி முழித்தாள். வண்டிப் பாதையின் உஷ்ணப்புழுதி காலுக்குச் சுகமாக

இருக்கிறது. 'மிதுக், மிதுக்'கென்றிருக்கிறது. பெரு விரலுக்கும் மற்ற விரலுக்கும் இடையில் பிதுங்கி வெளியேறுகிற புழுதியின் புகை வடிவம்.

சின்னப்பிள்ளையாயிருந்த நாளிலிருந்தே இந்த வெக்கைப் புழுதியில் நடப்பது லட்சுமிக்கு ரொம்பப் பிடிக்கும். மனசுக்குள் ஒரு விளையாட்டுச் சந்தோஷம். பூப்பூவாக போய் உட்கார்கிற தட்டானின் மனக் குதூகலம்.

இப்போதும் அதே பாவாடைப் பருவ ஞாபகம். தட்டானின் மன உலகம். வண்டிப்பாதைப் புழுதியில் வேண்டுமென்றே 'தக், தக்'கென்று நடக்கிறாள். அளவுக்கும் மீறிய சத்தத்தில் பாதங்களைப் பதிக்கிறாள்.

உழைப்பின் களைப்பு, வெயிலின் வேக்காடு முழுவதையும் மறந்துவிட்டாள் லட்சுமி. மனசுக்குள் பாவாடைப் பருவ தட்டான் சந்தோஷம். சிறுமியின் உலகமாய் மாறிப்போன மனசு, உல்லாச றெக்கைகளை விரிக்கிறது.

சாயங்கால வெயில் இடதுகன்னத்தில் ஊசியாகக் குத்தியது. வடக்கு நோக்கி நடந்தாள். வீட்டுக்கு வந்தாள். முற்றத்திலேயே தலையிலிருந்து 'மாறுக்' கட்டை போட்டாள். கட்கத்தில் இடுக்கியிருந்த கடாப் பெட்டியில் பச்சைக் கொழை.

இவள் நடைச்சத்தத்திலேயே இவளை இனம் கண்டு கொண்ட வெள்ளாடு... பாசத்தவிப்போடும் இரைத் தாகத்தோடும் 'ம்மேய்ங்'கென்று கத்தியது.

ஆட்டுக்குட்டிகள் துள்ளி வந்தன. துள்ளலோடு கூடிய விளையாட்டில் இவள்மேல் முன்னங்கால் ரெண்டையும் போட்டு எக்கியது.

வாயில்லாச் சீவன்களான அதுகளின் பந்த பாசத்தில் நெக்குருகிப் போனாள் லட்சுமி.

இருந்தாலும் உழைத்த உடம்பு, குறுக்கெலும் பெல்லாம் கடுக்கிற வலி, தொடைச்சதையின் ரணம்.

'எங்கடா... வுழுந்து சாய்வோம்' என்று வருகிற அயற்சியும் சோர்வும்...

குட்டிகளின் விளையாட்டுப் பாசம் இச்சிலாத்தி யாத் தோன்றியது.

''அடச்சீ... சனியங்களா! சித்தே பொறுங்க ளேன்... எதுக்கு இந்தப் பறப்பு பறக்கீக?'' என்று சள்ளையும் எரிச்சலுமாய் கத்தினாள். வீட்டுக்குள் கடாப்பெட்டியை இறக்கி வைத்தாள். அதன் பாரம், பாரத்தைச் சுமந்து வந்த வலதுகை, வலதுகையின் உள்பக்கம் முழுவதும் கடாப்பெட்டியின் நார்த்தடம், சதுரப் பின்னலாய் பதிந்துபோயிருந்த சுவடு.

கை முழுவதும் வலித்தது. பாரத்தைச் சுமந்து வந்த கை. கொரக்கவலித்துக் கொண்டு போயிற்று. நீள மறுத்த எலும்புகள். நெகிழ மறுத்த நரம்புகள். ரத்தம் ஓட ஓட உயிர் வந்த கை. அப்புறம்தான் உதற முடிந்தது கையை.

கொழையை அள்ளிக்கொண்டு வந்தாள். 'ஏதாச்சும் புழு பூச்சி இருக்குமோ' என்கிற எச்சரிக்கை உணர்வு. தூணில் 'சட், சட்'டென்று அறைந்து உதறி

விட்டு ஆட்டுக்கு முன்னால் தொங்கிய கயிற்றில் கொழையைக் கட்டினாள். ஆடு ஆலாய்ப் பறந்தது. ஆவல் பறப்பில் உற்சாக மகிழ்வுத் துள்ளலோடு... கொழையை 'பர்ர்ர்ச், பர்ர்ச்'சென்று கடித்தது. அதன் கண்ணில் மின்னல். அதில் தெரிந்த அதன் சந்தோஷ மனம். இவள் மனசுக்குள் தாய்மைப் பரிவுணர்ச்சி சுரந்தது.

''அட எங்கண்ணுகளா... கொலைபட்டினியா கெடந்தீகளா? இந்தப் பாதகத்தி உங்களை இம்புட்டு நேரமா காக்கப் போட்டுட்டேனா?'' என்று கெஞ்சலும் கொஞ்சலுமாய்ப் பேசினாள்.

இவளது தமிழ் புரியாவிட்டாலும் இவள் மனசின் மொழியும் உதட்டசைவின் பாசக்குழைவும் ஆட்டுக்குப் புரிந்தது. அதன் கண்ணின் மின்னலில் கூடுதல் பிரகாசிப்பு.

அப்போதுதான் தபால்காரர் வந்தார். காக்கிச் சட்டையெல்லாம் கிடையாது. ஈடி ஊழியர். வேட்டியும் சட்டையுமாய் சர்வ சாதாரணமாய் வந்தார்.

''எம்மா... லட்சுமி.''

''என்ன... ண்ணாச்சி?''

''இந்தாம்மா, வேல்க்கனி பேருக்கு ஒரு தபால் வந்துருக்கு''

''தபாலா? எங்களுக்கா?''

''ம்.''

''எங்களுக்குத் தபால் எழுத எந்தச் சொந்தக்காரக இருக்காக? நாதியத்த நாய்க்கு காயிதம் எழுதியிருக்குறது யாரு?''

''யாரோ...? தெரியலம்மா... இந்தாம்மா!''

அவர் நீட்டிய இன்லெண்ட் லட்டர். இவள் ஆறாப்பு வரைக்கும் படித்தவள்தான். எழுத வாசிக்கத் தெரியும். வாங்கியவுடன் பார்த்தாள்.

முகவரி துல்லியமாக இருந்தது.

''ஆ. வேல்க்கனி.''

வீட்டுக்குள் நுழைந்தாள். கடிதத்தை வைத்து விட்டு முகம், கால்கையைக் கழுவினாள். கழுத்தடி, நெஞ்சு என்று நீரையள்ளி ஊற்றினாள். அழுந்தத் துடைத்தாள். அலுப்புப்பாரம் பூராவும் கரைந்து மாயமாக... உடம்பே புடைத்தெடுத்த தான்யம் போலிருந்தது.

ஒரு செம்புத் தண்ணீரைக் குடித்தாள். கடிதத்தை எடுத்து, பதனமாகக் கிழித்தாள். படித்தாள். அவளுக்குள் மதிய வெயில். அக்கினி நதி. உஷ்ணத் தகிப்பு. கடிதத் தகிப்பு. காகித வெக்கை.

## 3

அக்கினி நதியாக மட்டுமல்ல, ஆச்சரிய நதியாகவும் நடந்தது காகிதம் லட்சுமிக்குள்.

இந்த எட்டு வருஷத் தாம்பத்ய வாழ்க்கையில் ஒரு நாள் ஒரு பொழுதாச்சும் தபால் என்ற பிறப்பே வந்ததே கிடையாது. 'வராத தபால் வந்ததே' என்கிற ஆச்சரியம்.

அதிலும் வந்த தபால், யாரிடமிருந்து? கூடப் பிறந்த இவளது அண்ணனிடமிருந்து. அதுதான்... ஆச்சரியமும் அக்கினியும்.

''அன்புள்ள தங்கச்சி லட்சுமிக்கு,

அண்ணன் எழுதிக் கொள்ளும் கடிதம். இங்கு எல்லோரும் சௌகரியமாயிருக்கிறோம். அங்கு மாப்பிள்ளை, மருமகன் நலமறிய ஆசையாக இருக்கிறேன்.

நமக்குள் என்னென்னவோ நடந்துவிட்டது. நல்லதும் பொல்லதுமாய்... கசப்பும் வெறுப்புமாய் நிறைய நடந்து முடிந்துவிட்டது. எதையும் மனசில் வைத்துக்கொள்ளாதே.

அதையெல்லாம் கெட்ட கனவாக நினைத்து நீயும் மைத்துனரும் மறந்துவிட வேண்டும். இனி நடப்பவையாவது நல்லதாக இருக்கட்டும்.

இனியாவது நாம் மகிழ்ச்சியாகவும் அன்பும் பாசமுமாக இருக்க வேண்டும். இன்னும் நாலைந்து நாட்களில் நான் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்.

மாப்பிள்ளைக்கும் மருமகனுக்கும் எனது அன்பையும் பாசத்தையும் சொல்.

இப்படிக்கு
**உன் அண்ணன்**
**கணேசராசன்.''**

வாசித்து முடித்தவுடன் அவளுக்குள் சண்டாளமாய் பொங்கி வந்த கோபம் நெஞ்சே தகித்தது. திரேகம் பூராவும் தீப்பற்றிக் கொண்ட மாதிரியோர் அனல் சூடு.

''அடப்பாவி! மனசுலே தீயை வைச்சதே நீதானே? மனசுலே வைச்சுக்காதேன்னா... நீ வைச்ச தீயை எங்குட்டுக் கொண்டுபோய்ப் போட? எரிஞ்சு கருகிச் சாம்பலாகிப் போன மனசை என்ன செய்ய? ஈரமத்துப் போன பாவி... ஈரமனசையே சாம்பலாக்கிட்டியே... அதையெல்லாம் எப்படி மறக்க? கெட்டகனாவா நடந்துச்சு? மறந்துர முடியுமா? நெசமா நடந்துச்சே... நீசனா நடந்துக்கிட்டியே... எந்த மூஞ்சியோட இங்க வரப்போற? அடப்பாவி... குலை கொதிக்க வைச்சியே, கூடப்பொறந்த பொறப்பை. அந்த கொதிப்பை எந்தத் தண்ணீயை ஊத்தி தணிக்கப் போறே?''

ஒப்பாரி வைக்கிற மாதிரி நீட்டி முழங்கிப் புலம்பினாள் லட்சுமி. கொதிப்பான புலம்பல். காகிதத்தை கையில் வைத்திருக்கவே மனசில்லை. நெருப்பை வைத்திருந்த மாதிரியிருந்தது.

கண்ணில் தட்டுப்படாத இடமாக மறைத்து வைக்க வேண்டுமென்று விரும்பினாள். டிரான்ஸிஸ்டர் உட்கார்ந்திருந்த ஸ்டாண்டில் அதைப் போட்டு வைத்தாள். மனசெல்லம் கிடந்து எரிந்தது. தொண்டைக்குழி வரைக்கும் கசந்து அழறியது. 'ச்சேய்' என்று மனசு கிடந்து அருவருத்தது.

வீட்டு வேலையே செய்ய மனசில்லை. குழாயில் தண்ணீர் வந்துவிட்டது. தெருவில் சட்டென்று

உற்பத்தியான பரபரப்பு. குடங்களைத் தூக்கிக் கொண்டு ஓடுகிற சிறுமிகள். வேகநடை நடக்கிற குமரிகள். நிதான நடையையே விறுவிறுப்பாக்குகிற நடு வயதுப் பெண்கள்.

''தண்ணி வந்துருச்சு... தண்ணி வந்துருச்சு'' என்கிற சிறுமிகளின் உற்சாகக் கூச்சல். உல்லாசக் கூப்பாடுகள்.

தெருவின் பரபரப்பும் வீட்டுக்குத் தண்ணீர் வேண்டுமே என்கிற நிர்ப்பந்தமும் உறைந்துகிடந்த லட்சுமியை உசுப்பியது. நெட்டித் தள்ளியது. 'எந்தி, எந்தி' என்று துரத்தியது.

எரிந்து கனலும் மனசின் வெக்கையை பெருமூச்சாக வெளியேற்றினாள்.

''என்ன கொடுமையோ... விதி இப்படிப் பண்ணிருச்சு. அண்ணனுக்குத் தங்கச்சியை ஆகாமப் பண்ணி பகையாக்கிருச்சு... இத்தனை பகையும் சண்டையும் சச்சரவும் வந்து... எல்லாம் 'முறிஞ்சு' இழவு கூட்டுன பெறகு... இப்ப அண்ணன் காயிதம். இது என்ன இழவுலே போய் முடியப் போவுதோ...''

அவளுக்குள் பொங்கிப் பீறிட்ட வெறுப்பு உணர்ச்சியைத் தொடர்ந்து, லேசாக முகம் காட்டிய பீதி, மனசின் ஆழத்தில் கிள்ளிக்கொள்கிற கிலி.

மீண்டும் பெருமூச்சு. ''என்னென்ன நடக்கணும்னு விதிச்சிருக்குதோ... அதெல்லாம் நடந்துதானே தீரும்? நாம அனுபவிச்சுத்தானே ஆகணும்? உரலுக்குள்ளே தலையிருக்கு. ஓங்கி வர்ற உலக்கைக்குப் பயந்து என்னாகப் போகுது? பட்டு அனுபவிச்சுத்தான் ஆகணும்.''

நினைக்க நினைக்க எரிந்த மனசின் தகிப்பையெல்லாம் பெருமூச்சு விட்டே ஆற்றினாள். ரப்பர் குடங்களை இடுக்கிக்கொண்டு தெருவில் இறங்கினாள்.

தண்ணீர் எடுக்க.... எடுக்க... ஈரத்துணியில் ஒட்டிய மண்ணாக ஒவ்வொரு வேலையாகத் தொடர, அரை மனசாக அடுப்பு வேலைகளில் மூழ்கினாள்.

மேலப்புஞ்சைக்கு தண்ணீர் பாய்ச்சப் போயிருக்கிறான் வேல்க்கனி. 'அவன் வருவதற்குள் காபி போடணுமே' என்று பதறிப் பதைத்தாள். மனசு கிடந்து றெக்கையடித்தது.

'அண்ணன் காயிதத்தைப் பத்தி அவுருகிட்டே எப்படிச் சொல்ல?' இந்த நினைவே ஒரு கல்லெறி போல வந்து விழ, றெக்கையொடிந்து துவண்டது மனசு.

## 4

அந்தி வெயில் தங்கத்தைக் கரைத்துப் பூசின மாதிரி தெருவெல்லாம் குளிர்வெளிச்சம். சுவரெல்லாம் தங்கமின்னல். வேப்பமர இலைகளில் கூட பொன் துகளாய் வெயில் முகம்.

மேற்குத் தொடர் மலையின் முதுகை நெருக்குகிற பொழுதுக்கால். பொழுது தங்கத் தகதகப்பாய் பிரகாசித்தது. கண்ணைக் கூசச் செய்யாத இதமுடன் பிரகாசிப்பு. பொழுதுக்கு மேல் சாரல் மேக

அடர்த்தி. கரிய கர்ப்ப மேகம். சூரியத் தாழ்வாரமாய் மேகம். சூரிய ஒளியை ஆகாயத்தில் பரவவிடாமல்... முழுப் பிரகாசிப்பையும் பூமிக்கு அனுப்புகிற மேகம். தரை முழுக்க தங்கக் குளுமையாய் வெயில்.

லட்சுமி வீட்டு முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி னாள். தங்க வெயிலின் முகச் சிரிப்பு முற்றத்துத் தரையில் தெறித்திருந்தது. தண்ணீரைத் தெளித்தாள்.

அப்போதுதான் தெருவில் வேல்க்கனி வந்தான். ஈரத்துண்டை இடுப்பில் கட்டியிருந்தான். முறுக்கிப் பிழிந்த பனியனும் அண்டிராயரும் தோளில் கிடந்தன. வெள்ளைவேட்டி ஈரமாயிருந்தது. அதன் இரு நுனிகளையும் இருகைகளால் பிடித்து, உயர்த்திப் பிடித்துக்கொண்டே நடந்து வந்தான். நடக்கும் நடையிலேயே உலர வைக்கிற முயற்சி. காற்று, வேட்டியை இழுத்துப் பிடித்து கொடி மாதிரி சடசடக்க வைத்தது.

வேட்டியை விரித்துக்கொண்டு நடந்து வருகிற வேல்க்கனியைப் பார்த்தால், ஏதோ ஒரு வினோத ராட்சசப் பறவை, அகல வெள்ளை றெக்கையை விரித்துக்கொண்டு வருவதைப் போலத் தோன்றியது.

அவனைப் பார்த்ததும் -

அவளுக்குள் சிலீர் என்கிற பயஉணர்வு. மனசுக்குள் பகீரென்றது. அடிவயிற்றுக்குள் ஐஸ் குளிர்ச்சியாய் ஒரு சிலிர்ப்போட்டம்.

மனசுக்குள் வியர்த்தாள்.

உள்ளுக்குள் ஓடுகிற நினைவுகள். கல்லெறியப் பட்டவுடன் நாலாபுறமும் சிறகு விரிக்கிற பறவை களைப் போல பதற்றத்தில் 'கண்மூக்குத் தெரியாமல்' ஓடுகிற நினைவுகள்.

பீதியும் கிலியுமாய் கிழிபட்ட மனசைத் தேற்றிக் கொண்டாள். மெல்ல மெல்ல சுதாரித்தாள். உணர்வு களை லகான் போட்டுச் சுண்டினாள். நினைவுகளை கோதிச் சிக்கெடுத்தாள்.

'நில் மனமே... நில், பதறாதே. தறிகெட்டு ஓடாதே. தலைதெறிக்கப் பாயாதே. பயந்ததால் ஆகப் போவதென்ன? நில். நிதானமாகு. நின்று யோசி. வந்து மோதும் புயலை எப்படிக் கடப்பதென்று பொறுமை யாக யோசி. யோசிக்க யோசிக்க வழி தெரியும். மனம் வைத்தால் மார்க்கம் புரியும்.'

முற்றத்தில் நின்றே கணவனை வரவேற்றாள். புன்னகை தடவிய பயம் கண்ணில் அப்பிக் கிடந்தது. சகஜ பாவ உறையிட்ட பதற்றம் உதட்டு நுனியில் துடித்தது, வெட்டுப்பட்ட பல்லிவாலாக.

''என்ன... தண்ணி பாய்ஞ்சிருச்சா?''

''இல்லே... இன்னும் மூணு வாய்க்கால் கிடக்கு.''

''ஏன்... தண்ணியில்லியா? வத்திப் போச்சா?''

''கரண்டு நின்னு போச்சு...''

''சரி... துணிமணியை மாத்துங்க.''

''பயலை எங்கே?''

''பள்ளிக்கூடம் இல்லல்லே? கண்ணுலேயே தட்டுப்படலே.''

"எங்க போனான்?"

"வெளயாடப் போயிருப்பான்."

"மதியம் சாப்புட்டானா?"

"பானையிலே சோறு கொறைஞ்சிருக்கு. சாப்புட்டுருப்பான்னுதான் தோணுது."

கொடிக்கம்பியில் ஈரத்துணிகளைக் காயப் போட்டான். மாற்றுத் துணிமணியை உடுத்திக் கொண்டான். மொடமொடப்பாயிருந்தது. துண்டையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான் வேல்க்கனி.

அப்போதுதான் -

குரலில் ஒரு போலித்தனமாக கேலித் துள்ளலோடு கேட்டாள் லட்சுமி.

"என்னங்க... இன்னைக்குப் பொழுது மேற்கே உதிச்சதா?"

வியப்பும் வினோதமுமாய் மனைவியைப் பார்த்தான் வேல்க்கனி.

"இல்லையே... என்னத்துக்கு இப்படிக் கேக்கே?"

"இல்லேங்க... மதியத்துலே நெலா தெரிஞ்சுதா?"

இன்னும் வியப்பு அவனுக்குள். முகத்தில் ஒரு புன்னகை. முகம் முழுவதும் தங்கவெயில். அந்தி மலர்ச்சி.

"என்னாச்சு ஒனக்கு, இன்னைக்கு? ஏன்... இப்படிக் கேள்வியா கேக்கே?"

''ஏதோ பெரிய அதிசயம் ஒண்ணு நடந்துருக்கு. இல்லேன்னா... நம்ம வீட்டுக்குக் காயிதம் வருமா?''

''காயிதமா...? யார்கிட்டேயிருந்து?''

''எங்க அண்ணன்கிட்டேயிருந்து.''

வேல்க்கனியின் முகப்புன்னகை மாயமாயிற்று. சட்டென்று வந்து அப்பிய இருட்டு. இடுங்கிப் போன கண்கள். ''என்னன்னு... காயிதம் வந்துருக்கு?

''நீங்களுந்தான் பார்த்துருங்களேன்?''

அவள் குரலில் நடுக்கம். நடுக்கத்தை மறைக்கிற ஜிகினாவாக கேலியான அலட்சியம்.

வேல்க்கனியின் முகமெல்லாம் அனல் பறந்தது. ஒரு பகைவனைப் போல வெறுப்போடு பார்த்தான். கண்கள் இடுங்கின. கண்ணைச் சுற்றிலும் கோப ரேகைகள். தீப்பொறிகளாக சிடுசிடுத்தான்.

''அந்தக் கண்ராவியை நா வேற பாக்கணுமா? வேண்டாம். வேண்டாம். நீயே சொல்லு. அதுலே என்ன இருக்கு?''

ஆனால்... அவள் ட்ரான்ஸிஸ்டர் ஸ்டாண்டில் கை வைத்தாள். கிழித்துப் படித்த அந்த நீலநிறக் கடிதம் நீளமாய் இருந்தது.

எடுத்து நீட்டினாள்.

''கண்ராவியோ... காதுராவியோ... எதுவானா... என்ன? வீட்டுக்கு வந்த காயிதத்தை கண்கொண்டு வாசிச்சிட்டா... கொறைஞ்சா போயிரும்? வாசிச்சுத் தான் பாருங்களேன்...''

நீண்ட நிலையில் நிற்கும் லட்சுமியின் வலதுகை. அதன் நுனியில் ஆடும் நீலக் காயிதம்.

அதையே சில கணங்கள் வெறிக்கிற வேல்க்கனி. கண்ணில் தெறிக்கிற அனல்பொறிகள். ஒடுங்கி விறைத்த முகத்தில் மனசின் கசப்பு கொப்புளித்தது. வெறுப்பின் தகிப்பு.

நீண்டே நிற்கிற கை. நிலையாய் நிலைக்கிற கை. மனைவியின் கை. இத்தனை வருஷத் தாம்பத்தியத்தில் அந்நியத்தை அழித்து, ஆத்ம ஒருமையாகிவிட்ட மனுசியின் கை. அன்பின் கை. பாசத்தின் கை. பந்தமாய்ப் படர்ந்து விரிந்த கை. உயிர்ப் பங்காளியின் கை.

மனைவியின் மீதுள்ள பரிவின் குழைவில், வெறுப்பின் தகிப்பை சகித்துக்கொள்ள முடிந்தது வேல்க்கனியினால்.

அந்தக் கையை நோக்கி மிக நிதானமாய் வேண்டாவெறுப்போடு நீள்கிற அவனது கை. கைமாறுகிற காகிதம்.

அவன் கண்கள் அதன்மேல் வெறுப்பின் விரைவோடு நகர்கின்றன. ஒரு மூச்சில் வாசித்து முடித்தான். அவனுள் ஜ்வாலைகள். அவனைச் சுற்றி வளைத்து நெருக்குகிற தீ நாக்குகள். அவனுள் குப்பென்று பற்றிக் கொள்கிற எரிச்சல்...

'என்ன பூகம்பம் வெடிக்குமோ' என்ற அச்சப் படபடப்பில் லட்சுமி. கால்கள் நடுங்கின. வியர்த்துக் கொட்டியது. வேரறுந்து போன செடியாக, கால்

கொண்டு நிற்கமுடியாமல், அப்படியே உட்கார்ந்து சுவரில் சாய்ந்தாள்.

அவள் உடம்பெல்லாம் துவண்டு வந்தது. அயற்சியும் சோர்வுமாய் அறுபட்ட கீரைத்தண்டாய் வாடினாள்.

''ச்சேய்...'' என்று அடிமனசின் வெக்கை முழுவதும் வெறுப்பாய் திரண்டு கத்தினான். அந்தச் 'ச்சேய்'யில் உலகத்தின் மொத்த வெறுப்பும் உறைந்திருந்தது போலிருந்தது. கனத்த 'ச்சேய்.'

காகிதத்தை கண்ணை மூடிக்கொண்டு கந்து கந்தாய் கிழித்தான். வீசியெறிந்தான். தரை முழுக்க அதன் துகள்கள். காகிதத் துளிகள். ஆகாயச் சிதறல்கள்.

அப்போதுதான் மனசின் கசப்பு முழுமையும் முட்டிமோதியது போல வெடித்தான் வேல்க்கனி. கோபத்தில் பேய்க் கூப்பாடு போட்டான்.

''அண்ணன் நொண்ணன்னுட்டு எந்த நாயும் வீட்டுக்குள்ளே வரக்கூடாது. வந்தா... மரியாதை கெட்டுப் போவும்.'' என்று சீறினான். மறுகணமே புறப்பட்டான். அந்த மனநிலையின் சூழ்நிலையில் ஒரு கணம்கூட நிற்க விரும்பாதவனாக தெறித்தோடும் பொறியைப் போல வேகமாய்ப் போய்விட்டான் வேல்க்கனி.

# 5

**வா**சல் வழியாக தெருவையே ரொம்ப நேரமாக வெறித்த லட்சுமி... அவளுக்குள் பூகம்பமாய் வெடித்த வேல்க்கனியின் அக்கினிச் சத்தம். மனசுக்குள் ''நாய்... நாய்... நாய்... நாய்...'' என்று ஓங்கியடித்த மணியின் அதிர்வலைகளாய் அவனது சீறல்கள்.

வேல்க்கனி கிழித்துப் போட்ட காகிதத் துண்டுகள். காற்றை ஊடுருவும் கனம்கூட இல்லாமல்... மிதந்து மிதந்து கீழே வந்த காகிதங்கள். அவற்றையே பார்த்தாள். அவளைச் சுற்றி தரை முழுக்க நீலநிறச் சிறதல்கள். எல்லாமே அவளது அண்ணன். கணேசராஜா. துண்டு துண்டாய் கிழிபட்டுக் கிடக்கும் அண்ணன்.

அந்தத் தாள்களையே பார்த்தாள். எல்லா நீலநிறத்தாள் துண்டுகளும் நாய்முகம் போலத் தோன்றின. லட்சுமிக்கு எல்லா நாய்த் தலைகளும் உயிர்பெற்று எழுவது போன்ற பிரமை. அவளை நோக்கிப் பாசத்தோடு உறுமுகிற மாதிரியோர் மயக்கம்.

நட்பார்ந்த உறுமல். சொந்தபந்தமான அன்பு மிக்க உறுமல். எல்லாத் துண்டுத் தலைகளின் கூட்டான உறுமல். சகோதர வாஞ்சையான உறுமல்கள்.

''தங்கச்சி... தங்கச்சி... தங்கச்சி...!'' என்ற பாசக் குழைவான அர்த்தமாக இவளுக்குள் இறங்குகிற உறுமல். மனசெல்லாம் படர்ந்து பரவுகிற குரல்.

அவளுக்குள் ஏதோ பிசைகிறது. நெஞ்சுச் சதையையே யாரோ பற்றிப் பிசைகிற மாதிரியோர் வலி.

அண்ணனே வந்து கெஞ்சி நின்று மருகுவதாக ஓர் உணர்வு. அது தந்த வேதனை...

''கூடப்பொறந்த அண்ணனே வந்து... தங்கச்சி கிட்டே வந்து கெஞ்சிக் கூத்தாடணுமா? மருகி நிக்கணுமா? அண்ணனுக்கா... இந்த அவலம்?''

அவளுக்குள் ஆழத்திலும் ஆழத்தில் ஒரு முட்டல். ரொம்ப நாளைக்கு முன்பு ரொம்பக் காலத்துக்கு முன்பு விளைந்த கதிரோடு குலுங்கிய பயிர். அதன்மேல் கூடை கூடையாக வந்து விழுந்த மண். பயிரை அமுக்கி மறைத்து... பெரிய மேடாகி விட்ட கூடைமண். மண்கூடைகள். ரொம்பக் காலமாய் விழுந்த மண்கூடைகள். மண்மேடு.

மண்மேட்டில் எல்லா இறுக்கமும் உடைந்து... கிளர்ந்து... நொறுங்கி... மிருதுவாகி... ஆழத்திற்கும் ஆழத்தில் புதைந்து கிடந்த பயிரின் கதிர்மணிகள் யாவும் முளைத்து பூமியைப் பிளந்துகொண்டு வெளியே முகம் காட்ட விழைகிற உயிர்த்தாகத்தோடு நிமிர்கிற பயிர்க் குருத்துகள். சகோதர பாசக்குருத்துகள்.

மண்மேடாக இறுகிப்போன மனசின் நெகிழ்வு. உடைந்து நொறுங்கி நெகிழ்கிற பிசைவின் வேதனை ரணம். என்ன நினைத்தாளோ... லட்சுமி, 'கோ' வென்று வெடித்து அழுதாள். ''ஐயய்யோ... பாதரவே! எங்களுக்கா இந்தக் கதி வரணும்?'' என்று தலையில் 'மடேர், மடே' ரென அடித்துக்கொண்டு அழுதாள்.

# 6

அம்மா நிறம் கணேசராஜுக்கு. நல்ல சிவப்பு என்று சொல்ல முடியாவிட்டாலும் கறுப்பு என்று சொல்லிவிட முடியாது. தேன் நிறம்.

ஆனால், 'தான் ரொம்பச் சிவப்பு' என்ற எண்ணம் அவனுக்கு. சின்ன வயசிலிருந்தே அம்மா அவனைக் கொஞ்சுகிற விதமே அவன் நிறத்தை வைத்துத்தான்.

''என் ராசா... செல்லம்... அய்யமார்ப் புள்ளைக மாதிரி கலரு. மஞ்சக்கெழங்கு. தங்கப்பெட்டி... செல்லக்கட்டி... செவத்தைக்குட்டி...''

இப்படியேதான் அம்மா கொஞ்சுவாள். பாசமும் குழைவுமாய் மிழற்றுவாள். முத்த மழை பெய்வாள்.

இந்த கொஞ்சலைக் கேட்டுக் கேட்டு, அந்த உணர்வு அவனது அடிமனசில் உறைந்துவிட்டது. தாய்மைக்குழைவின் மிகையான பாராட்டையும் சீராட்டையும் நிஜம் என்றே நம்பிவிட்டான்.

'தான் சிவப்புதான்' என்று உறுதிபட நம்பினான். கணேசராஜ்.

லட்சுமி, அய்யா மாதிரி கறுப்பு. அண்டங் காக்கையின் தார்க்கறுப்பல்ல. சாதாரண காக்கையின் வெளிர்க் கறுப்பு. கறுப்பு நிறத்தின் மீது பவுடர் பூசி அப்பிய ஒரு நிறம்.

இவளை எந்நேரமும் கேலி செய்வான் கணேசராஜ். உடல் நிறத்தைச் சொல்லியே கிண்டலடிப் பான்.

''கருவாச்சி... கருவாச்சி'' என்று திட்டுவான்.

''காக்கா வருதுடோய்'' என்பான்.

''தார் டின் நடந்து வருமா?'' என்பான்.

இவள் ''போடா செவலை நாயி'' என்று அழுது கொண்டே சீறுவாள். ''வெள்ளைத் தொலி வீரய்யன். வீசிப் போச்சு வெங்காயம்'' என்று எதிர்ப்பாட்டு பாடுவாள். அவன் அடிப்பதற்கு மட்டியைக் கடித்துக் கொண்டு ஓடிவருவான். இவள் பதறியடித்துக் கொண்டு அய்யாவிடம் ஓடுவாள்.

''அய்யா, அய்யா... அடிக்க வாரானே... பாவிப்பய'' என்று வீறிடுவாள். அவளது வீறிடலில் வீடே அதிரும்.

பாவாடை சடசடக்க ஓடுவாள். அய்யாவின் முதுகுப் பக்கம் போய் நிற்பாள்.

அய்யாதான் சிரித்துக்கொண்டே அவனைக் கண்டிப்பார்.

''ஏலேய்... பொம்பளைப் புள்ளையை ஏண்டா புண்ணாக்குறே?''

ஓடிவந்தவன், அணையில் முட்டிக்கொண்ட வனைப் போல தத்தளித்து நிற்பான். கோபத்தில் சிடு சிடுப்பான். சினத்துடன் புகார் சொல்லுவான்.

''இல்லேய்யா... இந்தப் பொடிக் கருவாச்சிதான் என்னைப் 'போடா நாயி'ங்குது.''

''இல்லேய்யா... இந்த வெள்ளைநாயிதான் என்னைத் 'தாரு டின்'னுங்குதுய்யா.''

இவளும் பதிலுக்குப் பதிலாக புகார் செய்வாள்.

அய்யா சிரிப்பார். விசாரணைக்கு இடமே யில்லை. 'யார் குற்றவாளி' என்று தேடித் துருவ வேண்டியதேயில்லை. மர்மமே இல்லை. ரெண்டு பேரும் புகார் செய்கிற தொனியிலேயே குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டனர்.

இவ்வளவு கல்மிஷமற்ற, கபடமற்ற பிள்ளை களாக இருக்கிறார்களே என்கிற பெருமிதம். அந்தத் தகப்பனுக்குத் தன் ரத்தத்துளிகளின் வெள்ளை மனசுகளின் வெகுளித்தனத்தில் அவருக்கு ஒரு பெருமை.

''ஏலேய்... சும்மாயிருடா'' என்று சிரித்துக் கொண்டே சத்தம் போடுவார். கோபமற்ற கண்டிப்பு. பாவாடை கட்டிய வண்ணத்துப்பூச்சியாக, பூஞ்சிறகை விரிக்கிற மகள் லட்சுமியையும் சத்தம் போடுவார்.

''ஏம்மா... அண்ணனில்லே? மூத்தவனை 'போடா'ன்னு சொல்லலாமா? அண்ணாச்சின்னு மரியாதையா பேச வேண்டாமா?''

''இல்லேய்யா... எப்பப் பார்த்தாலும் 'கருவாச்சி, கருவாச்சி'ன்னு சொல்லிக்கிட்டேயிருக்கான்யா.''

''கருவாய்க் கழுதையை வேற எப்படிச் சொல்லுவாக?''

இது கணேசனின் சீற்றமான நியாயம்.

''செவலை நாயை எப்படி 'அண்ணாச்சி'ம்பாக?''

இது லட்சுமியின் பதிலடி.

ரெண்டு பக்கச் சீற்றத்தையும் பொறுமையாக எதிர்கொள்கிற அய்யா. உதட்டிலேயே உட்கார்ந் திருக்கிற ஈர ஒளிர்வான புன்னகை. பெருமிதப் புன்னகை. குரலில் சற்றே காரமாகிற கண்டிப்பு.

''ஏய் லட்சுமி, ஒழுங்காப் பேசு!''

''இல்லேய்...''

''பொறும்மா... அய்யா மாதிரிதான் அண்ணன் ஒனக்கு. அய்யா இருந்து செய்யவேண்டியதெல்லாம் எனக்குப் பிறகு ஒனக்குச் செய்யப் போறவன் அவன் தான். ஒம்புள்ளைக்கு தாய்மாமனாயிருந்து கால மெல்லாம் கடமை செய்யப் போறவன் அவன் தான். அவனை மரியாதைக் குறைவா பேசலாமா? 'அண்ணாச்சி'ங்குற சொல்லுக்கு மறுசொல்லு சொல்லலாமா? அய்யாவை எப்படி மதிப்பா பேசுறீயோ அப்படித்தான் அண்ணனையும் பேசணும். தெரியுமா?'' மனசுக்குள் பேசிக் கொள்கிற அய்யா. தனக்குள் தனது கனவுகளை படர வைத்துக் கொள்கிற தந்தை மனசின் மிருது. ஒரு மயக்கத்தில் பேசுவதைப் போல அய்யா கண்ணில் தெரிகிற மிருதுவான மின்னல்.

பிள்ளைகளுக்கு இது புரியுமா? தனக்குள் தன்னையே புரியவைத்துக் கொள்கிற முயற்சியா?

அய்யாவைப் பிரமிப்போடு பார்க்கிற சிறுவன் கணேசராஜ். புதிரை விளங்கிக்கொள்ளாத மருட்சி

யோடு ஒரு மந்திரத்துக்குச் சொக்கிப்போன கிறக்கத்தோடு அய்யாவைப் !பார்க்கிற லட்சுமி. சின்னஞ்சிறுமி.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், அவளைப் பற்றித்தான் பேசுகிறார். அவளுக் காகத்தான் பேசுகிறார். அவள் நலனைத்தான் பேணுகிறார். அண்ணன் - தங்கை உறவை அவர் விரும்புகிற மாதிரி உருவாக்க முயல்கிறார்.

அய்யா சொல்வது புரியவில்லை சிறுமி லட்சுமிக்கு. ஆனால், புரிந்துகொண்ட மாதிரியான நினைப்பில் கண்ணில் ஒரு குளிர் மின்னலோடு அண்ணனைப் பார்க்கிறாள்.

அண்ணாச்சி. அய்யாவுக்குப் பிறகு அய்யா மாதிரியிருந்து காப்பாற்றப் போகிற அண்ணாச்சி. அய்யாவை மதிக்கிற மாதிரியே இந்த அண்ணனையும் மதிக்கணும்.

இந்தச் செவலை நாயையா? வெள்ளைப் பேனையா?

தப்பு, தப்பு! இனிமே அப்படியெல்லாம் நெனைக்கக்கூடாது... அண்ணாச்சி...

கருவாச்சின்னு அவன் பேசுனா? கறுத்தநாய்னு திட்டுனா பதிலுக்கு எதுவும் பேசக்கூடாதா? எப்படிச் சும்மாயிருப்பது? பணியணுமா? பணிஞ்சு போகணுமா? வசவைக் கேட்டுக்கிட்டு ரோஷம் கெட்டுப்போய் கெடக்கணுமா?

அந்தச் சிறுமியின் மனசுக்குள் முள் முள்ளாக நீள்கிற கேள்விகளை ஞானமனத்தால் உணர்ந்து கொண்டதைப் போல...

அய்யா தொடர்கிறார்.

''அண்ணன் வைவான். பேசுவான். அதட்டு வான். கண்டிப்பான். எல்லாம் ஒன்னோட நல்லதுக்காகத்தான்னு நீ நெனைக்கணும். அடங்கிப் போகணும். அடக்கம் ஒடுக்கம்தான் பொண்ணுக்கு லட்சணம். குளிர்ந்த தண்ணியிலே அமைஞ்ச தாமரை மாதிரியிருக்குறதுதான் அழகு. பணிவும் ஒழுங்கும் தான் பொண்ணுக்குப் பண்பு. தெரியுதா?''

அய்யா அன்பைக் குழைத்து ஊட்டிய பண்பாடு. பாசத்தோடு கலந்து படிய வைத்த கலாசாரம்.

லட்சுமி ரொம்பக் குழைந்தமனசோடு ''அண்ணாச்சி'' என்று உச்சரித்துப் பார்த்தாள். அவளுக்கே புதுமையாக இருந்தது. அந்நியமாகவும் தோன்றியது.

## 7

கணேசராஜ் ஊர் பூராவும் ஓடியலைந்தான். வியர்க்க வியர்க்க நடந்தான். வீடுவீடாக விசாரித் தலைந்தான். மிக உயரமான தேக்குவாரி வேண்டும். வீட்டு முன்னால் ஊன்ற வேண்டும். மைக்செட் வந்திருக்கிறது. ரெண்டு குழாய்களைக் கட்ட வேண்டும்.

வீட்டு முன்னால் போட்டிருந்த பந்தலின் இடது மூலையில் கிடந்த பெஞ்சு, ஆம்பளிபயரையும் ப்ளேயர் பெட்டியையும் இறக்கியிருந்தான் மைக் செட்காரரன். மற்றும் ரிக்கார்டுகள் உள்ள பெட்டி, டியூப்லைட்கள்.

பந்தல் முழுக்க கும்மாளமிடும் சிறுவர்கள். மைக்செட்டை வேடிக்கை பார்க்கிற சிறுவர்கள்.

மைக்செட்காரரர் பயன்படுத்திவிட்டுக் கீழே போடும் ஊசிகளைப் பொறுக்குவதற்காக போட்டி போட்டுக்கொண்டு முண்டுகிற டவுசர்கள். டவுசர்ப் பையன்கள்.

மைக்செட்காரரர் கலர் கலராய் வயர்களை இழுத்து அங்கும் இங்கும் மாட்டி முடிச்சுப் போடு வதையும் பின்னுவதையும் பெரிசுகள் நின்று பெரும் பிரமிப்புடன் பார்த்தனர். இமைதட்டாமல் மலைத்தனர்.

ஏதோ மலையைப் புரட்டுகிற அதிசயத்தை பார்க்கிற மாதிரி...

கணேசராஜ் பெரிய வாரியை வாங்கிக் கொண்டு வந்தான். தோளில் வைத்துச் சுமந்து 'லொங்கு, லொங்கு' என்று ஓடிவந்தான்.

மைக்செட்காரரர் படுத்துக் கிடந்த தேக்கு வாரியின் நுனியில் குழாய்களைக் கட்டினார். அதற்குள் ஊன்றுவதற்கான குழியைத் தோண்டி முடித்து விட்டான் கணேசராஜ்.

அவன் உறங்கி மூன்று நாளாகிவிட்டது. கண்ணெல்லாம் ரத்தக் கலங்கலாக இருக்கிறது. உடம்பெல்லாம் துவண்டு வருகிறது.

உடம்பின் ஒவ்வொரு இணுக்குவும் அவனைக் கெஞ்சிக் கூத்தாடியது, ''உட்கார்... படு... உறங்கு... ஓய்வு கொடு'' என்று.

ஆனால், அவனுக்குள் உற்சாகப்பெருக்கு. ஓய்வை மறக்கடிக்கும் மகிழ்ச்சி ஊற்று. 'உஸ்ஸ்' ஸென்று உட்காரப் பொழுதில்லாமல் ஓடித்திரிகிற கணேசராஜின் குதூகலப் பெருவெள்ளம்.

வீடு முழுவதும் விழாக் கோலம். ஒவ்வொரு மூலையிலும் சந்தோஷ வெளிச்சம். வெளிச்ச சத்தம்.

''லட்சுமி சடங்காகிட்டா.''

ஒரு சிறுமி அரும்பாக இருந்து பூத்துவிட்டாள். மலர்ந்துவிட்டாள். 'வயதுக்கு' வந்து விட்டாள். அதை ஊரெல்லாம் சொல்ல வேண்டாமா? தண்டோரா போட வேண்டாமா?

'இதோ... எங்க வீட்டுலே ஒரு சரக்கு ரெடியாயிருச்சு. தேவைப்பட்டவங்க வாங்குறதுக்கு வரலாம்' என்று ஊர் உலகத்துக்கெல்லாம் சொல்கிற மாதிரி... நீருற்று விழா. மஞ்சள்நீராட்டுவிழா. பூப்புனித நீராட்டுவிழா.

அதற்குத்தான் கணேசராஜ் ஓடியலைகிறான். பாசமும் மனநெகிழ்வுமாக ஓடியலைகிறான். சின்னச் சிட்டாக தட்டானாக வண்ணத்துப்பூச்சியாக கபடமற்ற வெள்ளை மனச்சிறுமியாக சிறகடித்துத்

திரிந்த பாவடைப்புறா... இன்று முதல் முழுப் பெண்ணாகிறாள். குமரிக் க(ன்)னியாகிறாள்.

இந்தப் பதினைந்து நாளாக ஒரே மூலையில் உட்கார்ந்திருக்கிற தங்கச்சி. அவளது தோழிகளுடன் பன்னாங்குழி விளையாடியே பொழுதைப் போக்கு கிறாள். புளியமுத்துகள் ஒவ்வொன்றாக ஒவ்வொரு குழிக்குள் விழுகிற சத்தம். மொத்தமாக அள்ளுகிற சத்தம்.

அவர்களுக்குள் நடக்கிற காரசாரமான வாக்கு வாதம். விளையாட்டுச் சர்ச்சை. சட்டென்று நிறம் மாறி, கேலி கிண்டலாகி, சந்தோஷக் கூப்பாடாகிறது.

கணேசராஜ் மனசுக்குள் ஒரு மகிழ்வான வியப்பு. லயிப்பு. 'அட இந்தச் சின்ன நாய்க்கு இப்படியொரு தனி உலகமா? இப்படியோர் நட்புலகமா?' மனசின் அந்தரங்க உணர்வுகளையெல்லாம் பரிமாறிக் கொள்கிற ரகசிய உலகம். அந்தரங்க உலகம்.

இந்தப் பதினைந்து நாட்களில் இவனால் பலகாரங்களை தின்று சமாளிக்க முடியவில்லை. வயசுக்கு வந்த லட்சுமி, 'வாய்க்கு ருசியானதையும் எலும்புக்கு வலுவானதையுமான பலகாரங்களை உண்டு மகிழ்ந்து... மனசையும் உடலையும் வலிமை யாக்கிக் கொள்ள வேண்டும்' என்கிற மன வாழ்த்தின் அடையாளமாக... கிராமத்து மக்களின் அந்நியோந் நியத்தின் முகமாக...

ஒவ்வொரு வீடாக வகை வகையான பலகாரம் சுட்டுக் கொண்டுவந்து போட்டுக்கொண்டே யிருந்தார்கள். கணேசராஜ், அய்யா, லட்சுமி தின்றும்

தீர்க்கமுடியவில்லை. பன்னாங்குழி விளையாட வருகிற சிறுமிகளுக்கெல்லாம் கொடுத்தும் தீரவில்லை. சிறுமிகள் வீடுகளுக்கும் பலகாரம் போயிற்று.

சோறே ஆக்கவில்லை. இந்தப் பதினைந்து நாளாக உளுந்தவடைகளை பிய்த்துப் பிய்த்து வாயில்போட... அதிரசம் நாலை பிய்த்துத் திங்க... தண்ணீரைக் குடிக்க... ஒரு நேர உணவு முடிந்தது. இப்படியே பதினைந்து நாட்களாக...

''விநாயகப் பெருமானே...'' மைக்செட் அலறியது. தெருவெல்லாம் பாட்டுச் சத்தம். காற்றை இனிமையாக்குகிற சங்கீதப் பெருவெள்ளம். கிராம மக்களை மூச்சுத் திணற வைக்கிற அதிசயப் புதுமை. அபூர்வக் கலை.

சிறுவர்கள் மைக்செட்காரரை முற்றுகையிட்டுக் கொண்டு நின்றனர். பேச வாய் எழா வண்ணம் பிரமித்துப் போய் நின்றனர். கறுப்பு ரிக்கார்டு சுற்றுகிற தினுசு, அதில் உரசுகிற ஊசியின் 'ஙீய்ய்ய்' யென்கிற இரைச்சல்.

கறுப்புரிக்கார்டின் நடுவில் சிவப்பு வட்டம். அதுவும் சுற்றுகிறது. சிவப்பு வட்டத்திற்குள் குழாய் முன் உட்கார்ந்து உற்றுப் பார்க்கிற நாய். உருளாமல் புரளாமல் உட்கார்ந்த நிலையிலேயே நாய் சுழல்வதே ஓர் ஆச்சர்யம்தான்.

இம்புட்டுக்கான சின்ன வட்டத்தகட்டுக்குள் 'விநாயகப் பெருமானை' உருகி உருகி அழைக்கிற ஒரு

பெரிய ஆள், எப்படி ஒளிந்திருக்க முடிகிறது என்பது அந்தச் சிறுவர்களுக்கு இன்னும் ஓர் ஆச்சர்யம். இப்படி நிறைய்ய ஆச்சரியங்கள்.

சிறுவர் உலகம் சொர்க்க உலகமாய் வண்ணத்துப் பூச்சிகளின் இன்ப உலகமாய் இருப்பதற்கான காரணமே, இந்த ஆச்சர்யங்கள்தாம். மர்ம இருட்டு விலகாத பூடக ஆச்சர்யங்கள்தாம்.

'விநாயகப் பெருமான்' முடியப் போகிற நேரம்.

பிள்ளைகளின் போட்டிக் கூச்சல், கூப்பாடுகள்.

''எம்.ஜி.யார் பாட்டுத்தான் போடுங்க.''

''சிவாஜி பாட்டுத்தான்...''

''சிவாஜி பாட்டு பூராவும் அழுகைப் பாட்டுத் தான். எம்.ஜி.யார் பாட்டுத்தான் ஜாலி.''

''சிவாஜி பாட்டுலேதான் அர்த்தம் இருக்கும்.''

இந்தச் சிறுவர்களை ஒரு முறைப்பு முறைத்தான். ''சத்தமில்லாமல் இருக்கணும். 'கப், சிப்'னு. 'கச, புசா'ன்னு சத்தம் வந்தா... வெரட்டிப் போடுவேன்.'' என்று அதட்டிக்கொண்டே கவரி லிருந்து ரிக்கார்ட்டை உருவி... வேட்டியில் துடைத்து விட்டு... ப்ளேயரில் மாட்டினார்.

''அச்சம் என்பது மடமையடா. அஞ்சாமை திராவிடர் உடைமையடா'' என்று கம்பீரமாக டி.எம்.எஸ். முழங்கினார்.

அண்ணாமலை அன்றைக்கு முற்றிலும் புதிய கோலத்தில் இருந்தார். பழுப்புநிற நாலு முழ வேட்டி,

ஒரு துண்டு தவிர வேறு துணிமணி அணியாதவர். இன்றைக்கு —

தும்பைப் பூவாய் ஒளி வீசுகிற வேட்டி. புத்தம், புது வெள்ளைச்சட்டை, பட்டுத்துண்டு, எல்லா வற்றின் நுனிகளிலும் மஞ்சள் பொட்டு. புதுத் துணிகள்.

அய்யாவை அந்தக் கோலத்தில் பார்த்த கணேசராஜ். அவனது கண்களின் மலர்ச்சியில் தெரிந்த வெளிப்படையான ஆச்சர்யம். அந்த ஆச்சர்யத்தில் அய்யா கூச்சப்பட்டார். அவர் உதட்டில் கூச்சப் புன்னகை. முகமெல்லாம் தர்மசங்கடமான மகிழ்ச்சி.

''என்னடா இப்படிப் பாக்கே?''

''அய்யா இன்னிக்கு அசத்தலா இருக்கீக. ரொம்ப நல்லாயிருக்கீக. எம்.எல்.ஏ. மாதிரி 'ஜம்ம்'முன்னு இருக்கீக.'' அவன் முகமெல்லாம் மகிழ்ச்சி. ஆனந்த வெளிச்சம்.

வீடு பூராவும் உறவுக்காரர்கள். வெள்ளையும் சொள்ளையுமாய் 'பளிச், பளிச்'சென்று சொந்தக் காரர்கள். உல்லாச நதிகளாக ஓடிப் பிடித்து கும்மாளம் போடுகிற குதூகலச் சிறுவர், சிறுமியர். வீடு முழுக்க விழா வெள்ளிச்சம்.

கணேசராஜுக்குள் சந்தோஷம். கண்ணில் ஈரக்கசிவை உண்டாக்கும் மனநெகிழ்வு. மனசின் சகல மூலையிலும் பரவிப்படர்கிற பரவச உணர்ச்சி.

வீடு முழுக்க 'ஜே, ஜே' என்றிருந்தது. கூச்சலும் குழப்பமுமாய் மகிழ்ச்சிப் பெருவெள்ளம். சமையல் தடபுடலாய் நடந்தது.

இரவில் —

மங்கள ரிக்கார்டு மாறி மாறி முழங்க... பெண்களின் முற்றுகைக்குள் மஞ்சள்நீராட்டுக்குப் போன தங்கச்சி.

பெண்களின் குலவைச் சத்தம். கூட்டுக்குலவைச் சத்தம், மனக்கொண்டாட்டத்தின் ஒலிமுகங்கள். மலர்ந்த பூ... பிஞ்சாக... காயாக... மாற வேண்டும். மாலை பெற்று விதை தர வேண்டும் என்ற நல் மனசுகளின் வாழ்த்துப் பேரொலிகளாக குலவைச் சத்தம்.

மங்கள ரிக்கார்டு முழக்கத்தையும் அமுக்கிக் கொண்டு பீறிடுகிற மனிதக்குலவைச் சத்தம்.

இவன் நெஞ்சுக்குள் பரவசப்பெருக்காக இறங்கி, பரவிப் படர்ந்து நிரம்பித் ததும்புகிற உணர்ச்சிக் குலவை.

கொஞ்ச நேரத்தில் —

தாய்மாமன் வாங்கித் தந்த பட்டு உடுத்தி சட்டை போட்டு பூ முடித்த அலங்காரத்தோடு, மண்ணில் வந்த நிலாவாக தங்கச்சி லட்சுமி.

கிழிந்த பாவாடையும் காய்ந்த பரட்டைத் தலையுமாய் ஓடித் திரிந்த அந்த லட்சுமிதானா? கருவாச்சியா? தார் டின்னா? அட... அந்தக் குட்டி நாயா?

பசுந்தோட்டத்தில் பூத்துச் சிரிக்கும் ரோஜாவாக, ஆகாய நிலாவாக... வருகிற லட்சுமி.

கூடியிருக்கும் எல்லாப் பெரியவர்களையும் கும்பிட்டுக் கும்பிட்டு நிற்கிற லட்சுமி. திருநீறைப்

பூசி, குங்குமம் வைத்து... அவள் கைக்குள் இருபதோ... ஐம்பதோ என்று ரூபாய்த் தாளைத் திணித்து ஆசீர்வாதம் செய்கிற பெரிய மனிதர்கள்.

இந்தக் கோலாகல நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிற கணேசராஜ். ஒரு குட்டி நாய்க்குள் புதைந்துகிடந்த பேரழகு. அந்தப் பேரழகை ஊரே திரண்டு வழங்குகிற ஆசீர்வாதமும் வாழ்த்துகளும்.

இவனது சகோதர நெஞ்சு தித்தித்தது. திளைத்தது!

## 8

கணேசராஜ் இப்போது முழுத்த இளவட்டம். தேன் நிறத்து மனிதன். வாலிப முறுக்குக்கான தேக மினுமினுப்பில் இன்னும் கூடுதலான கலராய்த் தோன்றினான். கறுத்த மீசையை அம்சமாக ஒதுக்கி விட்டிருந்தான். பீடி வாசனை அறியாத கனிந்த உதட்டுக்கு மீசை ஒரு மகுடமாக ஜொலித்தது.

காடுகரைகளில் உழைத்த உடம்பு. முறுக்கேறிப் போய் இறுகிக் கிடந்த கச்சிதமான திரேகக்கட்டு.

சாயங்காலமாகிவிட்டால் காட்டுவேலை முடிந்து விடும். குளித்து முழுகி... துணிமணி மாற்றிக் கொண்டு... ‘குளு, குளு’ வென்று தேங்காயெண்ணெய் தேய்த்து, சேக்கு சீவி... ‘ஜம்ம்’ மென்று மடத்துக்கு வந்து விடுவான். மனசுக்குள் கச்சிதமாயிருப்பதாக ஒரு திருப்தி உணர்வு ததும்பும்.

மடத்திற்கு வந்தான். அவன் தோஸ்த் மாடசாமி இருப்பானா என்ற யோசனையோடும் ஏக்கத்தோடும் தான் வந்தான்.

அவன் இருந்தால் ஜாலி. பேச்சுக்குத் தோரணை யாக இருப்பான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். எல்லா ஜோலிகளிலும் தோஸ்த். லட்சுமி பூப்புனித நீராட்டு விழாவுக்குக்கூட ரெண்டு மூணுநாளாக கூடவே அலைந்தான். எல்லா வேலைகளிலும் தோள் கொடுத்தான். கம்பு வாரி எடுக்க பந்தல் போட, கிடுகுக்கட்டு சுமக்க... வாழை மரம் எடுக்க... மைக்செட்டை மாட்டுவண்டியில் வைத்துக் கொண்டு வர... பந்திச் சமையலுக்கு தண்ணீர் சுமக்க என்று சகல வேலைகளிலும் மூன்றாவது கையாக நின்று பங்கெடுத்தான். வியர்வை சிந்தினான்.

நல்லவேளை... மடத்தில் மாடசாமி இருந்தான். ஆனால், அவனிடம் ஏதோ ஒன்று இல்லாம லிருக்கிறது. வழக்கமாக இருக்கிற 'ஏதோ ஒன்று' காணோம். அது என்ன? தெரியவீல்லை.

"என்னடா... மாடசாமி, அப்பதையே வந்துட்டீயா?"

சுரத்தில்லாத குரலில் மாடசாமியின் எதிரொலி. "இப்பத்தான் வந்தேன்."

அவனது சுரத்தின்மை இவனது உற்சாகச் சிறகுகளை நறுக்கிவிட்டது. முகப்பிரகாசத்தை பறித்துக்கொண்டு திகைப்பை உட்காரவைத்து விட்டது. சிரித்த உதடுகளின் ஈரக்கனிவான மின்னல் சட்டென்று உறைந்து, உலர்ந்து... வருத்தத்தில் வாடிப் போயிற்று.

''ஏண்டா மாடசாமி... ஏன் ஒரு மாதிரியா யிருக்கே?''

''ஒண்ணுமில்லேடா... நா நல்லாத்தானிருக்கேன்.''

''நல்லாயிருந்தா அதை ஓம் மொகரை சொல்லாது?''

''மொகரை என்ன சொல்லுது. நல்லால் லேங்குதா?''

சிரிக்க முயல்கிற மாடசாமி. சுயபரிகாசமான சிரிப்பு. சிரிப்புத் தண்ணீரை ஒட்டவிடாமல் வருத்த எண்ணெய் படிந்திருக்கிற அவனது முகம். உலர்ந்த உதடுகள். சிரிப்பு ஒட்டவேயில்லை.

''என்னடா வெஷயம்... சொல்லு?''

''ஒண்ணுமில்லே.''

''ஏதாச்சும் உதவி வேணுமா?''

''ஒன்னாலே உதவமுடியாது. இன்னும் சொல்லப் போனா... எனக்கு வந்துருக்குற இதே நிலைமை... நாளைக்கு ஒனக்கும் வரத்தான் செய்யும். கட்டாயமா வரும்!''

''என்னடா மாடு, ஒரேயடியா புதிரு போடுறே?'' வருத்தச் சிரிப்பாய் துயரக் கசிவாக ஒரு மென்னகை மாடசாமி உதட்டில்.

''வாழ்க்கையே ஒரு புதிருதானே?''

கணேசராஜுக்குள் சிதைகிற பொறுமை. நண்பனின் மனசை அரிக்கும் கவலையை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வப் பரபரப்பு. மர்மக்

குறுகுறுப்பு. அன்பில் எழுகிற குறுகுறுப்பு. நட்பின் அக்கறையில் வருகிற பாசத்துடிப்பு. சிதைந்த பொறுமை எரிச்சலாயிற்று.

''ரொம்ப லொள்ளுபண்ணாம... சொல்லித் தொலை.''

''சொல்றேன்... உக்காரு.''

''இருக்கட்டும். சொல்லுடா மாடசாமி. என்னடா விஷயம்?''

''எங்க புஞ்சையை வித்துட்டோம்.'' சர்வ சாதாரணமாய்ச் சொன்னான் மாடசாமி. ஆனால், குரலில் ஒரு சோகம். அடர்த்தியாய் உறைந்துபோன ஒரு பாரம். லேசாக முகம் காட்டிய கரகரப்பில் துல்லியமாகத் தெரிந்த மனக்கவலை.

''புஞ்சையை வித்துட்டீங்களா?'' இவனுக்குள் வெடிகுண்டாக வெடிக்கிற நிஜம். நம்ப முடியாமல் திணறுகிற கணேசராஜ். இவனுள் சடேரென்று வந்து அறைந்த அதிர்ச்சி. இவனைத் தூக்கி வாரிப் போட்ட மாதிரியிருந்தது அந்தச் செய்தி.

மாடசாமியை ஒரு எளிய சம்சாரி என்று சொல்ல வைத்ததே, அந்த முக்கால் குறுக்கம்புஞ்சைதான். அதில்தான் அவனது குடும்பமே உயிர் வாழ்ந்தது. குடியிருந்தது. வியர்வை சிந்தியது. விளைய வைத்தது. வெள்ளாமையை மட்டுமல்ல, கனவுகளையும்தான்.

அந்தக் குடும்பத்தின் விவசாய அடையாளமே அதுதான். ஆதாரபலமே அதுதான். காலூன்றி நிற்கிற தரையே அந்தப் புஞ்சைதான்!

அந்தப் புஞ்சையை விற்றுவிட்டால் அந்தக் குடும்பத்தின் காலடிப்பலகையே உருவின மாதிரி. வேரறுத்த மாதிரி. அந்தரத்தில் தூக்கி வீசியெறிந்த மாதிரி.

விவசாயி என்கிற சமூக அடையாளமே துடைக்கப் பட்டுவிடும். நிலமிழந்த கூலிக்காரன். மம்பட்டி வேலைக்காரன். அன்றாடக்கூலி. நிலமில்லாத வெறும் மனிதன். ஊரான் நிலத்தில் வியர்வை சிந்தி, கிடைக்கும் கூலியில்தான் வயிறு நனைக்க வேண்டும்.

''நெசமாவாடா சொல்லுதே மாடசாமி?''

''ஆமா'' என்பது போல தலையாட்டுகிற மாடசாமியின் கனத்த சோகம். வருத்தக்கற்றை.

கணேசராஜுக்குள் சதக்கென்று அரிவாள் வெட்டு விழுந்த மாதிரியிருந்தது - மாடசாமியின் மனச்சோகம். அவன் ஒப்புக்கொண்டு விட்ட கசப்பான நிஜம். இவனுக்குள் சரேலென்று ஊடுருவிப் பாய்ந்தது. குடைந்தெடுத்தது.

''நாளைக்கு சப்-ரிஜிஸ்டார் ஆபீஸுக்குப் போகணும்டா. நெலத்தை எழுதிக் குடுக்கணும். நீயும் வரவேண்டியிருக்கும்.''

''எதுக்குடா... நெலத்தை இப்படி வித்தீக? அப்படியென்ன பெரிய செலவு வந்துருச்சிடா?''

மனக்கொதிப்பு அடங்காமல் கொந்தளிப்பாய் கேள்வியால் குதறுகிற கணேசராஜ்.

உள்வாங்கி உறைந்துபோன கனத்த துயரத்தோடு அமைதியாகச் சொன்னான் மாடசாமி. ''தங்கச்சி கல்யாணம்.''

''என்னடா சொல்லுதே?''

''ஆமடா கணேசா. ஏந்தங்கச்சிக்குக் கல்யாணம் நிச்சயமாகிக்கிட்டு வருது. நாளை மறுநாள் பொண்ணு பாக்க வர்றாங்க. அநேகமாய்... இது நிச்சயமாயிரும்.''

''ம்.''

''நகை செய்யணும். எப்படியும் பதினஞ்சு பவுனு வேணும். பத்தாயிரம் ரொக்கம் கேப்பான். கை நொண்டி, கால் நொண்டி மாப்பிள்ளையாயிருந்தால் கூட மேற்கொண்டு நம்ம கல்யாணச் செலவு இருக்கு. என்ன செய்ய?''

''புஞ்சையை வித்துட்டு எதை வைச்சுப் பிழைக்குறது?''

''கூலி வேலை செய்ஞ்சுதான்.''

''என்னடா... கல்யாணம்ங்குறது எம்புட்டுச் சந்தோஷமான விஷயம். அதிலேயும் கூடப்பொறந்த தங்கச்சிக்குக் கல்யாணம்ங்குறது எம்புட்டுப் பெரிய மகிழ்ச்சி, ஆனா...?''

''ஆமாடா கணேசா... கல்யாணம்ங்குறது சந்தோஷம்தான். துட்டு துக்காணியிலே செழிப்பா இருக்குற வீடுகளுக்கு. நம்மளை மாதிரி ஏழை பாழைகளுக்குக் கல்யாணங்கறது குடிமுழுகிப் போற கொடுமை. ஒரு கல்யாணத்துலேயே நம்ம குடிமுங்கிப் போகும். நாசமாய்ப் போயிரும்.''

அதற்குமேல் பேச ஒன்றுமில்லை... அவர்கள் இருவரிடையே ஒரு வெறுமை. சுற்றிப் பரவிச் சூழ்ந்த சூன்யம். மொத்தச் சமூகத்தின் குரூரமும் கொடூரமும் மனசுக்குள் தோன்றி அச்சுறுத்துகின்றன. சந்தோஷ மான ஒரு விஷயம் பூத்து வர வேண்டுமானால்... ஒரு குடும்பச் செடியே சாக வேண்டும் என்கிற வாழ்வியல் விதி எத்தனை அநீதியானது. எத்தனை கொடுமையானது.

இப்படியொரு சாபம் - விதி - ஏழைகளுக்கு மட்டுமே என்பதுவும் எத்தனை கொடிய அக்கிரமம்!

ரெண்டு பேருக்குள்ளும் ராட்சஸப் பறவையின் றெக்கை நிழலாக வந்து குவிந்த கனத்த மௌனம். கொந்தளிப்பான கொதி நினைவுகள். கூச்சலிடுகிற கனத்த மௌனம். ஒரு குடும்பமே குடைசாய்ந்த வண்டியாக தலைகுப்புற கவிழ்கிற ரணத்தை அனுபவிக்கிற வேதனையான மௌனம்.

மாடசாமியின் தங்கையை மனசுக்குள் நினைத்துப் பார்த்தான் கணேசராஜ். நல்ல சிவப்பு. தங்க நிறம். அந்தி வெயிலை வெட்கமடையச் செய்யும் ஒரு மேனியழகு. கச்சிதமான முகம். சொல்லி வைத்து அடித்த வீச்சரிவாள் மாதிரி பளபளப்பாள்.

அவளுக்கே, அந்த லட்சணத்திற்கே இத்தனை செலவு என்றால் ஒரு புஞ்சையையே விழுங்கி ஏப்ப மிடுகிற பாரம் என்றால்... ஒரு குடும்ப வண்டியையே குடைசாய்க்கிற சுமைப்பேதம் என்றால்...

லட்சுமிக்கு?

கன்னங்கரேலென்று தார் டின்னாக இருக்கிற லட்சுமி. அழகாய்த்தான் இருக்கிறாள். தரையில் வந்த நிலாதான். பருவச்செழிப்பின் மனக்கனவுகளை யெல்லாம் அள்ளிப் பூசியிருக்கிற மாதிரியோர் மேனியழகுதான். மினுமினுப்புதான்.

ஆயினும் -

கறுப்பு நிலா. கல்யாண மார்க்கெட்டில் வேண்டாத சரக்காக, விரும்பப்படாத பொருளாக கருதப் படுகிறவள். நகை, ரொக்க மிகையின் மூலமாக மட்டுமே திணிக்கப்பட வேண்டியவள்.

லட்சுமிக்குக் கல்யாணம் என்று வந்தால்?

தன் குடும்பத்தின் கதி? எதை எதை விற்று நாசமாக்க? தன் குடியே வெறுமையாகிப் போகுமா? வறுமை வந்து சூழுமா? கழுத்தைக் கவ்வுமா? கடித்துக் குதறுமா?

கணேசராஜுக்குள் ஐஸ்கட்டியைச் சொருகின மாதிரி சிலீர் என்று ஓடிச் சிலிர்க்கிற நடுக்கம். அடிவயிற்றில் ஏதோ ஒரு பிசைவையும் வெறுமைப்ப கீறையும் ஏற்படுத்துகிற ஒரு திகில். உணர்வு. அச்சமும் கிலியும் மனசைக் கிழிக்க... மாடசாமியின் வேதனை, கணேசராஜின் சொந்த வேதனையாக இடம் மாறுகிறது.

கணேசராஜ், மாடசாமி இருவரையும் பின்னிப் படர்ந்த கனத்த மௌனத்தின் நீடிப்பு.

நடுத்தெரு. மடம் நிறைய வேறு மனிதர்கள். தெருவில் டக்கர்களின் தடதடப்பான இரைச்சல். மாட்டுவண்டிகளின் 'கடக், கடக்' கென்கிற பைதாச் சத்தம். மாடுகளின் கழுத்துமணியோசை. நாய்களின் குருட்டுக் குரைப்பு. செம்மறியாடுகளின் 'தள்ளு முள்ளு'ப் பயணம். அதன் செருமல் சத்தம்.

இத்தனை சத்தச் சூழல்களுக்குள் மௌனமாய் அந்த இருவர். அவர்கள் மனசின் மூலை முடுக்குகளி லெல்லாம் மௌனத்தின் இருட்டு. பெருமூச்சை கனமாக்குகிற மனமௌனத்தின் இறுக்கம்.

அந்த மௌனத்தின் நீடித்த நினைப்புகள். இடிந்த மண்டபங்களின் நொறுங்கல் சிதறல்களாய் - கெட்டழிந்த சுண்ணாம்புத் தூசிகளாய் நினைப்புகள் - வௌவால்களின் வீச்சமான நினைப்புகள்.

அந்த நினைப்புகளின் குரூரத்தில், காலம் காலமான ரத்தபந்தம் - சகோதரபாசம் - சிதைந்து, இடிந்து, நொறுங்கி வௌவால் நாற்றமான சுண்ணாம்புத் தூசியாகி...

'கூடப்பொறந்த தங்கச்சின்னா... குடியைக் கெடுக்க வந்த பாதகத்திதான்...' என்று விகாரப்பட்டு, மனசுக்குள்ளிருந்து கனத்த பெருமூச்சு சீறல் சத்தமாய் வெளிப்பட்டது.

கணேசராஜுக்குள் ஒரு மெல்லிய உள்குத்தல். தன்னைத்தானே கடிந்துகொள்கிற முள்குத்தலான நினைவு- 'அய்யா ரத்தம், தன் தங்கச்சி. கூடப்பொறந்த

உடன்பிறப்பு... அவளை இப்படி நினைக்குறது மனுசத் தன்மையா? பகையாளியா நினைக்குறது பாவமில்லையா?' இந்த முள் குத்தத்தான் செய்தது. ஆனால், கூர்முனை மழுங்கத் துவங்கிவிட்டது.

## 9

காட்டில் வேலை பார்த்தாள் லட்சுமி. மூன்று கூலியாட்கள். அவர்களுக்கு முந்தியே களை வெட்டிப் போகணும். அப்போதுதான் அவர்களும் இவளைத் தொடர்ந்து களை வெட்டி வருவார்கள்.

வசக்கி வேலை வாங்குகிற விதம் இது. லட்சுமி மாங்குமாங்கென்று களைவெட்டிக் கொண்டு போனாள். குனிந்த நிலையில் நகரும் அவள். மேலும் கீழுமாய் ஆடும் முகம். களைச் சுரண்டி இறுகலான மண்ணை 'பர்ர்ரட், பர்ர்ரட்'டென்று இழுத்து, புல்லை வேரோடு வெட்டிச் சாய்க்கிற வேகம்.

தலைமுடிக்குள்ளிருந்து புறப்பட்டு, ஊற்றுக் கசிவாக நீர்க்கோடிடுகிற வியர்வை. செவியோர ரோமங்களை நனைத்து கன்னத்தோடு அப்ப வைத்த வியர்வை. குனிந்த முகத்தின் நாசி நுனியில் ஒரு வியர்வைத் துளி. தொங்கும் துளி. உழைப்பின் ஆபரணம்.

"ஏய்... வாங்க, நிறை பிடிச்சுத் தொயந்து வாங்க!"

"புல்லை தப்பவுடாம... பாத்து வெட்டுங்க."

இப்படி அவ்வப்போது தார்க்குச்சி வைக்கிற லட்சுமி. இதற்கெல்லாம் அசராமல் எதையும் பொருட்படுத்தாமல்... கேலியும் கிண்டலுமாய் பேசிச் சிரிக்கிற அவர்கள். ஊர்க்கதைகளும் புரணிகளும் ஜோடி மாறிய மனித அந்தரங்கங்களும் அந்த வெயிலின் வெக்கையில் கசிந்து பரவிற்று. இவள் வைக்கிற தார்க்குச்சி, சுரீரென்று வலித்து விட்டால் லட்சுமிக்குப் பதிலடியும் கிடைக்கும்.

''அடப்போடி... அடுத்த வீட்டுக்குப் போற கழுதை. அண்ணனுக்குச் சம்பாத்தியம் பண்ணி வைக்கீயாக்கும்? நீயாயிருந்து ஆளப்போறே? எவளோ ஒரு மூளியலங்காரி வந்து ராஜ்யம் பண்ணப் போறா. இதுக்கு நீ எதுக்கு மாய்ஞ்சு மாய்ஞ்சு வேலை பார்க்கணும்? எங்களையும் எதுக்கு உசுரை வாங்கணும்?''

''அதென்ன அப்படிச் சொல்லிட்டே? இவ சம்பாத்தியம் பண்ணி வைச்சாத்தானே, அண்ணன் தங்கநகை செய்ஞ்சுபோடுவான்? தீபாவளி சீர்வரிசை செய்வான்? மகளுக்குக் காது குத்துன்னா... கம்மல் வாங்கித் தருவான். தாய் மாமன் தாவணி, தாய் மாமன் பட்டு, பிறந்தவீட்டுக் கோடின்னு சாகுற வரைக்கும் அண்ணன்கிட்டேயிருந்து கைப்பத்தலாம்...''

''இப்படி வேற நெனைப்பா? ராஜ்யம் ஆளுறதுக்கு வரப்போற மூளியலங்காரி இதெல்லாம் செய்ய விட்டுட்டு ரசிச்சுக்கிட்டு இருப்பாளாக்கும்? 'செய்யுங்க, செய்யுங்க'ன்னு புருஷனைக் கொண்டாடு வாளாக்கும்? போடி... போ... நல்ல கூத்து! ஒரு

துரும்பாச்சும் நகரவிடுவாளா? கப்புன்னு புடிச்சு நிறுத்திப்புடமாட்டா?''

''மூளியலங்காரி வந்து தடுக்கணுமாக்கும்? இங்க அண்ணன் பாசத்துலே பொங்கிப் பொங்கி வழியுதானாக்கும்? அடப்போடி இவளே, அண்ணனே அடிவயிறு எரிஞ்சு போய்க் கெடக்கான்...''

''என்னன்னு?''

''இந்தத் தங்கச்சிப் பொட்டை நாயி, பெறந்த நாள்லேயே ஏன் சாகலைன்னு தவிச்சுப் போய்க் கிடக்கான். நகைநட்டு, சீருசெனத்தின்னு தட்டிப் பறிக்க இப்படி ஒரு பொட்டச்சி காத்திருக்காளேன்னு காய்ஞ்சு போய்க் கெடக்கான்.''

''அப்படியா சொல்லுதே... நீ?''

''மூளியலங்காரியா வர்ற மதினிக்காரியை யாச்சும் ஒரு கணக்குலே சேத்துக்கிடலாம். இந்த அண்ணமாரு இருக்காங்களே... படுபாவிப் பசங்க. தான்தின்னி நாய்க.''

''அண்ணன் நெஞ்சுலே ஈகை எரக்கம், தங்கச்சிங்குற பாசம் இல்லாமலா போகும்?''

''இருக்கும்... இருக்கத்தான் செய்யும். துட்டுக்குச் செலவுன்னு துல்லியமாயிருச்சுன்னா... பாசமாவது! கீசமாவது! எல்லாம் பறந்து போயிரும்.''

வேடிக்கையும் விளையாட்டுமாய்ப் பேசிச் சிரிக்கிற கூலிக்காரப் பெண்கள். வேடிக்கைக்குள் வினயமும் உட்கார்ந்திருக்கிறது. வினயத்திற்குள் சமூகக் குரூரமும் மனித உறவுப் போலியும்...

அவர்கள் பேசிச் சிரிக்கிற விஷயம் லட்சுமி காதிலும் விழத்தான் செய்கிறது. அவர்கள் யாரையும் 'குறித்துப்' பேசவுமில்லை. பொத்தாம் பொதுவாக உலகநடப்பைத்தான் பேசுகிறார்கள். கசப்பும் வெறுப்புமான காயரணத்தைக்கூட வேடிக்கைச் சிரிப்பாக்கி வெயிலின் வெக்கையில் கக்குகிறார்கள்.

ஆனால்...

லட்சுமிக்கு?

தன்னைக் குறித்துப் பேசுவதாகவே உள்ளுணர்வு. தனது அண்ணன் குறித்தே பேசுவதாக ஓர் உள் உறுத்தல்.

ஆயினும்.

கோபப்படவில்லை லட்சுமி. சீறிச்சினந்து விடவில்லை. ''அடப்பேசாமக் கெடங்கடி'' என்று ஆத்திரத்தில் அதட்டவில்லை. அதட்டி அடக்க வில்லை.

காரணம்...?

அவளுக்குள் இப்படி வார்த்தையாகா விட்டாலும் இதே உணர்வை ஏற்படுத்தக்கூடிய கசப்பான அனுபவங்கள். சின்னச் சின்னக் காயங்கள் உறைபோட்டு மறைத்த சூரிக்கத்தியாக முகம் காட்டாமல் மூடிமறைந்த கயமைத்தனமான சம்பவங்கள்...

... நேற்றுக்கு முன்தினம் இவள் அண்ணனுக்கு சோறு வைத்தாள். கருவாட்டுக் குழம்பு. அண்ணனுக்கு

ரொம்பப் பிடிக்கும். வாளைக் கருவாட்டை வதக்கி வைத்தால் 'கொண்டா, கொண்டா...' என்று சோறு கேட்டு வாங்கிச் சாப்பிடுவான். ரொம்ப மகிழ்ச்சியாக இருப்பான்.

முள்நீக்கிக் கருவாட்டைத் தின்கிறபோது... 'உஷ்ஷ்... உஷ்ஷ்...'ஷென்று ரசித்து ரசித்துச் சாப்பிடுவான்.

அண்ணன் ருசியறிந்து மனசறிந்து... வாளைக் கருவாடு வதக்கி வைத்திருந்தாள் லட்சுமி.

கால்கையைக் கழுவிவிட்டு... முகத்தைத் துடைத்து விட்டு வருகிற கணேசராஜ். அண்ணனையே புதிர்ப் புன்னகையோடு பார்க்கிறாள் லட்சுமி.

'வருவான். உட்கார்வான். குனிந்து பார்ப்பான். வதக்கி வைத்த வாளைக்கருவாட்டுக் குழம்பு என்றறிந்தவுடன் விருட்டென்று நிமிர்வான். முகமெல்லாம் மகிழ்ச்சி வெளிச்சம்.

''ஐய்ய்ய்... வாளைக்கருவாடா?'' என்று குழந்தைக் குதூகலத்துடன் கூச்சமில்லாமல் கும்மாளம் போடுவான். தங்கச்சியை நன்றி பொங்க பாசமின்னலாய் - பார்ப்பான். சிரிப்பான்.

என்றெல்லாம் எதிர்பார்த்து காத்து நின்றாள் புதிர்ப் புன்னகையோடு. ஆனால்...?

வந்தான். உட்கார்ந்தான். குனிந்து பார்த்தான். வதக்கி வைத்த வாளைக் கருவாடு என்றறிந்தவுடன் நிமிரவில்லை. குனிந்த நிலையிலேயே குழம்பையே வெறித்தான். குறுகி மலர்ந்த கண்கள். ஏதோ

சந்தேகப்பட்ட யோசனையைச் சொல்கிற கண்கள். மின்னலில்லை. குதூகல வெளிச்சமில்லை. 'ஐய்' யென்ற கும்மாளமில்லை!

அண்ணனின் முகத்தில் ஓர் இறுக்கம். ஏதோ கோபத்தை அடக்குகிற தோரணை. கன்னத்தின் இருபுறமும் புடைக்கிற தாடை.

புதிர்ப் புன்னகை இருந்த லட்சுமியின் உதட்டில் திடுக்கிடலின் மெல்லிய துடிப்பு. புரியாத குழப்பத்தின் கேள்வி இருட்டு. மனசை அறைகிற ஏமாற்றம். பாராட்டு மாலையையும் மகிழ்ச்சி நதியையும் எதிர்பார்த்து ஏமாந்த உணர்வுக் கற்றை.

''என்னண்ணே...?''

மர்மக் குழப்பத்தில் பதற்றத்துடன் லட்சுமி. நிமிர்கிற கணேசராஜ். அவன் முகத்தில் ஒரு சிடுசிடுப்பு.

''வாளைக்கருவாடு ஒனக்குப் பிடிக்கும்னு வைச்சேன்.''

''அதான்... யோசிக்கேன், எதுக்குன்னு?''

''இதுலே யோசிக்க என்ன இருக்கு? சந்தோஷமாக சாப்புடட்டும்னுதான் வைச்சேன்.''

சோற்றிலே கை வைக்காமலேயே அதே இறுகலான முகத்தோடு இவளைப் பார்த்தான்.

''ஒனக்கு என்னமும் வேணுமா?''

''என்னமும்னா?''

''கம்மல், மூக்குத்தி, சேலை துணிமணின்னு ஏதாச்சும் வேணுமா? கேக்கணும்னு நெனைக்கீயா?''

''அப்படி நெனைச்சுத்தான் இந்தக் கொழம்பு வைச்சிருக்கேன்னு நெனைக்கீயா? ஒனக்கிருக்கிற ஈனப்புத்தி ஏங்கிட்டேயில்லை. அடச்சீய்!''

லட்சுமி விருட்டென்று சமையல்கட்டுக்குள் தன்னையிழுத்துக் கொண்டாள். நீர் சிந்தும் முகத்தை அவனிடம் காட்டுவதுகூட அவமானம் என்பது போல தன்னை பதுக்கிக் கொண்டாள்.

அவன் சொன்ன சொல். அண்ணனின் உள்மன நினைப்பின் குரூரம்.

லட்சுமிக்குள் விளக்குமாறால் அடி விழுந்த மாதிரியிருந்தது. சிரித்த முகத்தில் காறித் துப்பின மாதிரியான ஓர் அதிர்வு. 'கோ' வென்று வெடித்துக் கதறியழணும் போலிருந்தது. தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கணும் போல மனசுக்குள் ஒரு முட்டல். ஒரு சோகத் திணறல்.

ஆனால்,

அடக்கிக்கொண்டாள். அழக்கூடாது. இந்த அற்பனை மனிதனாக நினைத்த மாதிரியாகிவிடும். என் கண்ணீர் இந்தப் பதரை அண்ணன் என்று கௌரவித்துவிடும். அழக்கூடாது. ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தக்கூடாது.

பொங்கிப் பீறிட்ட உணர்ச்சியை கட்டுப்படுத்திக் கொண்டாள். குமுறித் திமிறி வந்த அழுகையை விசும்பலை - மட்டியைக் கடித்து அடக்கிக்கொண்டாள்.

''அண்ணமாரை வழிச்சி மொட்டை யடிக்குறதுக்குத்தானே தங்கச்சிக உசுரோட இருந்து கொல்றீக?'' அண்ணனின் எரிச்சலான முணுமுணுப்பு.

அரசபுரசலாக இவள் காதில் வந்து விழுகிற ஒன்றிரண்டு தீப்பொறிகள்.

பொறிக்குள்ளிருந்த நெருப்பின் பயங்கரம். லட்சுமி நெஞ்சுக்குள் கற்றையாகப் பற்றிக்கொண்ட நெருப்பின் தகிப்பு. இதென்ன வார்த்தை? இதுக் கென்ன அர்த்தம்? பொம்பளைப் புள்ளைக உசுரோட இருக்கக்கூடாதா? கொன்னுடணுமா? தங்கச்சிங்குற பாசத்தைவிட, மனுச உயிரைவிட சொத்துதான் முக்கியமா?

## 10

அடுப்பங்கரைக்குள் லட்சுமி. இருட்டு மூலைக்குள் பம்மிப் பதுங்கும் கரப்பான்பூச்சியாக இவள். சுவரோடு சுவராக அப்பிக்கொள்கிற கரப்பான் பூச்சி.

வெளிச்சத்தைப் பார்க்க சக்தியற்றுப்போன வளைப் போல - அவமானம். அவஸ்தையின் ரணத்தை தாங்க இயலாதவளைப் போல லட்சுமி உள்ளுக்குள் உடைந்து, நொறுங்கி தூள் தூளாகி... புழுதியாகிப் போன லட்சுமி.

அண்ணனின் உள்முகப் பயங்கரத்தை உணர்ந்த அந்தக் கணம். ஆத்மாவின் ஆணிவேர் வரை மின்னல் தாக்கி கருகிப்போன அந்த நேரக் கொடூரம். அண்ணனின் கழுத்துக்குமேல் ஓர் ஓநாய் மூஞ்சி

இருப்பதைப் போல, தொங்குகிற அதன் நாவில் எச்சில் வழிவதைப் போல, குரூரக்கண்களால் வாளைக் கருவாட்டை வெறியோடு பார்ப்பதை போல -

அவளுள் ஒரு பிரமை. பயங்கர மயக்கம். அவள் உடல் முழுவதும் சிலீரெனப் பரவிய நடுக்கம். மனசின் மூலைகளில்கூட படர்ந்து பரவிய அச்ச உணர்வு.

''ச்சேய்...'' என்று வந்தது.

'அண்ணன் ஆசைப்படுவானே' என்று எத்தனை ஆசை ஆசையாக மிளகாய் நறுக்கினாள். கண்ணீர் வழிய வெங்காயம் நறுக்கினாள். அடுப்பின் வெக்கைக்குள் எத்தனை சிரமப்பட்டாள்.

'எல்லாவற்றையும் நொட்டாங் (இடது) காலால் எற்றிவிட்டானே... பாவி! பாசத்தைச் செருப்பால் அடித்துவிட்டானே... அன்பை அவமதித்து விட்டானே... சகோதர வாஞ்சையை தன்னலத்துக்கான வஞ்சக வலையாக கொச்சைப்படுத்திவிட்டானே... மூஞ்சி யில் காறித் துப்பிவிட்டானே...

நா உயிரோட இருப்பதே அவனை மொட்டை யடிக்கவா? அடப்பாவி... பத்து வயசுலேயிருந்து பாடு பட்டு இருக்கேனே. காட்லேயும் வீட்லேயும் வேர்வை சிந்தியிருக்கேனே... காடுகரைக வெளைஞ்சது என்னோட வேர்வை இல்லாமலா? கீழக்காட்லே இருக்குற வேப்பமரம். நா வைச்ச கன்னுதான். இந்த வீட்லே இருக்குற காசு பணம்... நா பாடுபட்டதாலே தானே?

இந்த வீட்லே நீ மட்டுமா பொறந்தே? நானும் தானே? எனக்கும் ஒரு பங்கு போட வேண்டாமா? வீட்லே காட்லே... சொத்துரிமை எனக்குத் தர வேண்டாமா...?

நா காய்ச்சி ஊத்துன கஞ்சியைக் குடிச்சிட்டு... என்னையே தண்டம்ங்குறீயா...? அட அற்பனே, என் பங்கை, என் உரிமையைக் குடுக்குறதுக்கு ஒனக்கு வலிக்குதா? மொட்டையடிக்குறதாகவா தோணுது?'

அண்ணனின் அல்பத்தனத்தை நினைக்க நினைக்க அவளுக்குள் குலை கொதித்தது. அவமான மாக இருந்தது. கோபமும் குமுறலும் அழுகையாக வெடிக்க முயன்று முட்டிக் கொண்டு நின்றன.

'அய்யா வரட்டும், சாயங்காலம் வரட்டும். சொல்றேன். இந்த அண்ணங்குற அல்பத்தைப் பத்திச் சொல்றேன்.'

சாயங்காலம் அய்யா வந்தார். அறுத்துப் போட்ட கீரைத் தண்டாக உயிர்க்களையற்று வாடிப்போயிருந்த மகளின் முகத்தைப் பார்த்தார் அண்ணாமலை. துடிக்கும் உதடுகளைப் பார்த்தார்.

மனசுக்குள் பதற்றம். ''என்னம்மா...? என்னாச்சு சொல்லு?'' என்று பதைத்தார்.

எவ்வளவோ சொல்லிக் கொதிக்க விரும்பிய லட்சுமி. எவ்வளவோ கொட்டியழுவதற்குத் தவித்த லட்சுமி.

அய்யாவின் கலங்கிய கண்களையும் பதைத்த முகத்தையும் பார்த்துவிட்டு...

ஒரு கணம் தயங்கினாள்.

''ஒண்ணுமில்லேய்யா...'' என்றாள். தலை கவிழ்ந்து கண்ணை மறைத்துக்கொண்டாள். நீர்த் துளியையும்தான். ''சொல்லும்மா... என்ன...? அண்ணன் என்னமும் சொன்னானா? வைதானா?''

''இல்லேய்யா... ஒண்ணுமில்லேய்யா...''

இப்படி ஏகப்பட்ட 'ஒண்ணுமில்லே'கள். அடிக்கடி நடந்த 'ஒண்ணுமில்லே'கள். அய்யாவுக்குத் தெரியாமல் நிகழ்ந்த நிறைய்ய 'ஒண்ணுமில்லே'கள். கனத்த சோகங்களையும் காயரணங்களையும் உள்ளடக்கிய 'ஒண்ணுமில்லே' கள்.

அண்ணனின் இந்த ஓநாய் மூஞ்சி, ரெண்டு மூன்று வருசமாகத்தான். அதற்கு முன்னாடியெல்லாம் இப்படி இல்லையே. அண்ணனின் முகம் குளிர் முகமாக இருந்ததே... ஒளிப் புன்னகை சிந்தியதே... சகோதரப் பாசத்தைப் பொழிந்ததே...

தாய்மாமன் பட்டு உடுத்தி... மஞ்சள் நீராட்டு விழாவில் பெரியவர்களைக் கும்பிட்டு ஆசீர்வாதம் பெற்று வந்தபோது கூட்டத்தில் ஒருவனாக நின்ற அண்ணனின் முகத்தை ஒரு கணம் பார்த்தாள். அப்போது. அந்த கணத்தில் -

அந்த முகத்திலிருந்த கனிவு. தங்கையின் பூ முகத்தைப் பார்த்த பூரிப்பு. கலங்கி நீர் கோத்திருந்த

கண்கள். அந்த நீரின் மினுமினுப்பு. அதிலிருந்து ஒளிர்ந்த அண்ணனின் சகோதர ஆத்மா. பாசத் துடிப்பு. அன்பு இதயத்தின் ஈரப் பிரகாசிப்பில் அவனது உதடுகள்.

அப்பொதெல்லாம் அண்ணம் முகம், அண்ணன் முகமாகவே இருந்தது. அன்புமுகமாக, பாசமுகமாக! எப்போது இப்படி ஓநாய் முகமாயிற்று? எப்படி ஆயிற்று?

அதிலும் —

மதினி வந்த பிறகு அண்ணனின் ஓநாய் முகம் ரொம்பவும் குரூரமாயிற்று. கண்ணீரும் அழுகையுமாய் அய்யாவிடம் 'ஒண்ணுமில்லே' சொல்லவேண்டிய நிகழ்வுகள்.

அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பழைய டவுசர் போட்ட கணேசராஜாவா? அதட்டித் திருத்த? முழுத்த ஆம்பளை. கல்யாணமானவன். தோளுக்குமேல் வளர்ந்தவன். தனது முதுமைக் காலமே அவனது தயவில்தான்.

எப்படிக் கண்டிப்பது? எப்படி அதட்டுவது?

லட்சுமிக்கு வீடே நரகமாயிற்று. ஜெயிலாயிற்று. 'எப்படா விடுதலை கிடைக்கும்' என்று ஏங்க ஆரம்பித்துவிட்டது லட்சுமி மனசு. இந்த வீட்டை விட்டு றெக்கையடித்து, பறக்கத் துடிக்கிற மனசு.

மஞ்சள்நீராட்டு விழா முடிந்து ஆறு வருஷங்கள் ஆயிற்று. அண்ணனின் சிடுசிடுப்பான முகம்.

''காலைச் சுத்துன பாம்புதான் இந்தச் சிறுக்கி. நம்மளைக் கடிச்சுச் சாகடிக்காமப் போவமாட்டா'' என்று வார்த்தை தீயை அள்ளிக்கொட்டிய மதினிக் காரியின் ஈகையற்ற இறுக்கம்.

துன்புற்று, காயம்பட்டு கதறுகிற மகளின் கண்ணீரைத் துடைக்கக்கூட கையாலாகாத முதுமை நிலையில் அய்யா.

'நாதியற்றுப் போனோமே...!' என்று உணர்ந் தாள். 'மனிதர்களற்ற பாலைவனத் தகிப்பில் கிடந்து துடிப்பதாக' நினைத்து வருந்தினாள்.

இந்த வீட்டைவிட்டுக் கடந்துபோனாலே போதும்... கரைசேர்ந்த மாதிரிதான். துன்ப வெள்ளத் திலிருந்து மீண்ட மாதிரிதான். இந்த நரகத்தீயிலிருந்து தப்பித்தாலே போதும் என்று லட்சமி தவித்த போதுதான் —

அந்த வீட்டுக்குப் பெண் கேட்டு வேல்க்கனி அனுப்பிய பெரியவர் வந்தார்.

என்ன ஏது என்று யோசிக்கவோ - பரிசீலிக்கவோ - ஆராய்ச்சி பண்ணவோ - சற்றே சந்தேகப்படக்கூட நேரம் எடுத்துக் கொள்ளவில்லை லட்சுமி.

கண்ணை மூடிக்கொண்டு சம்மதம் சொன்னாள்.

## 11

"நீ எனக்குத் தகுதியான ஆள் இல்லை" என்று யாரால் யார் நிராகரிக்கப்பட்டாலும் அது அவமான கரமான வேதனைதான். ஆயுள் முழுக்க அடி நெஞ்சில் தழும்பு நினைவுகளாக நிலைபெற்று விடும்.

வேல்க்கனி அப்படி ரெண்டு இடத்தில் அடி பட்டவன். பெண் கேட்டுப் போய்... பெண்ணால் நிராகரிக்கப்பட்டவன். வேல்க்கனியைப் பார்த்த வுடன் "மாப்பிள்ளை பிடிக்கலே" என்று சொல்லி விட்ட பெண்கள்.

"ஏன் பிடிக்கவில்லை?"

ஒரே காரணம். அவன் விவசாயி. நிலபுலன் உள்ள சம்சாரி. பம்ப்ஷெட் மோட்டாரும் காடுகரையும் உள்ள மத்தியதர சம்சாரி. சீந்துவாரற்றுப் போன சம்சாரித்தனம். நாய்படாத பாடுபட்டாலும் கட்டு படியாகாத சம்பளம். அப்படியொரு விவசாயிக்கு எந்தப் பெண் சம்மதித்து வாழ்க்கைப்படுவாள்?

ஆனால்... லட்சுமி மறுபேச்சு இல்லாமல் சம்மதித்தாள். அந்தக் கணத்திலேயே லட்சுமியை மனசுக்குள் ஆராதிக்கத் துவங்கிவிட்டான். மானம் காத்தவள். ஆண் என்பதை அங்கீகரித்தவள். 'தானும் ஒரு பெண்ணால் காதலிக்கப்படுவோம்' என்ற நம்பிக்கையை அவனுள் முதன்முதலாக ஏற்படுத்திய வள். லட்சுமியை தனது 'மான ரட்சகி' என்றே மதித்துப் போற்றினான்.

அதே போல —

அவனுக்குத் தன்னைப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்ற பயப்பதைப்பில் இருந்த லட்சுமி. கறுப்பு தார்டின். லட்சணமாயிருந்தாலும்... காட்டு விவசாய உழைப்பில் காய்ப்பேறிப் போன உடம்பு. கரடுமுரடான தோற்றம்.

''பிடிக்கலே'' என்று சொல்லிவிடுவானோ... என்ற பயத்தின் விளிம்பில் துடித்துக்கொண்டிருந்த லட்சுமி மனசு.

அவனது 'சம்மதம்' என்ற தலையசைப்பு, லட்சுமிக்குள் ஒரு வண்டிப்பூக்களைக் கொட்டியது. அவளுக்குள் ஆயிரம் மின்னல் தெறிப்புகள். புஜங்களில் முளைத்த றெக்கைகள். அடித்துப் பறக்கலாம். அண்ணியின் கொடுமையிலிருந்து, அண்ணனின் அல்பத்தனத்திலிருந்து விடுபட்டு, சிறகு விரிக்கலாம். விட்டு விடுதலையாகலாம். நகை நட்டு விஷயம் பேச வேண்டிய கட்டம் வந்தது.

அய்யா, கணேசராஜை உள்வீட்டுக்குள் அழைத்துச் சென்றார் கமுக்கமாய்.

''என்னய்யா?''

''இங்க வா...''

ரெண்டு பேரும் உள்வீட்டுக்குள் கமுக்கமாகக் கிசுகிசுத்தனர்.

''என்னய்யா...?'' எரிச்சல் எரிச்சலாய் கணேசராஜ்.

''தங்கச்சிக்கு நகை எம்புட்டுப் போடலாம்னு நெனைக்கே?''

''எம்புட்டுப் போட?'' வெடுக்கென்று கேட்கிற கேள்வியின் இறுக்கம்.

''பானைஞ்சு பவுன் நகை போடு.''

''பானைஞ்சு பவுனா...? அவ்வளவுக்கு நா எங்க போக?''

''ஏண்டா... மூணு வருசத்துக்கு முந்தியே தங்கச்சிக்குன்னு பத்துப் பவுன் நகை நா செய்ஞ்சு வைச்சேன்லே?''

கணேசராஜின் குரலின் இறுக்கம் கண்டிப்பான உதறல். அய்யாவை மதிக்காத அத்துமீறலான எடுத்தெறிப்பு.

''அய்யா, நீங்க வாயை வெச்சுக்கிட்டு கம்ம்முன்னு கெடக்கணும். 'எம்புட்டு நகைபோட... எப்படிக் கல்யாணம் பண்ண'ங்கிறதெல்லாம் நா பாத்துக்கிடுதேன். சுமக்குறவனுக்குத்தான் கழுத்து வலி தெரியும்.''

''இல்லேடா... அவளும் இந்த வீட்லே பாடு பட்டுருக்கா. வெவரம் தெரிஞ்ச வயசிலேயிருந்து வேர்வை சிந்தியிருக்கா. அவளுக்கு உரிய பங்கை ஞாயமா குடுக்கணும்லே?''

''எது ஞாயம், எது சாத்தியம்னு எனக்குத் தெரியும். நீங்க உங்க ஜோலியைப் பார்த்துக்கிட்டு சும்மா கெடங்க.''

எடுத்தெறிந்து பேசிவிட்டு, வார்த்தைக்கு காது தராமல் விருட்டென்று போய்விட்ட கணேசராஜ்.

மகளுக்காக வாதாடி, தோல்வியுற்று, அவமானப் பட்ட வேதனையின் நிழல் முதிய முகத்தில் இருட்டாகப் படிந்தது.

மனசின் வலி கண்ணின் கசிவில் தெரிந்தது.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அடுப்பங் கரையில் ஒண்டி நின்ற லட்சுமிக்கு, அய்யாவைப் பார்க்கப் பார்க்கப் பாவமாக இருந்தது. கண்ணோரக் கசிவைப் பார்த்ததும் அவள் மனசில் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி இருந்தது.

எவ்வளவு மதிப்பும் மரியாதையுமாய் இருந்தவர் அய்யா. அதிகாரமும் அன்புமாய் ததும்பியவர். தாயில்லாச் சோகம் உணரவிடாமல், பாசமும் அக்கறையும் செலுத்தியவர். உடலின் ஒவ்வொரு அணுவும் இந்த வீட்டுக்காக உழைத்தது.

அவருக்கே இந்த கதியா? இத்தனை அலட்சியமா? இவ்வளவு அவமரியாதையா? பெற்ற தகப்பன் என்ற பாசமும் மரியாதையும் இல்லையா? அவர் வயதுக்குக் கூட மதிப்பில்லையா?

அவள் மனச்சோகத்தின் புலம்பல். கண்ணில் மாலை மலையாக இறங்கியது.

வேல்க்கனி... ரொம்பக் கனிந்த மனசோடு சொல்லிவிட்டான். ''உங்க தங்கச்சிமேலே உங்களுக்கு இல்லாத அக்கறையா? பாசமா? நீங்க உங்க இஷ்டம் போலச் செய்யுங்க. உங்க தங்கச்சிக்கு நீங்க செய்றீக. எம்புட்டுச் செய்யணும்னு நா எதுக்குச் சொல்லணும்?''

அவனது பெருந்தன்மையான வார்த்தைகள்.

லட்சுமி அவனைப் பரிதாபமாக நினைத்தாள். 'அடக் கிரகச்சாரமே. இந்த ஆளு இம்புட்டு அப்புராணியாயிருக்காரே' என்று வருந்தினாள்.

அவள் நினைத்த மாதிரியே கணேசராஜ் வஞ்சித்துவிட்டான். வேல்க்கனியின் பெருந் தன்மையை இளித்த வாய்த்தனமாக்கிவிட்டான்.

''ஏழு பவுன் நகை'' என்று சுருக்கிவிட்டான். 'மூவாயிரம் ரொக்கம்' என்று முடித்துக்கொண்டான். லட்சுமியின் உழைப்புக்கான - வியர்வைக்கான - விலையும் அற்பமாயிற்று. 'பெண்ணுக்கு சொத்துரிமை' என்கிற நியாயமும் பஸ்பமாயிற்று. வீடு, நிலம், கிணறு எல்லாமே கணேசராஜுக்கு மட்டும் என்றாகிறது. பூமி மாதாவைப் போன்ற பொறுமை யுடன் இருப்பதைத் தவிர வேறுவழியில்லை லட்சுமிக்கு.

கல்யாணம் முடிந்துவிட்டது. புது மாப்பிள்ளை விருந்து தடபுடலாக நடந்தது. தோசைக்குப் போட, வடை, பணியாரம்... கோழியடிக்க... குருமா வைக்க என்று ஏகத்தடபுடல்.

புதிய உறவு. வேல்க்கனியுடன் புதிய உலகப் பிரவேசம். புதுச்சேலையும் மஞ்சள் பூசிய குளிப்பும் கொலுசுச் சத்தமுமாய் இன்பப் பறவையாய் சிறகடித்துத் திரிந்தாள். திருப்தியில் திளைத்தாள். பனியின் சிலிர்ப்பில் நனைந்த பூக்களாக அவள் மனசு.

அதில் ஒரு நாள்.

வேல்க்கனி எங்கோ வெளியில் போயிருந்தான். மதினியும் கடைக்குப் போயிருந்தாள்.

கணேசராஜ் வீட்டுக்குள் திண்ணையில் உட்கார்ந் திருந்தான். பக்கத்தில் லட்சுமி மட்டும்.

புத்தம் புதிய கல்யாண உலகத்திற்குள், உணர்வுச் சிறகுகள் விரிய பறந்துகொண்டிருந்த லட்சுமிக்குள் ஒரு மூலையில் கொதிப்பு. அண்ணனின் வஞ்சத் தினால் வந்த காயம். அதன் ஊமை வலி.

''அண்ணே...''

''என்ன லட்சுமி?''

''என்னண்ணே... ஏழு பவுன் நகையோடு என்னை ஒப்பேத்திட்டீயே... இது ஞாயமா?''

''ஏம்மா... ஏழு பவுன் கொஞ்சமா?''

''என் நகையே பத்துப் பவுன் இருந்துச்சு. அம்மா விட்டுட்டுப் போன நகை வேற இருந்துச்சு. எல்லாத்தையும் ஏமாத்திட்டீயே...''

''ஏமாத்திட்டேனா...?''

''ஆமா... அவரும் அப்புராணியாயிருந்ததாலே ஏமாத்திட்டே...''

''இல்லே... லட்சுமி, கல்யாணத்தோட நம்ம சங்காத்தம் முடியப் போகுதா? இல்லியே... இன்னும் எத்தனை செலவுக இருக்கு... தெரியுமா?''

''என்ன செலவு?''

''தலைதீபாவளி, தலை ஆடி... காதுகுத்து நல்லது பொல்லதுன்னு ஏராளமாயிருக்கே! எல்லாச் செலவுகளையும் நாந்தானே செய்யணும்?''

''நீ செய்யாம... வேற யாரு செய்வாக?''

''நாந்தானே செய்யணும். நாமட்டும்தானே செய்யணும்? எல்லாச் செலவுகளும் ஏந்தலையில் தானே? இதுலே ஏழு பவுனு, பத்துப் பவுன்னு பாட்டுப் பாடுனா... எப்படி? இதுலே நா எங்க ஏமாத்துறது?''

கணேசராஜின் ஆவேசப்பேச்சு, அடிமனசின் ஆழத்தில் மனசாட்சியை உரசிவிட்ட லட்சுமியின் பேச்சு. அதனால் வந்த ஆத்திரம். ஆங்காரத்தில் சிடுசிடுக்கிற முகத்தோடு, கைநீட்டிப் பேசிய கணேசராஜ்.

லட்சுமி பயந்துபோனாள். அண்ணனின் பேச்சிலுள்ள நியாயம். நியாய அடர்த்தி. நான் தவறாகப் புரிந்துகொண்டேனா? அனாவசியமாக அண்ணனை குற்றம் சொல்லிவிட்டோமோ? அண்ணனுக்கு நிஜமாகவே ஆயிரத்தெட்டு செலவுகள் காத்திருக்கின்றனவே? தங்கை என்ற பெண் எப்போதும் சுயமாக முடியாதா? சொந்தக்காலில் சுயமரியாதையோடு நிற்க முடியாதா? அண்ணனை நம்பித்தான் சாகும் வரை இருந்தாக வேண்டுமோ...?

லட்சுமி அமைதியானாள். மனசளவில் சாந்தியடைந்தாள். 'வஞ்சித்துவிட்டான் அண்ணன்' என்ற நினைவு முள்ளைப் பிடுங்கியெறிந்து விட்டாள்.

லட்சுமி அண்ணனைப் பார்த்தாள். பார்வையில் ஒரு குழைவு. கனிவு. குற்ற உணர்வின் மன்னிப்புக் கோரல். கெஞ்சல்.

லட்சுமி உள்ளுக்குள் அண்ணனை நேசித்தாள். ரொம்ப நாள் இடைவெளிக்குப் பிறகு சகோதர வாஞ்சையோடு அண்ணனைப் பார்த்தாள் லட்சுமி. அந்தப் பார்வையின் உணர்வுப் புதுமையை அண்ணனும் உணர்ந்தான். லட்சுமியின் அடிமனசின் உள்ஆழத்தில் ஏதோ ஒன்று இன்று நறுக்கிடுகிறது. ‘அண்ணன் சாமர்த்தியமாப் பேசி தன்னைச் சமாளிக்கிறானோ...! பூசி மழுப்பி நம்மளை ஏய்க்கானோ...’

## 12

வேல்க்கனிக்கு யாருமில்லை. தகப்பனார் செத்து ஒன்றரை வருஷம்தான் ஆகிறது. மிச்ச மீதியாயிருந்த ஒரே உறவும் அற்றுப்போய்விட்டது. நிலம், காடுகரை, பம்ப்ஷெட் மோட்டார், சொந்த வீடு எல்லாம் இருந்தது. ஆயினும் —

அன்புக்கு ஏங்கினான். ‘‘என்ன தலை வலிக்குதா...’’ என்று விசாரித்து பதறித் துடிக்கிற பாசத்துக்கு ஏங்கினான். ‘‘உங்களுக்கு பிடிக்கும்னு தான் இதைப் பொறிச்சு வைச்சேன்’’ என்று பரிவுடன் குழைகிற ஓர் இதயத்துக்கு ஏங்கித் தவித்தான்.

அவனது தவிப்பின் வெறுமையை நிரப்பினாள் லட்சுமி. அவர்கள் தாம்பத்யம் அசலான பந்தமாக, அந்நியோன்யமாக, ஆத்மார்த்தமாக இயங்கியது. சதைகளின் கலப்பாக மட்டும் இருக்கவில்லை. பரஸ்பரம் இருவரும் கரைந்து, நிறம் மாறி ஒன்றாகி, ஒரு நிறமாயினர். உணர்வின் கலப்பாக, ஆத்மப் பரிவர்த்தனையாக. ஒருவருக்குள் ஒருவர் மறையும் மாய நிஜமாக... ஒன்றிப்போன ஒருவராக...

கல்யாணம் முடிந்த ஆறாவது மாதத்தில் —

வேல்க்கனிக்கு விவசாயச் செலவுக்கு ரெண்டாயிரம் தேவைப்பட்டது. வேறு எங்கும் புரட்ட முடியவில்லை. பாட்சா பலிக்கவில்லை. பருப்பு வேகவில்லை.

வேல்க்கனி மறுகி மறுகி நின்ற விதம். 'கை மாத்து, கால்மாத்து' என்று ஓடியலைந்த பரபரப்பு. விறுவிறுப்பான வேகமாய்ப் புறப்பட்டு, நொந்த மனசோடு றெக்கையொடிந்த பறவையாக வந்து விழுகிற வேல்க்கனி. சப்பென்று நெஞ்சில் அறைந்த ஏமாற்றத்தின் கரிய நிழல், வாடி வதங்கிப் போன முகத்தில்.

''ஒரு பயலும் தராமட்டேங்கானே'' என்று ரகசியமாக முணுமுணுக்கிறான். ''எல்லாப் பயகளும் பல்லைக் கடிக்காகளே... வைச்சிருக்கிறவனும் குடுக்குறதுக்கு யோசிக்காகளே... எல்லாம் ஒரு மாசத் தவணைதான். பருத்தி ரூபா வந்தவுடனே மூஞ்சியிலே எறிஞ்சுரலாம். அதுக்கும்கூட பயப் படுறாங்களே...'' என்று வேதனையும் வெட்கமுமாய் முணு முணுக்கிறான்.

அவனையே கனிவோடு பார்க்கிறாள். பரிவோடு அவனது அசைவுகளை. குட்டி போட்ட பூனையாக நிலைகொள்ளாமல் தவிக்கிற தவிப்புகளை அவஸ்தையைப் பார்க்கிறாள். மனம் குழைந்துபோய் கேட்கிறாள்.

''என்னங்க...?''

''ஒண்ணுமில்லே.''

புதுமனைவி. வந்து ஆறு மாதமாயிற்று. உடம்பும் மனசும் ஆத்மாவும் அறிமுகமாகி... பழகி... நட்பாகி... தோழமையின் இறுக்கமாகி பரஸ்பர அந்தரங்கங் களைப் பகிர்ந்து தோல்விகளையும் பலவீனங்களையும்கூட நம்பிக்கையுடன் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு...

ம்ஹூம்... அப்படியெல்லாம் பக்குவமாகி விடவில்லை. புதுசு மங்காமல் இருகிற மனைவி.

அவளிடம் போய் இதைச் சொல்லவா? வெட்கக்கேடான அவலத்தைச் சொல்லிப் புலம்பவா?

''வெள்ளாமைச் செலவுக்கு வழியில்லே. ரெண்டாயிரம் பெரட்டக்கூட வக்கில்லே'' என்று நாணங்கெட்டுப் புலம்பவா?

வேல்க்கனிக்கு லஜ்ஜையாக இருந்தது. தர்ம சங்கடமாகத் தவித்தான்.

மருகி மருகித் தவிக்கிற வங்கொடுமையைப் பார்க்கச் சகிக்காமல் லட்சுமி அவனை மாறி மாறி, துளைத்துத் துளைத்துக் கேட்ட பிறகு... வழி

யில்லாமல், மலையைப்புரட்டுகிற கனத்த தயக்கத்துக்குப் பிறகு... மெல்ல மெல்ல வாய் விட்டான்.

''ஒரு மாசத்துலே குடுத்துரலாம். வீட்லே பருத்தி அம்பாரம் கெடக்கு. வித்தவுடனே குடுத்துலாம். இப்ப ரெண்டாயிரத்துக்கு அர்ஜெண்ட். நானும் ஊரெல்லாம் அலைஞ்சிட்டேன். பாட்சா பலிக்கலே. பருப்பு வேகலே... அதான் முழிச்சிக்கிட்டுவாரேன்...''

''இதுக்குத்தானா... இம்புட்டு மலைப்பு?'' ஒரு சிறுமிக்குரிய குதூகலத்துடன் அலட்சியமாகக் கேட்டாள்.

''ஏன்... ஒங்கிட்டே இருக்கா?''

''இல்லே... நா வேணும்னா... எங்க அண்ணன் கிட்டே வாங்கிட்டு வரட்டா?''

''அவருகிட்டே இருக்குமா?''

''இருக்கும்... வைச்சிருப்பான்.''

''கேட்டா... தருவாரா?''

''நாங்கேட்டா... தட்டமாட்டாரு.''

''அவரும் நம்மளை மாதிரி சின்ன சம்சாரி. கைக்கும் மெய்க்கும் துட்டு இல்லாமத்தானே இருப்பாரு?''

''அவன்கிட்டே இல்லாட்டாலும் என்னோட ரூவா இருக்கும்லே?''

''ஒன்னோட ரூவாயா?''

''ஆமா... பரிசம் போட்ட அன்னைக்கு 'கும்புடு போட்ட' ரூவா ஆயிரத்து நூத்தி நாப்பத்தஞ்சு ரூபா.

கல்யாணத்தன்னைக்கு 'கும்புடு போட்டதுலே' வந்த வருமானம் ஆயிரத்து இருநூற்று பத்து ரூபாய். அதைப் பூராத்தையும் அண்ணன்கிட்டே குடுத்து வைச்சிருக்கேன்.''

''ம்.''

''போய் வாங்கி வரட்டா...?''

வேல்க்கனிக்குள் தயக்கம். சுயமரியாதை குறையுமா? மச்சினனை இழிவாக நினைப்பாரோ... நம்மைப் பற்றி தப்பாக நினைப்பாரோ... ஆனாலும் வேறுவழியில்லை.

''என்னங்க... வாங்கிட்டு வரட்டா?''

''போய்... கேட்டுப் பாரு. இல்லேன்னு சொல்லிட்டா... விட்டுரு. ரொம்பக் கெஞ்ச வேண்டாம்...''

''ஏங்க...?''

''ஒன்னை ஏளனமா, இகழ்ச்சியா பேசுனா எனக்கு மனசு தாங்காது. கோபதாபம் வந்துரக்கூடாது. கேட்டுப்பாரு. இல்லேன்னு சொல்லிட்டா வாக்குவாதம் பண்ண வேண்டாம். வந்துரு.''

''சரிங்க.''

**ம**றுநாள்...

லட்சுமி புறப்பட்டாள். மூன்று மணி பஸ்ஸுக்குப் போனாள்.

இவள் வீட்டுக்குள் நுழைகிறபோது—

மதினி வாசலில் நின்றாள்.

''என்னடியம்மா லட்சுமி, புதுப்பொண்ணு ஒத்தையிலே வாரே...?''

''சும்மாதான் மதினி. அண்ணன் எங்க?''

''உள்ளே இருக்காக. வா உள்ளே.''

கணேசராஜும் உபசரித்தான். மச்சினரை விசாரித்தான். காடுகரையைப் பற்றி... வெள்ளாமை விளைச்சலைப் பற்றியெல்லாம் விசாரித்தான்.

சாப்பிடச் சொன்னான்.

கடைசியாக 'வந்த காரியத்தை' விசாரித்தான். இவளும் சொன்னாள். ரெண்டாயிரம் தேவைப் படுவதை... அங்கே இங்கே அலைந்ததை, கைமாத்து கால்மாத்துகூட கிடைக்காததை எல்லாம் 'ஒரு மூச்சு' பேசித்தீர்த்தாள். கணேசராஜ் முகமே மாறி விட்டது. சிடுசிடுப்பும் வெறுப்புமாய் பேசினான். அவன் வெடுக்கென்று கேட்டான்.

''ஏங்கிட்டே என்ன ரூவா இருக்குன்னு இங்க வந்தே?''

''என்னண்ணே... இப்படி 'பொசுக்'குன்னு சொல்லிட்டே?''

''ஆமா... எங்கிட்டே எந்த ரூவா இருக்கு?''

''கடனா குடு.''

''குடுக்குறதுக்கு ரூவா வேணும்லே?''

''அப்ப... என்னோட ரூவாயாச்சும் குடு.''

''ஒன்னோட ரூவாயா? அது எந்த ரூவா?''

''பரிசத்துக்கும் கல்யாணத்துக்கும் கும்புடு போட்ட ரூவா? அதுலே வந்த வருமானம்?''

''நீ கும்புடுதே. பெரியாளுக திருநீறு பூசுதாக. ரூவாயை உன் கையிலே திணிச்சு ஆசீர்வாதம் பண்ணுதாக. அப்ப... அது உன்னோட ரூவாயா?''

''பெறகு?''

''அதை வாங்கிக்கிட்டுப் போகத்தான் வந்தீயா?''

அவன் குரலில் எகத்தாளம், பரிகாசம், ஏளனம். நக்கலாகக் கேட்டான்.

''ஆமா...''

அவன் முகத்தில் கோப இறுக்கம். தாட்சண்ய மில்லாமல் சொன்னான். ''அது பூராவும் எனக்குத்தான். நாளைக்கு அந்தப் பெரியாளுக வீட்லே விசேஷம்னா... அவுக குடுத்த ரூவாயை நா குடுக்கணும்லே? இது வட்டியில்லாக் கடன். இந்தக் கடனை நீயா அடைப்பே? நாந்தானே அடைக்கணும்?''

''இல்லேண்ணே...''

''நிறுத்து லட்சுமி. போன எடத்துலே பாடுபட்டு முன்னேறுறதுக்கு வழியைப் பாரு. அண்ணன் குடும்பத்தை வழிச்சு, மொட்டையடிச்சு... இங்கே யிருந்து கொள்ளையடிச்சுக் கொண்டு போவணும்னு ஆசைப்படாதே...''

அடி! பாசத்தோடு ஓடிவந்த பூ மனசில் விழுந்த பேயடி! லட்சுமி நரம்புகள் முழுவதும் நடுங்கிப் போகிற மாதிரி அதிர்ந்துபோனாள். ஸ்தம்பித்துப் போனாள். பேச வாய் எழவில்லை. அவமான

அவஸ்தை. வெலவெலத்துப் போய் மலங்க மலங்க முழித்தாள்.

இன்னும் பேசினான் கணேசராஜ், தாட்சண்யம் பார்க்காமல் மூஞ்சியில் அடித்த மாதிரி. அவமானப் படுத்துகிற மாதிரி. பாசமேயில்லாமல்... சகோதரி என்கிற பிரியமே இல்லாமல், நெகிழ்வே இல்லாமல் முரட்டுத்தனமான மூர்க்கத்தில் பேசித் துரத்தி விட்டான்.

வீசினகை வெறுங்கையாக, அவமான வேதனை கள் சுமந்த நெஞ்சாக - சிறகொடிந்த பறவையாக வீடு வந்து விழுந்தாள், அரை உயிராக.

பணம் இல்லாமல் வந்ததுகூட வேல்க்கனியை பாதிக்கவில்லை. லட்சுமியை... தனது ஆத்ம பங்காளியை... 'மூக்கையறுத்து' அவமதித்து விட்டானே... மனசை நோகடித்துப் புண்படுத்தி விட்டானே... காயப் படுத்தி, நினைத்து நினைத்து அழும் நிலையில் வைத்து விட்டானே என்ற கொதிப்புதான், மச்சினன் மேல் கோபம் கோபமாய் வந்தது. அய்யா சொல்லியும் நிராகரித்தது... ஏழு பவுன் நகையோடு... 'இழுவி விட்டது' எல்லா உள்குட்டு களையும் லட்சுமி மனசு கரைந்து திரேகம் மயங்கிய கணங்களில் சொன்னதனால் அறிந்திருக்கிறான்.

''ச்சே... ரொம்ப அற்பப்பயலாயிருப்பானோ... ஈனப்புத்தி உள்ள பயலோ...'' என்று கசப்புடன் முணுமுணுத்தான் வேல்க்கனி.

லட்சுமி கர்ப்பமாயிருந்தபோது —

அஞ்சாவது மாசம் கட்டுச்சோறு கட்டித் தருகிற வழமை உண்டாம். அண்ணனின் மனைவிதான் கொண்டுவந்து தரணும்.

அஞ்சாவது மாசம் வரவில்லை. ஏழாவது மாசமாச்சும் வருமா என்று எதிர்பார்த்து, ஏங்கித் தவித்தாள். வராததை ஒரு அவமானமாக உணர்ந்தாள். சொல்லிச் சொல்லி மாய்ந்தாள். புலம்பித் தவித்தாள். அழுதாள்.

வரவேயில்லை. வேல்க்கனிதான் ஆறுதல் சொன்னான்.

தலைப்பிரசவத்துக்கு ஒன்பதாம் மாசம் அழைக்க வந்தார்கள். அதுவும் உப்புச்சப்பு இல்லாமல் வேண்டா வெறுப்பாக...

ஊர்முறைக்கு வேல்க்கனியும் அனுப்பி வைத்தான்.

அவளை அவள் மதினியும் அண்ணனும் படுத்திய பாடுகள்... பாடாய்ப்படுத்திய கொடுமைகள்.

பார்க்கப் போன வேல்க்கனியிடம் அழுது கசிந்த லட்சுமி.

மனம் பொறுக்காமல் பதைத்துப்போய்... ''வா, எங்கூட'' என்று கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். தலைப்பிரசவமே வேல்க்கனி வீட்டில்தான் நடந்தது.

'அண்ணாமலை செத்துப்போனார்' என்று செய்தி வந்த போது அலறியடித்துக் கொண்டு ஓடினாள். மூன்று நாள் இருந்தாள். மூன்றாம் நாள்.

அண்ணனுக்கு விலை உயர்ந்த வேட்டியும் சட்டையும் டர்க்கித் துண்டும் போட்டாள். மதினிக்கு ஆயிரரூபாய் விலையில் சேலை எடுத்துக் கட்டினாள்.

ஊரே பார்த்துப் பாராட்டிப் பாராட்டிப் பேசியது.

''அண்ணனுக்குக் கிரீடத்தையே தூக்கி வைச்ச மாதிரி, 'ஜேஜே'ன்னு கௌரவப்படுத்திட்டா லட்சுமி. கணேசன் கொணம் ஒரு மாதிரிதான். ஆனா, லட்சுமி கொணம் தங்கம் மாதிரி.''

மறுநாள் விடிந்தால் ஊருக்குப் போகணும் லட்சுமி. இழவு முடிந்து எல்லா விஷயமும் நடந்து முடிந்த பிறகு வீட்டிற்குள் எல்லோரும் உட்கார்ந்து சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டனர். பலதுகளை யும் தொட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது —

லட்சுமி இழவுக்கு எடுத்த வேட்டி துணி மணியைப் பற்றி சற்றே பெருமிதமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

தலைப்பிரசவத்துக்கு அழைத்து வந்து பாடாய்ப் படுத்திய கொடுமைகளை, ரெண்டாயிரம் ரூபாய் கடன் கேட்டு வந்தபோது அண்ணன் தந்த செருப்படி களை - சாடைமாடையாகச் சொல்லிக் காட்டினாள். பட்ட வேதனை. பழைய ரணம். வலியின் ஞாபகம். காட்டிக்கொள்ளக்கூடாது என்று நினைத்தாலும் அவளது பேச்சில் கசிந்துவிட்ட சோகம். சாடைமாடை யாக முகம்காட்டிவிட்ட கசப்பு.

கணேசராஜுக்கு சுரீரென்று சுட்டது. அடிமனசின் வேர்வரை சட்டென்று பாய்ந்து பரவிய ரோஷாக்னி. முகம் கடுகடுத்தது. பட்டென்று காணாமல் போய் விட்ட சிரிப்பும் சகஜபாவமும். வெடித்த கோபக்குரல். குரலின் காரம் உயர்ந்தஸ்தாயி.

''ஏய் லட்சுமி... என்ன சொல்லுதே? நீ ரொம்பப் பெருந்தன்மையானவ. பாசக்காரி. ஆனா... நாங்க அல்பம். பாசமேயில்லாம துட்டுக்காக வேஷம் பேடுறவுக. இல்லே? அப்படித்தானே சொல்லுதே?''

''அப்படி இல்லேண்ணே... நா சொல்ல வந்தது என்னன்னா...?''

தடுமாறித் தத்தளித்த லட்சுமி தன்னை மறைக்கவும் முடியாமல், வெளிப்படுத்தவும் இயலாமல் தவித்த லட்சுமி.

கோபத்தில் எகிறுகிற கணேசராஜின் குரல்.

''இங்க பாரு... ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்க. நீ தங்கச்சி, நா அண்ணன். நீ பொம்பளை. நா ஆம்பளை. என்னை நம்பித்தான் நீ இருக்கே. ஒன்னை நம்பி நா இல்லே.''

திமிர், அகம்பாவம் என்கிற முறுக்கேறிய உணர்வுகளில் கர்ணகடூரமாகவும் சற்றே கம்பீரமாகவும் கணேசராஜின் குரல்.

விஷயம் விபரீதமாவதையும் சூழல், ரசாபாசமாவதையும் உணர்ந்து தடுமாறினாள் லட்சுமி. ''இல்லேண்ணே... நீ கோபப்படாதேண்ணே'' என்று மருகினாள். ஆனால், அண்ணனின் குரல் உயர்கிறது.

''அய்யா செத்த இழவுக்கு வேட்டி துணிமணி எடுத்ததுக்கே இம்புட்டுப் பீத்திக்கிடுதே. தலைப் பிரசவத்துக்கு வந்தப்ப... நீயும் உன் புருசனும் வீம்பு பண்ணிட்டு இடையிலே போய்ட்டு... என்னைக் குத்தம் சொல்லுதே. ஆனா, இப்பக் கேட்டுக்கோ, நீ பொம்பளை. நீ சாகுற வரைக்கும் இந்த அண்ணன் தயவு வேணும். என்னை நம்பித்தான் நீ. தெரியுதா?''

''...''

''உன் புள்ளைக்கு மொட்டை போடுறப்ப இந்தத் தாய்மாமன் கம்மல் எடுத்துட்டு வரணும். உன் புள்ளைக்கு நாளைக்கு தாவணி போடணும்னா... இந்த தாய்மாமன் தயவு வேணும். சமஞ்சு உக்காந்தா இந்தத் தாய்மாமன் வேணும். மகனாயிருந்தாலும் மகளா யிருந்தாலும் அதுக்குக் கல்யாணமானா... இந்தத் தாய் மாமன் வேணும். நீ தாலியத்தாக்கூட பொறந்த வீட்டுக் கோடித் துணி போட இந்த அண்ணன் தயவு வேணும். ஆனா... உன் தயவு எனக்கு இனிமே எப்பவும் தேவையில்லே. தெரியுதா? ஆம்பளையை நம்பித்தான் பொம்பளை சாகுறவரைக்கும் இருந்தாகணும். பொம்பளையை நம்பி ஆம்பளையில்லே. நீதான் என்னை அனுசரிச்சுப் போகணும். பயந்து நடக்கணும். என் தயவை எப்பவும் நம்பியிருக்கணும். வாயைக் குடுத்து எம் பகையைச் சம்பாதிச்சிக்கிராதே... அப்புறம் நாதியத்தவளா கேவலப்படப் போறே.''

அவனிடமிருந்த மூர்க்கம், குரலிலிருந்த ஆத்திரம், தாட்சண்யமற்ற முரட்டுத்தனம், தங்கை

என்கிற ரத்தபந்தத்தைக்கூட பொருட்படுத்தாமல்... ஆணாதிக்கத் திமிரோடு அவன் செய்த மிரட்டல்.

லட்சுமிக்கு முகம் செத்துவிட்டது. இப்படியொரு தாக்குதலை, வெறித்தனத்தை, ராட்சஸத்தனத்தை அவள் எதிர்பார்க்கவேயில்லை. முகத்துக்கு நேராக காறித்துப்பிய அந்தக் கொடூரத்தை அவளால் சமாளிக்கவே முடியவில்லை.

'ஊர் சிரிச்சாலும் சரி... 'நாதியத்தவ'ன்னு நாடே கேவலமா சிரிச்சாலும் சரி... இனிமே இந்தப் பாவி மூஞ்சியிலே முழிக்கவே கூடாது. திமிர் பிடிச்ச இந்த நாய் வராமலேயே எம் புள்ளைக்கு நான் காது குத்துறேன். இந்த அண்ணனும் வேண்டாம். ஆம்பளையும் வேண்டாம். தாலியத்தாக்கூட இந்தப் பாவியோட கோடித்துணி வேண்டாம்... த்தூய்...! இவனெல்லாம் ஒரு மனுசனா? மிருகம். நாய். வெறிபிடிச்ச நாய். நாய் வந்து தாய்மாமனா வந்து நின்னு... எம்புள்ளைக்குக் கல்யாணம், காதுகுத்து 'மணக்க' வேண்டாம்...'

வெறுப்பும் குமைச்சலுமாய் உள்ளுக்குள் அழுத லட்சுமி ரோஷப்பட்ட மனசின் ரௌத்தரமாய் - வைராக்கியமாய் அவளுக்குள் வந்த முடிவு.

'இனிமே... இந்த அண்ணன் சங்காத்தம் வேண்டவே வேண்டாம். அய்யாவோடு முடிஞ்சுது இந்த வீட்டோட உறவு. இனிமே இந்தத் திமிர்பிடிச்ச ரத்தப் பொறப்போட சங்காத்தமும் வேண்டாம்... சம்பந்தமும் வேண்டாம்.'

மறுநாளே-

அரை உயிராகப் போய்ச் சேர்ந்தாள் லட்சுமி. நடந்ததைக் கேட்டு மனம் கொதித்தான் வேல்க்கனி.

''இங்க பாரு லட்சுமி, ஒனக்கும் எனக்கும் நாதியேயில்லேன்னு நெனைச்சு எல்லாத்தையும் மறந்துரு. நமக்கு நாமதான் நாதி, தொணை எல்லாம். நாம ஒத்துமையாயிருந்தா... அதுதான் பெரிய கௌரவம். பிறந்தவீட்டுச் சீர்வரிசை வர்றதுலேயும் வராததுலேயும் இல்லை கௌரவம். கவலைப் படாதே.''

அவனின் ஆறுதல், அன்பான கணவனாக மட்டு மல்ல, காயம்பட்ட மனசுக்கு எண்ணெய் தடவுகிற மனிதனாகவும் கனிந்து நின்ற வேல்க்கனி.

இவர்களது மனசுகளுக்கு மட்டுமே தெரிந் திருந்த 'அண்ணன் - தங்கை உறவு முறிவு' விஷயம் ஊரறிந்த விஷயமாகப் பரவுகிற நேரமும், அடுத்த நாலாவது மாசமே நிகழ்ந்துவிட்டது.

வேல்க்கனியின் சித்தப்பா இறந்துபோனார். நீர் மாலை கிணற்றுக்கு வேல்க்கனியும் குடம் சுமந்து தீர வேண்டிய நிர்ப்பந்தம்.

வேல்க்கனிக்கு வேட்டி சட்டை என்று புதுத்துணி எடுத்து வந்து கருமாந்திரத்தன்று மரியாதை செய்ய வேண்டும் கணேசராஜ். இது ஊர் வழமை. தங்கையை கட்டியவனுக்கு அண்ணன் செய்யவேண்டிய சம்பிரதாயக் கடமை.

மொத்த ஊரே கணேசராஜ் வருகையை எதிர் பார்த்தது. ''எதைத் தள்ளுனாலும் இழவு தள்ளக் கூடாது. இழவுலே வெலகுன உறவு, வேற எதுலேயும் வந்து ஒட்டாது'' என்ற விவரம் தெரிந்த சாதிசனம், ரொம்ப நம்பிக்கையோடு எதிர்பார்த்து நிற்க:

பதினாறாம் நாள் கருமாந்திரத்துக்கு கணேசராஜ் வரவேயில்லை. சபையில் வைத்து முகத்தில் கரிபூசின மாதிரி, ஊரறிந்த கேவலமாகிவிட்டது வேல்க்கனிக்கு. லட்சுமி தலைவிரிகோலமாக நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதாள். ''மனுசத்தன்மையுள்ள தன் புருஷன், ஊர்ச் சபையில் உரியமரியாதையில்லாமல், தலைகுனியும்படியாயிற்றே'' என்று அழுது புலம்பினாள்.

இழவிலும் உறவைத் தள்ளிவிட்ட அண்ணனின் மீது அடங்காத ஆத்திரம் லட்சுமிக்கு! நல்லதங்காளாக மனம் கொதித்து சபித்தாள். ''அட... நீயா... நீ வெளங்கவே மாட்டே. நாசமாய்ப் போயிருவே...''

குலை கொதிக்க திட்டித் தீர்த்தாள். ஏழு பிள்ளைகளும் கிணற்று நீரில் மிதக்க, பெற்ற வயிறும் நெஞ்சும் கொதிக்க, தலைவிரிகோலமாக கிணற்று விளிம்பில் நின்று சபித்த நல்லதங்காளின் அதே குலை கொதிப்பு. அதே சாபம். அதே ஆத்திரம்.

இதெல்லாம் நடந்து முடிந்து, முறிந்த உறவின் காயமெல்லாம் கால ஓட்டத்தில் கரைந்து ஆறிப் போய் வெறும் தழும்பாக மாறிப் போன பிறகு —

நாலைந்து வருஷங்கள் எந்த உறவும் நினைவு மில்லாமல் சுவடேயில்லாமல் எல்லாம் மறைந்த பிறகு - மறந்துபோன பிறகு...

இதோ-

அண்ணனின் கடிதம்.

'நமக்குள் என்னென்னவோ நடந்துவிட்டது. நல்லதும் பொல்லாததுமாய்... கசப்பும் வெறுப்புமாய் நிறைய நடந்து முடிந்துவிட்டது. எதையும் மனசில் வைத்துக் கொள்ளாதே. கெட்ட கனவாக நினைத்து நீயும் மைத்துனரும் மறந்துவிட வேண்டும்.'

என்றெல்லாம் எழுதிவிட்டு... 'நாலைந்து நாட் களில் வருகிறேன்' என்று வேறு எழுதியிருக்கிறான்.

எந்தத் தீயை மறக்க? எந்தக் கேவலத்தை மறக்க? எப்படி மறக்க...? இதோ... இவர் சீறிப் பாய்கிறாரே...

''அண்ணன் நொண்ணன்னுட்டு எந்த நாயும் வரக்கூடாது'' என்கிறாரே... வெடித்துச் சிதறு கிறாரே... கோபப்படுகிறாரே... நியாயம்தானே? அவரது கோபத்தில், குமுறலில் என்ன தப்பு இருக்கிறது?

அண்ணன் வந்து வாசலில் நின்றால் என்ன ரணகளம் நடக்கும்? லட்சுமிக்குள் பற்றிக்கொண்ட கிலித் தீ. அடிவயிற்றைக் கலக்குகிற திகில்.

# 13

லட்சுமி கண்ணை மூடி உறங்கி நாலு நாளாயிற்று. ஒவ்வொரு கணத்திலும் நெஞ்சுக்குள் ஐஸ்கட்டியை சொருகிய மாதிரி சிலீரோட்டம். அடிவயிற்றுக்குள் பகீர், பகீரென்கிற சூன்யம்.

'அண்ணன் வருவானே... வந்து நிப்பானே... இந்த மனுசர் என்ன கூப்பாடு போடுவாரோ... எம்புட்டு ஆட்டம் ஆடுவாரோ... ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் குதிப்பாரோ... செய்த கேவலத்துக் கெல்லாம் பழிவாங்குகிற மாதிரி ரணகாளியாக கூத்தாடுவாரோ... ஊரே கூடி நின்னு கூத்து பாக்குமே... கைகொட்டிச் சிரிக்குமே... கேவலமாப் போகுமே.

நா என்ன செய்ய?'

லட்சுமிக்குள் ஒவ்வொரு நிமிசமும் நடுக்கம். மனசுக்குள் பதற்றம். 'என்ன கூத்து நடக்குமோ... என்ன கேவலம் வந்து விடியுமோ... ஊரே கூடி வேடிக்கை பாக்குற வீடா... நம்ம வீடு மாறிருமோ...'

ஒவ்வொரு சத்தத்திலும் நடுங்கினாள். 'அண்ணன் வந்துட்டானோ' ஒவ்வொரு சைக்கிள் வருகிற சத்தத்திலும் பயந்து செத்தாள். டவுன் பஸ் வந்து திரும்பினால்... ஒரு கால் மணி நேரத்திற்கு மனசு கிடந்து 'திக்திக்'கென்று அடித்துக்கொள்ளும். பதறிப் பதைக்கும்.

லட்சுமி ஒவ்வொரு நிமிசமும் செத்துச் செத்துப் பிழைத்தாள். அத்தனைக்கும் மத்தியில் உள்மனசுக்குள் ஓர் ஆர்வக் குறுகுறுப்பு. மர்மத் திகைப்பு.

'இம்புட்டு அக்குருமம் செய்ஞ்சுட்டு... 'ஒந்தயவே எனக்குத் தேவையில்லே'ன்னு திமிர் வாதம் பேசிட்டு... கால்லே வந்து வுழற மாதிரி காயிதம் எழுதியிருக்கானே அண்ணன், இப்ப என்னத்துக்கு வர்றான்? தானா குழைஞ்சு நெளிஞ்சு... குளுர்ந்த வார்த்தை பேசி எதுக்காக நெருங்கி வாரான்?' அவளுக்குள் பிடிபட மறுக்கிற மர்மம். காரணம் புரியாத திகைப்பிருட்டு.

அன்றைக்கு-

மூன்று மணி பஸ் வருகிற சமயம். வீட்டுக்கு அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தாள் லட்சுமி. காட்டில் வேலை. பருத்தி எடுப்பு. அன்றைக்கு அடித்த வெயில் முழுவதும் அவள் தலையில்தான். திரேகமே உலர்ந்து போய் - காய்ந்து போய் - காய்ச்சல் கண்டது போல் கணகணத்தது. உடம்பெல்லாம் உலர்ந்த வியர்வையின் உப்பு வெள்ளைக்கோடுகள்.

ஆடு குட்டிகளுக்கு இரையை கட்டிவிட்டு, கழிவுத் தண்ணீரை தூக்கி வைத்தாள். அதுகள் குடிக்கட்டுமென்று. அப்புறம்தான் இவள் வீட்டுக்குள் வந்தாள். செம்புத் தண்ணீரை தாகத் தகிப்போடு 'மடக், மடக்' கென்று ஆவல் பறப்போடு குடித்தாள். நாடி, நெஞ்சு முழுவதும் தண்ணீர் வழிந்தது.

வீட்டு வேலைகள் காத்துக் கிடந்தன. குப்பையாய் கிடக்கும் வீடு முழுவதையும் கூட்டிப் பெருக்கணும். சட்டிப் பானையை கழுவணும். 'காபித் தண்ணி' போடணும். சோத்துக்கு உலை வைக்கணும்.

இப்படி ஏகப்பட்ட 'ணும்' கள் காத்துக் கிடந்தன.

ஆனால்... காட்டில் கொட்டிய உயிர். பட்ட பாடு. குனிந்து குனிந்து நிமிர்ந்து எடுத்த பருத்தி. பெருவிரல் நகம் முழுவதும் கொத்திப் பிடுங்கும் வலி. எலும்பின் ஒவ்வொரு இணுக்கும் 'படு, படு' என்று கெஞ்சிக் கூத்தாடியது.

தலைவாசலில் தலை வைத்து நடையில் படுத்து விட்டாள். வெக்கையான காற்று வெதுவெதுப்பாக வந்தது. தழுவிப் படர்ந்து பரவசப்படுத்திய காற்று. வேல்க்கனி வந்தான்.

இவளைத் தாண்டிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

கண்ணைச் சொருகிக் கொண்டு வந்த மயக்கமான அயற்சி. கிறுகிறுப்பான சோர்வு. புருஷனின் காலடிச் சத்தம். ஆத்மாவுக்குள் தனித்து முகம் காட்டுகிற சத்தம்.

''சாப்புட்டுடீகளா...?''

''ம். நீ பேசாம படுத்துரு! அலுத்த ஒடம்பு.''

''பாடுபடத்தானே பொறந்துருக்கம்? வேற என்னத்தைக் கண்டோம்.''

''சித்தே படுத்துரு.''

''ம்...''

கண்ணயர்ந்தாள். நீட்டி விட்ட கால். முழங்காலுக்குள் நெறுநெறுக்கிற சுகம். குறுக்கெலும்பெல்லாம் நீவிவிட்ட மாதிரி ஒரு சுக மயக்கம். லேசாகக் கண்ணயர்ந்த கணத்தில் —

வாசலில் யாரோ வந்து நிற்கிற சத்தம். மனசுக்குள் அந்நியமாய் ஒலிக்கிற காலடிச்சத்தம். 'அண்ணன் வந்து நிக்கானா?'

மனசுக்குள் தீப்பிடித்த மாதிரியோர் அதிர்ச்சி. நரம்புகளின் நுனிவரை பரவிப்படர்ந்த உணர்வதிர்வுகள்.

'திக்திக்' கென்று அடித்துக் கொள்கிற மனசு.

பதறிப் பதைத்துப் போய் தடபுடவென்று எழுந்தாள். அண்ணனேதான்!

இவளுக்குள் குபுக்கென்று பீறிட்டு வந்த வார்த்தை. ''வாங்கண்ணே'' என்று உள்ளிருந்து ஓடிப் பாய்ந்து வந்த வார்த்தை, தொண்டைக்குழியிலேயே நின்றுகொண்டது. விக்கிக்கொண்டது மாதிரி தொண்டையில் சிக்கிக்கொண்டது. வெறுப்பும் கசப்புமான, அலை அலையாக பழைய அனுபவங்கள்.

திறந்த வாய், உலர்ந்த உதடுகள், திகைத்த முகம் 'என்ன செய்ய' என்றறியாத குழப்பம். வெலவெலப்பு.

கனத்த கணம். நிமிர்ந்து பார்த்துவிட்ட இமை தட்டாத கண்கள். வரவேற்க அசையாமல் உறைந்து போன உதடுகள் 'வா' என்பாளா... 'போ' என்பாளா என்ற குழப்பமும் திகிலுமாய் கணேசராஜ்.

மௌனமான கணம். மனசுக்குள் உணர்ச்சிகளின் ஆரவாரக் கூச்சலிட்ட கனத்த கணம். முட்டி மோதிக் கொண்ட சகோதரப் பார்வைகளின் மௌன உரசல். ஓட மறந்த கால நதி உறைந்து விட்ட மாதிரி நின்று நிலைத்து கனத்த கணம்.

அந்த மௌனமான கனத்த கணத்தை வேல்க்கனி தான் சத்த உரசலால் நகர்த்தினான். கடத்தினான்.

''வாங்க மச்சான்... வாங்க... எப்ப வந்தீக?'' என்ற உபசரிப்பில்தான் உறைந்த கால நதி இயங்கி நடக்கத் துவங்கியது.

''ஆமா... மாப்புளே'' உயிரில்லாத குரலில் கணேசராஜ். இன்னும் அசையாமல் வாசலுக்கு வெளியே.

லட்சுமிக்குள் பேராச்சர்யம். பிரமித்துப்போய்க் கிடந்தாள். ''எந்த நாயும் வரக்கூடாது. வந்தா... மரியாதை கெட்டுப் போவும்'' என்ற வேல்க்கனியா மரியாதை செய்வது? வீட்டு வாசலுக்கு வந்துவிட்ட எவரையும் வரவேற்றாகணும் என்கிற நாகரிகம் மட்டும்தானா? அதற்கும் மேல் மனம் நெகிழ்ந்து போயா?

''என்ன... அங்கேயே நின்னுக்கிட்டு? வாங்க மச்சான் வீட்டுக்குள்ளே...''

கணேசராஜ் மெலிந்திருந்தான். தேன் நிறம் மங்கியிருந்தது. சுரத்தில்லாத குரலில், வீட்டுப்

பொருளாதாரத்தின் தளர்ச்சி தெரிந்தது. நொடித்திருக்கிறான். நொந்துபோயிருக்கிறான்.

''லட்சுமி, எந்தி. உங்க அண்ணன் வந்துருக்காரு. காபித் தண்ணி போடு... சோறாக்கு...

''என்னண்ணே... நீ நல்லாயிருக்கீயா?''

''இந்தா பாக்கேல்லே...? இருக்கேன்'' சோர்வுக்குள் சுருண்டு விழுந்த குரல்.

எழுந்தாள். விறுவிறுவென்று வேலைகளில் மூழ்கினாள். நாலைந்து நாளாய் பெரும் கண்டமாய் நின்று மிரட்டிக் கொண்டிருந்த மலைப்பிரமாண்டம், வேல்க்கனியின் இளக்கத்தால் பனியாய் மாறி மறைந்து போன மாயத்தை நினைத்து நினைத்து மகிழ்ந்தாள்.

''நல்லவேளை... யாரு செய்ஞ்ச புண்ணியமோ... சுமுகமாக முடிஞ்சு போச்சு! அண்ணன் வந்து நின்னா... பூகம்பம் வெடிக்கும்னு பயந்து செத்தோமே... நல்லவேளை, பூகம்பம் வெடிக்கலே. பூமழையா வுழுந்துருச்சு...''

சூழல் சுமுகமாயிற்று. அவர்களிருவரும் பேசிக் கொண்டிருக்க, இவள் சமையலில் இருந்தாள். அண்ணன் வந்த சந்தோஷம். அமைதி தவழ்ந்த மகிழ்ச்சி. சமையல் செய்ய ஓடி ஓடிப் பரபரத்தாள். மனசுக்குள் ஓர் உற்சாகத் துள்ளல். உல்லாச றெக்கையடிப்பு, உடன்பிறப்பு. ரத்தப் பிறப்பு! அலையடித்து அலை விலகுமா என்ன?

வேல்க்கனியும் கணேசராஜும் திண்ணையில் உட்கார்ந்து சௌஜன்யமாகப் பேசிக்கொண்

டிருந்தனர். இருப்பினும் அவர்கள் மனசுக்குள் முரண்பட்ட உணர்வலைகள். கசப்பான பழைய நினைவுகளின் ஆரவாரமான அலைமோதல். வெறுப்பும் அவமதிப்பும் நிறைந்த அனுபவங்களின் ஆர்ப்பாட்டப் பேரலைகள். நாக்கு நுனி வரை வந்து வந்து முட்டி மோதி, முட்டி மோதித் திரும்புகிற வெக்கை வார்த்தைகள். வார்த்தைக்கங்குகள். உள் நாக்கின் எச்சிலில் சூடு தணிகிற தீக்கட்டிகள்.

'அவரு செய்ஞ்ச தீவினையை அவரே அனுபவிச்சுட்டுப் போவட்டும். வீடு தேடி வந்த மனுசரை 'வா'ன்னு சொல்லி உக்காரவைச்சுட்டு... பழசைச் சொல்லி 'குத்திக்காட்றது' மனுசத் தன்மையில்லே. குத்திக் காட்டிப் பேசி... பழிவாங்குறதாலே நமக்கு ஆகப் போறதென்ன?' என்று மழைக்கால ஓடைத் தண்ணீராக ஒரு குளிர் நினைவு, வேல்க்கனியின் உள்மனசுக்குள் தித்திப்பாய் ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால்-

லட்சுமி மனசுக்குள் முள்முள்ளாய் உறுத்துகிற ஒரு நினைப்பு. 'என்னத்துக்கு வந்துருக்கான்? என்ன ஜோலி?'

உட்கார்ந்து சாப்பிடும்போதுதான்-

கணேசராஜ் அந்தக் கேள்விக்கான பதிலைச் சொன்னான். அதுவும் தயங்கித் தயங்கி... மெல்ல மெல்ல... ''லட்சுமிக்கு பச்சைச் சேலை, பச்சைச் சட்டை, பச்சைப் பாவாடை, பச்சை வளையல்... மஞ்சக்கயிறு, குங்குமச்சிமிழ் தங்கக் குண்டுமணி

வாங்கித் தரணும்னு ஆசைப்படுதேன். அவள் வந்து வாங்கிக்கணும்.''

''என்னத்துக்கு மச்சான்? என்ன இது சாத்திரம்?''

''நாடெல்லாம் செய்றாக. நாமளும் செய்றோம்.''

''அதான் கேக்கேன், அது என்ன விஷயம்?''

''இது ஈஸ்வர வருஷம், பச்சை வாழை மட்டை வைச்சு அடுப்பெரிக்கிற அளவுக்கு கொடுமைப் படுத்தப்பட்டவ நல்லதங்கா... கொடுமை தாங்காம மனசு கொதிச்சு, சாபம் வுட்டுட்டு... ஏழு புள்ளை களையும் கெணத்துலே போட்டு, தானும் வுழுந்து செத்து மாண்டது, இந்த ஈஸ்வர வருஷத்துலேதா னாம்...''

''ம்...''

''சாபம் வுட்டு செத்த நல்லதங்காளோட மனக் கொதிப்பை ஆத்தித் தணிய வைக்குறதுக்குத்தான் இந்தப் பச்சைச் செய்முறை. பச்சைதானே கொதிப்பைத் தணிக்கும்? வளத்தைக் கொடுக்கும்...''

''யாருக்கு?''

''வாக்கப்பட்டுப் போன கூடப்பொறந்த தங்கச்சிக்கு அண்ணன் மாரு செய்ற செய்முறை இது. நல்லதங்கா வுட்ட சாபத்துலேயிருந்து தப்பிக்கிறதுக் கான செய்முறை. கூடப்பொறந்த தங்கச்சிக்கு இந்தச் செய்முறை செய்ஞ்சா... அதை வாங்கிக்கிட்டு, தங்கச்சிக மனசு நெறைஞ்சு வாழ்த்தினா... சாபத்துலே

யிருந்து தப்பிச்சு அண்ணன் குடும்பம் பச்சை பச்சையா வளம் கொழிக்கும்னு ஒரு நம்பிக்கை...''

''அப்ப... லட்சுமிக்குப் பச்சை அயிய்ட்டங்களா செய்றது உங்க பாவத்துக்கு நீங்க செய்ற பரிகாரம். இல்லே? உங்க குடும்பம் செழிக்குறதுக்கும் தழைக்குறதுக்கும் செய்ற செய்முறை. இல்லே?''

''ஆமா... மாப்புள்ளே. ஆயிரம் கொடுமை செய்ஞ்சிட்டாலும் அண்ணன் குடும்பம் கெட்டுப் போகணும்னு எந்தத் தங்கச்சியும் நெனைக்கமாட்டா. அவ கட்டை வேகுற வரைக்கும் உசுருலே பொறந்த வீட்டு நெனைப்பு ஓடிக்கிட்டேயிருக்கும் மாப்ள்ளே.'' பேச்சு பேச்சாக நீண்டுகொண்டே போக...

வேல்க்கனி மனசுக்குள் இப்போது வேறு வகையான நினைப்பு. லட்சுமி மனசுக்குள் முற்றிலும் வேறு வகையான நினைப்பு.

பலத்த உபசரிப்பு. பிறகு, விடைபெற்றுப் போனான் கணேசராஜ். 'லட்சுமி வருவாளா... வந்து வாங்கிக்கொள்வாளா... வரமாட்டாளா' என்று கட்டண்ரைட்டாக துல்லியமாகச் சொல்லாமல் சமாளித்து அனுப்பிய வேல்க்கனியின் சாமர்த்தியம். விலாங்குமீனாக நழுவிய அவனது தந்திரம். பேசின பேச்சில் கேட்ட கேள்விகளில் வேல்க்கனியின் குத்தல். கிள்ளல். மெல்லிய நையாண்டி. எல்லாமே கணேசராஜ் மனசின் ஆழத்தில் நிழலாடியது.

'வருவாளா... லட்சுமி வரமாட்டாளா' என்ற குழப்பத்துடன் கணேசராஜ் ஊருக்குப் புறப்பட்ட பிறகு தான்.

இந்த வீட்டில் முட்டலும் மோதலுமாய் வாக்கு வாதம் தீப்பறந்தது. முரண்பாடான வாக்குவாதம்.

'போகவே வேண்டாம்' என்று கட்சி கட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்கிற வேல்க்கனி.

எதுவும் செய்ய முடியாமல் மருகித் தவிக்கிற லட்சுமி.

## 14

"வீடு தேடி வந்த மனுசனை வெரட்டக்கூடாது. 'வா'ன்னு சொன்னோம். 'உக்காரு'ன்னு சொன்னோம். 'சாப்பிடு'ன்னு சொன்னோம். அது நம்ம பண்பாடு. அத்தோடு முடிஞ்சுது. அவ்வளவுதான். ஒருத்தரு மேலே ஒருத்தரு வுழுந்து ஒறவு கொண்டாடணும்னு ஒண்ணும் அவசியமில்லே. இழவுதள்ளுன ஆளோட என்ன உறவு வேண்டிக்கிடக்கு? அம்புட்டுத்தான். இழவுதள்ளிட்டா... எல்லாமே தள்ளிடவேண்டியது தான். ஒன்னையும் கேவலப்படுத்தி... என்னையும் ஊரறிய கேவலப்படுத்துன ஆளோட என்ன உறவு வேண்டிக்கிடக்கு? நீ ஒண்ணும் போக வேண்டாம். அந்த ஆளோட வீட்டுவாசலை மிதிக்கவும் வேண்டாம். பச்சைச் சேலை வாங்கவும் வேண்டாம்."

இதுதான் வேல்க்கனியின் கண்ணியம். கனல் பறக்கும் வைராக்கியம்.

''இம்புட்டுத் தூரம் கேவலப்படுத்தின ஆளோட வீட்டு வாசல்லே போய் நின்னு, பச்சைச்சேலையை கையேந்திப் பிச்சையாக வாங்குனா... அது மானங் கெட்ட வேலை. ஈனத்தனம். ஊர் கூடிச் சிரிக்கும். கை கொட்டிச் சிரிக்கும்.'' என்று சீறிச் சினந்தான். காய்ந்த சட்டியில் போட்ட கடுகாகப் பொரிந்தான்.

அவன் சொல்வதெல்லாம் நியாயமாகவே பட்டது. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு மாணிக்கம் என்று நெஞ்சில் ஒற்றிக்கொள்ளலாம் போலத் தோன்றியது லட்சுமிக்கு.

ஆயினும்-

அத்தனையையும் தாண்டி ஒரு மறுப்பு லட்சுமிக்குள் உட்கார்ந்திருந்தது. அந்த மறுப்பு அவளைப் பொறுவத்தவரை வலுவானது. நுட்பமானது.

அண்ணன் வீடு போய்... விருந்து சாப்பிட்டு... அவன் தருகிற 'பச்சை பரிசுகளை'ப் பெற்றுக் கொண்டு அவன் குடும்பத்தை வாழ்த்த வேண்டுமென்று விரும்புகிறாள்.

அதற்கான நியாயம் இருக்கிறது. ஆனால்-

இவளுக்கே புரியவில்லை. இதுதான் இப்போதைய பிரச்சினை.

லட்சுமியின் இந்த மௌனம், சம்மதத்திற்கான மௌனமல்ல. மறுப்பின் மறுமுகம். இறுகிப் போயிருக்கிறாள். எதுவும் பிடிபடாத மர்ம இருட்டின் இறுக்கமாக இருக்கிறாள்.

எதுவும் சொல்லாமல் உட்கார்ந்திருக்கிறாள் லட்சுமி. நிமிர்ந்து இவனையே பார்க்கிறாள். பார்வையின் தீவிரம். சலனமற்ற விழிகள் இவனையே அலுங்காமல் பார்க்கின்றன.

குழப்பமாக இருந்தது வேல்க்கனிக்கு.

'என்ன நினைக்கிறாள் இவள்?'

அவனது சீற்றம் நின்றுபோயிருந்தது. குரலின் உஷ்ணம் தணிந்திருந்தது. சற்றே நிதானித்தான்.

''மானங்கெட்ட பொழைப்பு பொழைக்க வேண்டிய அவசியமில்லே நமக்கு. நாம ஒண்ணும் கதிகெட்டுப் போயிருக்கலே. உங்க அண்ணங்கிட்டே கையேந்துற அளவுக்கு நாம வழியத்துப் போகலே... வேணும்னா சொல்லு... பச்சைச் சேலை மாதிரி பத்துச் சேலை எடுத்துத் தாரேன்'' என்று ரோஷாக்னியோடு கையை நீட்டி நீட்டிப் பேசிக்கொண்டிருந்த வேல்க்கனி யின் வேகம், லட்சுமியின் மௌனத் தீவிரத்தில் மட்டுப்பட்டிருக்கிறது. ஆனால், மடிந்து விடவில்லை.

லட்சுமியின் மனசுக்குள் பெரும் போர்க்களம்.

## 15

அடுப்புக்குள் விறகைத் திணித்தாள் லட்சுமி. சோறு ஒரு அடுப்பிலும் குழம்பு ஒரு அடுப்பிலும் கொதித்துக் கொண்டிருந்தது. அரைத்த மஞ்சள் நிற வெளிச்சமாகவும் வெக்கையாகவும் இருந்த தீயின் நாக்குகளையும் உற்றுப் பார்க்கிறாள்.

அவள் மனசிலும் வெக்கை நினைவுகளின் வெளிச்சம். எதையோ பற்றிப் பிடிக்க எம்பி எம்பித் தாவுகிற நாக்குகளைப் போலவே, அவளுக்குள் நினைவுகள்.

அன்றைக்கு -

வேல்க்கனியும் கணேசராஜூம் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். ஏழு வருஷத்திற்குப் பிறகு மச்சானும் மச்சினனும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகிற அழகு, ஒரு புதிய தரிசனம். ஒரு புதிய உறவுப் பூவின் மலர்ச்சி. மலர்வின் ஒளிர்வு. இவள் மனசின் சகல மூலைகளின் இண்டு இடுக்குகளிலும் படர்ந்து பரவிய ஒளிர்வு. அதன் நறுமணம்.

அவளுக்கு ரொம்பச் சந்தோஷமாக இருந்தது.

அதே நேரத்தில் அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயம் பச்சைச் சேலை... பச்சைச் சட்டை.... மஞ்சள் கயிறு... குண்டுமணித் தங்கம்... நல்லதங்காள்...

இவளுக்குள் ஏதேதோ எண்ணங்கள். பூரிப்பும் பெருமிதமுமாய் மனசுக்குள் நிறையப் பூக்கள். பூனைக்கும் ஒரு காலம் வந்திருக்கிறது. அவமதிக்கப் பட்டவர்களும் மதிக்கப்படுகிற ஒரு யோகம், ஒரு சமயம், ஒரு வாய்ப்பு.

அண்ணனும் கணவனும் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்த லட்சுமிக்குள்... உள் சோகமாய் ஒரு நினைவு.

'அண்ணே... எனக்கு எம்புட்டோ கெடுதல் பண்ணியிருக்கே. நகையைக் குறைச்சே... இன்னும்

எத்தனையோ கெடுதல் பண்ணுனே. கேவலப் படுத்துனே... சிங்காரிச்சு மூக்கறுத்தே. நாதியத்தவளா ஆக்கி நாசக்காடு பண்ணுனே. எல்லாக் கொடுமை களையும் கூடப்பொறந்த பாவத்துக்காக நா பொறுத்துக்கிரலாம். மறந்துரலாம். 'போய்த் தொலை'ன்னு விட்டுத்தொலைச்சிரலாம்.

ஆனா... அவரு? என் புருஷன்?

அரவணைக்க வேண்டியவன் நீ. அழுது சிந்துற கண்ணீரைத் துடைக்கவேண்டியவன் நீ. வெரட்டுப் பட்டு, அடிபட்டு வந்தா... பாசத்தோட... பரிவோட... புகல் தர வேண்டிய தாய்வீடா இருக்கவேண்டியவன் நீ.

ஆனா... நீ வெட்டுன காயத்துக்கெல்லாம் அடிச்ச அடிக்கெல்லாம் தாய்வீடு மாதிரி நின்னு ஆதரிச்சவரு அந்த மனுசரு. கண்ணீரைத் தொடைச்சவரு? 'சீர் வரிசை பெரிசில்லே'ன்னு சொன்ன சீரான பெரிய மனுசரு அவரு.

அவரை நீ கேவலப்படுத்தினியே..., இழவுக்கு வராம இழிவு செய்தீயே... ஊர்ச்சபையிலே வேட்டிதுண்டு கட்டி உரிய மரியாதை செய்யாம... 'அம்போ'ன்னு வுட்டு, அவரு மூஞ்சியிலே கரியைப் பூசினீயே...

அதை எப்படிப் பொறுத்துக்கிட? அதை எப்படிச் சகிச்சிக்கிட? என் மூஞ்சியிலே காறித்துப்புனா... நா சகிப்புத்தன்மையோட தொடைச்சிக்கிடலாம். எம்புருஷன் மூஞ்சியிலேயும் துப்புனீயே... அதை எப்படித் தாங்கிக்கிட முடியும்?

அந்த அவமானத்துக்கு ஈடு செய்யாம... ஓங்கூட ஒறவேயில்லை. அவரு மூஞ்சியிலே நீ பூசின கரியை நீயே தொடைச்சாத்தான்... ஒன்னோட நா சங்காத்தம் வைச்சிக்கிடுவேன். இல்லேன்னா... இல்லே. செத்தாலும் சரி... நல்லதங்காளைவிடக் கேவலமாய்ச் செத்தாலும் சரி... ஒன்னோட பச்சைச் சேலையும் வேண்டாம்... பந்தபாசமும் வேண்டாம்.'

லட்சுமிக்குள் ஓடிக்கொண்டிருந்த நினைவுகள். தாம்பத்ய வாழ்க்கையின் மனக்கரைசலில் தன் உணர்வை விடவும் தன் புருச உணர்வைப் புனிதமாகக் கருதிய அவளது இயல்புத்தன்மை. சுவாசத்தைப் போன்ற இயல்புத்தன்மை.

வேல்க்கனி சாமர்த்தியமாகப் பேசி... பிடி கொடுக்காமல் வெளியே போய்விட்ட பின்பு.

தங்கச்சியிடம் தனிமையில் வந்த கணேசராஜ்.

''என்ன லட்சுமி, இம்புட்டு நேரமா நாங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிருக்கோம். நீ ஒண்ணுமே சொல்லலே. நீ என்ன சொல்லுதே?''

''அண்ணே... முழுங்கவும் முடியாம துப்பவும் முடியாம ஒண்ணே ஒண்ணுதான் என் நெஞ்சுக்குள்ளே கெடக்கு. அந்தத் தீயை அணைக்காம... என் மனசு அடங்காது. அந்தத் தீயை நீதான் வைச்சே. நீதான் அணைக்கணும்.''

''என்னம்மா லட்சுமி... இந்தப் பாவி வைச்ச தீ ஒண்ணா ரெண்டா? ஞாபகத்தில் இருக்க... நீ எந்தத் தீயைச் சொல்லுதே?''

''தாய்க்குத் தாயா, தகப்பனுக்குத் தகப்பனா... புருஷனுக்குப் புருஷனா இருந்த அந்த மனுசருக்கு நீ செய்ஞ்ச அவமரியாதையிருக்கே... இழவுக்கு வேட்டி துண்டு கட்டாம வுட்டீயே...''

''லட்சுமி, நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். ஊர்ச்சபையிலே நா செய்யாத மரியாதையை... ரெண்டே நாள்லே வேட்டி துண்டோட நா வந்து, கால்லே வுழுந்து மரியாதை செய்றேன்... போதுமா? அதை நா செய்ஞ்ச பெறகு... நீ எங்க வீட்டுக்கு வந்தாப் போதும். சரிதானா?''

''அது போதும். இந்த மனுசரு ரொம்பத் தங்கமான ஆளு. அந்த ஆளு மூஞ்சியிலே கரிபூசி... அவரு மனசு கொதிச்சதுன்னா... அதைவிடப் பெரிய பாவமும் சாபமும் வேற ஒண்ணுமில்லே.''

''சரி, லட்சுமி... நீ சொல்லிட்டே. நானும் புரிஞ்சிக்கிட்டேன். செய்றேன். உடனே செய்ஞ்சுடு றேன். போதுமில்லே?''

''அதுதான் எனக்கு வேணும்ண்ணே.''

தணிந்த லட்சுமியின் குரல். கொதிநிலையின் உஷ்ணம் குறைந்து... மனம் திருப்தியில் நிறைவுற்று குளிர்ந்த மாதிரியிருந்தது.

கணேசராஜ் இன்னும் தேங்குகிறான். கலங்கிச் சிவந்த அவன் கண்கள். சிவப்பு மெல்லிய ரேகைகள் உருளாமல் நிலைத்து நிற்கிற கருமுழிகள். அசைய முயல்கிற அண்ணனின் உதடுகள். இன்னும் என்னமோ

கேட்க விழைகிறான். விரும்பினாலும் தயங்குகிறான். இன்னும் எதற்கோ கெஞ்ச விரும்புகிறான்.

''என்னண்ணே.''

''ஒண்ணுமில்லேம்மா.''

''ம்... ஆமம்மா...''

''அதான்... என்னண்ணே?''

''இல்லேம்மா... நான் வந்த காரியம் முடிஞ்சுதா, இல்லையான்னு தெரியலியேம்மா.''

அவன் பொத்திப் பொத்திச் சொல்கிற காரியம், இவளுக்குப் புரியத்தான் செய்கிறது. இருந்தாலும் தெளிவாகத் தெரிந்துகொள்ளணுமே என்பதற்காக புரியாததைப் போல மருள மருள முழித்தாள்.

''நீ என்னண்ணே சொல்லுதே?''

''லட்சுமி... மாப்புள்ளேகிட்டே இம்புட்டு நேரம் பேசிக்கிட்டிருந்தேன். நீயும் கேட்டுக்கிட்டிருந்தீல்லே? எழவு தள்ளுன ஈனப்பய நா. வாசல்லே வந்து நின்ன என்னை 'வா'ன்னு கூப்புட்டதே, மாப்பிள்ளையோட பெருந்தன்மை. உக்காருன்னு சொன்னாரு. சாப்புடச் சொன்னாரு. பழைய புண்ணு எதையும் கிண்டிக் கிளறாம, சிரிக்கச் சிரிக்க சௌஜன்யமாய் பேசுனாரு. மாப்புள்ள தங்கமான மனுசருதான். அதுலே எந்த மாத்தும் இல்லே. ஆனா... ஆனா...?''

''சொல்லுண்ணே... என்ன ஆனா?''

''பச்சைச் சீர்வரிசை செய்றேன்னு சொன்னேன். வரச்சொல்லிக் கூப்புட்டேன். 'லட்சுமியை அனுப்பலே'ன்னும் சொல்லலே. 'அனுப்புறேன்னும்

சொல்லலே' மாப்புள்ளே மர்மப் பேச்சா பேசிட்டுப் போறாரு. பிடி குடுக்காம சாமர்த்தியமாய்ப் பேசிட்டுப் போயிட்டாரு...''

''ஆமா... நானும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்...''

'என்னாலேயும் என்ன செய்ய முடியும்' என்பது போல வருத்தமாகத் தலையாட்டுகிற லட்சுமி. 'அவரு சொல்லை மீறி நா மட்டும் தனிச்சு வர முடியாதே' என்று கையறுநிலையில் புலம்புகிற ஒரு தொனியும் தோரணையும் அந்தத் தலையசைப்பில் ஒளிந் திருந்தது. மௌமான மறுப்பு போல அச்சுறுத்துகிறது.

கணேசராஜுக்கு அடிவயிற்றில் கலக்கம். மச்சினர் தான் கோணல்காலைச் சாத்துகிறார் என்றால்... கூடப்பொறந்த ரத்தப் பொறப்பு தங்கச்சியும் 'மர்மத் தலையசைப்பு' செய்கிறாளே.

'வரமாட்டேன்' என்பாளோ...

'ஓங்கிட்டே வந்து பச்சைச் சேலையை பிச்சையா வாங்குறதைவிட.... நானே ஒண்ணுக்கு ரெண்டா புதுச்சேலை எடுத்துக்கிடுதேன்...' என்று வீம்பு பேசி விடுவாளோ... வீராப்புகாட்ட ஆரம்பித்து விடுவாளோ?...

கணேசராஜுக்குள் 'திக்திக்' கென்றது. திகிலும் கிலியும் மனசைப் போட்டுப் பின்னியது.

ஊரிலிருந்து புறப்பட்டு வரும்போதும் இதே திகிலும் இருந்தது. மனசு கிடந்து பயந்து தவித்தது. 'திக், திக்' கென்று அடித்துக் கொண்டது.

'போய் வாசலில் நின்றால்...என்னென்ன மாதிரி யான அவமதிப்பெல்லாம் கிடைக்கப் போகிறது' என்று அலைஅலையாய் திகில் கற்பனைகள். கிலிக் காட்சிகள். அடிவயிற்றில் பீதியைப் பரப்புகிற யூகங்கள்.

''வா'' என்று வரவேற்காமல் மௌனம் காத்து விடுவார்களோ... ''எந்த மூஞ்சியோட இந்த வீட்டு வாசப்படியிலே கால் வைக்க நெனைச்சே?''ன்னு விளக்குமாறடி விழுமோ.

''வந்த வழியைப் பார்த்து ஊருபோய்ச் சேரு. வாசப்படியிலே கால் வைச்சீன்னா... மரியாதை கெட்டுப் போவும். ஊர் சிரிக்க மானம் கெட்டுப் போவும்.'' என்று 'வெளம், வெளமாக' சீறிச் சினந்து பாய்வார்களோ. நல்லவேளை அப்படி எதுவும் நடந்து விடவில்லை. நாகரிகமாக - மரியாதையாக - நடத்தி கௌரவப்படுத்திவிட்ட மச்சினர் வேல்க்கனி.

கடைசி கடைசியாக... மெயின் காரியத்தில் பல்லைக் கடிக்கிறார்கள்...! வெள்ளாமைக்காலம் முழுவதும் நல்ல தோற்றம் காட்டி நம்பிக்கையூட்டிய கம்மங்கதிர்கள், விளைந்த பிறகு மழைக்குள் மாட்டிக் கொண்ட மாதிரி... கடைசி நேரத்தில் காலை வாரி விடுகிறார்களே... வெட்டிக் கிடக்கும் குழிக்குள் விழுத்தாட்டுகிறார்களே.

''லட்சுமி...''

அவனது உள்மன உணர்ச்சி முழுமையும் மொத்தமாய்த் ததும்பியது.

''என்னண்ணே?''

''நீ எந்தங்கச்சி. ஆயிரம் கொடுமைக பண்ணியிருந்தாலும் நா ஒனக்கு அண்ணன். ஒரே ரத்தம். அய்யா அம்மாவோட ரத்தம்தான் நம்ம நரம்புகளிலே ஓடுது...''

''அதுக்கு என்ன... இப்போ?''

''இல்லேம்மா... நம்மளைச் சுமந்து பெத்த அம்மா இருந்து வாழ்ந்த வீடு. நம்ம வீடு அய்யா இருந்து நம்மளையும் புஞ்சைகளையும் வெளைய வைச்சாரு. அவரு வேர்வை சிந்துன புஞ்சை, நம்ம புஞ்சைக. நீயும் நானும் சின்னப்புள்ளையிலேயிருந்து உழுத புழுதியிலே பாதம் பதிச்சு ஓடித்திரிஞ்ச பூமி நம்ம புஞ்சைக. நம்ம புஞ்சைக நல்லா வெளையணும். 'நம்ம அய்யா அம்மா கட்டுன வீடு பச்சைப்பசேல்னு செழிச்சுப் பொங்கணும்'னு நீதான் நினைப்பே. நீ வைச்ச வேப்பமரம் பட்டுப் போயிரக்கூடாது. நீ வளர்த்து விட்ட ஆடு குட்டிக மலடாயிரக்கூடாதுன்னு நீதான் பதறுவே. 'தானாடாட்டாலும் சதையாடும்'னு பெரியாளுக சொல்லுவாக.''

உருகி வழிந்து உணர்ச்சிபொங்க மருகி மருகி பேசுகிற கணேசராஜ். குறுக்கிடுகிற லட்சுமி. அவளது பொறுமைச் சிதைவு.

''அதெல்லாம் சரிண்ணே... இப்ப என்ன செய்யணும்?''

''மாப்புள்ள மறுத்தாலும், வேண்டாம்னு வெட்டிச் சென்னாலும் என்னோட ரத்தப் பொறப்பு

நீதான் அவருக்கு எடுத்துச் சொல்லணும். அவரைச் சம்மதிக்க வைக்கணும்.''

''அதல்லாம் புரியுது. ஆனா... நா என்ன செய்ய முடியும்? ஒனக்குப் பிந்திப் பொறந்த சின்னவ... நா... பொட்டச்சி, பொம்பளையால என்ன செய்ய முடியும்? ஒம் மச்சினரு ஆம்பளை. தாலி கட்டுன புருஷன். அவருக்குள்ளே கட்டுப்பட வேண்டிய பொட்டச்சி நா. என்னாலே என்ன செய்ய முடியப் போகுது? அதை நெனைச்சாத்தான் மலைப்பா இருக்கு.

சரிண்ணே... நீ இம்புட்டுச் சொல்லி மருகணுமா? எந்தப் பொம்பளைக்கும் பொறந்த வீட்டுப் பாசம் ரத்தத்துலேயே இருக்கும் கட்டை வேகுற வரைக்கும். 'தங்கச்சி குடும்பம் தழைக்கணும்'னு நினைக்காத அண்ணமாரு ஒலகத்துலே ஒண்ணு ரெண்டு இருந்தாலும் இருப்பாக. ஆனா... 'அண்ணன் குடும்பம் கெட்டுப்போகணும்'னு எந்த தங்கச்சியும் கனவுலேகூட நெனைக்கமாட்டா... இதான் நெசம். நீ நிம்மதியாக போய்ட்டு வா... நா அவருகிட்டே கட்டாயம் பேசுதேன். போதுமாண்ணே?''

''இது போதும்மா... இது போதும்மா... நீ இம்புட்டுச் சொன்னதே எனக்குப் போதும்மா'' என்று சிரிப்பும் கண்ணீரும் கண்ணில் மின்ன பரவசப்பட்ட அண்ணன். ஆனந்தக்கூத்தாடுகிற மனசின் முகமாக உதட்டு ஈர மின்னல். முகத்தில் பூவின் புது மலர்ச்சி. மலர்ச்சியின் வெளிச்சம்.

காலைப்பிடிக்கிற கலக்கத்தோடும் உணர்ச்சிப் பெருக்கோடும் அவளது கையைப் பிடித்த அண்ணன். கையில் குளிர் ஸ்பரிசம். அதற்குள் உரசிய மனசின் மொழி. பாச உணர்வு. அன்புக் குழைவு.

ரொம்பக் காலத்துக்கு முந்தைய அண்ணனின் உள்முகம், அந்த உள்ளங்கை ஸ்பரிசத்தில் தெரிந்தது. வெள்ளை மனசு அண்ணன். நல்ல மனசு மட்டுமே உள்ள அண்ணன். கல்மிஷம் கலக்காத பாச அண்ணன். காசு, பணம் என்கிற கபடவிஷம் விழாமல்... தூய பாலாக இனித்த சகோதர வாஞ்சை மட்டுமே ததும்பிய அந்தக் காலத்து அண்ணன்.

மனசெல்லாம் குழைந்துகிடந்த லட்சுமி. அடுப்பில் எரியும் தீஜ்வாலையின் நிறத்தையே பார்க்கிறாள். மனசுக்குள் அலைஅலையாக நினைவுகள். வேல்க்கனியின் வீராப்பு, முறைப்பு, மறுப்பு, வேண்டாம் என்று போடுகிற ரோஷத் தடை இதை எப்படிச் சமாளிக்க? முடியுமா? தாம்பத்ய உறவே இதில் உடையுமா?

லட்சுமிக்குள் கலக்கம். ஆத்ம நடுக்கம். இத்தனை தூரம் சரணாகதியடைந்த பிறகும் அண்ணன் மேல் கோபப்படுவதற்கான நியாயம் அவளுக்குள்ளேயே இருப்பது போல ஒரு மர்மமுகம் மனசுக்குள் உறுத்துகிறது.

## 17

இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்கிறான்... காலில் விழுந்து மரியாதை செய்கிறேன் என்கிறான் அண்ணன்.

எல்லாம் சரி. எதற்கு இதெல்லாம்?

தங்கச்சி மேலுள்ள பாசத்தாலா? இல்லை. பின்பு?

தன் வீடு பச்சைப் பசேல் என்று வளம் கொழிக்க வேண்டும் என்கிற சுயநலம்தான். அதற்கு அவன் எடுத்து தருகிற பச்சைச் சீர்வரிசையை பெற்றுக் கொள்வதற்கு லட்சுமி போகணும். மனமிசைந்து போகணும். போய் மனம் கனிந்து வாழ்த்தணும்.

இதற்கு லட்சுமி வரச் சம்மதிக்கணும். அனுப்பி வைக்க வேல்க்கனி சம்மதிக்கணும். ''இம்புட்டு நாளா எந்தச் சீர் வரிசையும் செய்யாதவன், நீ, ஒன்னோட இந்தப் பச்சைச் சீர்வரிசையும் எனக்கு வேண்டாம்'' என்று வெறுப்பை நிலைநாட்டிவிடக்கூடாது. பகையை பத்திரப்படுத்திவிடக்கூடாது. வர மறுத்து விடக்கூடாது.

'பச்சைச் சேலை எடுத்துத் தந்தா... நல்லதங்கா சாபம் விலகி வீடு பச்சைப் பசேல்னு மாறும்' என்பது உண்மையோ பொய்யோ... இந்த நம்பிக்கையே மூட நம்பிக்கையோ... நல்ல நம்பிக்கையோ... அது வேறு விஷயம்.

நிராகரிக்கப்பட்ட தங்கச்சிகளுக்கு அழைப்பு வருகிறது. கெஞ்சிக் கெஞ்சி அழைப்பு. கிரீடம் தருவதாக அழைப்பு. பச்சைக்கிரீடம்.

சுயநலத்திற்காகத்தான். சுயகுடும்ப முன்னேற்றத்துக்கான கிரீட பூஜைதான். இருக் கட்டுமே... ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் முக்கியத்துவம் முதன்முதலாக உணரப்படுகிறது. தங்கச்சிகளுக்கு 'முதல் மரியாதை' வழங்கப் படுகிறது. முதன்முதலாக முதல் மரியாதை.

தங்கச்சிகளுக்கு அண்ணன்கள் செய்த குற்றங்கள் வரலாற்றிலேயே முதன்முதலாக உணரப்படுகிற 'ஈஸ்வர' வருஷம். கசந்த மனசோடு குற்ற உணர்வின் உறுத்தல்களோடு பாவ மன்னிப்பு கோருகிற 'ஈஸ்வர' வருஷம். தாய்மாமன் மட்டுமே மரியாதை பெற்று வந்த சமுதாயத்தில்... அப்பன்கூடப் பிறந்த அத்தையும் முதன்முதலாக முதல் மரியாதை பெறுகிற வருஷம்.

இந்த முதல் மரியாதையை எதுக்காக விடணும்? எதுக்காக மறுக்கணும்? அண்ணன்மார்க சுயநலத்துக் காக, தங்கச்சிமார்களுக்குத் தரப்படுகிற முதல் மரியாதையை மன்னிப்புக் கோரலை பாவப் பரிகாரத்தை எதுக்காகத் தவற விடணும்?

தாய்வழிச் சமூகம் இருந்து மறைஞ்ச ஒரு பூமியிலே முதன்முதலா தங்கைக்குலத்துக்குக் கிடைக்கிற மரியாதைங்குறது சாதாரண விஷயமா?

*வெறும் பச்சைச் சேலைங்குற முந்நூறு ரூபாய் விஷயம் மட்டும்தானா?*

*பச்சைச்சேலைங்குறதே... கெஞ்சி வந்து தர்றதுங்குறதே... மனங்கனிய வாழ்த்துப் பிச்சைக்காக மடியேந்தி நிக்குறதே... வெறும் ரூவா பைசா விஷயமா? ஒரு கிரீடம் வைக்கிற விஷயமில்லையா? பட்டத்து ராஜ்யத்துக்கான கிரீடத்தை வழங்குற விஷய மில்லையா? முக்கியத்துவமான விஷயமில்லையா?*

அவளுக்குள் மருகி மருகி வந்து நின்று கெஞ்சுகிற அண்ணனின் முகம். 'அண்ணனும் வேண்டாம். தம்பியும் வேண்டாம்' என்று முறைக்கிற புருஷன். ரெண்டு நச்சரிப்புக்கு நடுவில்... இவளது நினைவுகள்.

## 18

**சா**யங்காலம் சாப்பிட்டுவிட்டு தெருவுக்குப் போனவன் இப்போதுதான் வீடு வருகிறான் வேல்க்கனி. ராத்திரி மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

வேல்க்கனிக்கு எரிச்சலாக இருக்கிறது. பாடுபட முடியலே. மனசுக்குக் சுகமாக இருக்க முடியலே. மனைவியோடு மனசு கரைஞ்சு பேச முடியலே. பேசிப் பழக முடியலே. மனசை அலசி, சிக்கலெடுத்து, கோதி விட்டுக்க முடியலே.

சிக்கல். சிக்கல்கள். சிடுக்கல்கள், முண்டு முடிச்சுகள்.

குடும்பம் குடும்பமாயில்லே. வீடுவீடாக இல்லை. வாழ்க்கை வாழ்க்கையாயில்லே.

வீட்டுக்குள் வந்தான்.

பையன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.

''என்ன... இப்பத்தான் வாரீகளா?'' லட்சுமியின் மதுரமான குரல் 'எங்கிருந்து வருகிறது' என்றறியாமல் திகைக்கிற வேல்க்கனி.

''இந்தா... இருக்கேன்.''

உள்வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருகிற லட்சுமி. வேல்க்கனி பார்த்தான். இயல்பான சுபாவப் படி பார்வையை நகர்த்த முடியவில்லை. பார்வையைச் சுண்டியிழுக்கிற லட்சுமி.

வேல்க்கனி மனசெல்லாம் ஒன்றுகுவிய... நங்கூரப் பார்வையாகப் பார்த்தான். பார்வையில் ஒரு மோகம். தாபம். தகிப்பு. திரேகத்தின் உள்நரம்புகளில் மனக்கிளர்ச்சியின் மின்சார அதிர்வுகள்.

லட்சுமி அப்படியிருந்தாள்.

எல்லா வேலைகளும் முடித்து... லட்சுமி அப்போதுதான் குளித்திருந்தாள். ஈரக்கூந்தல் மினுமினுப்போடு முதுகெல்லாம் பரவிக் கிடந்தது. மஞ்சள் பூசிக் குளித்த கறுப்பு முகம். கனிந்த கறுப்பு.

குழைந்து மினுமினுக்கிற கறுப்பு. மனசைக் கவ்வுகிற அழகுக் கறுப்பு. கறுப்பு நிலா.

வீடு பூராவும் பரவிப் படர்ந்திருந்த லட்சுமியின் குளிப்பு வாசம். நறுமணம். இவனது மனசுக்குள் புகுந்து மோகத்தை உசுப்புகிற சுகந்த வாசம்.

''என்ன இப்படிப் பாக்கீக...?''

லட்சுமியின் நாணம் கலந்த குறும்புப் பார்வை. புன்னகை மின்னல். வேல்க்கனிக்குள்ளும் தடுமாற்றம்.

''ஒண்ணுமில்லே... பய ஒறங்கிட்டானா?''

''அப்பவே ஒறங்கிட்டான். நீங்க எங்க போனீக...?''

''மடத்துலே உக்காந்துருந்தேன்...''

''இம்புட்டு நேரமாவா?''

''மனசே சரியில்லே...''

''ஏன்... ராசா மனசுக்கு என்னாச்சு?''

''ம்ள்ச்சூ'' சலிப்பான - வேதனையான - அவனது சூள் கொட்டல். அந்தச் சூள் கொட்டலிலேயே முகம் காட்டிய அவனது மனக்கசப்பு. நடந்த வாக்கு வாதங்களின் பழைய வெக்கை.

இவளுக்குள் கிளறிவிட்ட புண்ணின் புதிய வலியாக மனசின் நினைவுகள் சுரீரென்று சுட்ட வார்த்தைகளின் உக்கிரம்.

உரசிக்கொண்டு வந்த லட்சுமி, முகம் சுண்டி விலகிப்போனாள். இறுகலான மௌனத்தில் புதைந்துகொண்டாள்.

ஒரு கனத்த மௌனம் முகம் காட்டியது. மோகமும் குழைவுமாய்... திரேக வாசமும் மன உணர்ச்சியின் லயிப்புமாய்... நெருங்கிவந்த ரெண்டு மனசுகளும் சட்டென்று முகம் திருப்பிக்கொண்டன. சூடான சூழலின் நினைவில் சுதாரித்துக்கொண்ட மனக் கசப்பு. மனவிறைப்பு.

சத்தமில்லாத விசனத்துடன் பாயை எடுத்து விரித்தாள். தலையணையை எடுத்துப்போட்டாள். போர்வையை எடுத்து மடிப்பு கலையாமல் தலையணைமேல் போட்டாள்.

''படுங்க...'' என்றாள்.

குரலில் ஓர் இறுக்கம். குழைவின்மை.

அவனுக்குள்ளிருந்து இருட்டில் வருகிற ஆயாசப் பெருமூச்சு. பாயில் போய் விழுந்தான். மேல்துண்டை பாயின்மேல் விரித்து மௌனமான மனக்கனத்தோடு கால்கையை நீட்டிப் படுத்தான். அணைக்கப்படுகிற மின்விளக்கு.

கொஞ்ச நேரம் கழித்து —

வந்துபடுத்த லட்சுமி. இருட்டில் பரவி படர்கிற மல்லிகைப்பூ வாசம். இவனுக்குள் இறங்கி உயிர்ப் பிக்கிற மயக்க வாசம். மனசின் ஆணிவேர் வரை பரவுகிற பரவசப்படுத்துகிற பூவாசம்.

அவளது ஈரக்கூந்தலின் குளிர்ச்சி. குளித்த உடம்பின் மென்மை ஸ்பரிசம். அவனுக்குள் கிளர்ந்தெழுகிற மோகம். நரம்புகளின் விறைப்பு. மனசெல்லாம் கிறங்கிப்போய் தினவெடுக்கிற உணர்ச்சி.

அவன் ஒருக்களித்துப் படுத்தான். மல்லிகைப் பூவின் குளிர்ச்சியான உரசல், அவனது நாசியில்.

அவள் உடம்பில் கையைக் குறுக்காகப் போட்டான்.

அது ஒரு சமிக்ஞை. மனசின் தேவையைச் சுட்டிக் காட்டும் உடம்பின் குறியீடு. அவனது உஷ்ணப் பெருமூச்சின் தகிப்பு, அவளது பிடறியில் சுட்டது.

அவளுக்குள் குழப்பம். மனக்குமைச்சல். அண்ணன் வந்துவிட்டுப் போன பிறகு... இவர் களுக்குள் முளைத்த முரண்பாட்டின் மூர்க்கம். நடந்த வாதப்பிரதிவாதம். அதில் வந்த வார்த்தைச் சூடுகள் கசந்த உணர்வுகள். முறுக்கேறிய நினைவுகள்.

அவனது கை, அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

எடுத்தெறிந்தாள். வேல்க்கனி அவமானமாக உணர்ந்தான்.

# 19

“எனக்கு நீயும் வேண்டாம். உன் சங்காத்தமும் வேண்டாம்’’ என்று வன்மத்துடன் மறுக்கிற மாதிரியோர் மூர்க்கம் லட்சுமியின் உதறலில் இருந்தது.

அப்படித்தான் வேல்க்கனி உணர்ந்தான். அடி மனசில் செருப்படி விழுந்த மாதிரியோர் அவமானத்தை உணர்ந்தான்.

புருஷ உரிமை... உரிமையின் நியாயம்... மனசின் இயல்பான வேட்கை...

எல்லாமே நிராகரிக்கப்பட்டிருக்கிறது. வேல்க்கனியின் மனம் விசனப்பட்டது. வேதனையுடன் மறுபக்கமாய் புரண்டு படுத்தான்.

அவனுடைய கண்ணுக்குள் நீரின் உறுத்தல். மனசின் ரணம் நீர் முத்தாகத் திரண்டு, உடைந்து, கசிந்து, வலி நிறைந்த மனசின் கனத்த பெருமூச்சுகள்.

பெருமூச்சுகளின் கனத்த சீறல் சத்தத்திலேயே ஆத்மதோழனின் மனவிசனத்தை வாசித்துவிட்ட லட்சுமியின் உள்ளுணர்வு. உணர்வுகளின் அதிர்வு. அவன் கண்ணில் வழியும் கண்ணீர், இவள் நெஞ்சின் உதிரமாக...

அவளுக்குப் பாவமாயிருந்தது. மனசின் மெல்லிய பகுதியின் நீர்க்கசிவு. கசிவின் குழைவு.

ஆசை ஆசையாக சிரித்துக்கொண்டே தவழ்ந்துவந்த குழந்தையின் கன்னத்தில் கிள்ளிவைத்துவிட்ட மாதிரியோர் குற்ற உணர்வு அவள் மனசில்.

வேல்க்கனியின் மனசு. பண்பு. இவளைத் தழுவி அரவணைத்த பாசம். கூடப்பிறந்தவன் காயப் படுத்திய போதெல்லாம் எண்ணெய் தடவிய அன்பு மனசுக்காரன்.

அவனையா காயப்படுத்துவது? அவனையா வருந்த வைப்பது? அந்தத் தங்கத்துடனா வாக்கு வாதம்? அந்தப் புண்ணியவானுடனா தர்க்கம்? வார்த்தை உரசல்கள்?

ச்சேய்...!

'ஒருத்தர் மனசுக்குள் ஒருத்தர் மனசு' என்று கலந்து, கரைந்து உருவிழந்து போன பிறகா கருத்து பேதம்? தனி அபிப்பிராயம்?

லட்சுமிக்குள் நிறைய வெளிச்சம். புதிய புதிய நினைவு மின்னல். மின்னலின் வெளிச்சத்தில் பிடிபடுகிற பல மர்மங்கள். விடுபடுகிற பல புதிர்கள்.

அவளுக்குள் பல நூறு பூக்களின் மலர்ச்சி. மலர்ச்சியின் ஒளிர்வு. உணர்வு வாசம். படுத்திருந்த இருவரிடையே இருந்த சின்ன இடைவெளி, உள்ளங்கையளவு இடைவெளி. சுட்டுத்தகித்த இடைவெளி. பரிவு நிறைந்த மனசுகளை துன்புறுத்து

கிற இடைவெளி. 'தன்னைக் கொன்றுவிடு. தன்னைக் கொன்றுவிடு' என்று கெஞ்சிக் கெஞ்சி மருகித் தவிக்கிற இடைவெளி.

அவள் ஒரு பூவெனப் புரண்டாள். மிருதுவாய் அவன்மேல் தன் கையைப் போட்டாள். அவனது கன்னத்தில் தனது குளிர்ச்சியான உள்ளங்கையை வைத்து, இந்தப் பக்கமாய்த் திருப்பினாள்... அவளின் இந்தக் கனிவு, அவனை வாரிச் சுருட்டியது ஒரு வெள்ளம்போல.

அந்த இருட்டில் எதையுமே பார்க்க முடியாத கனத்த இருட்டின் முற்றுகையில் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க முடிந்தது. மனசால் - உணர்வால் திரேக உணர்ச்சியால் பார்க்க முடிந்தது. பழக முடிந்தது. தன்னை மறந்து பழக முடிந்தது.

கொடுத்து வாங்குகிற இன்பப் பரவசம். தன்னை இழந்து எல்லாம் பெறுகிற சுகம். ரெண்டு ஒன்றாகக் கரைகிற மாயம். மனசின் வேறுபாடுகளைக் கழுவிச் சுத்திகரிக்கிற சிற்றின்பப் பெருவெள்ளம். கோபித்த மனசுகளை குழைய வைக்கிற மனிதக்கலவை. ஆத்திரத்தில் பெயர்க்க முடியாத மலையை, அன்புப் பரிவர்த்தனையின் இன்பப் பலத்தில் பனியாக மாற்றி விடக் கூடிய ஆற்றல்.

## 20

மறுநாள்-

முற்றம் தெளித்தாள். கூட்டிப் பெருக்கினாள். ஆடுகுட்டிகளை அவிழ்த்து வேறு தூண்களில் மாற்றிக் கட்டினாள். மூத்திர வாசமும் புழுக்கை நாற்றமும் அதன் கெச்சை வாடையும் லட்சுமிக்கு ரொம்பப் பிடிக்கும்.

குப்பையைக் கூட்டி அள்ளினாள். நார்க் கூடையை இடுப்பில் வைத்து குப்பைக்குப் போனாள். கனத்தில் இழுக்கிற கூடை ஒரு சாயலாக நடந்தாள் லட்சுமி.

குப்பைக்குமியில் கூடையைக் கொட்டி விட்டு வெறும் கூடையுடன் வந்தாள். கூடையை வீட்டுக்குள் போட்டுவிட்டு, அடுப்பு வேலையில் கவிந்தாள்.

வேல்க்கனி அந்நேரம்தான் எழுந்திருந்தான்.

செம்புத் தண்ணீரில் வாயைக் கொப்புளித்து, முகத்தைக் கழுவினான். மேல் துண்டால் அழுந்தத் துடைத்தான்.

''என்ன... லட்சுமி...''

''ம்.''

''உங்க அண்ணன் வந்துட்டுப் போயிருக்காரு... அது விஷயமா என்ன முடிவு செய்ஞ்சிருக்கே?''

''என்ன முடிவுன்னா...?''

''அவரு தர்ற பச்சைச் சீர்வரிசையை வாங்குறதுக்குப் போகப் போறியா... இல்லியா?''

இது விஷயமாகத்தான் இருவரிடையே ரெண்டு நாட்களாய் விவாதம். வார்த்தை உரசல்கள். தர்க்கத் தீப்பொறிகள். முடிவில்லாமல் நீள்கிற வாக்குவாதம். முடிவே காணாமல் அந்தரத்தில் நிற்கிற பிரச்சினை.

மனசுக்கு மனசான நெருக்கமான ஒரு குரலில் - ரொம்ப அந்நியோந்யமான தொனியில் - கழுத்தைச் சாய்த்துக்கொண்டு, இவனது நெஞ்சுக்குள் துளைக்கிற பார்வையின் ஊடுருவலோடு கேட்டாள் லட்சுமி.

''ஏங்க... இப்படிச் செய்ஞ்சா என்ன...?''

''எப்படிம்மா...?''

''அண்ணன் வந்துட்டுப் போனது ஒரு பக்கம் கிடக்கட்டும். அதுக்காக நமக்குள்ளே என்னத்துக்கு வேத்துமையும் வெவகாரமும்?''

''என்ன சொல்லுதே லட்சுமி...?''

''பொம்பளை நா. பொறந்த வீட்டுப் பாசம் சாகுற வரைக்கும் ரத்தத்துலே துடிச்சுக்கிட்டே தானிருக்கும். ஆயிரம் துரோகம் பண்ணுனாலும் அண்ணனை வுட்டுக்குடுக்க எந்தப் பொம்பளைக்கும் மனசு வராது...''

''ம்... ம்... ஞாயம்தான்.''

''ஆனா அதுக்காக நாம எதுக்குச் சண்டை போடணும்? எல்லாத்தையும்விட நம்ம ஒத்துமை முக்கியம். நாமதான் சாகுறவரைக்கும் சேர்ந்து வாழணும். உங்களுக்கு நா ஆதரவு. எனக்கு நீங்க தொணை. கட்டை வேகுற வரைக்கும் நாமதான் நமக்குப் பந்தம்.''

''ம்... ம்... ரொம்ப கரெக்ட்.''

''நீங்க சொல்றதுக்கு நா கட்டுப்படணும். இல்லேன்னா... நா சொல்றதுக்கு நீங்க சம்மதிக்க ணும். அப்பத்தான் நாம ஒத்துமையாயிருக்க முடியும். குடுத்து வாங்குறதுலேதான் குடும்ப வாழ்க்கையே நிமிர்ந்து நிற்கும். சகிப்புத்தன்மையோட விட்டுக் குடுத்துப் போனாத்தான் நாம விட்டு விலகாம ஒட்டி ஒறவாட முடியும். என்னென்னைக்கும்.''

''ம்.''

''சாகுறவரைக்கும் மனசுலே இருந்தாலும் அண்ணன் ஒறவு பழைய ஒறவுதான். அந்நியமா யிருந்து புது ஒறவாயிருக்கிற நாமதான், சாகுற வரைக்கும் ஒண்ணடியும் மண்ணடியுமா இருந்தாக ணும். அதனாலே...''

''ம்ம்... சொல்லு?''

''இப்போதைக்கு நா வுட்டுக்குடுத்துப் போறேன். நீங்க சொல்ற ஞாயத்தை ஒத்துக்கிடுதேன்.''

''என்ன ஞாயம்?''

''இழவு தள்ளுன அண்ணன்கூட எந்த ஒறவும் வேண்டாம். பச்சைச் சீலையும் வேண்டாம். பச்சை வளையலும் வேண்டாம். மஞ்சக்கயிறும் வேண்டாம்... குண்டுமணித் தங்கமும் வேண்டாம். அண்ணனும் வேண்டாம். அவனோட சங்காத்தமும் வேண்டாம்னு மனசை இறுக்கிக்கிடுதேன்.''

''மனசாரச் சொல்றீயா...?''

''மனசாரத்தான் சொல்லுதேன்...''

ஒரு கனத்த சோகத்தை மனசார ஏற்றுக்கொள்கிற ஒரு வேதனையின் கறுத்த நிழல் லட்சுமி முகத்தில் கவிந்திருந்தது. கண்ணோரங்களில் ஈரச் சுமை. அடி உதட்டின் ஈர மினுமினுப்பில் வெட்டுப்பட்ட பல்லி வாலாக ஓர் உயிர்த் துடிப்பு.

இதையெல்லாம் காட்டிக்கொள்ள விரும்பாமல் அடுக்களைக்குள் தன்னை இழுத்துக்கொண்ட லட்சுமி, அவளுக்குள் மிச்சமாயிருந்த ஒரே ஒரு பிரச்சினை, ஒரே ஒரு நெருடல்.

'பாரம் கழிந்தால் போதும் என்று திட்டிப் புலம்பி கழித்துக்கட்டுகிற பெண்ணினத்துக்கே கிடைக்கிற முதன்முதலான ஈஸ்வர முதல் மரியாதை இது. பெண் தயவும் பிறந்தவீட்டுக்குத் தேவைப்படும் என்ற புதிய வலிமையை - கிரீடத்தை - உணர்த்துகிற அதிமுக்கிய விஷயம் இது. இந்தக் கிரீடத்தைப்

பெறுகிற வாய்ப்பை இழக்கிறோமே... பூனைக்கும் வந்திருக்கிற காலத்தை சுட்டிக்காட்டுகிற அபூர்வத் தருணத்தை தவற விடுகிறோமே' என்கிற ஒரேயொரு வருத்தம்தான்... ஒரேயொரு நெருடல்தான்.

வேல்க்கனி திண்ணையில் உட்கார்ந்திருக் கிறான். அவன் பக்கத்தில் லட்சுமி கொண்டுவந்து வைத்த டீ நிரம்பிய சில்வர் கிளாஸ். அதிலிருந்து இழை இழையாய் எழுகிற புகைக்கோடுகளின் நெளிவுகள்.

வேல்க்கனி உதட்டில் ஒரு மென்னகை. 'தான் விட்டுக்கொடுக்க நினைத்திருந்த அதே கணத்தில்... தனது ஆத்மதோழியும் விட்டுக்கொடுக்க நினைத் திருக்கிறாளே' என்கிற அதிசய அற்புதத்தை நினைத்து உள்ளுக்குள் வியந்தான்.

'அதைச் சொல்லலாமா... வேண்டாமா?' என்று யோசித்தான். மனைவியிடம் இந்த நினைவுப் பொருத்த அதிசயத்தைப் பகிர்ந்துகொள்ள இது நேரமில்லை என்று தலையாட்டிக் கொண்டான்.

அடுக்களைக்குள் லட்சுமி பெருமூச்சு விடுகிற சத்தம், அதில் வருத்த நிழலின் ஒலி, சின்னதான விசும்பல் சத்தம் கேட்கிறது. மறைக்க முயன்றும் வெளிப்படுகிற அந்த விசும்பலில்... லட்சுமியின் மன வேதனை முழுமையும் சோகச்சுமை முழுமையும் வெளிப்படுவதை உணர்கிற வேல்க்கனியின் மனசுக்குள்

பதைப்பு. தனது ஆத்மதோழியின் வேதனை தாளாமல் இவனது ஆத்ம தவிப்பு.

''லட்சுமி...''

வேல்க்கனியின் மென்மையான அழைப்பு குரலின் மிருதுத்தன்மை.

''என்னங்க...?''

தோற்றமில்லை. லட்சுமியின் குரல் மட்டுமே கேட்கிறது. ''நா சொல்றதை ஒத்துக்கிடறதுன்னு முடிவுபண்ணிட்டே இல்லே?''

''ம்.''

''அப்ப நா சொல்லுதேன், நீ போய்... உங்க அண்ணன் வாங்கித் தர்ற பச்சைச் சீர்வரிசையை வாங்கிக்கிட்டு, வாழ்த்திட்டு வா.''

''என்னங்க சொல்லுதீக?'' இனிய ஆச்சர்ய மகிழ்ச்சியோடு விருட்டென்று வெளிப்படுகிற லட்சுமி.

அவள் முகத்தின் கறுப்பில் ஒரு மின்னல். கண்ணில் ஒரு களி துள்ளல். கன்னங்களில் ஒரு கனிவின் ஒளிர்வு. மனச் முழுக்க பூத்துச் சொரிந்த வண்ணப்பூக்களின் பேரொளி.

''ஆமா... லட்சுமி, உறவைக் காப்பாத்துறதுக்கு எதை வேணும்னாலும் விட்டுக்குடுத்துரலாம். பகையைப் பொட்டலம் கட்டி பாதுகாக்கக்கூடாது. நா நிசமாவே அன்புக்கு ஏங்குனவன். என்னாலே

வெறுப்பைக் காப்பாத்த முடியாது, அதுலே எம்புட்டு ஞாயம் இருந்தாலும் சரி...''

''...''

'' 'எனக்கு நீயும் வேண்டாம். உன் சங்காத்தமும் வேண்டாம்'னு நிராகரிச்ச கொடுமையை அனுபவிச்சவன் நா. புறக்கணிப்போட குரூர ரணத்தை அனுபவிச்சவன். அந்தக் கொடுமையான அனுபவம், வேற யாருக்கும் வரக்கூடாது. என்னோட எதிரிக்கும் கூட வரக்கூடாது. லட்சுமி... உங்க அண்ணனும் அந்த அனுபவத்தை அனுபவிக்கக்கூடாது. நாம அவரை அப்படி நிராகரிச்சு... அந்தப் பாவத்தை நாம செய்ய வேண்டாம் லட்சுமி...''

''அப்படியா சொல்லுதீக?'' லட்சுமியின் உதடுகளின் சுருக்கங்கள் விரிந்து... மனசின் மலர்ச்சியாக சிரிப்பு மின்னுகிற அழகு. கண்ணுக்குள் சுடர்மணி பளபளப்பு. சந்தோஷ மோதல் தாளாமல், ததும்புகிற நிறைகுடமாய், பரவசப்பட்டுப் பூரிக்கிற லட்சுமியின் பேரழகு.

வேல்க்கனிக்குள் அதை ரசிக்கிற இன்பம்.

''ஆமா லட்சுமி. இது ஈஸ்வர வருஷம். பொறந்த வீடுகள்லே பொண்ணுக்கு மரியாதை கிடைக்கிற வருஷம். 'நல்லதங்கா சாபம் வெலகும்'ங்குற நம்பிக்கை நெசமோ, பொய்யோ... நல்ல தங்காளுக்கு செய்ஞ்ச கொடுமையை நெனைச்சு பதறுகிற

ஆம்பளைக, தங்கச்சிமாரோட கால்லே விழுந்து ஆசீர்வாதம் கேக்குற வருஷம். லட்சுமிக்கு அப்படியொரு மரியாதை கிடைச்சா அது எனக்கும் பெருமை தானே?''

லட்சுமிக்குள் பெருமிதத் ததும்பல். பூரிப்பின் புளகாங்கிதம். மகிழ்ச்சி நதியின் வெள்ளப்பெருக்காக லட்சுமி... அவளுக்குள் றெக்கையடிக்கிற மனசு. ஆகாயம் முழுவதும் சிறகு விரிக்கிற மன உற்சாகம்.

''ரெண்டு பேரும் வீட்லேயே இருக்கீகளா...? நல்லதாப் போச்சு.''

கணேசராஜின் உற்சாகத் துள்ளலான மகிழ்ச்சிச் சத்தம். வாசலில் அவன் கையில் புடைப்பாக மஞ்சள் நிறப்பை. அதற்குள் புதுவேட்டியும் சட்டைத் துணியும்.

இழவுதள்ளிய தவறுக்குப் பரிகாரம் செய்ய வந்திருக்கிற அவன்.

''மச்சான்... வாங்க... மச்சான், என்ன திடுதிப்புன்னு? உட்காருங்க...''

வேல்க்கனி தடபுடலாக உபசரித்தான். வரவேற்றான்.

''அண்ணே... வா அண்ணே... இப்பத்தான் வாரீயா?''

''ஆமா லட்சுமி'' என்றவன் திண்ணையில் உட்கார்ந்தான்.

''மாப்புள்ளே, என்ன 'திடுதிப்'புன்னு வந்து நிக்கிகன்னு நீங்க கேட்டீக... இல்லே?''

''ஆமா... மச்சான்.''

''லட்சுமி அப்படிக் கேக்கமாட்டா. ஏன் தெரியுமா? நா வரப் போற ரகசியம் அவளுக்குத் தெரியும்...''

''அப்படியா...? அண்ணன் தங்கச்சிக்குள்ளே ரகசியம் இல்லாம இருக்குமா? அதுலேயும் லட்சுமி கள்ளி. நல்ல மனசுள்ள கள்ளி.''

லட்சுமி, வேல்க்கனி ரெண்டுபேரும் வெடிச் சிரிப்பாக சிரிக்க... அந்த வெள்ளை மனசுகளின் சிரிப்புச் சத்தத்தில் கணேசராஜின் சிரிப்பும் கலந்து கொண்டது.

'தன் சிரிப்பு மட்டும் ஒட்டலியோ... நீருலே விழுந்த எண்ணெயா விலகி மிதக்குதோ...' என்று உள்ளுக்குள் ஒரு நினைவு, கணேசராஜின் கள்ள மனசுக்குள்.

இளகிய மனசோடு தங்கையைப் பார்க்கிற இந்தக் கணத்தில் -

அவனுக்குள் ஒரு குற்றஉணர்வு முள்ளாக உறுத்தியது!

# தை மகள்

## 1

அந்த வீடு, மௌனத்தில் கனத்துக் கிடந்தது. கிராமத்தின் மேலத்தெருவில் வண்டிப்பாதைக்கு வழிவிட்டு ஒதுங்கி' நிற்கிற மாதிரி அந்த ஓட்டு வீடு. பழைய காலச் செங்கல்ஓடுகள். கால நீட்சியில் கறுத்துக் கிடந்தன. வீட்டின் வெளிச் சுவர்களிலெல்லாம் முதுமை படிந்த சுண்ணாம்புச் சாந்தின் உவர்ப்புத்தூசிகள்.

வீட்டின் உட்பக்கம் சரஸ்வதியின் நடமாட்டம். 'தக், தக்'கென்று அதிர்கிற நடைச் சத்தத்தில் மனவெக்கை.

இறுகிக் கிடந்த வீட்டின் உள்பக்கம் முழுமையும் கால்நீட்டிப் பரவிப் படுத்துக்கிடந்த கோபமௌனம்.

சுண்ணாம்புச்சுவர்களும் கருமையான பழங்காலக் கதவுகளும் ஓட்டுப்போட்ட சிமெண்டுத்

தரையும் அந்த வீட்டின் மௌனக் கனத்தைப் பார்த்துப் பரிகசித்தன. மனித மனசுகளின் சலனமற்ற இறுக்கத்தைப் பார்த்து 'கால்தட்டிச்' சிரித்தது சிமெண்டுத் தரை.

மனத்தாங்கலும் கோபக்குமைச்சலும் ததும்புகிற மனப்பாரத்தோடு, மௌன அழுத்தத்தோடு நடக்கிற சரஸ்வதியின் — சமுத்திரத்தின் 'தக்தக்'கென்ற அதிர்வுகளோடு நடக்கிற காலடிச் சத்தமே அவர்களைப் பரிகசிக்கிறது.

சாயங்காலம் ஒரு நீடித்த சண்டைக்கான பிள்ளையார் சுழி போல ஒரு பொருமலோடு சிடுசிடுத்தாள் சரசு. இடியும் முழக்கமுமாய் நீர்கோத்த மேகப் பூதங்களின் அடர்த்திமிக்க கனத்த இருட்டுமாய் வியர்வையும் இறுக்கமுமாய் ஒரு பெரும் மழைக்கான கனத்த அறிகுறி மிரட்டிக் கொண்டிருக்கும்போது —

'பொசு பொசு'வென்று தவிட்டுத் தூசிகளாகத் தூறல் விழத் துவங்குவதைப் போலிருந்தது, சரசுவின் முணுமுணுப்பு.

அது வெறும் முணுமுணுப்பல்ல.

ஆவேசமும் ஆக்ரோஷமும் நிறைந்த ஆங்காரமான அங்கலாய்ப்பு. அடைக்கோழியின் ஆத்திரமான சீறல். ஒரு விசுவரூபப் பெருமழையின் துளிமுகம். முகத்துளி.

சமுத்திரத்தின் மனசு மகளைத் தேடியது. 'எங்கே போய்ட்டா, அந்தச் சின்னக்குட்டி' என்று ஏக்கமாய் உள்ளுக்குள் கேட்டுக்கொள்கிறது.

சரஸ்வதியிடம் கேட்கலாம்.

''எங்க நம்ம புள்ளே?''

கேட்டால் பதில் சொல்லும் மனநிலையில் இல்லை அவள். கொதிநிலையில் இருக்கிறாள். மூடியை முட்டித் தள்ளிக்கொண்டு நீரும் பருக்கைகளும் ததும்பிக் கொட்டுகிற கொதிநிலை.

சமுத்திரம் அவளையே பார்த்தான். அங்கும் இங்குமாய் வீடு பூராவும் வேலையும் ஜோலியுமாய் — கோபமும் குமைச்சலுமாய் அலைந்துகொண்டு, தீப்பொறிகளை அள்ளியிறைக்கிற சரசு. அவளையே தொடர்ந்து துரத்துகிற அவனது பார்வை.

இடுப்பில் வியர்வைத் துளிகளின் மினுமினுப்பு. சொட்டாகத் திரளாமல் - வரிக்கோடாக நீளாமல் - எண்ணெய் தடவின மாதிரி ஒரு பளபளப்பு. கட்கத்து ஜாக்கெட்டில் வியர்வைக் கசிவு. முதுகில் சில இடங்களில் நனைவுத் திட்டுகள்.

தாறுமாறாய் அவள் போட்டிருந்த கொண்டை தன்னியல்பாகத் துவண்டு பின்கழுத்தைத் தழுவிச் சரிந்து கிடந்தது. சிலுப்பிக்கொண்டிருந்த ஒன்றிரண்டு ரோமங்கள், வியர்வையில் நனைந்து கன்னத்துக் காதோரங்களில் ஒட்டிக்கிடந்தன. காது நுனியில் மங்கலாய்க் கிடக்கிற - நாள்பட்ட தங்கக் கம்மல்.

சாயம் போய் கலர் மங்கிப்போன பாலியஸ்டர் சேலை. முன்கொசுவம் வைத்து உடுத்தப்பட்டிருந்த அந்தச் சேலையில் வெள்ளைப் பூக்களாயிருந்த ரோஸ்கலர்ப் பூக்கள். சேலையின் காலடி நுனியையும்

மீறிக்கொண்டு அடியில் எட்டிப் பார்க்கும் பாவாடை விளிம்பு. அதன் கிழிசல் நூல்கள்.

மனைவியையே துரத்தித் துரத்திப் பார்க்கிற பார்வை. பார்வையில் ஒரு வெம்மை. பொறுமை சிதைகிற அக்கினி நொறுங்கல். குமுறிக் குமைகிற தீக்கங்குகள்.

ஆனால், மௌனம் காத்தான். அனலை அடக்கிக் கொண்டு பொறுமையாக இருந்தான்.

ஆங்காரமும் அங்கலாய்ப்பின் வெக்கையும் வீடு பூராவும் அனல் பறக்க சரசு அங்கலாய்த்தாள். கோபமும் குமுறலுமாய் குமைச்சல் எடுத்தாள். இயலாமையின் கோபமாய் இழுபட்டுக் கிழிக்கிற அங்கலாய்ப்பு. அங்கலாய்ப்புகள்.

அனுமார் வாலாக முடிவற்று நீள்கிற அங்கலாய்ப்பு, கொதிப்பான புலம்பல்கள்.

## 2

‘‘இது ஒரு வீடா? இது ஒரு குடும்பமா? மனுசமக்க கலந்து பழகி இருக்கிற குடும்பமா இது? குடும்பம்னா... ரெட்டை மாட்டுவண்டி மாதிரி, ஆம்பளை சொல்றதை பொம்பளை கேட்கணும். பொம்பளை சொல்றதை ஆம்பளை கேட்கணும். ஒருத்தரு சொல்லுக்கு ஒருத்தரு காது குடுத்து வளைஞ்சுபோனா வீடு வெளங்கும். குடும்பம் துலங்கும்.

இங்க என்னடான்னா... பொம்பளை சொல்லைக் கேட்டுறக்கூடாதுன்னு ஆம்பளைக்கு ஒரே பிடிசாதனை. வைராக்கியம். ஆம்பளை பிடிச்ச முயலுக்கு மூணே காலுன்னு குருட்டுத்தனமா, முரட்டுத்தனமா - சாதிச்சா - எப்படி? ஒரு மாடு, இன்னொரு மாட்டை காட்டுத்தனமா நெட்டித் தள்ளுனா... வண்டி எப்புடி ஒழுங்காப் போகும்? குடைசாயத்தானே செய்யும்?

ஆம்பளைன்னா... கொம்பு மொளைச்ச ஆளா? பதிமூணுமாசக் கர்ப்பமா? பொம்பளைன்னா... மட்டமா? எட்டுமாசமா? அவளுக்கு அறிவே யில்லியா? புத்தியேயில்லியா? யோசிக்கமாட்டாளா? யோசிக்கத் தெரியாதா? யோசனை சொல்ல அவளுக்கு உரிமையில்லியா? யோசனை சொன்னா அதுலே நல்லது இருக்காதா? காது குடுத்துக் கேட்டா கொறைஞ்சா போவும்? கிரீடம் இறங்கியா போயிரும்? நாலு வார்த்தையிலே ஒரு வார்த்தைக் காச்சும் மனசு குடுத்துக் கேக்கக்கூடாதா? கேட்டுட்டா... வீடு விளங்காதா?

இப்படியுமா... ஒரு ஆம்பளை இருப்பாக? எது சொன்னாலும் ஏன்னு கேக்காத கல்லு மாதிரி. தாலி கட்டுன பொண்டாட்டி. பூங்கொத்து மாதிரி ஒரு புள்ளையைக் சுமந்து பெத்துக் குடுத்தது. நல்லது, பொல்லது எல்லாத்துலேயும் ஒண்ணாச் சேர்ந்து நிக்கிறவ.

அவளை ஒரு மனுசியா மதிக்க வேண்டாம்? அட... பொண்டாட்டின்னு மதிச்சு தலையிலே தூக்கி

வைக்காட்டாலும் ஒரு பொம்பளையா நெனைக்க வேண்டாம்? மனுசசீவன்ங்குற தகுதியாச்சும் தர வேண்டாமா?

பொம்பளைன்னா அம்புட்டு மட்டமா? மரக்கட்டையா? மதியத்துப் போன மரக்கட்டையா? யோசிக்குற மதியில்லாம போன வெறும் ஜடமா? அப்படி ஒரு பொண்டாட்டியை ஒரு மனுசன் நெனைக்கலாமா? அலட்சியம் பண்ணலாமா? அப்படி அலட்சியம் பண்ணுற புருஷனாலே பொண்ணுக்கு என்ன பிரயோசனம்?

மதியத்த மனுசின்னு நெனைச்சுட்டா... அவளோட என்ன சங்காத்தம். எதுக்கு வைச்சு வாழணும்? நாலுசுவருக்குள்ளே அந்த மரக்கட்டை யோட குடும்பம் நடத்தணுமாக்கும். கூடப்படுத்து எந்திக்கணுமாக்கும்? அதுக்குத்தானா அவ? புள்ளை பெத்துத் தருறதுக்கு மட்டும்தானா? த்தூ!

மதிப்பு இல்லாம... மரியாதையில்லாம மனுசிங்கிற நெனைப்பும் இல்லாம போச்சுன்னா... அங்க ஒரு பொட்டச்சி இருக்கலாமா? இருந்து வாழணுமாக்கும்? ஆக்கி அவிச்சுக் கொட்டி, சீவிச்சிங்காரிச்சு... சிரிச்சு மயக்கி இருக்கணுமாக்கும்? மானங்கெட்ட இருப்பு. தேவிடியாப் பொழைப்பு.

இதுவும் ஒரு பெண் ஜென்மமா? பெண் ஜென்மமே துன்பம்தானா? மதிப்பு மரியாதை இல்லாத மனுசனோட சேர்ந்து வாழ்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இது கேவலம். ஏழு ஊருக்

கேவலம்... இப்படிக் கேவலப்பட்டுச் சீரழிஞ்சு செங்கச் சுமந்து நாயிலும் கீழா சீப்பட்டு இருக்குறதை விட நாண்டுக்கிட்டுச் சாகலாம். இருந்து வாழ்ந்து என்ன மணக்கப் போறோம்? எந்த ராஜ்யத்தை கட்டியாளப் போறோம்? செத்துத் தொலையலாம். நிமிசத்துலே தூக்கிட்டுப் போய் சாம்பலாக்கிருவாக. நிம்மதி. ஒரே நிம்மதி... சாவுலேதா நெரந்தர நிம்மதி.

இப்படி ஆக்கங்கெட்ட அரக்கனுக்கு வாக்கப் பட்டு சீப்படுறதைவிட, ஒரேயடியா போய்ச் சேர்ந்துரலாம். அதுதான் நல்லது. நிம்மதி.''

வீடு முழுக்க சரசுவின் வெக்கையலைகள். முகமற்று உஷ்ணமாய் அலைகிற கொதி உணர்வுகள். அவமதிக்கப்பட்டு புண்பட்டுப்போன மனசின் ரோஷப்பட்ட கொதிப்பு. ரோஷாக்னியலைகள். முடிவற்ற சாரல் மழையாக, அனல்சரமாக, நீள்கிற சரசுவின் ஆங்காரத் தீஜ்வாலைகள். நாவை நீட்டி நீட்டி உயர உயரத் தாவுகிற ஜ்வாலைகள்.

அங்குமிங்குமாய் அலைகிற அவளின் நடமாட்டம். 'தக், தக்' கென்று அதிர்கிற காலடித் தடங்கள். மனசின் அனல் தடங்கள்.

சீண்டப் பட்டாலும், சீறி விடாத மனத்தகிப்போடு அவளையே விரட்டிப் பார்க்கிற சமுத்திரத்தின் பார்வை. சிவப்பு ரேகைகள் உணர்ச்சிக் கொதிப்பில் உடைந்து சிதறி... கண்முழுக்க ரத்தச் சிவப்பாக

பரவிப் படர... மௌனக் குமைச்சலாய் அவளையே வெறிக்கிற அவன் மனசின் தீ கண்ணில் நிறமாகப் பரவுகிறது.

சாட்டையடியின் அனல் சுழற்சியாய் வந்து, 'சுளீர், சுளீ'ரென தாக்குகிற சரசுவின் சரவெடிகள். சரவெடிச் சொற்கள். புகை நாற்றமும் சத்தமுமாய் வந்து நெஞ்சுக்குள் வெடிக்கிற சரவெடிச் சொற்கள்.

'எல்லாவற்றையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியும்' என்கிற திமிருடன் பொறுமை சிதைந்த மனக்குமைச்சலோடு, கோபக்குமுறலின் மௌன அழுத்தத்தோடு அவளையே 'கிண்ண்'னென்று பார்த்த சமுத்திரம்.

''இப்படி ஆக்கங்கெட்ட அரக்கனுக்கு வாக்கப் பட்டு சீப்படுறதைவிட ஒரேயடியாப் போய்ச் சேர்ந்துரலாம். அதுதான் நல்லது நிம்மதி'' என்ற சோக ஈரம் படிந்த விரக்தி நெருப்பு, அவனது திமிரை உடைத்துவிட்டது. பொறுமையின் மௌனத்தைத் தகர்த்துவிட்டது.

சாவைப் பற்றிய அவளது புலம்பலை அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. சண்டாளமாய் பொங்கி வந்த கோபம். சமுத்திரப் பிரளயமாய் குமுறி வெடித்த அக்கினித் துண்டுகள்.

அடிமனசிலிருந்து வெடித்துச் சீறிப் பாய்ந்து நாலாபக்கமும் சிதறி மிரட்டிய அவனது ஓங்காரக் கத்தல்.

''ஏய்ய்ய் க்..''

வீடே அந்தக் கத்தலில் ஒரு குலுங்குக் குலுங்கியது. கத்தலின் அதிர்வான உரசலில் அவனது தொண்டையே காந்தலெடுத்தது. கரகரத்தது.

கோபமும் மிரட்டலுமான ஆத்திரக் கத்தல்.

மயிலைக் கண்ட சர்ப்பமாக அப்படியே ஸ்தம்பித்துப் போனாள் சரசு. நெஞ்சே 'பக்' கென்று அதிர்ந்து, உறைந்து... அப்புறம்தான் 'தடக் தடக்' கென்று துடிக்கத் துவங்கியது.

பயத்தில் வெலவெலத்துப் போய்... மழையில் நனைந்த கோழிக்குஞ்சாக நடுங்கிப்போனாள். அவனைப் பார்த்தாள். விறைத்துப் பார்க்கிற கண்கள். கோபத்தில் விடைத்துப் போயிருக்கிற முகம். அடிஉதட்டைக் கடித்து பயங்கரத் தோற்றத்தில் முழிக்கிற அவன்.

''விட்டா... வாய் ரொம்ப நீளுது... செவுளைப் பேத்துருவேன் பேத்து. சொல்றதை நேராச் சொல்ல வேண்டியதுதானே? என்ன ஜாடைப் பேச்சு வேண்டிக் கிடக்கு... மிதிச்சுருவேன்... மிதிச்சு.''

அவனது மிரட்டலில் அரண்டுபோனாள். ஆனால், அடங்கிப் போய் விடவில்லை. மனசின் கொதிப்பு இருக்கே. எப்படி அடங்கும்?

அப்புறம்தான் வீட்டில் கனத்த மௌனம் கூச்சலிடத் துவங்கிவிட்டது.

## 3

குடத்து நீரை இடுப்பில் வைத்துக்கொண்டு உள்ளே வருகிறாள் சரசு. கூட்டிப் பெருக்கியள்ளிய குப்பைக்கூடையுடன் வெளியே போகிறாள். வீட்டுமுற்றத்திலுள்ள 'வெளிப்பானை'யில் கழுவிச் செல்ல விரலிடுக்குகளில் கவ்விய பண்ட பாத்திரங் களுடன் வெளியே வருகிறாள். வெட்டிப் பிளந்து காய்ந்த விறகுகளை அள்ளிக்கொண்டு உள்ளே போகிறாள்.

வெளியே வருகிறாள். உள்ளே போகிறாள். வருகிறாள். போகிறாள். நிறைய தடவைகள். வாய் வார்த்தை ஒன்றுமில்லை. ஒரு சத்தமில்லை. ஒரு பேச்சில்லை.

மௌனத்தின் கூத்தாட்டம். சுவர்களும் கதவுகளும்கூட இந்த மனித மனங்களின் விசன மௌனத்தைப் பார்த்துப் பரிகசிக்கின்றன.

நடக்கிற நடையின் சத்தம்தான். பாதங்களை அடித்து அழுத்தி மிதிக்கையிலே எழுகிற ''டப், டப், டப்'' சத்தம் மட்டும்தான். பாத்திரங்களை வைக்கிற 'ணங்க்'. விறகுகளை போடுகிற தடபுட. குப்பை கூடைகளை வைக்கிற டப். விளக்குமாறை மூலையில் எறிகிற 'டடப்.'

எல்லாமே அளவு கூடின சத்தம். சத்தங்களின் அதீதத்திலேயே முகம் காட்டுகிற அவளது மன எரிச்சல்.

வாய்விட்டுப் புலம்பிய அங்கலாய்ப்புகளின் அதே கொதிப்பான உணர்வுகளின் உஷ்ணத் தகிப்பு.

வரும்போதும் போகும்போதும் சமுத்திரத்தைப் பார்க்கிற பார்வை. ஒரு மின்னல் வெட்டு மாதிரி 'வெடுக்' கென்று கொத்திச் சிதறுகிற பார்வை. அது கக்கிப் பரவுகிற வெக்கை.

அந்தப் பார்வை வீச்சின் வேகம், எந்த இதயத்தையும் ரெண்டாகப் பிளந்துவிடும். அத்தனை வலிமை.

பழைய அனுபவங்களின் கசப்பான நிஜங்களில் பயந்துவிட்டாள். பயந்துபோய் மிரட்சியில் வாயைப் பொத்திக்கொண்டாள். ஆனால், மனக்கோபம் தீரவில்லை. வெக்கை ஆறவில்லை.

அது - ஜடப்பொருட்களின் சத்த அதிர்வுகளில் முகம் காட்டுகிறது. அதுவும் இவனுக்கு ஆத்திரம் தருகிறது. உள்ளிருந்து பீறிடுகிற கோபக்குமுறல்.

விறைப்பும் வெடிப்புமாக ராங்கித்தனமாக நடமாடுகிற சரசுவைப் பார்க்கப் பார்க்க வருகிற எரிச்சல். அவனுக்குள் திமிறித் திணவெடுக்கிற மூர்க்கம்.

''அடிசிறுக்கி மகளே... பொட்டைக் கழுதைக்கு இம்புட்டு ராங்கியா?'' என்று கத்திவிடலாமா? வெடித்து வீறிட்டு விடலாமா? பாய்ந்து நடு முதுகில் ஒரு மிதி மிதித்துத் தள்ளிவிடுவோமா? வெலவெலத்துப் போய் குப்புற விழுகிற அவளின் தலைமுடியைக் கற்றையாகப் பற்றி வெடுக்கென்று இழுத்து

*மல்லாக்கப் போட்டு மூஞ்சியிலும் முதுகிலும் நாலு சாத்துச் சாத்திவிடலாமா?'*

*அவனுள் கொதி உலையாக குமிழ் வெடிக்கிற ரத்த ஓட்டம். பரபரக்கிற மனசு. மூர்க்கமும் ஆத்திரமுமாய் வன்முறையைப் பிரயோகிக்க யத்தனிக்கிற மனசு. 'சப், சப்'பென்று நாலு அப்பு அப்பிருவமா என்று துறுதுறுத்து அலைபாய்கிற உள்ளங்கை.*

*பற்களைக் கடிக்கிறான். இருபுறக் கன்னக் கதுப்புகளிலும் நெறுநெறுக்கிற பற்களின் புடைப்பு. நாசிநுனியில் துடிப்பு. மட்டியை கடிக்கிற அழுத்தத்தில் அவனது வெகுண்ட மனசு.*

*உள்ளுக்குள் ஆழத்தில் ஒரு குரல். அவனது குரல். உள்குரல்... 'ஊஹூம்... வேண்டாம் சமுத்திரம். வேண்டாம். பொறுமையைக் காப்பாற்று. அலை வீசி ஆர்ப்பரிக்காதே. சாந்தமாகு. அமைதியைத் தழுவு. நீ குமுறினால் அது புயலாகிவிடும். நாசமழை வரும். மின் கம்பம் சரியும். வெள்ளம் ஊர் புகும். உயிர்கள் நீர்ச் சமாதியடையும்.*

*நீ புயலாகச் சீறினால்... சரசு நார் நாராகிப் போவாள். கந்து கந்தாய்க் கிழிந்து போவாள். ஊரே வெடிக்க ஒப்பாரி வைப்பாள். ஊர் கூடும். வீட்டுக்குள் தெருவே வந்து நிற்கும். எல்லோரும் உன்னைத் திட்டுவார்கள். வைவார்கள். கண்டித்துச் சீறுவார்கள். பரிகாசம் பண்ணிச் சிரிப்பார்கள். கேவலப் பொருளாய் உன்னை நினைப்பார்கள். உன் வீட்டு அந்தரங்கப் புனிதம், ஊர் விஷயமாகி அசிங்கப்படும்.*

உன் குடும்பமே ஊர்வாய் அவலாகும். ஊரே வேடிக்கை பார்க்கிற கூத்தாக, உன் வீடு.

வேண்டாம்... வீடு கேவலப்பட வேண்டாம். தாம்பத்தியம் பரிகசிக்கப்பட வேண்டாம். சரசுவின் கண்ணீரில் உன் ரத்தம் வழிய வேண்டாம்.

சரசுவை நீ மிதிக்கிற மிதியில் உன் கௌரவம் தான் மிதி பட்டு நசுங்கும். நீ சாத்துகிற சாத்துகளில் உனது மரியாதைதான் வலிதாளாமல் அலறும்.

அடித்து ஏன் அடிபடணும்? மிதித்து ஏன் மிதிபட வேண்டும்? பொறு. சமுத்திரம் மௌனத்தை கடைப்பிடி. நிதானமாகு. சாந்தமாகு... பொறு. பொறு.'

சமுத்திரம் மனசுக்குள் அவனது குரல். விவேகமும் கண்டிப்பும் கலந்த கனிவான குரல். அவனது மூர்க்கத்துக்கு லகான் போட்டு நிறுத்துகிற குரல்.

சமுத்திரம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். நிதானப்படுத்திக் கொண்டான். உள்ளுக்குள் பொங்கிக் குமுறும் ஆத்திரம், மூர்க்கம், நினைவு வெக்கைகள் முழுவதையும் ஆழ்ந்த பெருமூச்சாக்கி, வெளியே விட்டான்.

சரசுவைப் பார்ப்பதை தவிர்த்தான். நிமிர்ந்தே யிருந்த முகத்தைத் தாழ்த்தினான். வீட்டுத் தரையின் சிமெண்டையே பார்த்தான்.

மனசுக்குள் ஓடிப் பரவுகிற நினைவுகள்.

'இவளைப் பார்க்கப் பார்க்க எரிச்சல் வருது. அடைக்கோழி மாதிரி சிடுசிடுக்கிற மூஞ்சி

*மொகரையை பார்த்தாலே... தீயா பத்திக்கிட்டு வருது... ச்சே...!*

*பார்த்தால்தானே எரிச்சல், பார்க்காட்டா? இங்க இருந்தால்தானே பாக்கணும்? எங்குட்டாலும் எந்திரிச்சுப் போயிட்டா?*

*எங்க போறது?*

*எங்குட்டாச்சும். இங்கு இல்லாம இருந்தாச் சரி. இந்தச் சிடுமூஞ்சியை ஏறிட்டுப் பார்க்காம இருந்தாச் சரி...'*

சமுத்திரத்திற்குள்ளிருந்து மீண்டும் வெளிப் பட்ட ஒரு பெருமூச்சு. அதில் வந்த 'ஸ்ஸ்ஸ்...' சத்தம்.

தலைதாழ்ந்த நிலையிலேயே எழுந்தான். 'வெற்றுடம்பாக இருக்குதே' என்று யோசித்தான். 'சட்டை போடலாமா...?' மறுத்துக் கொள்கிறது மனசு. கொடியில் கிடந்த கைப்பனியனைப் போட்டுக் கொண்டான். மேல்துண்டை எடுத்துத் தோளில் போட்டான். மனசுக்குள் ஒரு மெல்லிய வேதனை.

*'வீடு வீடாயில்லியே... பேசிச் சிரிச்சு சந்தோஷ மாயிருக்கிற குதூகலக் குடும்பமாயில்லியே... நெருஞ்சி முள்ளுலே கால்வைச்ச மாதிரியிருக்கு. நச்சரிப்பு தாங்கலே. நரகத்துக்குள்ளே மனுசன் எம்புட்டு நாளைக்குக் குடியிருக்குறது?'*

வருத்தமான எண்ணத்தில் மனசு கனக்க... தலை வாசலில் வந்து நின்றான். சீவப்படாமல் காய்ந்து போய் உலர்ந்த கோரைப்புல்லாகக் கிடந்த தலைமுடியை வலதுகையால் கோதிவிட்டான்!

எங்குட்டுப் போக?

இந்தக் கேள்வி, பாதங்களில் வந்து நின்றது. திகைத்து தேங்கியது.

வீட்டு முன்னால்... தெருப்பாதை. டக்கர் டயர்த் தடங்களை அழித்திருந்த டக்கர் டயர்த் தடங்கள். தடங்களில் காய்ந்து நசுங்கிச் சப்பையாகிக் கிடந்த கம்மங்கதிர்கள். டக்கர்களிலிருந்து தப்பி விழுந்த கதிர்கள் கோழிகளும் குருவிகளும் கொத்திப் பொறுக்கி விட... வெறும் சக்கையான கதிர்கள்.

சாயங்கால வெயில் சந்தனப் பளீராக ஒளிர்ந்தது. பனியில் நனைந்த இதமான வெயில். வெக்கை சுபாவத்தை இழந்துவிட்ட பொய் வெயில்.

காட்டுப்புல்லை மேய்ந்துவிட்டு, கருங்கல் கிடங்கில் முங்கி நீந்திவிட்டு வருகிற எருமைகள். பளீர்ச் சுத்தத்தில் கருமை மின்னலாய் அதன் நிறம்.

எருமைகளை பத்திக்கொண்டு போகிறவனின் சத்தம்.

'ஹைய்க்க்... ஹைய்க்க்...'

வாடி உலர்ந்து நிறமாகிப் போன ஒரு கம்மப் பயிர், தரையில் கிடக்கிறது. அறுபட்ட பயிர். அதன் நுனியில் அறுபடாமல் ஒரு கதிர்! ஒரு தாய்க் கோழி அதைப் பார்த்து ஓடிவந்தது. கதிர் நிறைய மணிகள். மணிமணியாகக் கம்புகள்.

கோழிக்கு ஒரே குதூகலம். மகிழ்ச்சி ஓட்டமாய் ஓடி வருகிறது. குனிந்து ஒரு கொத்து. கம்பு மணிகள் இருக்கின்றன என்றவுடன் தலைதூக்கி கனிந்த குரலில்

''கெக்... கெக்... கெக்... கெக்...'' என்று கத்துகிறது. தாய்மைக் கனிவு. பாசக்குழைவான அழைப்பு. குஞ்சுகளுக்கான அன்புப் பாஷை. பாசமொழி தாய்மொழி.

''வாங்க... கண்ணுகளா, செல்லம்களா... ஓடியாங்க, ஓடியாங்க. ஒங்களுக்கு இரை இருக்கு... வாங்க வாங்க... ஏந்தங்கப் பெட்டிகளா...''

என்ற அர்த்தம் தொனிக்கிற மொழியாக அதன் 'கெக், கெக், கெக்'. பொய்க் கொத்தாகக் கொத்துகிறது. இரை கொத்துவது எப்படி என்று குஞ்சுகளுக்குக் கற்றுத் தருகிற கொத்து. கம்பு மணியைப் பொறுக்காமல் வெறும் பொய்க் கொத்து. கம்புமணிகள்தான் குஞ்சுகளுக்கு வேண்டுமே...

சமுத்திரத்துக்கு மகளைப் பார்க்கணும் போலிருந்தது. மனசுக்குள் ஒரு பசி. நினைத்த கணத்தில் விருட்சமாகி விடுகிற பாசப் பயிர்.

மீண்டும் ஒரு பெருமூச்சு! வருத்த மூச்சு. அத்துடன் பாதங்களுக்கு ஒரு வெளிச்சம் கிடைக்க, டீக்கடை நோக்கி நடந்தான்.

## 4

**மா**ர்கழிமாசப் பனி இந்த அந்திப் பொழுதிலேயே முகம் காட்டத் துவங்கிவிட்டது. தீண்டுகிறது. சருமத்தில் குளிர்ந்து, சிலிர்க்க வைத்து

உள்பாய்ந்து நடுங்க வைக்கிற பனி. மேல்துண்டை விரித்து உடம்பு முழுக்க இறுகலாய் போர்த்திக் கொண்டு வருகிற கிராமத்தாட்கள்.

டீக்கடை ஜே ஜே என்றிருந்தது. பனி வாடைக்கு கூட ரெண்டு டீ தேவைப்படுகிறது. சுடச்சுட வடையைப் பிய்த்து வாயில் போட்டால் அது ஒரு சுகம். அது ஒரு ருசி.

டீக்கடையில் டேப் - ரிக்கார்டு. லியோனி பட்டி மன்றம் கலகலத்துக் கொண்டிருந்தது. கூட்டம் ரொம்ப! கல்லாவில் உட்கார்ந்திருந்தவர் ரொம்ப ஜாக்கிரதையாயிருப்பதில் குறியாயிருக்கிறார்.

வடையை எடுப்பவரை, டீ குடிப்பவரை, டீ குடித்துவிட்டு வெறும் பேச்சாகப் பேசி சிகரெட் ஊதுகிறவர்களை, கவனம் பிசகுகிற நேரத்தில் நழுவ முனைபவர்களை, எல்லாரையும் குறிவைத்த பருந்தாகப் பார்த்தார். பார்வை அசந்தால் பைசா போய்விடும்.

''இங்க ஒரு டீ போடப்பா...''

''இங்க ஒரு ஸ்ட்ராங்.''

''ரெண்டு வடை எடுத்துக்கிடுதேன் ண்ணாச்சி.''

''முச்சாமிக்கு ஒரு மாவு வடை குடுத்துருங்க.''

''எனக்கொரு உளுந்தவடை.''

''உழுந்த வடைதான் வேணுமா? உழாத வடை வேண்டாமா?''

''உழாதது எதுமே உருப்படாதுலே?''

''சங்கரபாண்டிக்கு லைட்டா ஒரு டீ போடு...''

''இந்தாங்க ரெண்டு வடை , ஒரு டீ...''

''துட்டை எடுத்துக்குங்க...''

''நேத்து குடிச்ச டீக்கு.''

''பெறகு தாரேன்.''

''எச்சிகிளாஸ் கழுவித்தான் டீ யடிச்சுப் பொழக்கேன். ஏங்கிட்டேயும் ஏமாத்திட்டுப் போறபய... கக்கூஸ் களவாணி பயலாத்தான் இருப்பான். ஈனப்பயக...''

''ஏய்... ஏமாத்துறவனை வையிர சாக்குலே எல்லாரையும் போட்டுக் காலாலே மிதிக்காதே. நனைச்சடிச்சா நாலு பக்கமும் செதறுதுலே...?''

''சரி, சரி... பேச்சை நிறுத்திட்டு ஏவாரத்தைப் பாருங்கப்பா. எனக்கு ஏழு வடை பார்சல் கட்டு.''

லியோனி பட்டிமன்றத்தையும் மீறிக்கொண்டு நடக்கிற கலகலப்புச் சத்தம். வியாபாரக் கோலாகலம். பனிக்கால டீக்கடை நெரிசல். வாடைக்காற்றுக்கு சந்தைக்கடையாகிவிட்ட டீக்கடை. கிராமத்து மனிதக் கூச்சல், குதூகலக் கூச்சல்.

சமுத்திரம் டீக்கடையின் வெளிப்புறத்தில் சிமிண்டுத் திண்ணையில் உட்கார்ந்து விட்டான். உள்ளே தலையை மட்டும் நீட்டிப் பார்த்தான். டீயடிக்கிறவன் பார்வை இவன் பக்கம் விழுந்த கணத்தில், சமுத்திரம் ஒற்றைவிரலை - சுட்டுவிரலை உயர்த்திக்காட்டினான். சத்தமில்லாத ஆர்டர்.

''ஒரு டீ கொடு'' என்று பேசியது அந்தச் சுட்டு விரல்.

திண்ணையில் இன்னும் ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருந்தனர். கடைக்குள்ளிருந்து வருகிற 'கசாபுசா'ச் சத்தங்கள். சத்தக்கலவை தவிர வேறு சத்தமில்லை. இவர்களுக்குள் பேச்சில்லை. ஒரு 'கம்ம்' உட்கார்ந்திருக்கிறது.

பேசும் மனநிலையில் இல்லை. சமுத்திரம் வீட்டு நச்சரிப்பு தாளாமல் வந்தவன். சத்த நச்சரிப்பின் முள்குத்தல்களைத் தாங்கமுடியாமல் வந்த மன நெருக்கடி.

மனசின் தொல்லையிலிருந்து வேறு எங்காவது கவனத்தைத் துரத்தினால் நல்லது. மனசுக்குள் ஒரு சின்ன நிம்மதியாவது கிடைக்கும்.

பட்டிமன்றக் கேசட்டில் கவிஞர் வெண்மணி பெருமுழக்கமாய் முழங்கிக் கொண்டிருந்தார். கவிஞர் முல்லை நடவரசு பேசிய பேச்சைச் சொல்லிச் சொல்லிக் கிழித்தார். இளைய தலைமுறையின் வாலிப நெஞ்சில் நஞ்சினைக் கலக்கும் டி.வி. சினிமா போன்ற கலாசாரத் தொடர்புச் சாதனங்களின் 'சாதனை' களை 'கிழி, கிழி'யென்று கிழித்துக் கொண்டிருந்தார். பாட்டுக்குப் போடுகிற தாளம் போல, ஊடே ஊடே லியோனியின் 'உம்' கொட்டல்கள். குசும்பான குறுக்கீடுகள். உசுப்பி விடுகிற ஒற்றை வார்த்தைகள். சுய கிண்டல்கள்.

சமுத்திரம் கேசட்டைத் தொடர்ந்து கூர்ந்தான். 'அட... நல்லாத்தான் பேசுறாங்க...' என்கிற வியப்புணர்வு.

வெண்மணி பேசி முடித்தவுடன், அவர் பேசியதையே திரும்பப் பேசப்போகிற தொனியில் லியோனி.

சமுத்திரத்துக்கு எரிச்சலாக இருந்தது. கூறியது கூறல் மனசை இச்சிலாத்திப் படுத்துகிறது.

சள்ளையோடு சமுத்திரம் 'ஆமா... நேரத்தை இழுத்தடிக்கிறதுக்கு இது ஒரு வழியாக்கும்' என்று சிந்திக்கும்போதே லியோனியின் குரலில் ஒரு வித்தியாசத்தொனி. ஒரு சம்பவத்தை காட்சிப் படுத்துகிற நேர்த்தி. உரையாடல்களைக்கூட அசலான வட்டாரப் பேச்சில் விளாசுகிற பாணி. சம்பவம் முடிகிற இடத்தில் குப்பென்று வெடித்துப் பூக்கிற சிரிப்பாணிகள். எல்லா உதடுகளிலும் மனசின் சிரிப்பு வெளிச்சம்.

சமுத்திரமும் சிரித்துவிட்டான். மார்கழிக் கூதலை மறக்கடிக்கிற சூடான சிரிப்புக் கதகதப்பு.

டீ வந்தது. குடித்தான். டீயின் ருசி மனசில் உரசவேயில்லை. மனம் முழுக்க பட்டிமன்றம். அதன் ருசி. நகைச்சுவையும் சீரியஸான சமூக விஷயமுமாய் நகர்கிற ருசியான மருந்து. மருந்துக் கருப்பட்டி.

சமுத்திரம் இன்னது செய்கிறோம் என்கிற நினைவில்லாமலேயே பீடியை பற்ற வைத்தான். டீயின் கனத்த ருசியில் மரத்துப் போன நாக்கில் பீடிப்புகையின் காந்தல்.

அதைக்கூட உணரவிடாத பேச்சு ரசனை. விவாதலயிப்பு. நகைச்சுவை. மனசு முழுக்கப் பூக்கள். முள் குத்தல்களை, அதன் ரணத்தை - மறக்கடிக்கிற

பூக்களின் வருடல்கள். ஒன்றையடுத்து ஒன்றாகப் பூக்கிற பூக்கள். மனசின் குமிழ் வெடிப்புகளாக சிரிப்புப் பூக்கள்.

பட்டிமன்றக் கேசட் முடிந்துவிட்டது. நிறைவுரையில் நகைச்சுவை சுத்தமாக காணாமற் போயிற்று. சிரிப்பால் கழுவப்பட்ட தூயமனசுகளின் நெருப்புச் சிதறல்களாய் வந்து விழுகிற சமூகக் கோபம். கொடுமைகளின் எதிர்ப்பு. அறிவார்ந்த எழுச்சியுணர்வு. 'ரௌத்ரம் பழகு' என்றானே மகா கவி பாரதி... அது மாதிரி சமகால அநீதிகளின் மீது ரௌத்ரம் பழகக் கற்றுத்தருகிற சுடுசொற்கள். கோபப்படச் செய்கிற கொதி சொற்கள்.

சமுத்திரம் அப்படியே உறைந்து போனான். சரசு, வீடு, சர்ச்சை சகலத்தையும் மறந்துவிட்டான். பட்டிமன்றப் பேச்சில் லயித்துக் கிடந்தான்.

மனசுக்குள் அந்தக் குரல்கள், பேச்சுக்குரல்கள். நையாண்டிகளும் கேலிகளும் கோபங்களும் குமுறல்களும் கலந்து நிலவிய பேச்சுக் கலவைகள்.

சமுத்திரத்திற்குள் ஒரு புதிய வியப்புணர்வு.

'காமெடி கோஷ்டி' 'பாட்டுக் கச்சேரிக் கும்பல்' என்று மட்டுமே அபிப்பிராயம் கொண்டிருந்த இவனது பழைய மயக்கம் கரைந்து உண்டான புதிய வெளிச்சம். செவிவழிச் செய்தியாகக் கேட்டுக் கேட்டு மனசுக்குள் உண்டாகியிருந்த ஏளனப் பிம்பம் கரைகிற, கலைகிற அனுபவப் புதுமை.

'அட... கெட்டிக்காரங்களா இருக்காங்களே... உலக நடப்பு தெரிஞ்ச வெவரக்காரங்களாகவும்

இருக்காங்களே...!' என்ற பிரமிப்பு. நேரடி அனுபவ உணர்வில் மலர்ந்த நிஜக் கருத்து.

அவனைச் சுற்றி உட்கார்ந்திருந்த ஏழெட்டுப் பேர்களும் கேசட் முடிந்தவுடன் அதைப் பற்றிப் பேசினார்கள். அபிப்பிராயச் சிதறல்கள். பாராட்டுத் தொனிகள். நகைச்சுவையான விஷயங்களை மறுபடியும் சொல்லிச் சொல்லி நினைவுபடுத்தி ரசிக்கிற ரம்மியம்.

ஆழ்ந்த பிரமிப்பில் உறைந்து போயிருந்த சமுத்திரத்தால், பேச முடியவில்லை. பேச்சில் கலந்து கொள்ள இயலவில்லை. ஆனால், மனம் முழுக்க பட்டிமன்ற வாசம் வீச... பேச்சை லயிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

பொழுது அடைந்துவிட்டது. மெல்லிய இருட்டு, தனது ராட்சஸ இறக்கைகளை விரித்துக் கொண்டு பூமி மேலே இறங்கியது. கடைக்குச் சரக்கு வாங்கப் போகிற கிராமத்துப் பெண்கள், கட்கத்தில் பெட்டியும் கையில் தொங்கும் எண்ணெய்ச் சீசாவுமாக சரக்கு வாங்கி விட்டு வருகிற பெண்கள்.

இவனுக்குள் சரசு. அவள் துவக்கிய பிரச்சினை. அவள் வைத்த கோரிக்கை. அதற்கான செலவு கொஞ்சமல்ல... எட்டாயிரம் ரூபாயாச்சும் ஆகும்.

'அவ்வளவு ரூபாயை இப்ப எப்படிப் புரட்ட? எப்படிச் சமாளிக்க...?' என்ற மலைப்பில் மறுக்க... அதுவே நச்சரிப்பாக... சண்டை சச்சரவாகி... வீடே நரகமாகி விட...

'இப்ப நா என்ன செய்ய? எப்படி வீட்டுக்குப் போக?'

## 5

அது மார்கழி பிறந்த புதுசு. தேதி மூன்றோ - நாலோ-

கார்த்திகை மாதம் முழுக்க மழையும் தண்ணியுமாகக் கிடந்தது. ஊரைச் சுற்றிலும் வெள்ளம். பத்து வருஷமாக காய்ந்துகிடந்த ஆற்றில் ஆள் இறங்க முடியாத வெள்ளம். கூடவும் குறையவுமாக இருந்தாலும் நாற்பது நாளாக வெள்ளம். வெயில் முகம் காண விடாமல் நிரந்தர மேகக்கூட்டம். ஓட்டை மேகங்கள். எந்நேரமும் சிணுங்கலும் விசும்பலும் கண்ணீரும் ஒப்பாரியுமாக... ரக ரக அளவுகளில் மழை, மழைகள். ஏகப்பட்ட மழைகள்!

தெருவெல்லாம் நீருற்று அடித்துக் கிடக்கிறது. தரையில் எந்த இடத்தில் கால் வைத்தாலும் பொதுக்கென்று தண்ணீர்தான் விரலிடுக்குகளில் பீச்சியடிக்கிறது.

ஜனங்கள் அலைபாய்ந்து வந்தனர். எங்கும் போக முடியவில்லை. வெள்ளம். மழை. பஸ் போக்குவரத்து முடக்கம். நல்லது பொல்லதுகளுக்கு, கோயில் குளத்துக்கு வெளியூர் செல்ல முடியவில்லை. வெளியூர் போய்ப் படிக்கிற மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் படும் பாடு - நரகம்.

நோய் நொடி என்றால் ஆஸ்பத்திரிக்குப் போக முடியவில்லை. அடாத மழையின் காரணமாக காடு கரைகளுக்கும் போக முடியவில்லை. தெருவுக்கு

வருவதுகூட இயலவில்லை. வீட்டுக்குள் அடைந்து கிடக்கிற பிழைப்பாகப் போயிற்று.

''காய்ஞ்சு கெடுத்த மழை, ஈஸ்வர வருஷத்திலே பேய்ஞ்சு கெடுக்குதே.''

''தலைகாட்டவுடாம மழை ஊத்திக்கிட்டே யிருக்கு. மனுசமக்க ஓடைக்குக்கூடப் போய் வர முடியவில்லை.''

''பயிருக்கு மேலே களையும் புல்லும் வளர்ந்து கொழைமோதிக் கெடக்கு. மழை வெறிச்சாத்தானே புஞ்சைக்குள்ளே காலு வைக்கமுடியும்?''

இப்படி ஜனங்கள் அலைமோதித் திரிந்தனர். சம்சாரிகளும் கிராமத்துக் கூலி ஜனமும் ஆற்றாமை தாளாமல் சொல்லிச் சொல்லி மாய்ந்தனர்.

மார்கழி பிறந்த பிறகுதான் மழை பின்வாங்கிற்று. இன்னும் ஆற்றில் 'சொள, சொள' வென்று நகர்ந்து நடக்கிற தண்ணீர். ஓடைகளில் சந்தனக் கரைசலாக நீர்ச் சலசலப்பு. பனியில் நனைந்த வெயில் முகம்.

ஜனங்கள் காடுகரைகளில் இறங்கினர். களை வெட்டத் துவங்கினர். கூலியாள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. பாதி ஜனம் தீப்பெட்டியா பீஸுக்குப் போகிறது. பிறகு, காட்டு வேலைக்கு எப்படி ஆள் கிடைக்கும்?

எப்படியோ... சரசுக்கு நாலு ஆள் கிடைத்தது.

பருத்திக்குள் களைவெட்டு. முழங்காலுக்கு மேல் உயரமாய் பருத்திச் செடிகள். இளம் பச்சையில் அடர்த்தியாயிருந்தது. மார்கழி வெயிலுக்கு கண்ணுக்குக் குளிர்ச்சியான பச்சை, சிவப்பும் மஞ்சளுமாக பூக்கள். ஒளிமயமான பூக்கள்.

காய்ப்புழுவின் மேய்ச்சல் படுதீவிரம். படுகுரூரம். செடிக்குச் செடி காலடியில் நாலைந்து பசும்பிஞ்சுகள் உதிர்ந்து கிடந்தன.

சரசு மேலோரம் பொழியையொட்டியுள்ள நிறையில் களைவெட்டுகிறாள். செடியில் சுரண்டி படாமல் வேகவேகமாய் புல்லைச் செதுக்கிற லாகவம். வியர்வைக்காடு. முகமெல்லாம் வழிகிற வியர்வை வரிகள். நாசி நுனியில் தொங்கியாடுகிற வியர்வைத் துளி.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல் களை வெட்டுகிற அவளது துரிதம். குனிந்த நிலையில் மேலும் கீழுமாய் தலையசைய... கைகளின் கண்ணாடி வளையல்கள் 'கிணுங், கிணுங்' கென்று குலுங்க... 'பர்ரட் பர்ரட்' டென்று சுரண்டியைப் போட்டு இழுக்க... நனைந்து 'பொது, பொது'வென்று கிடந்த நிலம், ஈரப்புழுதியோடு சேர்ந்து பெரிய பெரிய புல்களும் களைகளும் சாய்ந்து சரிந்தன.

பக்கத்து நிறைகளில் களைவெட்டுகிற பெண்கள். இவளைத் தொடர்ந்து வந்தாக வேண்டிய கட்டாயம். 'சளைத்தவளில்லை' என்று நிரூபித்தாகவேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்களும் வேகத்தைக் காட்ட வேண்டியிருக்கிறது. விறுவிறுப்பாக வெட்ட வேண்டி

யிருக்கிறது. பிந்தினால்... கேவலம். பொம்பளைகள் உதட்டை இளித்து ஏளனம் பண்ணுவார்கள்.

ஆனால், அவர்கள் கஸ்ளவெட்டில் தனித்தினுசு தெரிந்தது. வெட்டுப்பட்ட புழுதிக்குள் வெட்டுப் படாத புற்களை மறைக்கிற கள்ளத்தனமும் இருந்தது.

ஊர்ப்பட்ட பேச்சு நடந்தது. பல வீட்டுப் புரணிகளும் அந்தப் புழுதிக்குள் புரண்டன. சரசுவுக்கே ஏகப்பட்ட ஊர் ரகசியம் இப்போதுதான் பிடிபடுகிறது.

''தெக்குத் தெருவுலே காரை வீட்டுக்காரியும் ஓரத்து வீட்டுக்காரியும் கதை தெரியும்லே?''

''ஆமடியம்மா... நேத்து அவுகளுக்குள்ளே சண்டை நாறிப் போச்சாம்லே? 'நீ தேவடியா... நா தேவடியா'ன்னு காட்டுத்தனமா பேசிக் கிட்டாகளாம்லே?''

''ஆமா... சண்டைன்னா... சண்டை... அப்படிச் சண்டை. வசவு நாறிப்போச்சு. மனுசமக்க காது குடுத்துக் கேக்க முடியாது. அம்புட்டு அசிங்கம் அசிங்கமா வசவு...''

''அவுகளுக்குள்ளே சண்டைன்னா... ஆச்சரியம் தான். அம்புட்டுச் சிநேகிதமா இருந்தாக. ஒருத்தரோட ஒருத்தரு உருகி வழிஞ்சாகளே...?''

''ஆமா... இவுக வட்டில்லே அவா சோறு சாப்புடுவா. அவுக வட்டில்லே இவா சோறு சாப்பிடு வாக. ஒண்ணடியும் மண்ணடியுமா கலந்து பெரண்டு உருண்டாக...''

''அம்புட்டுச் சிநேகிதமா கட்டிப்புரண்டவுக... இப்படி எதுக்குச் சண்டை போட்டாகளாம்?''

''யாரு கண்டாக?''

''சண்டை எதுக்கு வந்துச்சாம்?''

''என்னென்னவோ காரணங்க சொல்லுதாக. எதை நம்புறது, எப்படி நம்புறது?''

''ஏன்...?''

''வெளியே சொல்ற காரணங்க ஆயிரம் இருக்கும்...''

''அப்ப... உள்ளுக்குள்ளே ரகசியக் காரணம் இருக்குன்னு சொல்றியா?''

''ம்.''

''என்ன காரணம்?''

''சக்களத்தியாக வேண்டியது வந்துருமோன்னு ஓரத்து வீட்டுக்காரிக்குப் பயம் வந்துருச்சு... அதான் சண்டை நாறிப்போச்சு.''

''அப்படியும் இருக்குமோ...? அம்புட்டுக் கேவலமாக யாரும் நடப்பாகளா?''

''காரைவீட்டுக்காரியோட தம் புருஷன் பின்னிக்கிடந்ததை இவா கண்ணுக்குக் கண்ணா பாத்துட்டாளாம்.''

''அடக் கொடுமையே! இப்படியுமா... கூத்து நடக்கும்?''

''அதானே...? யாரைத்தான் நம்புறதுன்னு ஒரு கணக்கே இல்லாமப் போச்சே...''

''எந்தப் புத்துலே எந்தப் பாம்போ...?

''அதெல்லாம்மில்லே... எல்லாப் புத்திலேயும் ஏதாச்சும் ஒரு பாம்பு?''

''நெசந்தாண்டியம்மா நீ சொல்றது. மனுசப்பய அப்படித்தான் இருக்கான்.''

''சமுத்திரத்தை அளந்து முடிச்சவனைப் பாத்தாலும் பாத்துரலாம். இந்த மனுச, மனுசிக மனசை அளந்து முடிச்சவனை யாரும் பாக்க முடியாது.''

''ஆத்தாடியம்மா! ஆண்டவனாலேயும் அது முடியாதும்மா.''

இப்படி ஒரு கதையைப் பேசிமுடித்தார்கள்.

சரசுக்கும் நிசமாகவே ஆச்சர்யமாக இருந்தது.

அந்த ரெண்டு வீட்டுக்காரிகளும் அப்படித்தான் அழுத்தமான அந்நியோன்யமாக இருந்தனர். ரொம்ப சிநேகிதம். 'இவளறியாத ரகசியம் அவளிடமில்லை' என்கிற மாதிரியான மனம் கலந்த சிநேகிதம்.

அந்த அற்புத உறவில் இப்படியோர் ஊழலா? அத்துமீறலா? துஷ்பிரயோகமா? துரோகமா?

சரசுக்கே நம்ப முடியாத மனத்திணறல். 'நிஜம் தானா, நிஜம்தானா' என்று உள்ளுக்குள் கேட்டுக் கேட்டு வியப்பில் மாய்கிறது. மனசு.

நிஜம்தான். நேற்று முடிந்த சண்டை ஊரறிந்த நிஜம். அதன் உள்காரணம் இதோ. இதுவும் நிஜம்தான். மறுக்க முடியாத நிஜம். வாழ்க்கையைப் போல் கசப்பான நிஜம்.

ஒரு முருசல் முடிந்தது, அடுத்த முருசலுக்கு மாறினார்கள். ஆளுக்கொரு நிறையை பிடித்துக் குனிந்தனர். பொழுது உச்சியை நோக்கி நெருங்கியது. இளமதியம். பதினொரு மணியிருக்கும்.

வெக்கையில்லாத வெயில். ஈரப்பதமான சுகவெயில். 'சமுத்திரம் காபி போட்டுக்கொண்டு வெங்கலத்தூக்குச்சட்டியுடன் வருகிறானா...' வென்று அவ்வப்போது தலைநிமிர்ந்து, ஊர் செல்லும் ஒற்றையடிப்பாதையில் பார்வையை எறிவாள்.

ஏமாற்றமே திரும்பக் கிடைக்கும். மனசுக்குள் பொறுமையின்மையும் எரிச்சலும் ஏற்படும்.

''ச்சே! இந்த மனுசருக்குக் கூறுபாடே கிடையாது. எந்த டீக்கடையிலே எந்த பேப்பரை பெளந்துக் கிட்டிருக்காரோ... 'மனுசி சொன்னாளே... காலா காலத்துலே காபியைக் கொண்டுபோவோம்'னு அறிவு வேண்டாம்? களைவெட்டுகிற பொம்பளைக பேச்சோடா பேச்சா... மூஞ்சியை மூஞ்சியைப் பார்க்காகளே... 'இன்னும் காபி வல்லியா'ன்னு கேக்காம கேக்காகளே...''

சிடுசிடுப்பும் வெறுப்புமாக உள்ளுக்குள் முணு முணுத்துக்கொண்டாள் சரசு. நிலை கொள்ளாமல் தவித்தாள். ''காட்லே வேலை பாக்குறவுகளுக்குச் சுடச்சுட காபித் தண்ணி குடிச்சாத்தானே... உசுர் வரும்.''

கூட களைவெட்டுகிற பெண்கள், புதுச் சேலை களைப் பற்றி ஒரு 'மூச்சு' பேசினர். யார் எந்தச் சேலையை எந்த ஊரில் எடுத்தாள்... எப்படிச் சாயம் போயிற்று. சாயம் போகாத சேலை எது... அது என்ன விலை... சேலை எடுத்த பொட்டச்சிகள் எப்படிப்

பெருமையை பீற்றிக்கொண்டு திரிந்தனர் என்றெல்லாம் பேசி முடித்துவிட்டு - சுப்பிரமணியம் வேன் பிடித்து கோயிலுக்குப் போக இருப்பதைப் பேசினர்.

சரசு எல்லாவற்றையும் மறந்துவிட்டு, அந்த பேச்சை உற்றுக் கவனித்தாள். வேன் பிடித்து கோயிலுக்குப் போகிற கதையை அது பற்றிய விவரங்களை செலவு விஷயங்களை எல்லா வற்றையும் மனம் கூர்ந்து கவனித்தாள். அந்தப் பேச்சு இவள் மனசுக்குள் தேன்சுவையாக தித்திப்பாக இறங்கியது. மனசின் சகல மூலைகளிலும் இனிமைக் கசிவுகள்.

சரசுக்குள் நிறைய கனாக்கள். குஞ்சு பொரிக்கிற கனாக்கள். நிறைய நிறைய கனாக்கள். எல்லாக் கனாக்களும் அவளுள் ஒன்றுதிரண்டு... ஒரு பெரு மூச்சாகச் சீறியது!

## 6

அந்தக் கனா சரசு மனதில் அரும்புகட்டி முகம் காட்டியது. கார்த்திகை மாசத்தில் வாடகை வேன் பிடித்து புதுத் துணிமணி எடுத்து, குடும்பமும் சுற்றமுமாய் கோயிலுக்குப் போய் பொங்கல் வைத்து சாமி கும்பிட்டுவிட்டு வர வேண்டும் என்கிற கனா.

'சாமி கும்பிடுவது நோக்கம். ஆனால், அது மட்டுமல்ல... அது ஒரு கொண்டாட்டம். கூடிக்குலவி மகிழ்கிற குதூகலம். உற்றார், உறவினருடன் கலந்து பழகி, ஆக்கி அவித்து, உண்டு மகிழ்ந்து சிரித்துக் குலுங்குகிற கொண்டாட்டம். ஆதிகால மனித ஒருமையின் மிச்ச உணர்வு.

வீட்டு வாசல் முன்பாக... வாடகை வேன் வந்து நிற்க வேண்டும். அதில் டேப்ரிக்கார்டு முழங்க வேண்டும். புதுத்துணிமணியின் சரசரப்பு மனசுக்குள் கும்மாளமிட, வேனில் ஏறி அமர வேண்டும். நெருங்கிய சுற்றத்தை அழைக்க வேண்டும். சிரிப்பும் பேச்சும் குதூகலமும் கும்மாளமுமாய் வேனுக்குள் ஏறுவதை தெருவே கூடிநின்று பார்க்க வேண்டும். ஊரே ரெண்டு நாளைக்கு இதைப் பேச வேண்டும்.'

இது சரசுவின் உள்மனக் கனா. ஆசை. வேட்கை. நினைத்த கணத்தில் ஜில்லென்று பூப்பூக்கின்ற வாசக்கனா.

இந்தக் கனா... இந்தக் கார்த்திகை மாசம்தான் அவளுக்குள் அரும்புவிட்டது. அதற்கு முன்னால்... இப்படி ஒரு நினைவே அவளுக்குள் வரவேயில்லை.

எப்படி வரும் நினைவு? காட்டிலும் பாடுகள். வீட்டிலும் பாடுகள். உறங்காத பொழுது பூராவும் பாடுகள். பாடுகள். ஒரே பாடுகள்தான். உழைப்பே உயிரின் பண்பு என்று பாடுபட்டு மூச்சுத்திணறுகிற எல்லாக் கிராமத்துப் பெண்களைப் போலவே சரசுவும்.

காட்டில் வெள்ளாமை. அதை விளைய வைத்து வீடுகொண்டு வந்து சேர்க்கவேண்டும். வீட்டில் புருஷனைக் கவனிக்க வேண்டும். கொண்டாட வேண்டும். பிள்ளையைப் பராமரிக்க வேண்டும். ஆடுகுட்டிகளைப் பார்க்க வேண்டும்.

இத்தனை பாடுகளில் மூச்சு விட நேரமில்லாமல், ஓடி ஓடி உழைக்கிற வேகத்தில் - கனா காண நேரமேது? பொழுதேது? ஆனால், இதில் சரசுக்கு முழுத் திருப்தி.

ஒரு விவசாயக் குடும்பத்தின் தலைவியாக இருப்பதில் அவளுக்கு எப்போதுமே மகிழ்ச்சிதான். அடிமனசுக்குள் ஒரு கெந்தளிப்புதான்.

பொழுதுக்கும் பாடுதானா என்ற அதிருப்தியே அவளுக்கு முகம் காட்டியதில்லை. வருத்தமே கிடையாது. ராணியாக இருக்கிற சந்தோசம்தான்.

ஒரு நிறைவு. காடுகரையும் வீடுமனையும் சொந்தமாயிருக்கிற ததும்பல். பூரிப்பு. பெருமிதச் செழிப்பு.

... ஒரு சின்னக் கூரைவீடு. நாலே சுவர். இலவச மின்சாரம் கிடைக்கத் தகுதியான குடிசை கிடைத்திருந்தது. உள்ளறை எதுவுமே கிடையாது.

ஒற்றையறை. சதுரமான அறை. அதில்தான் அடுப்பங்கரை, தண்ணீர்ச்சால்... படுக்கிற இடம்... துணிமணி வைக்கிற இடம்... படுத்த பாயைச் சுருட்டி வைக்கிற இடம் எல்லாமே, அந்தச் சின்ன அறைக்குள் தான்.

அதில்தான் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தாள். சரசுவின் அம்மா மீனாட்சியம்மா. நிரந்தர நோயாளி. உடம்பின் சதை முழுவதையும் கரைத்துக் குடித்து விட்டு குச்சி எலும்புகளையும் அதன் மேல் நனைந்த காகிதமாக துவண்டுகிடந்த தோலையும் மட்டுமே விட்டு வைத்திருந்தது காசநோய்.

அவள் கண்கள் சுருக்கங்கள் விழுந்த முகத்தில் ஒரு பொந்துக்குள் இடுங்கிப் போய்க் கிடந்தன. அந்தச் சின்னக் கண்ணுக்குள் எந்நேரமும் கண்ணீரும் கவலையும்தான்.

ஒரு மூக்குத்திகூட கிடையாது. சொத்து பத்து என்று ஒரு பொட்டுகூட இல்லை. சடங்காகி ஏழெட்டு வருஷமாகிவிட்ட சரசுவை எப்படிக் கரைசேர்க்க முடியும் என்கிற கவலை.

கரைசேர்க்கிற கடமையை நிறைவேற்றாமல்... கன்னியாக, நாதியற்ற குமரியாக - மகளைத் தவிக்க விட்டுவிட்டு - சாவு தன்னை கூட்டிக்கொண்டு போய் விடுமோ - கூத்துவன் தன் ஓலையைத் தேடிப்பிடித்துக் கிழித்து விடுவானோ என்கிற பதைப்பு.

சரசு கூலிவேலைக்குப் போகிறாள். அவள் வாங்கி வருகிற கூலியில்தான், ரெண்டு வயிறுகளும் நனைகின்றன.

இந்த லட்சணத்தில் 'கல்யாணம்', 'காட்சி' என்று எப்படி நடத்த? எதை நினைத்துப் பார்க்க? என்ன பலத்தில் யோசிக்க?

மீனாட்சியம்மா கதியற்றுப் புலம்புவாள்.

''ஐயோ... பாதரவே, என்னை இப்படி ஒடிச்சு மூலையிலே போட்டுருச்சே விதி. நா என்ன செய்ய? ஏந்தங்கப் பெட்டியை ஒருத்தன் கையிலே ஒப்படைச் சிட்டா - போற உசிரு - ஒரு நிம்மதியா போகுமே.''

சரசுக்கு இச்சிலாத்தியாக இருக்கும். அம்மாவின் அடிமனக் கவலைகளை இவளும் உணர்ந் திருக்கிறாள். நியாயமான கவலைதான். ஆனால், அதற்காக புலம்பி என்ன செய்ய? கதறி என்ன செய்ய. ''நொய், நொய்'' யென்று சிணுங்கி என்ன செய்ய?

புத்தி கெட்ட நச்சரிப்பாகத் தோன்றும் சரசுக்கு.

''சும்மாயிரும்மா...'' எரிந்து விழுவாள் சரசு.

''எப்புடிடி சும்மாயிருக்க? பெத்த வவுறு பதறிக் கலங்குதே?''

''கலங்குனா... கல்யாணம் ஆயிருமா?''

''ஆகும்டி... நல்ல தகப்பன் ரத்தத்துலே வந்தவ. யாருக்கும் கெடுதல் நெனைக்காதவடி நா. நல்லதுதா பண்ணியிருப்பேன். நாஞ்செய்ஞ்ச புண்ணியம் சும்மா போகாதடி... குலை கொதிக்கிற எம்மனசோட நெனைப்பு... ஒனக்கு நல்லதா விடியும்.''

''ஆமா... நல்லா விடிஞ்சது...'' என்று சலிப்பும் இளக்காரமுமாய் நொடிக்கிற சரசு. பொய்க் கற்பனையில் மிதக்கிற அம்மாவைப் பார்க்கவே வெறுப்பில் குமட்டலெடுத்தது.

மறு மாசமே...

பெண் கேட்டு வந்தான் சமுத்திரம். அவனுக்கு ஆதரவாக இருந்த ஒரே நாதி அம்மாதான். அவளும்

'போய்ச் சேர்ந்து' ஒரு வருஷமாகிவிட்டது. நாலு ஏக்கர் கரிசல் காடு. முக்கால் குறுக்கம் இறவைத் தோட்டம். ஓட்டு வீடு. ஒற்றையாள். தாலி கட்டி வருகிறவள் வந்து தான் வீடு விளக்கேற்றணும். ஒரு குடும்பம் என்று துலங்கணும்.

''நகையோ, நட்டோ வேண்டாம். காசு பணமும் வேண்டாம். மண்ணுலே வேர்வை சிந்திப் பாடுபடப் பயப்படாத பொண்ணா இருந்தால் போதும்'' என்றான் சமுத்திரம்.

சாகமாட்டாத அந்த நிலைமையிலும் —

மீனாட்சியம்மா ஒரு மாட்டுவண்டியில் வந்து, 'மாப்பிள்ளை' வீடு பார்க்க வந்தாள். கரிசல்காடு. இறவைத் தோட்டம். வீடு. எருமைமாடு கட்டிக் கிடந்த தொழுவம்... எல்லாவற்றையும் கண்ணும் நெஞ்சும் விரிய விரியப் பார்த்தாள்.

'இத்தனைக்கும் சரசுவே ராணியாயிருந்து, ஆளப்போகிறாள்' என்ற நினைவே அந்தக் கெழடி மனசுக்குள் ஒரு பூந்தோட்டமாய் சிரித்து மணந்தது. பெருமிதத்தில் நெஞ்சுகிடந்து விம்மியது. பரவசப் பெருக்கில் குலதெய்வத்தை நினைத்து வணங்கிக் கொண்டாள்.

கல்யாணம் முடிந்த மறுமாதம்.

''அம்மாவுக்கு இழுத்துக்கிட்டு கிடக்குது'' என்று தாக்கல் வர... சமுத்திரமும் சரசுவும் ஆத்திர அவசரமாகப் புறப்பட்டனர். போய்ப் பார்த்தனர்.

ஒரு மாதத் தாம்பத்ய வாழ்க்கையின் பூரிப்பில் கனிந்து, நிறம் மாறியிருக்கிற மகளின் மலர்ச்சியைப்

பார்த்தாள் மீனாட்சியம்மா. மருமகனையும் பார்த்தாள். உழைத்து உரமேறிய உடம்பு. வலுவான தேகம். கருணையும் நல்லுணர்வும் சுடர் வீசுகிற கண்கள்.

தாயில்லாதவன். வேறு நாதியில்லாதவன். அவனுக்கான ஒரே உறவு, சரசு. சரசுவுக்கு ஒரே ஆதரவு இவன்தான். ஒரே உறவு இவன்தான். ரெண்டு பேரும் அநாதைகள். ஒன்றுசேர்ந்து, ஒருவருக்கொருவர் ஆதரவானதால்... அநாதை என்ற அவலத்திலிருந்து மீண்டவர்கள்.

இவர்கள் அன்பாக இருப்பார்கள். பாச வைராக்கியமாக இருப்பார்கள். இருவரும் ஒருவராக இருப்பார்கள். தாம்பத்ய வாழ்க்கையின் சாஸ்வத ஒற்றுமையாக வாழ்வார்கள்.

தன் மகள் பாதுகாப்பான இடத்தில் கரைசேர்ந்து விட்டாள். பத்திரமாக இருப்பாள்.

இந்த நம்பிக்கையின் வெளிச்சம் அவள் மனசெல்லாம் நிறைந்து, ததும்பி, உதடுகளிலும் கண்ணிலும் வழிந்த கணத்தில்... மீனாட்சியம்மாவின் உயிர் பிரிந்தது.

அந்தக் கிழவியின் முகத்தில் ஒரு சாந்தமும் திருப்தியுமான ஓர் அமைதியுணர்வு உறைந்திருந்தது.

அம்மா இறந்தும் ஏழெட்டு வருஷமாகி விட்டது. மகளுக்கும் வயது ஏழாகிவிட்டது. ரெண்டாப்பு படிக்கிறாள்.

சரசுக்குள் ஒரு நிறைவு. திருப்தி. கூலிக்காரியாக, ஒரு குடிசைக்குள் கதியற்றுக் கிடந்தவள். இன்றைக்கு

ஒரு சிறிய சம்சாரியின் மனைவி. நிலமும் வீடும் சொந்தமாக இருக்கிற இல்லத்தலைவி. கூலிக்காரிகளை அழைத்து களைவெட்டுகிறாள். கூலி தருகிறாள்.

திருப்தியும் ததும்பலுமான ஒரு மனசில் என்ன கனா வரமுடியும்? வர வழியேயில்லை.

ஆனால், இந்தக் கார்த்திகை மாதத்தில் விடாத மழையின் அடர்த்தியான தொடர்ச்சியில், தெருவில் கூடத் தலைகாட்ட விடாமல் வெள்ளமும் மழையுமாக ஊரே நனைந்து ஊறிக் கிடக்கும் பொழுதில் —

சரசு மனசுக்குள் அந்தக் கனா முளைத்தது.

வாடகை வேனில் சுற்றம் சூழ, புதுத்துணிமணி உடுத்திக் கோயிலுக்குப் போய் பொங்கல் வைத்து, சாமி கும்பிடணும் என்ற கனா. பத்தாயிரம் மதிப்புள்ள கனா.

இந்தக் கனாதான், ஒற்றுமை மட்டுமே தவழ்ந்த அந்த வீட்டில் சண்டையும் சச்சரவுமாக ஆக்கியது.

## 7

**கா**ய்ந்து கெடுக்கிற மழை. போன வருஷம் ஐப்பசியில்கூட மழை பெய்யாமல் ஏமாற்றிவிட்டது. ஆற்றில் தண்ணீர் கண்டு பத்து வருஷமாயிற்று.

மார்கழியிலேயே கிணறுகளில் நீர் மூலை உருண்டு விடும். வற்றிதரை காட்டி விடும். வறட்சி.

வறட்சி. வறட்சி. இதுதான் வானம் பார்த்த பூமியின் வழக்கமான தேசியகீதம்.

இந்த வருஷம் என்னடாவென்றால் மழையின் கூத்து, பெருங்கூத்தாகிவிட்டது. ''மழை தண்ணியில்லாமல் ஜனங்க மடத்துலே 'ஈஸ்வரா... ஈஸ்வரா'ன்னு உக்காந்து எந்திக்கவேண்டியதுதான். அதுதான் ஈஸ்வர வருஷப் பலாபலன். நல்லதங்காப் பஞ்சம்'' என்று ஜோஸ்யம் சொல்லிச் சவடால் அடித்த மேதாவிகளையெல்லாம், மடத்துப் பக்கமே தலை காட்ட விடாமல்... பாட்டம் பாட்டமாய் மழை.

ஆற்றில் இறங்க முடியாத வெள்ளம். அதிசய வெள்ளம். பத்து வருஷமாய் பார்க்க முடியாமற்போன வெள்ளம். அடாத மழை.

இரையில்லாமல் இளைத்துக் கிடந்த செம்மறி யாடுகள் திடும்மென்று பசும்புல்லைத் தின்று, மழையில் நனைய... புதுப்புதுவிதமான நோய். செத்துச் செத்து விழுந்தன. நீலநாக்கு நோயில் மாண்டன.

வெள்ளத்தில் இறங்கிச் செத்தவர்களைப் பற்றிய செய்திகள் வந்து சுரீரெனச் சுட்டன. கண்மாய் உடைப்புகளைப் பற்றி பீதிச் செய்திகள், கிராமத்து மனசுகளை பயத்தில் நனைத்தன.

சரசு புஞ்சைக்குப் போகமுடியவில்லையே என்று புலம்பினாள். ''அப்பவும் இப்படியா மழை தொடுத்துக்கிட்டு பேயணும்? நாசமாய்ப் போற மழை. காடுகரைக்கும் போக முடியாம... மாடுகன்னுக்குப்

புல்லு பார்க்க முடியாம... மனுசமக்க காலை ஒடிச்சு வீட்டுக்குள்ளேயே மொடக்கிப் போடுற மழை. ச்சே! சவலைப்புள்ளைக்கு வயித்தாலே போன மாதிரி...''

நிஜமாகவே சள்ளையாக இருந்தது சரசுக்கு. ஐப்பசி பத்தாம் தேதி வாக்கில் பிடித்த மழை, கார்த்திகை மாசம் பூராவும் நீடிக்கிறது. மாறி மாறி புயல் சின்னம். பருவமழை. ஆகாயத்தையே கண்ணில் காட்ட விடாமல் பந்து பந்தாக நகர்கிற மேகங்கள். நீர் கோத்த மேகங்கள். மாறி மாறி முழக்கங்கள். 'பளிச், பளிச்' சென்று மின்னல்கள். நேரம் காலமில்லாமல் எல்லாப் பொழுதுகளிலும் பாட்டம் பாட்டமாய் மழை. விசும்பு முழுவதும் நெருக்கமாகப் பறக்கிற தட்டான்கள். கூட்டம் கூட்டமாய் சோம்பலாய் மிதந்து பறக்கிற தட்டான்கள். மழை தொடரும் என்பதை உணர்த்துகிற இயற்கையின் குறியீடுகளாக தட்டான்கள்.

ஆற்று வெள்ளம் தொடர்ந்து போய்க்கொண்டே யிருப்பதால் நீருக்குள் சிக்கிய வேலிமரங்கள், எருக்கஞ்செடிகள் எல்லாச் செடிகளும் பட்டுப் போயிற்று. காய்ந்து உலர்ந்து போய் நீரின் இழுப்புக் கேற்ப சாய்ந்து கிடந்தன.

அதீத வெயிலில் பயிர்பச்சை உயிர்விட்டு விடுவதைப் போலவே... அதீத நீரின் மோதலிலும் பட்டுப் போகிறது என்பது ஆச்சர்யமான நிஜம்தான்.

வீட்டின் அழுக்குத் துணிகளையெல்லாம் சோப்புப் போட்டு துவைத்தாள். வீட்டிலேயே பிழிந்து காயப் போடும்போது பார்த்தாள். மனசே கிழிந்தது.

எல்லாத் துணிகளிலும் கிழிசல். ஒட்டுப்போட்ட இடத்திலும் கிழிசல். தையல் போட்ட இடத்திலும் கிழிசல்.

மகளின் பாவாடை சட்டைகள் ரொம்பவே கிழிந்திருந்தன.

'புதுத்துணி எடுக்கச் சொல்லணும்' என்று நினைத்த கணத்திலேயே சமுத்திரம் மீது எரிச்சலாக வந்தது.

ஐப்பசி மாதம் தீபாவளி. ஊர் முழுக்க புதுத்துணி வாசம். தெருவில் எல்லா வயசுப் பிள்ளைகளும் புதுச்சட்டை போட்ட உற்சாகத்தில் - குதூகலத்தில் கும்மாளித்தனர். ஊரே திருவிழாக்கோலம் கொண்டிருந்தது.

அப்போதே...

சரசு, சமுத்திரத்தை நச்சரித்தாள்.

''தீபாவளிக்குத் துணிமணி எடுக்க வேண்டாமா?''

''எடுத்தா... நல்லதுதான். துட்டுக்கு எங்கே போக?''

''அதுக்காக... கிழிஞ்ச துணிமணியோட கொறைகோலமா தெருவுலே திரியவா?''

''இல்லே சரசு. இப்ப கைமாத்தும் கால்மாத்துமா ரூவாயைப் புடுங்கி நெலத்துலே போடுற நேரம். வெள்ளாமைக்குச் செலவு செய்யவேண்டிய காலம். இப்பப் போய் புதுத்துணிமணி எடுக்குறதுன்னா முடியாத விஷயம்.''

''பெறகு...''

''தை பிறக்கட்டும். வெள்ளாமை துட்டாகி கைசேரட்டும். அப்பப் பாப்போம்.'' என்று கடமையை நழுவ விட்டுவிட்ட சமுத்திரத்தை நினைத்து எரிச்சல் பட்டாள்.

''உடுத்த துணியுமில்லாமப் போச்சே.. இந்த மனுசராலே'' என்று முணுமுணுத்துக்கொண்டே ஈரத்துணிகளை காயப் போட்டாள்.

மேகம் மிரட்டுகிறது. வெயில் முகமேயில்லை. 'காற்றுக்காவது ஈரத்துணி உலராதா' என்ற எண்ணம்.

காயப்போட்டுவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். எருமைமாட்டுக்கு ரெண்டு கை புல்லையள்ளிப் போட்டாள். அதற்குள் 'பொசு, பொசு'வென்ற தூவானம். நெல் உமி போன்ற தூறல்கள்.

'தூவானம்தானே? நின்னுபோகும்லே?' என்று நினைத்து முடிப்பதற்குள்... 'சட, சட, சட'வென முரட்டுத் துளிகளின் அடர்த்தி. இரைச்சலோடு வந்த பெருமழை.

''அட பாதகத்தி... அதுக்குள்ளே மழைக்கு எடுப்பு எடுத்துருச்சா?'' என்ற சள்ளையோடு ஓடி ஓடி ஈரத்துணிகளைப் பொறுக்கினாள்.

''கிழிஞ்ச துணிகளும் காய்றதுக்கு வழி யில்லாம... இப்படி விடாம மழை பேயுதே.''

தெருவழியே போய்க்கொண்டிருந்த முனியம்மா, திடுமென்று பிடித்துக்கொண்ட மழைப் பாட்டத்துக்கு, ஓட்டமாய் வீட்டுக்குள் வந்தாள்.

''வா, வா... முனியம்மா. மழை செய்ற கொடுமையைப் பாத்தீயா?''

''ஆமா சரசு, தெருவிலே நடமாடக்கூட விட மாட்டேங்குது. ஒந்துணிமணியையெல்லாம் நனைச்சுருச்சா?''

''ஈரத்துணிகதான். காயவிட மாட்டேங்குது...''

அப்போதுதான் —

ஊருக்குள் ஒரு வேன் வருகிற சத்தம். தூரமாகக் கேட்கிற அதன் இரைச்சல். ரெண்டு தெரு தள்ளி யிருக்கிற தெருவுக்கு வேன் வருகிற மாதிரி யிருக்கிறது.

''என்ன முனியம்மா... ஊருக்குள்ளே வேன் வர்ற மாதிரியிருக்கே... யாரு வீட்டுக்கோ...?''

''சின்னாத்தா வீட்டுக்குன்னு நெனைக்கேன். அவுக வீட்லேதான் ஒரே கும்மாளமா கிடந்துச்சு, 'வேன் வருது, வேன் வருது'ன்னு.''

''தெக்குத் தெரு சின்னாத்தாவா?''

''ஆமா... அவாதான். நம்ம ராமருநாயக்கரு புஞ்சைக்குப் பதிவா கூலிவேலைக்குப் போவாளே... அந்தச் சின்னாத்தாதான்.''

''என்னவாம்...?''

''கோயிலுக்குச் சாமி கும்புடப் போறாகளாம். நேர்த்திக்கடனாம்...?''

''அப்படியா?''

''ஆமா. பெரிய கடா. வெள்ளாட்டங்கெடா. ஆயிரத்து எண்ணூறு வெலை. பிடிச்சுக் கட்டியிருக்காக.

புதுத்துணிமணிக வீட்லே எல்லாருக்கும். ஒரே 'ஜேஜே'ன்னு கெடக்குது.''

''எந்த ஊரு கோயிலாம்?''

''தூத்துக்குடி பக்கம் ஏதோ கிராமமாம். உடன்குடி பக்கமாம். குலதெய்வமாம்...''

''கெடா... புதுத்துணிமணிக... வேன்... அப்படி இப்படின்னு எட்டாயிரத்துக்கும் மேலே செலவாகும் போலிருக்கே...?''

''பத்தாயிரம் ஆகுமாம்... அன்னாடம் கூலிவேலை பாத்து அடுப்புப் புகையைப் பாக்குற அந்தச் சின்னாத்தாவுக்கு, ஏது இம்புட்டு துட்டு?''

''பட்டாளத்துலே அவுக அண்ணன் இருக்கான். அவன் மூவாயிரம் தர்றானாம். மத்ததெல்லாம் இவா பொறுப்பாம். என்ன செய்றது? கோயில் நேர்த்திக்கடன்னா... நிறைவேத்தித்தானே ஆகணும்? தலையை அடகுவைச்சாச்சும் செய்யணுமில்லே? இல்லேன்னா... சாமி குத்தம் ஆயிரும்லே?''

சரசுக்குள் ஆச்சரியத்துடன் ஓர் ஏக்கமும் சேர்ந்தே முகம் காட்டியது. தெருவில் சரம் சரமாய் ஊற்றுகிற மழை. வண்டிப்பாதையில் சந்தனக்கரைசலாய் உருண்டோடுகிற தெருத்தண்ணீர்.

அவள் மனசுக்குள் இனம் புரியாத ஒரு நமைச்சல். பொறாமைபோலத் தோற்றமளிக்கிற ஒரு ஏக்கம். வேட்கை.

"பாத்தீயா முனியம்மா, கூலிக்காரி சின்னாத்தா வாலே வேன் பிடிச்சு, கெடாவோட, கோயிலுக்குப் போக முடியுது. காடுகரைக வைச்சிருக்கிற சம்சாரி வீடு நாமெ. நமக்குக் கடன்தான் மிச்சம். இப்படிக் கோயிலு கொளம்னு போகமுடியுதா? போகணும்னு நெனைக்கத்தான் முடியுதா?"

"ஏன்... சரசு இப்படிச் சொல்லுதே...? அப்படியா கதிகெட்டுப் போய்ட்டோம்? போகணும்னு நெனைச்சுட்டா... போக முடியாமலா போயிடும்? ஒரு வருஷ வெள்ளாமை. மனசு வைச்சுட்டா மார்க்கம் இல்லாமலா போயிரும்?"

"அதென்ன.. அப்படி லேசாச் சொல்லிட்டே? ஒரு வருஷ வெள்ளாமையை கோயில் கொளம்னு கொண்டுபோய்ப் போட்டுட்டா, கடன் ஒடனை எப்படி அடைக்குறது? எதை வைச்சுக் கடன் அடைக்குறது? கடன் அடைச்சாகணும். வழி நடந்தாகணுமே..."

"அதைப் பார்த்தா முடியுமா சரசு? தெனந் தெனமா கோயிலுக்குப் போகப் போறோம்? வருஷா வருஷம் சாமி கும்புடவா போறோம்? ஏதோ ஒரு வருஷத்துலே ஒரு சந்தோஷத்துக்கு கொண்டாட்டமா நெனைச்சுப் போய்ட்டு வரணும்னா... கணக்குப் பாக்கலாமா? அப்படிக் கணக்குப்பாத்து, கணக்குப் பாத்து நம்ம மாதிரி சின்னச் சம்சாரிக என்னத்தை மிச்சம் பண்ணிடப்போறோம்? நகையும் நட்டுமா

வாங்கி, நம்ம புருஷமாரு நமக்குக் கோத்துரவா போறாக?''

''அது இல்லை...''

''பெறகென்ன...?''

மழை விட்டது. இன்னும் கொஞ்ச நேரம் பாடுஜோலிகளைப் பற்றி வருத்தமும் சிரிப்புமாக பேசிக்கொண்டிருந்துவிட்டு முனியம்மா போய் விட்டாள். ஈரத்துணிகள். கிழிந்த துணிகள். வேன் சத்தம். முனியம்மாவின் 'துணிவான' பேச்சு.

சரசுக்குள் அரும்புவிட்டது அந்தக் கனா. வாடகை வேன் பிடித்து, கடா பிடித்து, புதுத் துணிமணி எடுத்து, சுற்றம் சூழ கோயிலுக்குப் போய் பொங்கல் வைத்து சாமி கும்பிட வேண்டுமென்ற பத்தாயிர ரூபாய் மதிப்புள்ள கனா. நிஜ வாழ்வின் நிம்மதியை வாயில் போட்டு மென்றுதின்கிற கனா. வீட்டுக்குள் பூகம்பமாய் வெடித்த கனா!

## 8

அது கார்த்திகை மாசம். கரிசல்காட்டில் முழங்கால் அளவு பயிராக இருந்த எள்ளுச் செடிகளைப் பார்த்துவிட்டு வந்தான் சமுத்திரம். வெளிர்ப் பச்சையான எள்ளுச்செடிகள்... சாம்பல் பூத்த மாதிரியானதொரு பச்சை.

ஏழு டக்கர் சாணிக்குப்பை விழுந்த இடம். அடர்ந்த மழைக்குக் குப்பையின் கொதிப்பு ஈடு கொடுத்து உரமூட்டியிருந்தது. எள்ளுச்செடிகள், கொப்புக் கொப்பாகப் பிரிந்து அகலப்பட்டு வளர்ந்திருந்தன.

நல்லபடியாக காய்பிடித்துவிட்டால், எப்படியும் ஆறு மூட்டை எள் வந்துவிடும். பிறந்தநாள் முதல் கொண்டு மண்ணிலேயே கிடந்து புரள்கிற அனுபவத் தழும்பேறிய சம்சாரி மனசுக்குள் கணக்குத் துல்லியமாக விழுந்தது.

ஆறு மூட்டை எள். அவனுக்குள் ஆயிரம் ஆயிரமான எள்ளுப்பூக்கள் வாசம் பூத்த பூந்தோட்டம். நம்பிக்கை பூக்களின் ஒளிச் சிரிப்பு.

எப்படிப் பார்த்தாலும் எட்டாயிரம் ரூபாய் கைசேரும்.

மனசுக்குள் மிதப்பது போன்றதோர் இனிய உணர்ச்சி. செழித்த வெள்ளாமையைப் பார்த்த சம்சாரிக்கேயுரிய பரவசப் பெருக்கு.

ஊருக்குள் வந்தான். சமுத்திரம் நடையில் ஒரு நிமிர்வு. நெஞ்சு தூக்கி நடந்தான். முகத்தில் ஒரு பெருமிதப் பிரகாசம். அதிர்ஷ்ட தேவதையின் சிறகில் உட்கார்ந்திருக்கிற மனக்கொந்தளிப்பு.

இறவைத்தோட்டத்தில் பருத்தியும்கூடப் பரவாயில்லை. மழை வெறித்த பிறகு ஒரு மருந்தை கிருந்தை அடித்துவிட்டால் செடி எழுந்துவிடும். சடை சடையாக கொப்புகள் படர, அகல அகல இலைகள்

சிரிக்க... மஞ்சளும் சிவப்புமான பூக்கள் ஆகாயத்துக்கு ஒளி தர...

இந்த வருஷ வெள்ளாமை சீராகத்தான் இருக்கும். விளைச்சலும் பெருகத்தான் செய்யும். விளைய வைத்த பொருளுக்கு விலை கிடைக்குமா? வியாபாரிகள் விலை தருவார்களா? வழித்து அள்ளிக் கொள்ளை கொண்டு போய் விடுவார்களா?

இந்தக் கேள்விகள், பருத்திக்காய்களை உதிர வைக்கும் காய்ப்புழுக்களென அவனுள் ஊர்ந்தன. பச்சைப் பசேலென அரிபுழுவைப் போல ஊர்ந்தன.

ஊர் மைதானத்தில் நின்றான் சமுத்திரம். காலை நேரம். வெயில் முகம் பார்க்க விடாமல் மழைமேகம். மேக எருமைகள். இன்னும் ஏழு மணிகூட ஆகியிருக்காது. மைதானம் வெறிச்சென்று கிடந்தது. ஆள் வாசம் இல்லாத சூன்யம்.

மழையும் வெள்ளமும் பிடித்த நாளிலிருந்து பஸ்போக்குவரத்து சுத்தமாக நின்றுபோய் விட்டது.

பஸ் வந்து போயிருந்தால், இந்நேரம் இந்த இடம் 'ஜேஜே' என்றிருக்கும். பஸ்ஸில் பயணம் செய்வதற்கான அலங்காரத் தயாரிப்புகளோடு ஆணும் பெண்ணுமாய் அலைமோதுவார்கள். 'பஸ் வருமா...' 'இடம் கிடைக்குமா...' 'ரிப்பேர் ஆகி கிடக்குமா...' 'ஸ்பேர் வண்டி வருமா...' 'அப்படியா நிர்வாகம் இருக்கு' என்று பரஸ்பரம் பேசிக் கொள்வார்கள். நிற்க இடமில்லாம ஜனங்கள் நெரிபடும்.

இப்ப என்னடாவென்றால், மழை பண்ணுகிற கூத்து. மைதானத்தில் மழைத்தண்ணீரைத் தவிர, வேறு யாருமில்லை.

வெள்ளாமை பற்றிய பெருமிதத்தில் மிதந்து கொண்டே வந்த சமுத்திரத்தை ஒரு சத்தம் பிடித்து நிறுத்தியது.

''ஏய்... சமுத்திரம்...''

திரும்பிப் பார்த்தான். ஏலச்சீட்டு பிடிக்கிற சுப்பிரமணியம். ''என்ன அண்ணாச்சி?''

''என்ன நொன்ன அண்ணாச்சி? மூணுமாசமா சீட்டுப் பாக்கி குடுக்காமப் போட்டிருக்கீயே... எப்ப குடுக்கப் போற.''

''தாரேன்ண்ணாச்சி... இன்னும் ஒரு நாலு நாள்லே தாரேன்.''

சுப்பிரமணியம் சத்தத்தில் காட்டமும் ஏறியது. ஸ்தாயியும் ஏறியது. ''என்னதான் மனசுலே நெனைச்சுக்கிட்டிருக்கே? பெரிய கில்லாடின்னு நெனைப்பா. ஒரு சீட்டுக்கு எரநூத்தைம்பது ரூவா. மொத்தம் எழுநூத்தைம்பது ரூபா? மூணு மாசமா நீ குடுக்காமப் போட்டுட்டா, சீட்டு எடுத்தவனுக்கு நா எப்படிப் பணம் அடைக்கிறது?''

''கொஞ்சம் பொறுத்துக்கங்க அண்ணாச்சி.''

''அதெல்லாம் முடியாதப்பா. இன்னும் ரெண்டு நாள்தான் ஒனக்குத் தவணை. அதுக்குள்ளே கணக்கு முடிச்சாகணும்.''

அதட்டலும் மிரட்டலுமாய் சுப்பிரமணியத்தின் குரல் எகிறுகிறது. சமுத்திரம் சர்ப்பத்தைக் கண்ட

எலியாக பம்மிப் பதுங்கினான். குரலில் குழைவும் பணிவும்...

மனசுக்குள் அவமானப்படுகிற தீச்சூடு. மானங்கெட்டுப் போய் ஓர் அற்பனுக்கு பணிந்து கேவலப்பட வேண்டியிருக்கிறதே என்கிற நிர்ப்பந்தம். அவலம். அது குறித்த மனவேக்காடு.

''என்ன சொல்றே... சமுத்திரம்?''

''ம்... ம்... சரிண்ணாச்சி.''

''ரெண்டு நாள்லே பணம் வரல்லேன்னா... சரிப்பட்டு வராது. நடுத்தெருவுலே மேத்துண்டை புடிப்பேன்... பாத்துக்க...''

அவமதிக்கிற மிரட்டல். விளக்குமாறால் அடிப்பது போன்ற வன்முறை. வார்த்தை வன்முறை. மானமுள்ள மனசைக் கிழிக்கிற வன்முறை.

உள்ளுக்குள் கவிகிற கழிவிரக்கம். சோகம். றெக்கையொடிந்த பறவையின் ரணத்துடிப்பு.

ரெண்டு நாளில் பணம் கட்ட முடியாது. வரப் போகிற அவமானம். கொடிய கேவலம். மிரட்டிக் கொண்டு வருகிற இருட்டு.

சுற்றிலும் பார்த்தான் சமுத்திரம். உள்ளுக்குள் பயத்துடிப்பு. நாலைந்து பேர் 'இதை'யே பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். புரிந்துகொண்டனர். நடக்கிற அவமானக் கூத்தை உணர்ந்து கொண்டனர்.

இவன் கேவலப்பட்டு இழிவுபட்டதை நாலு பேர் பார்த்துவிட்டனர். நாலு பேர் பார்த்தால்... ஊரே பார்த்த மாதிரி.

சம்சாரி சமுத்திரத்துக்குள் அவமானக் கொதிப்பு.

வீட்டுக்கு வந்தான். வீட்டு முற்றத்தில் வெளிப் பானை இருந்தது. மண்பானையும் சிமெண்டுத் தொட்டியும். அதில் போய் கால் கையைக் கழுவி முகத்தையும் கழுவி... மேல்துண்டால் அழுந்தத் துடைத்த பிறகும் —

மனசுக்குள் சுப்பிரமணிய தீ. அவன் வைத்த தீச்சூடு. அதன் தகிப்பு. சூடுபட்ட மனசின் காந்தல்.

''அடேய்... பாவி. ஒண்ணுக்குமத்த அற்ப நாயே, நீயா ஏங்கிட்டே இப்படிக் கேக்கே? தராதரமில்லாம வாய் வார்த்தையை வுட்டுட்டியே... ராஸ்கல். துட்டுக் கொழுப்பு. இருக்கட்டும்டா... காலம் இப்படியேவா போயிரும்? காத்து மாறி அடிக்காமலா போயிரும்? பூனைக்கும் ஒரு காலம் வரத்தானே செய்யும்? அப்பப் பாப்போம்டா?...'

எதிரில் சுப்பிரமணியம் இருக்கிற மாதிரியே மனவேக்காடு, கொதி நினைவுகளாக... சூடான முணுமுணுப்புகளாக... கொப்புளித்துக் கொண்டிருக் கிறது.

உள்பாதத்தில் ஒட்டியிருந்த மண்ணை வாசல் படியில் ஓங்கி மிதித்து உதறிவிட்டு உள்ளே வந்தான். அதே மனக்கொதிப்போடு சாப்பிட உட்கார்ந்தான். கோப அதிகாரமாகக் கூறினான். ''சீக்கிரம் சோத்தை வை. காடு கரைக்குப் போகணும்.''

புருஷனின் விறைத்த முகத்தையோ, புண்பட்டு கொதித்துக்கிடக்கிற மனநிலையில் வெடித்த

குரலையோ அவ்வளவாகக் கவனிக்கவில்லை சரசு. அவள் மனசுக்குள் அரும்புகிற கனா. உள்ளுக்குள் வாசத்தையும் மகரந்தத்தையும் சேகரித்து வைத் திருக்கிற கனா. நாலைந்து நாட்களாக மனசுக் குள்ளேயே பொத்திப் பொத்தி வைத்த அரும்பு இப்போது, வெடித்துப் பூக்கிற கணத்தின் விளிம்பில்... விம்மிப் போயிருக்கிற அரும்புக் கனா.

சோற்று வட்டிலை முன் வைத்தாள். தண்ணீர்ச் செம்பை எடுத்து வைத்தாள். சோற்றில் கை வைக்க முனைகிறபோது —

அவனுக்குள் சரசு குறித்த கோபம்.

புண்பட்டுப் போன மனசுக்குள் ஒரு சிறிய ஏக்கம். இதமான இறகின் வருடலாய், ஒரு பூவின் மெல்லிய உரசலாய் - மனைவி விசாரிக்கமாட்டாளா என்று ஒரு ஆசை.

''என்னங்க... ஒரு மாதிரியாயிருக்கீங்க? மனசு சரியில்லியா? யாரும் என்னமாச்சும் சொன்னாகளா?'' என்றெல்லாம் ஆறுதலாய் பரிவாய் கேட்க மாட்டாளா என்ற நப்பாசை.

கேட்காமல், மரக்கட்டையாக இருக்கிறாளே என்கிற ஏமாற்றம். கோபமாக நிறம் மாறியிருக்கிற ஏமாற்றம். அடுப்பங்கரைக்குள் மறைந்து நிற்கிறாள் சரசு. அடுப்பங்கரையையே நெருப்பாகப் பார்க் கிறான் சமுத்திரம்.

அந்தக் கணத்தில்தான் —

அந்த அரும்பு, வெடித்து இதழ் மலர்கிறது.

''கல்யாணமாகிப் பத்து வருஷமாச்சு... காட்லே பாடு, விட்டு வந்தா வீட்லே பாடு. ஒடம்பைக் கடம்பாக்கி ஒழைச்சு என்னத்தைக் கண்டோம்? ஒரு கம்மல் உண்டா, மூக்குத்தி உண்டா? ஒரு நல்லது பொல்லது உண்டா? ஒரு ஊரு வழி போனோம்... காரு வண்டி ஏறுனோம்னு ஏதாச்சும் உண்டா? கல்யாணம் காட்சிக்குப் போனோம்... கோயில் கொளத்துக்குப் போனோம்னு ஒரு நாளாச்சும் உண்டா? ஒண்ணு மில்லே... ஒண்ணுமேயில்லே... பாடுபட்டு வாழ்ந்து என்ன சொகத்தைக் கண்டேன்? ஒண்ணுமேயில்லே...''

லேசான அழுகைத் தொனியோடு - சோகமான குரலில் குறைபட்டுக் கொள்கிற - குறை சொல்கிற பாணியில் புலம்புகிற அடுப்பங்கரை. அங்கலாய்க்கிற அடுப்பங்கரை.

''ஏன் இப்படிக் குறைபட்டுக்கொள்றே...? என்ன வெஷயம்... சொல்லு?'' என்று புருஷன் கெஞ்சி வருவான். கனிவோடு கொஞ்சி வருவான். மன்றாடி வருவான். அப்போது தனது கனாவை, கோரிக்கை யாக்கி... வெற்றி பெறலாம் என்பது சரசுவின் திட்டம். அப்பாவித்தனமான தந்திரம். சாகசத் தந்திரம்.

ஆனால் —

அரும்பு பூத்த நேரம் சரியில்லை. காலைக் குளிரிலோ - அந்திக் குளுமையிலோ பூக்கவில்லை. மாறாக... மதிய நேரத்தின், கொதி வெயிலில் அந்த அரும்பு முகம் மலர்ந்திருக்கிறது. மலர்ந்த முகத்தில் சுள்ளென்று சுடுகிற வெயிலாக... சமுத்திரச் சீற்றம். சும்மாவே அவன் மிதிபட்டு வந்த கொதி நிலையில்.

''என்னடி சொல்றே... சரசு? நிறைஞ்ச வீட்லே மூதேவிகணக்கா என்னத்துக்கு ஒப்பாரி வைக்கே? பெரிய சீமான் மகளாக்கும்? நாடுநகரமெல்லாம் சுத்திப்பார்க்க ஆசை வந்துருச்சாக்கும்? பெரிய லட்சாதிபதி வீட்டுலே - ஊஞ்சல்லே - ஆடிக் கிட்டிருந்த வளாக்கும்? கையேயில்லாத நொண்டிக்கு, என்னடி விரல் வீக்கம்? நாயே... பேசாமக் கெடையேன். என்னமாச்சும் வாயைத் துறந்தே... கிழிச்சிருவேன்... கிழிச்சு...!''

சரசு துடித்துப்போனாள். ஆணிவேர் வரை கருகிப்போனாள்.

## 9

**ப**ருத்திப் புஞ்சையின் பொழியில் நடந்தான், சமுத்திரம். பொழியில் (வரப்பில்) அருகம்புல் அடர்த்தியாய் மோதிக்கிடந்தது. மழைத்துளிகளில் நனைந்து கிடந்தது. வைத்த காலை'வழுக்கி விட்டு விடுமோ என்ற எச்சரிக்கை உணர்வு மனசைப் பிடித்து நிறுத்தியிருந்தது.

நீர்கோத்த கருமேகங்கள் மேற்கு நோக்கி நகர் கின்றன. ஏற்கெனவே பெய்த மழைப்பாட்டங்களில், பாத்திக்குப் பாத்தி தண்ணீர். சந்தனக்கரைசலாக தண்ணீர். வாய்க்கால்களில் தண்ணீர். தண்ணீர் தேங்கித் தேங்கி... பிடித்துக் கிடந்த பாசி. பாசியின் பசுமை. தண்ணீருக்குள் தெரிகிற ஆகாயம். நீருக்குள்

நீர்மேகங்கள். சூரிய ஒளியை மடிக்குள் வைத்துப் பொத்திக் கொண்ட மேகங்கள்.

சமுத்திரத்திற்குள் வந்த வீடு. அதிர்வில் துணுக் குற்றுப் போன சரசுவின் முகம். உலர்ந்து உயிரற்றுப் போன அந்த முகத்தின் திகைப்பு. உறைந்து போய் சலனமற்றிருந்த பரிதாபம். கண்ணில் மட்டும் துடித்த மனசின் வலி. அதன் கலக்கம்.

சமுத்திரத்துக்கு இன்னும் புரியவில்லை. எதற்காகச் சண்டை போட்டோம்? எதற்காக சரசுவைத் திட்டித் தீர்த்தோம்? 'சீமான் மகளாக்கும்...? லட்சாதிபதி பெத்த மகளாக்கும்?' என்றெல்லாம் விஷக்கத்திகளை வீசியெறிந்த ஞாபகம், மனசை முள்ளாக உறுத்துகிறது. அப்படிப்பட்ட ஏளனக் கத்திகளை, இளக்காரமாக வீசி இழிவுபடுத்துகிற அளவுக்கு அவள் என்ன கேட்டுவிட்டாள்? அப்படி யென்னத்தைக் கேட்டுவிட்டாள்? பத்து பவுன் நகையையா கேட்டுவிட்டாள்? 'பாய்ந்து கடித்து குதறுகிற அளவுக்கு' என்ன பயங்கரத்தைக் கேட்டு விட்டாள்?

அனாவசியமாக ஒருத்தியைக் காயப் படுத்திட்டமோ...? தஞ்சம் என்று நம்பி வந்த அப்புராணியை நாதியத்த ஒரு பொண்ணை - ஆத்மபங்காளியை அர்த்தமில்லாமல் கடித்துக் குதறிட்டனோ? தேவையில்லாமல் குத்திக் கிழித்து விட்டனோ? அவனுள் நீரோடையாக ஓடிக் கொண்டிருந்த மனிதநேய உணர்வு, அவனையே கண்டிப்போடு நோக்கியது. அந்தக் கண்டிப்பான

பார்வையின் உக்கிரத்துக்குப் பதிலாகச் சமாதானம் சொல்கிற அவனது உள் மனசு.

'சீட்டுக்காரன்கிட்டே குத்துப் பட்ட ரணத்தோட வீடு வந்து சேர்ந்தேன். அப்பப் பார்த்தா... இப்படிக் கொறைபட்டுப் பேசணும்? எப்பவும் அப்படிப் பேசுறவள் கிடையாதே... பசு மாதிரி இருப்பாளே... நிறைகொடமா ததும்பியிருப்பாளே... பெருமிதப் பூரிப்போட இருப்பாளே... அவளா, அப்படிப் பேசுனது?

என்ன பேசுனா? அக்கினித் திராவகப்பேச்சு. வாழ்ந்த பத்து வருஷக் குடும்பவாழ்க்கையைக் காறித்துப்புன பேச்சு 'ஒண்ணுமேயில்லே'ன்னு ஒதறியெறிஞ்ச பேச்சு. 'என்ன சொகத்தைக் கண்டுட்டேன்'ங்குற கேள்வியே கேவலமில்லியா?

'வாழ்ந்த வாழ்க்கையே சூன்யம்'னு ஏளனம் பண்ணுகிற அசிங்கமில்லியா?

அப்படிப் பேசுறவள் இல்லியே சரசு? அப்புறம் எப்படி இப்படிப் பேசுனா? அவளை என்னமும் பேய்கீய் பிடிச்சிருச்சா? ஏதாச்சும் பிசாசு, அவா நாக்குலே வந்து உக்காந்துருச்சா?

அவளோடு பேயாட்டப் பேச்சுதான் என்னைக் கோபப்படுத்திருச்சு. சீண்டி விட்டிருச்சு... உசுக்காட்டி விட்ட நாய் மாதிரி... நானும் பாய்ஞ்சுட்டேன்.'

பொழியின் முடிவில் ஆற்றங்கரை துவங்குகிறது. யோசனையின் உள்உரையாடல். நினைவுகளின் சர்ச்சை. அப்படியே அங்கே வந்து விட்டான்.

கொரண்டிச் செடிகூட காய்ந்து கிடக்கக்கூடிய ஆற்றங்கரை. வறட்சியின் காய்ச்சலில் தீப்பிடித்துக் கிடக்கக்கூடிய ஆற்றங்கரை. பனை மரமே வாடிக் கருகிக் கிடக்கும்.

இப்ப என்னடாவென்றால்...

துளசிச் செடிகளும் பேய்த்துளசிச் செடிகளும் ஆதாளைச் செடிகளும் குப்பைமேனிச் செடிகளும் இன்னும் பிற குருவிக்காய், நாயுருவிச் செடிகளுமாய் கொழை மோதிப் போய்க் கிடக்கின்றன. மழையின் தழுவலில் நனைந்து சலனமுறும் பசுமைக்கடலாகக் கிடக்கிறது. கண்ணுக்குக் குளிர்ச்சியான பசுமைக்கடல். ஈரமினுமினுப்பான பசுமைக்கடல்.

வேலிச் செடிகளும் எருக்கஞ்செடிகளும் பாறை முடிச்சுகளுமாய் வெறும் எலும்புக்கூடாகக் கிடக்கக்கூடிய ஆறு இப்போது நிஜத்து ஆறாக, உயிர்ப்பின் துடிப்போடு இயங்குகிறது. இரு கரைகளையும் அரித்து அகலமாக்குகிற வெள்ளப் பெருக்கு. சந்தனக்கரைசலாய் சிறுசிறு சுழல்களும் வளைவு நளினங்களுமாய் அழகாய் ஓடுகிற வெள்ளம். புரட்டிக்கொண்டு வந்த காய்ந்த வேலி முள்க்கவைகள், வெள்ளத்தின் கரும்புள்ளிகளாக...

விளைந்து கிடந்த கம்மங்கதிர்ப் புஞ்சைகள் கதிர்கள், தொடர்ந்த மழையில் நனைந்து கறுத்துக் கிடந்தன. கம்மங்கதிர்மணிகளின் அடர்த்தி. மழை ஈரத்தில் நனைந்து, பொதும்பி தலைசாய்ந்து கிடந்த கம்மங்கதிர்கள். மழைக்கு அஞ்சாமல் கூட்டம் கூட்டமாய் பறந்து சுத்துகிற மைனாக்கள், கிளிகள்,

குருவிகள். ஆற்றுவெள்ளத்தில் துள்ளும் மீன்களுக் காக தண்ணீருக்குள் காய்ந்து கிடந்த வேலிமரங்களில் நெருக்கமாக உட்கார்ந்திருக்கும் வெள்ளைக் கொக்குகள். செத்துக் காய்ந்த முள்மரங்கள் பூத்த வெண்பூக்கள். உயிர்ப்பான வெண்மைப் பளீர்.

சமுத்திரம் ஆற்றில் ஓடும் தண்ணீரையே பார்த் தான். சிற்றலைகளும் சுழல்களுமாய் நீரோட்டம். இரு கரையும் தழுவியோடுகிற நீர்ப்பெருக்கு. வற்றியதன் அடையாளமாக தூசி துப்பட்டைகளின் வரி வடிவ நளினக் கோடுகள்.

சமுத்திரம் மனசுக்குள் சரசுவின் முகம். இவனது கத்தி வீச்சு வார்த்தைகளினால் துணுக்குற்ற அவளது முகம். அதிர்ந்து வெலவெலத்த முகம். காகிதமாக வெளுத்துச் சவக்களை படிந்த முகம். ஈர உதடுகளின் சோகத் துடிப்பு. விழியோரங்களில் பூத்த நீர்த்துளிகள்.

சரசுவையே நினைத்தான். அவனுக்குள் 'ஐயோ பாவம்' என்றிருந்தது. மனசுக்குள் ஒரு நெகிழ்வு. 'பாவம் தாயத்த பொண்ணு...' என்று கருணைக் கசிவோடு ஓடிய நினைவு.

'அந்தப் பொண்ணு என்னதான் கேட்டாள்?' நிஜமாகவே புரியாமல் விழித்தான் சமுத்திரம். இன்னது கேட்டாள் என்று அறியாமலேயே கோபமாய்ச் சீறி வார்த்தைக் கத்தியால் கீறி

''நா... ஒரு முட்டாப் பயதான்...''

என்று வாய்விட்டே முணுமுணுத்தான். பருத்திப் புஞ்சையை அப்புறமும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு...

ஊர் நோக்கி வந்தான். ஒரு கொக்குக் கூட்டம் வரிசையாக அணிவகுத்துப் பறந்தது. அறுத்து வீசிய முத்துமாலையின் நகர்வாகத் தோன்றியது.

ஊர் மடத்துப் பக்கம் வந்தான். தெருத் தண்ணீர் வடிந்த ஈரமண். அலை அலையாகப் படிந்திருந்த குறுமணல். அந்த அழகுக்குச் சம்பந்தமில்லாத குரூரமாக எருமைச் சாணிக் குவியல்.

மடத்தில் உட்கார்ந்திருந்த கூட்டுறவு சொஸைட்டி செக்ரட்டரி இவனைப் பார்த்ததும் எழுந்து வந்தான்.

''அண்ணாச்சி...''

மடத்தில் நிறைய ஆட்கள். அடைமழை. விடாத புயல் சின்னத்தினால் நச்சு மழை. வேறு எந்த வேலை ஜோலிகளுக்கும் போக முடியாமல் மடத்தில் அடைந்து கிடக்கிற ஊராட்கள்.

அவர்களுக்குத் தெரியாமல் ரகசியம் பேசுகிற தொனியில் மெதுவான குரலில் அழைத்துக்கொண்டு கிட்டத்தில் வருகிற செக்ரட்டரி.

திகைத்து நிற்கிற சமுத்திரம்.

''என்ன தம்பி...?'

''சொஸைட்டியிலே ஒரு நகை அடகு வைச்சீகளோ?''

''ஆமா...''

''ரொம்ப நாளாச்சா?''

''ஆமா. அதுக்கென்ன இப்ப?''

''வட்டியும் கட்டாமப் போட்டுட்டீகளோ...''

கேள்விமேல் கேள்வியாகக் கேட்கிற செக்ரட்டரி. இவனுக்குள் பரவுகிற ஒரு கிலி உணர்வு. அடிவயிற்றில் ஒரு விதமான 'பகீர்'. நெஞ்சுக்குள் பயப்படபடப்பு. நெருங்கி வருகிற பயங்கரம். முகம் தெரியாத குரூரம். ஏதோ ஒரு கொடிய செய்தி. இங்கிதத்தோடு பேசிப் பேசி மெல்ல மெல்ல பூதத்தைக் காட்ட வைக்கிற செக்ரட்டரி.

பதற்றமும் பொறுமையின்மையுமான படபடக்கிற சமுத்திரம்.

''என்ன தம்பி... எதாச்சும் சிக்கலா? சும்மா சொல்லு?''

''உங்க நகையை இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே மீட்டியாகணும். இல்லேன்னா... ஏலத்துக்கு விடப் போறதாக பத்திரிகையிலே விளம்பரம் குடுக்க வேண்டிய நெலைமை.''

''நிறுத்தி வைக்க முடியாதா தம்பி?''

பீதியில் நனைந்து கந்தலாகிப் போன மனசு. உடைந்து பயத்தில் நடுங்குகிற குரல்.

''முடியாதுண்ணாச்சி...''

''வட்டியோட எம்புட்டாகுது? பாத்த ஞாபகம் இருக்கா?''

''இருக்குண்ணாச்சி... ஏழாயிரத்து முந்நூத்தைம் பது சொச்சம். ஒரு மாசத்துக்குள்ளே மீட்குறதுக்கு ஏற்பாடு பண்ணிட முடியுமாண்ணாச்சி?''

''எப்படியும் பண்ணியாகணுமே... பேப்பர்லே பேர் வந்தா... நம்ம கேவலம், நாடு பூரா தெரிஞ்ச கூத்தாயிடுமே.''

''அதுவும் சர்த்தான்.''

''ஆனா... எப்படித் திருப்புறதுன்னும் புரியலே. பணத்துக்கு என்ன பண்றதுன்னும் புரியலே...''

கையறு நிலையில் கலங்கிய சமுத்திரம். கலங்கி கரகரத்த குரல். கதியற்ற நிலையில், புலம்பித் தவிக்கிற மனசு. 'என்ன செய்றது? என்ன செய்றது?'

சரசுவின் நகை. இருந்த அந்தச் சின்னஞ்சிறு கூரைவீட்டை விற்று, மீனாட்சியம்மா செய்து போட்ட நகை! மகளுக்கான தாயின் ஒரே சீதனம் அந்த நகை. அம்மாவின் கனா. அம்மாவின் ரத்தம். அம்மாவின் சதை... அம்மாவின் ஆத்மா...

ஏதோ ஒரு ஆத்திர அவசரத்துக்கு அடகுவைத்த நகை. கிராமத்துச் சம்சாரிக்கேயுரிய - அதிலும் சிறிய சம்சாரிக்கேயுரிய தொடர்ந்த சிரமங்களின் அடர்த்தியில், திருப்ப இயலாமல் போன நகை.

ஆனால், இந்த ரெண்டு வருஷத்தில் நகை திருப்பாமலிருந்ததற்காக... ஒரு வார்த்தைகூட முணு முணுக்காத சரசுவின் பெருந்தன்மை. 'அப்பேர்ப் பட்ட நல்ல மனசுக்காரியையா நா இப்படி கடிச்சுக் கொதறினேன்?' என்று நினைத்த கணத்தில் —

இந்தக் கணமே சரசுவைப் பார்த்து - அவள் பூ முகத்தை கையில் ஏந்தி மன்னிப்பு கேட்கணும் என்று

தவிக்கிற சமுத்திரம், மனசுக்குள் இன்னொரு ஆர்ப்பரிப்பு.

'நகையை எப்படித் திருப்புறது? கேவலம் வராம எப்படித் தடுக்கிறது?'

## 10

அறுத்துப்போட்ட அவரைக்கொடியாக உயிரற்றுப் போய், வாடி வதங்கிக் கிடக்கிறாள் சரசு. ஒரு கோலமே போடுகிற ஆசையில், புருஷனிடம் ஒரே ஒரு புள்ளியை வைத்தாள். அந்தப் புள்ளியையே காலால் இழுவித் தேய்த்துவிட்டான். புள்ளி வைத்த விரலையும் ஒடித்துப் போட்டுவிட்டான். அவனது சீற்றம். சீறிச் சினந்த அந்த முகம். அடுப்பில் காய்ந்த வெறும் சட்டியாக அனல்தெறிப்பு.

''பெரிய சீமான் மகளாக்கும்...? ஊரு நாடு சுத்திப்பாக்க ஆசை வந்துருச்சோ? பெரிய லட்சாதிபதி வீட்லேயிருந்து வந்தியாக்கும்? வெறும் கழுதைக்கு ஏன் வீணாசை? கையில்லாத நொண்டிக்கு ஏன் விரல் வீக்கம்?''

சீறித்தெறித்த தீக்கற்றைகள். 'குபீர், குபீர்' என்று பாய்ந்து வந்து சுட்டுக் கருக்கிற வார்த்தைத் தீ. தன் மானத்தை செருப்பால் அடித்த வார்த்தைகள். பிறந்த வீட்டு ஏழ்மையை - இல்லாமையை விதிக் கொடுமையை - காலால் எற்றிக் கேவலப்படுத்துகிற வார்த்தைகள்.

வார்த்தை வந்த கணத்தில் —

வெலவெலத்துப் போனாள் சரசு. அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டாள். திகிலடைந்துபோய் - பேச வாய்வராமல் - அப்படியே சிலையாகிப் போனாள். ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. செய்யத் தோன்றவில்லை.

'என்ன நடந்தது' என்கிற உணர்வேயில்லாமல், ஒரு மழலையைப் போல திகைத்துப்போய் முழித்தாள்.

போய் விட்டான். அவன் நின்றிருந்த இடம். இப்போது அவன் இல்லாத இடம். அவன் போன பிறகும் ரொம்ப நேரத்துக்கு அந்த இடத்தையே வெறித்தாள். இமை தட்டாமல் பார்த்தாள். நங்கூரப் பார்வை, மனசுக்குள்.

அம்மாவின் உயிர் பிரிந்த கணம். அந்த நேர முகக்கனிவு. சுருக்கங்கள் நிறைந்த முகத்தில் சுடர்ந்த ஒரு வெளிச்சம். 'மகளை ஒரு நல்ல இடத்தில் ஒப்படைத்துவிட்டோம். நிலமில்லாத வெறுங் கழுதையாக கூலிக்காரியாக இருந்த மகள், இப்போது கரிசல்காடும் இறவைத்தோட்டமும் வீடும் சொந்தமாக இருக்கிற ராஜ்யத்தின் ராணியாக இருக்கிறாள். பத்திரமாக இருக்கிறாள்' என்ற கடைசி நினைவில் பெருமிதப் பூரிப்பு, மனசெல்லாம் ஒளிவீசிக் கொண்டிருந்த கணத்தில்தான்... அந்த உயிர்ச் சுடர் அணைந்தது.

நிம்மதியோடு போய்ச் சேர்ந்துவிட்ட அம்மா... நிம்மதியற்றுப் போன சரசு. இதை நினைத்த நேரத்தில் —

அவளுக்குள் பொங்கிப் பீறிட்ட துக்கம். உடைத்துக்கொண்டு சீறித் தெறித்த அழுகை.

''ஐயய்யோ... அம்மா... ஐயய்யோ... என்னை நாதியத்துப் போக விட்டுட்டீயே அம்மா... ஒண்ணுக்குமத்த மனுசங்கூட ஓம்மகளை நாலு வார்த்தை பேசும்படி வைச்சுட்டீயே அம்மா...''

'மடேர், மடேர்'ரென்று நெஞ்சில் அறைந்து கொண்டு அவள் அழுத அழுகை. குரலெடுத்து அவள் வைத்த ஒப்பாரி. அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் பரவிப் படர்ந்த துக்க நிழல்.

ஒரு பாட்டம் அழுது முடித்தாள். விசும்பி விசும்பி அழுதாள். மூக்கைச் சீந்திச் சீந்தி சுவரில் இழுவினாள்.

நினைக்க நினைக்க மனசு கிடந்து கொதித்தது. கொதிக்கக் கொதிக்க மனசு, அவன் வீசிய வார்த்தை களை நினைத்தது. நினைக்க நினைக்க அந்த வார்த்தைகள் தீச்சூடுபோல சுரீரென்று சுட்டன.

நினைத்து நினைத்து ரொம்ப நேரம் அழுது கொண்டேயிருந்தாள். அழுவதும் அடங்கி விசும்புவதும் விசும்பல் நின்று துக்கச்சுமையோடு வெறிப்பதும் அப்புறம் திடீரென்று குமுறி அழுவதும் புலம்புவதுமாகவேயிருந்தாள் ரொம்ப நேரமாய்.

எந்த வேலையும் செய்ய மனசில்லை. தெம்பில்லை.

முந்தாநாள் வரைக்கும் —

தான் உயர்ந்த இடத்தில் இருப்பதாகவும் முன்னைவிட கௌரவமும் அந்தஸ்துமான ஒரு குடும்பத் தலைவியாக தரம் உயர்ந்திருப்பதாகவும் பெருமிதப் பூரிப்பில் திளைத்துக் கொண்டிருந்தவள்.

இன்றைக்கு—

நாதியற்றவளாய் - ''ஏம்மா அழுவுறே'' என்று சீந்திப் பார்க்கக்கூட ஆளில்லாதவளாய். ஆதரவற்ற வளாய். ஒரு வார்த்தைகூட உருப்படியாகச் சொல்லி முடிப்பதற்குள், நூறு விளக்குமாறு அடிகளை வாங்கியவளாய்...

அடப்பாதரவே... ஒரு புருஷன்கிட்டே ஒரு பொண்டாட்டி இதைக் கேக்கக்கூடாதா? இதுக்குக் கூட ஆசைப்படக்கூடாதா? ஆசைபட்டதைச் சொல்ல ஆரம்பிக்குறதுக்குள்ளே இம்புட்டு வசவுகளா? இத்தனை வார்த்தைகளா?... இது என்ன நியாயம்?

பொம்பளை எதுக்கும் ஆசைப்படக்கூடாதா? எதையும் யோசிக்கக்கூடாதா? யோசிக்க முடியாதா? யோசிச்சதை புருஷன்கிட்டே சொல்லக்கூடாதா? சொன்னா... காது குடுத்துக் கேக்கக்கூடாதா?

சொல்ற ஞாயத்தைக் கேட்டு யோசிக்கக்கூடாதா? அப்படி யோசிச்சிட்டா... ஆம்பளைக்குக் கிரீடம் இறங்கிருமா? பொம்பளை சொல்ற ஞாயத்தை ஒப்புக் கொண்டுட்டா... கௌரவம் கொறஞ்சிருமா?

சரசுவுக்குள் குறிக்கோளற்று சுற்றுகிற குருட்டு ஈக்களாக நினைவுகள். மனசின் வெக்கையிலிருந்து எழுந்து, சுற்றிப்படர்கிற நினைவுப் புகை வளையங்கள்.

பாவாடைச் சடசடப்போடு ஓடிவந்த மகள் ஈஸ்வரி. தெருவெல்லாம் விளையாடி கால், கை, பாவாடை முழுவதையும் தெருப்புழுதியாக்கிக் கொண்டு வந்து நிற்கிற ஈஸ்வரி. ஏழு வயது ஈஸ்வரி.

''எம்மா... எம்மா...!''

போட்டுவிட்ட சடை உருவிக் கலைந்து கிடந்தது. புழுதி அப்பிய முகம். தலையெல்லாம் உலர்ந்து சுருள் சுருளாக சிலுப்பிக்கொண்டு நிற்கிற ரோமங்கள்.

துக்க பாரத்தில் கிடந்த சரசு, மகளை வெறிக்கிறாள். அவள் நிற்கிற புழுதிக்கோலம், அலங்கோலம். மனசுக்குள் சட்டென்று தோன்றிய நினைவு மின்னல்.

''ஆடுகாலிப்பய மகா... அதான், இப்படி 'தங்கு, தங்கு'ன்னு தெருக்காட்லே குதிச்சு ஆடிட்டு வந்து நிக்கிது...''

''என்னடி?''

வெடுக்கென்று கேட்டாள்.

விளையாடி மகிழ்ந்து பூரித்த நிலையில் ததும்புகிற மனஉல்லாசத்தில் கும்மாளமிடுகிற நினைவுகளோடு குதூகல நதியாக ஓடிவந்த அந்தச் சின்னப்பூ...

அம்மாவின் 'வெடுக்'கென்ற சொல்லின் சூட்டில் திகைத்தது.

ஒரு கணம்தான். சுதாரித்துக்கொண்டாள். 'நம்ம அம்மாதானே' என்ற நினைப்பில் அம்மாவை நெருங்கினாள் ஈஸ்வரி. திகைப்பைக் கடந்தாள்.

''ஏம்மா... அழுதுருக்கே?''

கோபத்தில் சிடுசிடுத்த சரசுவை அனுதாபமும் கனிவுமான குரலில் நெருங்கிய ஈஸ்வரி ஒரு தாயைப் போன்ற பரிவோடு குளிர்நதியாக மனசை நனைக்கிற ஈரக் கேள்வி. இப்படி ஓர் ஆறுதலுக்காகத்தான் அந்தப் பெண்மனம் ஒரு நாதியைத் தேடி ஏங்கித் தவித்தது. அவள் அடிமன ஏக்கத்தை அள்ளி விழுங்குகிற நதியாக ஓடிவந்து தழுவுகிற மகள். தாய்மைப் பரிவோடு குழைகிற மகள்.

''எதுக்கும்மா அழுதே?''

''சும்மாதா.''

''யாரும் வைஞ்சாகளா?''

''ம்.''

''யாரும்மா...? அய்யாவா? ம்?''

''ம்.''

''எதுக்கும்மா...?''

''தெரியலே.''

''நீ என்னமும் சொன்னியா?''

''இல்லே.''

''வேறெதுக்கு வைஞ்சாரு? அய்யாவுக்குக் கிறுக்கா?''

''கிறுக்குதா. குருட்டுக்கிறுக்கு...''

''அதெல்லாமில்லே... அய்யா அப்படியில்லே. நீ தான் என்னமும் சொல்லியிருப்பே...''

ரொம்பவும் கிட்டத்தில் நிற்கிற பூந்தென்றல்! பூவின் தாய் பாசத்தோடு மனசுக்குள் வருடுகிற

மகளின் பிஞ்சுக் கேள்விகள். கழுத்தை ஒருக்களித்துச் சாய்த்து, முகத்தால் மட்டும் அம்மாவைப் பார்க்கிற மகள். மழலை தன் விளையாட்டை உல்லாச வெளிச்சத்தை வெளிக்காட்டாமல்... பெரிய மனுசத்தனமாக வேஷம் காட்டுகிற முகபாவனை.

மகளின் இங்கிதமான மனநெருக்கத்தில் நெக்குருகிப் போய்விட்டாள். சரசுவின் வாழ்வின் அர்த்தமாக - எதிர்கால ரூபமாய் நம்பிக்கையூட்டும் உணர்வாய் - வருங்காலக் குறிக்கோளின் உருவமாய் ஈஸ்வரி.

சரசுவின் மனசெல்லாம் படர்ந்து பரவுகிற பரவச உணர்ச்சி. மகிழ்ச்சியின் ததும்பலில் தாங்க முடியாமல் தத்தளிக்கிற சரசு

''எம்மா... எந்திம்மா.''

''ஏண்டி?''

''சோறு வேணுமில்லே? வவுறு பசிக்கில்லே?''

''இன்னும் அடுப்பே மூட்டலே.''

''ஏம்மா...?''

''உங்க அப்பன் பண்ணுன கூத்துலேதா.''

''நீங்க என்ன வேணும்னாலும் கூத்து போடுங்க. எனக்கு நீ சோத்தைப் போடு...

மனசின் பாரம் முழுவதையும் பெருமூச்சாக வெளியிட்டாள் சரசு. மகளையே குழைவுமிக்க பார்வையால் தழுவினாள்.

மகளின் மேல்சட்டை தோள்ப்பட்டையில் கிழிந்திருந்தது. முதுகில் கைத்தையல் விழுந்த முரட்டு அடையாளம். பாவாடை கிழிந்து நார்நாராக... நூல் நூலாக... தொங்குகிற பரிதாபம்.

பூங்கொத்து போல மகள் ஒற்றைப்பூ. அவளுக்கும்கூட நல்ல துணிமணி இல்லை. 'ஏனிந்த மனுசருக்குப் புத்தி, இப்படிப் போகுது? வுடக்கூடாது. வரட்டும். பொண்டாட்டிங்குற உரிமையிலே கேக்கத்தான் செய்யணும். ஏம்புள்ளைக்குத் துணி யெடுத்துக் குடுன்னு கேக்கணும். எனக்குச் சீலை எடுக்கச் சொல்லணும். வரட்டும். கேக்கணும். முழுசா கேக்கணும். மூளையிலே உரைக்கிற மாதிரி கேக்கணும். முண்டியடிச்சு கேக்கணும். முட்டிமோதி கேக்கணும். கோயிலுக்குப் போறதைப் பத்தியும் கேக்கத்தான் செய்யணும்.

நல்ல துணிமணி உடுத்தக்கூட வழியில்லாம... கோயில் கொளம்னு ஒரு கொண்டாட்டம் இல்லாம... பாடுபட்டு என்ன செய்ய? ஓடி ஓடி ஒழைச்சு உசுரைக் குடுத்து என்ன செய்ய?'

மகளைத் தழுவுகிற பாச அரவணைப்பில், மனசுக்குள் வெகுண்டெழுகிற நினைவுகள். மகளின் கிழிந்த பாவாடையில் தொங்குகிற நீல நிற நூல்களை பார்க்கப் பார்க்க மனசுக்குள் வெகுள்கிற உணர்வு. துணிவடைகிற மனசு. வார்த்தைச் சீறலில் துடித்துக் கதறிய தன்மானக் காயத்தையெல்லாம் மறந்து -

சோகத்தை எல்லாம் தொலைத்துவிட்டு... உதறி விட்டு...

'கட்டுன பொண்டாட்டிக்கு இல்லாத உரிமையா? உடுத்த துணிவேணும்னு புருஷன் கிட்டே கேக்காம... வேற யாருகிட்டே கேக்குறது? வரட்டும்... இன்னைக்கு ரெண்டுலே ஒண்ணு பாத்துருவம்.' என்று விசவரூபம் எடுக்கிற உள் மனப்போர்க் குணம்.

''எம்மா... சோறாக்கும்மா...''

நிகழ்காலமாய் நின்று தார்க்குச்சியால் இடிக்கிற மகள். வாழ்வின் நடப்புக்கு இழுத்து வருகிற ஈஸ்வரி.

''ஏண்டி பறக்குறே?''

''நா பறக்கலே.''

''பெறகு ஏண்டி கூப்பாடு போடுறே?''

''எனக்கு வவுறு பசிக்குல்லே....''

''சரி... வாடி அடுப்பை மூட்டுவோம்.''

மனசின் சகல சுமைகளையும் உதறிவிட்டு எழுந்தாள் சரசு. அடுப்பங்கரைக்குள் நுழைந்தாள். அரை ரூபாய் நாணயத்தை எடுத்து ஈஸ்வரியின் கையில் திணித்தாள்.

''இந்தாடி... கடையிலே ஏதாச்சும் தீம்பண்டம் வாங்கித் தின்னு. அதுக்குள்ளே அம்மா சோறாக்கிரு தேன். ம்?''

''ஆட்டும்'' குதூகல நதியாக குதித்துக் குதித்து ஓடுகிற பூஞ்சிட்டு.

# 11

சமுத்திரம் வீட்டு வெளிமுற்றத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். தினந்தோறும் சாணிப்பால் தெளித்த முற்றம். தங்கத்தடாகத் தரை.

வீட்டுக்குள்ளிருந்து சீறிப் பாய்ந்த அம்பாக ஈஸ்வரி. சாப்பிட்ட ஈரக்கையை பாவாடையின் பின்புறம் இழுவித் துடைத்துக்கொண்டே ஓட்டம் பிடிக்கிறாள்.

இவனைக் கண்டதும் சற்றே திகைக்கிறாள். கிழிந்த பாவாடையின் அடி விளிம்பில் நூல் நூலாகத் தொங்குவதைக் கவனித்தான்.

''அம்மா இருக்காளா?''

''ம்.''

''சாப்புட்டீயா?''

''சாப்புட்டேன்யா. அவரைக்காய் சாம்பாரு.''

''அம்மா எப்படி இருக்கா?''

''அழுதுக் கிட்டேயிருந்தா. இப்ப அழலை.''

''ம்... சரி. நீ எங்கே போற?''

''வெள்ளாடப் போறேன்ய்யா.''

''சரி, போயிட்டு வா.''

சமுத்திரம் கழுத்தைத் திருப்பி, கடந்து ஓடுகிற ஈஸ்வரியை பார்த்தான். குதித்துக் குதித்து ஓடுகிற அந்தச் சின்னச்சிட்டு அவளது நீலநிறப் பாவாடையில்,

கைத்தையல் போட்ட முரட்டு அடையாளம். தோள் பட்டையில் கிழிந்த சட்டை.

ஒற்றை மகள். தனது ரத்தத்தின் நிழல். ரத்த விதையில் எழுந்த விருட்சக் கன்று. வம்சத் தொடர்ச்சி. அம்மாவின் சாயல். மணிக்கொத்து மாதிரி ஒத்தப் புள்ளை. அதுக்குக்கூட உருப்படியா நல்ல பாவாடை சட்டை எடுத்துக் குடுக்க வழியில்லாம இருக்கு. என்ன செய்ய? சம்சாரி பெழைப்பு அப்படியிருக்கு. சீட்டுப் பாக்கி கேக்குறவன், நாண்டுக்கிட்டுச் சாகுற மாதிரி கேக்கான். அடகுவைச்ச நகை... ஏலத்துலே போற நெலையிலேயிருக்கு. திருப்ப முடியலே. சொஸைட்டியிலே எட்டாயிரம் ரூபாய் கடன் கிடக்கு. உரக்கடையிலே மூவாயிரத்துச் சொச்சம் பாக்கி. பலசரக்குக்கடையில் நாலாயிரத்துக்கு கொறையாது.

இதை எல்லாம் எப்படிக் கட்ட? ‘கடனை அடைச்சாகணும். வழியிலே நடந்தாகணும்’னு சொல வடை. கடனை எதை வைச்சுக் கட்ட? தெருவுலே எப்படி நிமிர்ந்து நடக்க? ‘மானக்கேடாகிப் போகும்’னு ஒவ்வொரு நிமிசத்துலேயும் பயந்து சாக வேண்டியிருக்கு. இதுலே எப்படி எம்புள்ளைக்கு நல்ல துணி எடுத்துக் குடுக்க?

இயலாமையும் சோர்வும் அவன் நெஞ்சத்தை நொறுக்கியது. நெஞ்செலும்புகளெல்லாம் ‘நெறு, நெறு’ வென்று நொறுங்கப் போகிறது போல ஒரு மூச்சுத் திணறல். பாரத்தின் அழுத்தம். வாழ்க்கையின் இல்லாமையே, உணர்வுச்சுமையாக மனசைப் போட்டு அமுக்கியது. அழுத்தியது.

கனத்த பெருமூச்சுடன் பார்வையைத் திருப்பி விட்டான். மகள் எப்போதோ கண்ணிலிருந்து மறைந்து விட்டாள். வீட்டுவாசலைப் பார்த்தான்.

'சரசு... தங்கமான சரசு. தங்க நகையை அடகுக்குத் தந்துவிட்டு நச்சரிக்காத சரசு. குடும்பக் கஷ்டத்தை மனத்தோளில் போட்டுக்கொள்கிற பெருந்தன்மை யான சரசு.

'அழுதுக்கிட்டேயிருந்தா...'

ஈஸ்வரியின் மழலைத் தகவல்.

அழவைத்த பாவி, நான்தான். பீர்க்கைப் பூவாக ஒளி சிந்துகிற அந்த மனப்பூவைக் கிள்ளி, பிய்த்துப் போட்டு வதைத்த பாவி, நானேதான், சே!'

அவனுக்கே அவன் மேல் வெறுப்பாக இருந்தது.

சரசுவிடம் போக வேண்டும். கனிவாகப் பேச வேண்டும் ''காட்டுத்தனமாக கத்திட்டேன். மனசுலே வைச்சுக்காதே'' என்று மனம்திறந்த குழைவோடு சரணடைய வேண்டும்.

அவனுள் விரிகிற நினைவுகள். குற்ற உணர்வினால் உறுத்துகிற மனசுக்குள் இந்த நினைவுக் குளிர் கரங்கள். அந்த முள்ளைப் பிடுங்கி எறிகின்றன. தைத்த இடத்தில் ஈரக்கையால் வருடுகின்றன. வலியை மாயமாக்குகிறது.

தன்னுள் பொங்கிப் பெருகித் ததும்புகிற மனக்கனிவு.

வருகையை உணர்த்துவதற்காக... வாசல் படியில் கால் வைக்கும்போதே, பலமாகச் செருமினான். செருமல் சத்தத்துடன் உள்ளே நுழைந்தவனை...

சரசுவின் மூர்க்கமான கோபக் கத்தல் முட்டி மோதியது.

''நம்ம புள்ளைக்கு எப்ப புதுத்துணி எடுக்கப் போறீக?''

இது இவனது கவலையும்தான். ஓரிரு கணங்களுக்கு முன்புகூட இதைப் பற்றி சோர்வும் புலம்பலுமாக எண்ணினான். கையறு நிலையில் பெருமூச்செறிந்தான்.

ஆனால்....

சரசு கேட்கிற விதம். காட்டுக்கத்தலாகக் கேட்கிற மூர்க்கம், சரணடைய வந்தவனையும் சண்டாளமாக்கு கிற கேள்வி. பகையும் குரோதமும் கொண்ட கடன்காரன், பகிரங்கமாக அவமானப்படுத்துகிற நோக்கில் நெஞ்சுச் சட்டையை கொத்தாகப் பற்றுகிற அதே குரூரம். அதே உணர்வு. அதே வக்கிரம்.

''என்ன சொல்றே சரசு?''

சற்றே அதட்டலாய்... குரலை இறுக்கிக் கொண்டு... நிதானமாக எதிரொலிக்கிற சமுத்திரம்.

''கிழிஞ்ச துணிகளோட நாங்க கொறை கோலமாத் திரியணுமா? எப்பத் துணிமணி எடுக்கப் போறீக? எடுக்கப் போறீகளா இல்லியா?''

மறுபடியும் அதே கடன்காரக் குரல். நெருப்புக் குரல். 'போறீகளா, இல்லியா' என்று வழிமறித்து, காறித்துப்புகிற குரல். இவனுக்குள் இருந்த கனிவு, காணாமல்போக... ரோஷக்கனல் பொத்துக்கொண்டு

பீறிட... கடுப்பேறிப் போய் பார்த்தான். நெருப்புக் குரலிலும் இவனும்.

''எனக்குத் தெரியும்லே? துணிமணி எடுக்க எனக்குத் தெரியும்லே? யாரும் சொல்லத் தேவையில்லே. கையிலே துட்டு இருந்தா... துணிமணி வரும்லே?''

''தீபாவளிக்குக் கேட்டப்ப, கையை விரிச்சுட்டீக. தைப்பொங்கலுக்காச்சும் எடுக்கப் போறீகளா... இல்லியா?''

''எடுக்க முடியுமா முடியாதான்னு ஒனக்குத் தெரியாதாக்கும்? வீட்டு நெலவரம், வெவரம் புரியாதாக்கும்? சீமையிலேயிருந்து நேத்துதான் ஏரோப்ளேன்ல எறங்கி வந்தீயாக்கும்?''

அவன் குரலில் மட்டுமல்ல, பார்வையிலும் அதே வெறுப்பு. நிலைமை புரியாமல் பேசுகிறாளே என்கிற கடுப்பு. தாய் தவிட்டுக்கே அலையும்போது, இஞ்சிப் பச்சடி கேட்டு அழுதபிள்ளை மாதிரி சரசு.

அவனுள் கசந்து வருகிறது.

இவனது வெறுப்பையோ, கசப்பையோ பொருட்படுத்தாமல் அதே குரல் சூட்டில் சரசு. சண்டைக் குரலில் - உச்சஸ்தாயியில் அவள்.

''சீமையிலிருந்து பொண்டாட்டி வந்துருந்தா... கோயில் கொளத்துக்குக் கூட்டிட்டுப் போவீக. வாடகை வேன் பிடிச்சு... புதுத்துணிமணி எடுத்து சொந்தபந்த ஜனத்தோட போய் பொங்கவைச்சு பூரிச்சுக் கொண்டாடு வீக... நா நாதியத்த சிறுக்கிதானே? ஒடம்

பொறப்புமில்லே... உத்தவுக உரியவுக இல்லே... வக்குமில்லே... வகையுமில்லே. ஏழைப்பட்ட பொண்டாட்டி எது சொன்னாலும் சபையேறுமா? இந்த சீப்பட்ட சிறுக்கிக்கு இப்படியெல்லாம் ஆசை வரலாமா? ஓடியாடி பாடுபட்டு... காட்லே வேர்வை சிந்தி, வீட்லே உசுரைச் சிந்தி, சாகத்தானே செய்யணும்? வேற ஆசையெல்லாம் படலாமா? வேற யோசனையெல்லாம் வரலாமா?'' கோப வெடிப்பாக ஆரம்பித்து... தீப்பொறிகள் தெறிக்காமல் கண்ணீர்த் துளிகள் சிதறித் தெறித்தன. கோபக் கத்தலில் சீறித் துவங்கியவள், குமைச்சலும் குமுறலுமான அவலக் கதறலாக அழுது கரைந்தாள்.

சமுத்திரம் உணர்வுரீதியாக நிதானமானான். கோபம் இருந்த இடத்தில், அமைதியும் கூரிய கவனிப்பும் வந்து உட்கார்ந்தன. மட்டியைக் கடித்த வாறே கன்னத்து ரோமங்களை உள்ளங்கை யால் வருடியவாறே யோசித்தான்.

சரசுவின் ஆசைதான் என்ன? வேட்கைதான் என்ன? சொல்லத் தெரியாமல், கரடுமுரடாக முட்டி உடைகிற இந்தப் பெண்மணி என்ன சொல்ல விரும்புகிறாள்? என்ன ஆசைப்படுகிறாள்?

புதுத்துணிமணிகள் எடுக்கணும். சொந்த பந்தங் களை அழைக்கணும். வாடகை வேன் பிடிக்கணும். குலதெய்வம் கோயிலுக்குப் போகணும். பொங்கல் வைத்துக் கொண்டாட வேண்டும்.

இதுதான் அவள் ஆசை. இதுதான் அவள் குறி. இதுதான் அவள் திட்டம். முள்க் காட்டில் அற்றலைகிற குருடன் மாதிரி, திட்டமில்லாமல்... திட்டித்தீர்த்து... முட்டி உடைந்து... அவள் மனசையும் ரணப்படுத்தி... என்னையும் ரணகளப்படுத்தி... சரியான கோட்டிக் காரிதான்!

சரசு ஒன்றும் சாமி, பூஜை புனஸ்காரம் என்று அலைகிறவளில்லை. கல்யாணத்தன்று பெரியவர்கள் ஆசீர்வதித்து பூசிய திருநீறுதான். அதற்குப் பிறகு அவள் நெற்றியில் திருநீறுகூட முகம் காட்டியதில்லை. காட்டில் பாடுபட்டு, வேனாக் கொதிக்கிற வெயிலில் வேலைகள் செய்து வியர்த்து, அதுவே உறைந்து, உப்பாகப் படிந்த அந்த வெள்ளை வரிகள்தான் அவள் நெற்றியில் அடிக்கடி பூக்கும்.

திருநீறுகூட பூசத் தெரியாத பாட்டாளிக்கு... கோயில் குளத்து ஆசை எப்படி வந்தது? இது ஒன்றும் அவளுக்குப் பக்தியில்லை. பூஜையில்லை. கொண்டாட்டம்தான்! சிதறிக் கிடக்கும் உறவுகளை, கூப்பிட்டுக் கொண்டாடுகிற பூரிப்புக் கலாசாரம்தான்.

'நாங்க ஒண்ணும் வக்கத்துப் போய்த் திரியலே. எங்களாலேயும் வாடகை வேன் பிடித்து, கோயிலுக்கு உறவுகளை அழைத்துப் போய் ஆக்கி அவித்துப் பரிமாறிக் கொண்டாட முடியும்' என்று காட்ட விழைகிற விருப்பம். சம்சாரிக்குரிய விருப்பம்.

நல்ல ஆசைதான். தப்பில்லை. படக்கூடாத ஆசையில்லை. நியாயமான ஆசைதான்.

ஆனால்... பணம்?

'சோற்றுக்குள் இருக்கிறான் சொக்கப்பன்' என்கிற சொலவடை மாதிரி... எல்லாச் சுகங்களும் ஆசைகளும் பணத்தின் ஆதாரத்தில்தானே வேர் பதிக்க முடியும்?

பணமில்லாமல் எது நகரும்?

பணத்துக்கு எங்கே போக?

சொஸைட்டிக் கடன் கட்டவா? மூழ்கப் போகிற நகையை, தங்கநகையை மீட்கவா? சீட்டுக்காரருக்குப் பதில்சொல்லவா? உரக்கடைக்காரருக்கு முழங்கையைக் காட்டவா? பலசரக்குக் கடைக்காரருக்கு நெஞ்சைக் காட்டவா?

எந்தக் கடனை எப்படி அடைக்க?

எள்ளும் பருத்தியும் எல்லாமே சேர்ந்தாலும் இதில் பாதிக் கடனைகூட அடைக்கமுடியாதே... கடனை அடைக்கக்கூட இயலாத நிலையில் வெள்ளாமையும் விளைச்சலும்.

இந்த லட்சணத்தில் இவளுக்கு இப்படி ஒரு ஆசையா?

கொடுமை...!

வாடகை வேன்... புதுத்துணிமணி... உறவழைப்பு... பொங்கல் வைப்பது எல்லாம் சேர்ந்தால்... எம்புட்டு ஆகும்? எம்புட்டுத்தான் பல்லைக்கடித்துக் கையைச் சுருக்கிச் செலவழித்தாலும் எட்டாயிரம் ஆகுமே?

இதுக்கு எங்கே போக? எந்த வெள்ளாமையைக் காவு கொடுக்க? வீட்டு லட்சணமும் காட்டு நிலவரமும் தெரிந்த சரசுவா இப்படி ஆசைப் படுகிறாள்? விரலுக்கு மீறின வீக்கமான ஆசை? விபரீத ஆசை...? வேண்டாத ஆசை? கடன் பட்ட குடும்பத்துக்கு இந்த ஆசையெல்லாம் இருக்கலாமா?

சரசுக்கு எப்படி வந்தது இந்த ஆசை? அறிவுகெட்டுப் போனாளா? வீட்டு நிலவரம் மறந்து... அவளுக்குப் புத்தி பேதலித்துவிட்டதா? சமுத்திரத்துக்குள் கோப அலைகளின் ஆர்ப்பரிப்பு.

## 12

**வீ**ட்டு வாசல்படியைத் தாண்டி முற்றத்தில் கால் வைத்தான் சமுத்திரம். அவனது தோளைப் பற்றி அழுத்தி நிறுத்துகிற குரல். "எங்கே போறீக?"

இது சரசுவின் குரல்தானா? இந்தத் தொனியில் இந்தக் குரலை இவன் கேட்டதேயில்லை. இதுவே சரசுதானா? சரசு உருவில், வேறு எதுவுமா?

அவனுள் வினோத நினைவுகள் படர... ரெண்டாம் சமுத்திரமாக விலகி நின்று... இந்தச் சூழலைப் பரிகசித்து ரசித்தான். நல்ல கூத்துதான்...!

இப்போதைய சரசு, ரெண்டு நாளாக முறுக் கேறிப் போன சரசு. விறைப்பையும் வெடிப்புமான சரசு. கரடுமுரடாக முட்டி மோதி, உடைந்து, உடைக்கிற சரசு. ரசாபாசமான சரசு!

என்னாச்சு இவளுக்கு?

சோகமோ, வருத்தமோயில்லாமல் பரிகாசமாகச் சிரித்துக் கொண்ட அவன் உதடுகள்.

மறுபடியும் சரசுவின் முரட்டுக் குரல்.

''எங்கே போறீக?''

''ஒரு திக்கும் இல்லே. சும்மாதான்!''

ரொம்பச் சாந்தமாக சமுத்திரம். அலையில்லாத பேரமைதியாக அவன் குரல்.

''எங்க போறதானாலும் சாப்பிட்டுப் போங்க.''

உத்தரவு போல கர்ணகடூரமாக ஒலிக்கிற சரசுவின் குரல். 'சாப்பிடுங்க' என்ற கனிவு இல்லை. குழைவு இல்லை. ஒப்புக்கு மாரடிக்கிற பொறுப்பற்ற தன்மை. 'எங் கடமை முடியணும். அதுக்காகத் தின்னு தொலைச்சுட்டுப் போங்க' என்கிற சள்ளையும் எரிச்சலும் உள்முகங்களாக உள்ள ஒரு பாசமற்ற குரல்.

சமுத்திரத்திற்கு ஒன்றும் சொல்லத் தோன்ற வில்லை. சொல்லாமலும் இருக்க முடியாது.

''நா எங்கேயும் போகலை. வெளிப்பானையிலே கால்கை கழுவத்தான் போறேன். சோத்தை வை. சாப்புடாம நா எங்க போறது? சாப்புட்டுத்தானே ஆகணும்.''

சிதையாமல், சிந்தாமல் வெளிப்பானைக்கு வந்தான். முற்றத்தின் அக்னிமூலையில், பெரிய வட்டமான சிமெண்டுத் தொட்டி, அதுநிறைய தண்ணீர். தொட்டியைச் சுற்றிலும் பெரிய பெரிய

மண்பானைகள். நீர்நிறை பானைகள். பக்கத்தில் அகலமான கருங்கல்.

சுற்றிலும் ஈரம் ததும்புகிற மண். மண்புழு நெளிந்த அடையாள ரேகைகள். சிள்வண்டின் முடிவில்லாத இரைச்சல். பாசிபடிந்த பச்சை மண்.

கல்லில் ஏறி நின்றான். தகரக்குவளையால் தண்ணீர் அள்ளி, முகத்தை, கழுத்தை, கையை, காலை எல்லாம் ஊற்றி ஊற்றிக் கழுவினான். கொடியில் கிடந்த துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

ஈரத் தண்ணீரால் கழுவித் துடைத்த போது, மனசும் அப்படியே சுத்தமாகிறது. புடைத்தெடுத்த தான்யம் போலாகிறது. மனசுக்குள் பரவுகிற அந்தச் சுகப் பரவசத்தை ஆழ்ந்து ரசிக்கிற ஆசையில், ஆற அமரத் துடைத்தான். பதறாமல் நிதானமாக யோசனையோடு துடைத்தான். ஆழ்ந்த யோசனைகள், உள்ளுக்குள் கிளை பிரிந்து ஓடிற்று.

ஏன் இப்படி சரசு செய்கிறாள்? எப்போதும் இல்லாத புதுத் தோற்றம் காட்டுகிறாளே, ஏன்? வந்த இடம் நல்ல இடம். கூடுதலான கெளரவம் கிடைக்கிற இடம்' என்று பெருமிதத் திளைப்பில் இருந்த சரசு, ஏன் இப்படி மாறினாள்?

என்ன காரணம்? ஏனிப்படி மாறிப்போனாள்? அவளுக்குள் என்ன நோக்கம்? துணிமணி எடுக்க வைக்கிறதுதானா?

அது வருஷா வருஷம் எடுக்கிறதுதானே? வருஷத்துக்கு ரெண்டு தடவைகூட எடுத்துருக்கமே...

ஆடி, தீபாவளிக்கு எடுக்குறதில்லே. கையிலிருக்கிற காசையும் கடன் வாங்குகிற பணத்தையும் நெலத்துலே போடுற காலம். ஆனா, தைப் பொங்கலுக்கு, பங்குனிப் பொங்கலுக்கு புதுத் துணிமணி எடுத்து விடுறது வழக்கம். மானவாரிச் சம்சாரிக்கு விளைச்சல் பணமாக கைமாறுகிற மாதங்கள் இவை.

வருஷா வருஷம் வழக்கமாகச் செய்ற ஒரு காரியத்துக்கு என்ன வற்புறுத்தல் வேண்டிக்கிடக்கு? வம்பு வழக்கு ஏன் பண்ணணும்? சண்டைத் சத்தம் போட்டுச் சாதிக்க வேண்டிய அவசியம் என்ன வந்துச்சு?

அப்ப... புதுத்துணிமணி, மட்டுமில்லே பிரச்சினை. வேற கோரிக்கையும் இருக்கு. வாடகை வேன்.. சொந்தபந்த அழைப்பு... குலதெய்வக் கோயிலில் பொங்கல் வைப்பது... அதோடு புதுத் துணிமணியும் அவள் ஆசை இதுதான். கோரிக்கை இதுதான்.

எட்டாயிரம் ரூபாய் செலவாகும். அவ்வளவு ரூபாய்க்கு இப்போது என்ன வழி? ஏது மார்க்கம்? எந்தக் கடனை நிறுத்த? எந்த வெள்ளாமையை அடகு வைக்க? முடியுமா? நடக்குமா? கடன்காரன் விடுவானா? சட்டையைக் கொத்தாகப் பிடிக்க மாட்டானா? கோபக்கத்தலில் ஊரைக்கூட்ட மாட்டானா? மூஞ்சியில் காறித் துப்பமாட்டானா? ஏழுவண்டிக் கேவலம் வந்து சேராதா?

சரி... அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

*அப்படியே வரக்கூடாத ஆசை வந்துட்டாக் கூட - விரலுக்கு மிஞ்சுன வீக்கம் வந்தாக்கூட.... ஆற அமரப் பேசக்கூடாதா? 'இப்படிச் செய்யலாமா, அப்படிச் செய்யலாமா' என்று இங்கிதமாக கலந்து பேசக் கூடாதா? 'போக முடியுமா... முடியாதா' என்று சாந்த பாந்தமாக யோசிக்கக்கூடாதா? யோசித்துப் பேசக் கூடாதா?*

*அதையெல்லாம் விட்டுவிட்டு. ஏனிந்த ஒளிவு மறைவு? உள் ஒன்று வைத்து, வெளியொன்று பேசுகிற பாவலா ஏன்? அதட்டலும் மிரட்டலும் எதுக்கு? கதறிக்கத்தி, அழுது ஆர்ப்பாட்டம் செய்து, காரியம் சாதிக்கிற சாமர்த்தியமா? புருஷனைத் தொல்லை செய்து... மனஉளைச்சலை ஏற்படுத்தி... பய முறுத்தி... பணிய வைக்கிற முயற்சியா? இது என்ன அத்துமீறல்?*

*தாம்பத்யமா, இது வியாபாரமா?*

*மனசை கண்ணில் வைத்து, வெள்ளை முகம் காட்டி புன்னகைப்பதல்லவா தாம்பத்யம்? பேரம் பேசும் வியாபாரிகளைப் போல் காட்டுக்கத்தலும் கள்ளத்தனங்களும் மிரட்டல் உருட்டலில் ஏமாற்றிக் காரியம் சாதிப்பதும்... இது என்ன கூத்து?*

*இதற்குப் பணிவதா? இசைவதா? 'விட்டுக் கொடுத்து வாழ்தலே தாம்பத்யம்' என்ற பக்குவம் இளிச்சவாய்த்தனமாகிவிடக்கூடாதே...!*

*இன்றைக்கு அடம்பிடித்து இந்தக் காரியத்தைச் சாதிப்பதில் வெற்றிகண்டு விட்டால்... இதையே ஓர்*

உபாயமாக அவள் எடுத்துக்கொண்டால்? ஒவ்வொரு தடவையும் இதே கத்தல், மிரட்டல், நாடகம் நடிக்க ஆரம்பித்துவிட்டால்? ஒவ்வொரு தடவையும் பணிவதா? இசைவதா? வளைவதா? சுயமிழப்பதா?

இதென்ன, வாழ்க்கையே ஒரு கூத்துதானா? பாவனைகளும், பாவலாக்களும் மலிந்த நாடகம் தானா?

இல்லை... வாழ்க்கை எப்போதும் வாழ்க்கை தான்.

இதை முதலில் சரசுவுக்கு உணர்த்தணும்.

''அடிப் பெண்ணே... ஆம்பளையை வளைச்சிட முடியாது. அதட்டி மிரட்டிட முடியாது. இது உனக்குப் புரியணும்.''

சமுத்திரத்திற்குள் எண்ணப் பிரளயங்கள். நினைவலை ஆர்ப்பரிப்புகள். யோசனைப் புயல்கள்.

தெளிவாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். கழுவித் துடைத்த உடம்பில், புடைத்தெடுத்த தான்யமாய் ஒரு சுகப் பரவசமும் புத்துணர்ச்சியும் பரவுகிற தருணத்தில்...

ஒரு வைராக்கிய முடிவுக்கு வந்துவிட்டான்.

பணிஞ்சிரக் கூடாது. சரசுவோட திட்டத்துக்கு அசைஞ்சு குடுத்துரக்கூடாது. என்ன ஆனாலும் சரி, எம்புட்டுக் கோபதாபம் ஆனாலும் சரி, அடிபிடியே ஆனாலும் சரி... வளைஞ்சு குடுத்துரக்கூடாது!

மீசை வைச்ச ஆம்பளைங்குற கம்பீரத்தை நிலை நிறுத்தியாகணும்...!

சமுத்திரத்துக்குள் இந்த வைராக்கிய முடிவு, ஒரு தெளிவைத் தந்தது. ஒரு வெளிச்சத்தைத் தந்தது. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

சாம்பார் வாசம் அவன் நாசியைத் துளைத்தது.

வீடே சண்டைகாடாகப் போகிறது. கூச்சலும் கூப்பாடுமாய் குடும்பமே குழப்பமாகி... சாம்பார் வாசமெல்லாம் நாறப்போகிறது.

## 13

கரிசல்காட்டிலிருந்து 'வெக், வெக்' கென்று நடந்து வந்தார் தரகர் மாணிக்கம். நாயக்கர் தோட்டத்தில் பல்லாரி எப்படிப் பருத்திருக்கிறது என்று பார்க்கப் போயிருந்தார்.

நன்றாகவே பருத்திருக்கிறது. பல்லாரித் தோகைகள் வாடிக்கிடந்தன. எடுக்க வேண்டிய பருவம்தான். நாயக்கரும் படிந்து வருகிறார். ஏவாரியும் இணங்கி வருகிறார். எப்படியும் 'முடிச்சு' வைச்சிரலாம்.

சரக்கு... விலை திகைந்துவிடும்.

மாணிக்கம் நடையில் ஒரு துள்ளல். திரேகத்தின் சகல அணுக்களிலும் மன உற்சாகத்தின் ஒளிச் சலனம். இடுங்கிய கண்களும் நரைத்த ரோமக்கட்டைகளும் தேகச்சுருக்கங்களும் வயதின் முதுமையைக் காட்டியது. முதுமைக்குப் பொருந்தாத இளமைக்

கலகலப்பும் துடிதுடிப்புமாக வந்தார். அவர் கையில் நாலைந்து பல்லாரிகள். நீளத் தோகைகளுடன் பூனை ரோம வேர்களுடன் சிவப்பு உருண்டைகள் பல்லாரிகள். மாதிரிக்குப் பிடுங்கியது?

வந்த வழியில்...

அவர் பார்த்த கரிசல்காடு. கம்மங்கதிர்ப் புஞ்சைகளும் பருத்திப் புஞ்சைகளுமாய் பச்சைப் பசேலென்று விரிந்துகிடந்த கரிசல்காடு. அவர் பார்வையையும் மனசையும் உறுத்திய அந்த எள்ளுப் புஞ்சை. சாம்பல் நிறப்பசுமையும் மஞ்சளாய் பழுத்த இலைகளுமாய் எள்ளுச்செடிகள். கிளைகிளையாகப் பிரிந்து வளர்ந்திருந்த செடிச்செழிப்பு, ஒவ்வொரு கிளையிலும் உச்சியிலிருந்து தூர்வரைக்கும் சடை சடையாகப் பின்னியிருந்த காய்களின் அடர்த்தி.

அனுபவப்பட்ட கிராமத்தான் மாணிக்கம். வியாபார மனசு, வியாபாரக் கண், வியாபார ஞானம். பார்த்த கணத்தில் எதையும் துல்லியமாகக் கணக்குப் போட்டுவிடுவார்.

நாலு குறுக்கம் நற்சதுரக்காடு. ஏற்ற இறக்க மில்லாத விளைச்சல். ஒரே பசுமைக்கடல்.

'சேதாரமில்லாம அடிச்சு எடுத்துட்டா... எள்ளு பத்து மூடைக்குக் குறையாது. ஒரு மூட்டை ஆயிரத்து முந்நூறு ரூபாய். பதிமூன்றாயிர ரூபாய் வெள்ளாமை.

பரவாயில்ல. நல்ல செழிப்பான வெள்ளாமை தான்!

இது யாருடைய காடு?

சமுத்திரம் மாப்பிள்ளை காடுதானா? அவருக்கு ஒரு யோகம்தான்.

மனசுக்குள் பலதையும் நினைத்துக்கொண்டு வந்தார் மாணிக்கம். ஊர் மைதானத்தில் வரிசையாக வேப்பமரங்கள். குடை குடையாக வேப்பமரங்கள்.

மரநிழலில் கிராமத்துஜனம். துண்டு மூடியும் பனியன் போட்டும் வெற்றுடம்பாளும் பல தினுசுகளில் ஆட்கள். பேய்ஞ்சு கெடுத்த மழையைப் பற்றி பேச்சு நடந்தது. ஆற்றில் வெள்ளம் போனதை யும் வெள்ளத்தில் நடந்த விதம் விதமான விபத்து விநோதங்களையும் விநோத விபரீதங் களையும் பற்றியெல்லாம் பேச்சு விரிந்தது.

வந்து கூட்டத்திற்கு முன்பு நின்றார்.

''ஏவாரி இங்குட்டு வந்தாரா?''

''யாரு... பல்லாரி ஏவாரியா?''

''ஆமா...''

''டி.வி.ஸ். பிஃப்டியிலே இப்பத்தான் கிழக்காலப் போறாரு.''

''சரி... போனவரு வரத்தானே செய்வாரு? வரட்டும்.''

மாணிக்கமும் மடித்துக் கட்டிய வேட்டியை இறக்கி, கால்வரை விட்டு, தலையில் வட்டக் கட்டாகக் கட்டியிருந்த துண்டை எடுத்துத் தரையில் போட்டு அதன்மேல் அமர்ந்தார். பக்கத்தில் சாம்பிளுக்கு பிடுங்கி வந்த பல்லாரிகளைப் போட்டார்.

கூட்டத்தின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த சமுத்திரத்தின்மேல் விழுந்த இவரது கண். நடந்து கொண்டிருந்த சுவராஸ்யமான பேச்சுக்கள் எதிலும் ஒட்டாமல்... எண்ணெய்யில் விழுந்த தண்ணீராக ஒதுங்கி நின்ற சமுத்திரம்.

அவன் முகத்தில் அப்பிப் போயிருந்த கவலை. எத்தனை திரை போட்டு மறைத்தாலும் கண்ணுக்குள் நிழலாடும் மனத்துக்கம். உலர்ந்த உதட்டில் ஈரச்சோகம்.

''என்ன... மாப்புள்ளே வீட்டுலே சண்டை கிண்டையைப் போட்டுட்டு வந்திருப்பாரோ... வருத்தமா உக்காந்திருக்காரே.''

மனசுக்குள் ஓடுகிற யூகஎண்ணம், தக்கையிலேயே நங்கூரப் பார்வை பதிக்கும் தூண்டில் காரனைப் போல... அவரது குறியும் பார்வையும் சமுத்திரத்தின் மீதே விழுந்தே கிடந்தது.

அவருக்குள் நற்சதுரமாக விரிந்து படர்ந்து பசுமைக்கடல். சடை சடையாகப் பின்னிக்கிடந்த எள்ளுக்காய்களின் நெரிசல்.

மாணிக்கத்துக்குள் வலைபின்னுகிற நினைவுகள். விதவிதமாக வகை வகையாக வலை பின்னுகிற யோசனைகள்.

அவரது அரை மனசுக் கூட்டத்தின் பேச்சைக் கூர்ந்து கவனித்தது. எந்தக் கட்டத்தில் பேச்சை கட் பண்ணி தான் குறுக்கிட்டு... தன் வலைப்பேச்சை விசிறியெறியலாம் என்ற எதிர்பார்ப்பில் காத்திருந்தார். கண்ணி வைத்துக் காத்திருக்கும் குருவிக் காரனைப்

போல... ஆற்று வெள்ளம் அதில் இழுபட்டுப்போன ஒரு உயர்ஜாதிப் பெண். அவள் அலறிய மரணக் கதறல். ஆற்றின் கரையில் நின்று கொண்டு 'குய்யோ, முறையோ' என்று கத்திக் கதறிய ஊர்ஜனங்கள். சொந்த ஜாதி ஜனங்கள் யாரும் குதிக்கவில்லை.

ஓர் இளவட்டம் குதித்து விட்டான். ஏகாலி. துணி துவைக்கிற தலித். அந்தப் பெண்ணை நெருங்க வேண்டுமானால், ஒரு பெரிய சுழல் பள்ளத்தைத் தாண்டியாக வேண்டும். உயிர்ப் பணயம் கேட்கிற பகாசுரச் சுழல். அதற்கும் அவன் துணிகிற தருணம்.

அப்போது வெள்ளத்தால் உருட்டப்படுகிற பெண். கரையில் நிற்கும் ஜனம். ஏகாலிப் பையனைப் பார்த்துச் சொல்கிறாள். ''கையை மட்டும்தான் பிடிக்கணும். வேற எங்கயும் தொட்டுரக்கூடாது.''

''உயிர்ப் பணயம் வைக்கத் தயாரான அந்த இளவட்டம், இந்த வார்த்தைகளினால். விளக்கு மாற்றடியால் - சற்றே திகைக்க - குழம்பி யோசிக்க ஆபத்துக்குப் பாபமில்லே'' என்ற பழமொழி யெல்லாம் மனசில் உரசி விலக...

அந்தத் தாமதக் கணங்களில், காப்பாற்ற முடியாத தூரத்துக்கு அவளை இழுத்துச் சென்று காவு கொண்டுவிட்ட வெள்ளம். இந்தச் சம்பவத்தை ஒருத்தர் காட்சிச் சித்திரமாக வார்த்தைகளால் தீட்டிக் கொண்டிருந்தார். எல்லார் முகத்திலும் ஒரே சோகம். ''அடா... அடடா... ''ச்ச்தூசூச்'' என்ற பரிதாபச் சொற்கள். அனுதாப உணர்வுகள்.

எல்லோருடைய மனசுக்குள்ளும் —

சந்தனக்கரைசலாக கரைபுரண்டோடுகிற சீற்றமிகு வெள்ளத்தில் சாய்ந்து கிடக்கும் வேலி மரத்தில் ஈரத்துணியால் சுற்றித் துவண்டு கிடக்கும் ஒரு பெண் பிரேதம். வெள்ளத்தில் மிதக்கிற அவளது கருங்கூந்தலின் பரவல். ஒரு வாழ்வின் கனவே ஸ்தம்பித்துப்போன மாதிரி அந்தப் பிரேதம்.

மாணிக்கத்திற்குள்ளும் இந்தச் சித்திரம், ஈரப் பிசைவாக பிசைந்தது. மனசுக்குச் சங்கடமாக இருந்தது. 'சாதி என்ன சாதி... சாதியா வந்து காப்பாத்துச்சு...? தொடாதேன்னு சொன்னா... தொடாமெ வெலகிப் போயிருச்சு உசுரு. அறிவுகெட்ட நாயி! ஆபத்துக்குப் பாவமில்லேங்குற அறிவில்லாமப் போச்சே... ச்சேய்!'

இவருக்குள் ஓடிய ஈரம் மிகுந்த விமர்சன எண்ணம். கனிந்த மனசின் கனல் கோபம்.

அப்படியே பேச்சு, வெள்ள விபத்துக்களாய் நீளும் போலத் தோன்றியது. அனுமார் வாலாக நீண்டது. சமுத்திரத்தைப் பார்த்தார்.

மாப்பிள்ளை 'இதை'க் கேட்கவேயில்லை போலிருந்தது. அதே முகம், அதே உணர்வு, அதே துக்க நிழல். வீட்டுச் சோகத்திலேயே 'விழுந்து' கிடக்கிற சமுத்திரம்.

மாணிக்கம் சமயம் பார்த்துக் குறுக்கிட்டார்.

''ஏய் இருங்கப்பா, மழை தண்ணி, வெள்ளம் சாவுன்னு பேசினதையே பேசிக்கிட்டு. வேற என்னத்தையாச்சும் பேசுங்கப்பா.''

''ஒமக்கு இச்சிலாத்தியாப் போச்சாக்கும்? வேறு என்னத்தைப் பேசுறது?''

''அடப்பாவிகளா... என்ன இப்படிச் சொல்லிட்டீக? சம்சாரிக வவுத்துலே பொறந்த சம்சாரிக. வெள்ளாமை வெளச்சலைப்பத்தி பேசக்கூடாதாக்கும்? காடுகரை நெலவரம் பேசக்கூடாதாக்கும்?''

''பேசுறாப்லேயா காடுகரைக இருக்கு? வருசா வருசம் காய்ஞ்சு கெடுக்கிற மழை, இந்த வருசம் பேய்ஞ்சுகெடுக்கு. நல்ல தண்ணிக்காட்டு வெள்ளாமையெல்லாம், கண்ணுமுழி பிதுங்கிப் போய் நிக்குது. மொளகாய் செடிக வேர் அழுகிப் போய்க் கிடக்கு. பருத்திக்காட்டுலே புழு மேய்ச்சல் தாறுமாறா இருக்கு.''

அவலப் புலம்பலாய் சோகப் பாட்டு பாடிய அந்தக் கதர்துண்டுக்காரரை இடைவெட்டினார் மாணிக்கம்.

''அதென்ன, அப்படிச் சொல்லிட்டீக. நம்மூரு மானாவாரி கருசக்காட்டு வெள்ளாமை நல்லாத் தானே இருக்கு...?''

''ஏதோ... சுமாரா இருக்கு. பரவாலே...''

''அப்படியெல்லாம் மழுப்பாதீருமய்யா. பிரமாதமான வெள்ளாமை. எந்த வருஷமும் இப்படி இருந்ததுல்லே!''

''அது நெசம்தான். ஆனா... புல்லும் புளுச்சியுமா கிடக்கு.''

''இதானே... சம்சாரிகப் பெறவிக் கொணம்.''

''என்ன கொணத்தைக் கண்டுட்டீரு?''

''எவ்வளவு நல்ல வெள்ளாமையாயிருந்தாலும் ஒத்துக்கிடமாட்டீக? செழிச்ச வெள்ளாமையைக்கூட 'ஏதோ, பரவாலே'ம்பீக... மத்தவுக கண்ணு போட்டுருவாங்கன்னு பயம். திருஷ்டி வுழுந்துரும்னு ஒரு நெனப்பு. 'ஒண்ணுமில்லே. ஒண்ணுமில்லே'ன்னு பொலம்பிச் சாவீக...''

''அதெல்லாமில்லே? உள்ளதைச் சொல்லுறதுலே என்ன பயம். எங்க வெள்ளாமை நல்லாயிருக்குன்னு சொன்னா... நீரு வந்து அள்ளிக்கிட்டா போயிடப் போறீரு?''

''சொல்லணும்லே? சொல்லமாட்டீக இல்லே...''

''சொல்லாமலா இருக்காக?''

''இப்ப இந்தா சமுத்திர மாப்புள்ளே இருக்காரு. இவரு கருசக்காட்லே எள்ளு வெதைச்சுப் போட்டுக் காரு. வெள்ளாமை எப்படின்னு அவருகிட்ட கேட்டா... நல்லாயிருக்குன்னு சொல்லுவாரா? சொல்லமாட்டாரு...''

''ஏன் சொல்லமாட்டாரு? எதுக்குன்னு கேக்கேன்?''

''நீருதான் கேட்டுப் பாருமே ... ஏம் மாப்புள்ளே நீரே சொல்லும், எள்ளு வெள்ளாமை எப்படி?''

''ஏதோ இருக்கு... பொதுவா...''

''அதென்ன, முழுங்கி முழுங்கி மொட்டையாப் பேசுனா? எப்படி? எம்புட்டுக் காடு?''

''நாலு குறுக்கம்.''

''ஓரம் போட்டுருக்கீரா?''

''ஏழு டக்கரு சாணிக்குப்பை. நாலு உழவு. ஒரு களை வெட்டு, காய்ப் பருவத்துலே ஒரு மருந்தடிப்பு.''

''இதானே செலவு?''

''ஆமாம்...''

''எள்ளு எம்புட்டு வரும்? ஒம்பது மூடை வருமா?''

''அம்புட்டு எல்லாம்... வராது. என்னத்தையோ... ஏழு மூடை எள்ளு வந்து சேரும். ஏழு மூடை கை சேர்ந்தாலே... பெரிய விஷயம்.''

''பாத்தீகளா, மாப்புள்ளே சொல்றதை? ஏழு மூடை வர்றதே பெரும்பாடாம். இதுதான் சம்சாரிக கொணம்னு நா சொல்லுதேன்.''

''இதுலே என்ன கொணத்தைக் கண்டுட்டீரு?''

''ஆமாம். ஏழு மூடை எள்ளு வர்றதே சந்தேகம்ங்குறாரு. இந்தாங்க ஆயிரரூபா அட்வான்ஸ். எட்டு மூடை எள்ளுன்னு வைச்சுக்கிடட்டும்.''

விளையாட்டான பேச்சு, மெல்ல வினை (செயல்) யாகிக் கொண்டிருக்கிற மாதிரி இருக்கிறது. நூறு ரூபாய் தாள் பத்தை எடுத்து நீட்டுகிறார் மாணிக்கம். மொத்த தோட்ட வெள்ளாமையையே கிரையமாகக் கேட்கிறார். நிஜமா, வேடிக்கையா, விளையாட்டா, வினையா என்ற பயமெல்லாம் விலகிக் கரைந்து... நிலைமை வெகுசுத்தம்.

நிஜம்தான். வினைதான். சீரியஸான விவகாரதான்.

''என்னய்யா சொல்றீரு?'' கதர்த்துண்டின் கேள்வி.

மாணிக்கத்தின் வாய்மூலத்தில், அவரது மனமூலத்தைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற குறி. சமுத்திரம் படபடக்கும் மாணிக்கத்தையே பார்த்தான்.

''வெளஞ்சவுடனே அறுக்கணும். களம் சேர்க்கணும். சூடு வைக்கணும். காவல் காக்கணும். எள்ளை அடிச்சு ஒதறி ஒதுக்கணும். எல்லாம் சமுத்திரம் மாப்புள்ளே பொறுப்பு. ஒதுங்குன எள்ளு எம்புட்டு இருந்தாலும்... நா அள்ளிக்கிடுதேன். சமுத்திரம் மாப்புள்ளே எட்டு மூடை எள்ளுக்குக் கிரையத்தை வாங்கிக்கிடட்டும். என்ன நா சொல்றது?''

எதிலோ சிக்கிக்கொண்டவனைப் போல சமுத்திரம் மட்டுமல்ல, சகலருமே முழித்தனர். மாணிக்கம் வெற்றிக்கெலிமிதமாகப் புன்முறுவல் செய்கிறார்.

## 14

**வே**ப்பமரங்களே திகைத்தன. காற்றுக்குச் சலசலத்த வேப்பிலைகள் ஒரு கணம் சலனமற்று உறைந்து நின்றன. அந்தச் சூழலே மௌனச் சுமையில் முகம் மாறியது. வேடிக்கைப் பேச்சும் விளையாட்டுச்

சிரிப்புமாக கைப்பிள்ளை கையில் சிக்கிய கிளு கிளுப்பை மாதிரி, சூழலே கலகலப்பாக இருந்தது. மாணிக்கம் நீட்டிய ஆயிரரூபாயிலும் பேசிய பேரத்திலும் சூழலே 'கச்சிப்' பாயிற்று.

'என்ன பதில் சொல்றது' என்ற திணறல், எல்லோருக்குள்ளும் இருந்தது. சமுத்திரத்துக்கு ரொம்பக் கூடுதலான திணறல். தவிப்பு.

'விளைந்த வெள்ளாமையை அறுத்தோம். களம் சேர்த்தோம். பொதிபொதியாக வைத்து சூடு வைத்தோம். பிரித்தோம். உலர்த்தினோம். உதறி எடுத்தோம். உள்ளது எவ்வளவோ... 'அது எட்டு மூடையோ, பத்து மூடையோ அதை அப்படியே துட்டாக்கினோம்' என்று இருப்பதுதான் வழமை. வழக்கம். சமுத்திரத்துக்கும் அப்படித்தான். வம்பு வழக்குக்கு இடமில்லாத - இடறல் சிக்கலுக்கு இடமில்லாத இயல்பான வழக்கம்.

இது என்ன... புதுசு? வெள்ளாமையை வைத்துப் பந்தயமா? எல்லா வேலைகளையும் செய்து கொடுத்து, எள்ளைத் தந்துவிட்டு, எட்டு மூடை எள்ளுக்கான ரூபாயை பெற்றுக்கொள்வது பெரிய நட்டமோ... இல்லையோ நியாயமாகப்படவில்லை.

ஒருவேளை...

அடித்து முடித்த எள் ஏழுமூடையாகி... ஆயிரத்து முந்நூறு ரூபாய் நட்டத்தை மாணிக்கம் சுமந்தால்... அப்போது சமுத்திரம் சந்தோஷப்பட முடியுமா? 'நம்மாலே அவருக்கு நட்டமாச்சே' என்கிற வீணான மனஉளைச்சல்தான்.

ஒருவேளை.. உதறி எடுத்த எள், பத்து மூடை வந்துவிட்டால்... ரெண்டாயிரத்து அறுநூறு ரூபாய் ஆதாயத்தை அவர் அடைந்துவிட்டால்... அதில் சந்தோஷப்பட முடியுமா? அதுவும் முடியாது.

''இளிச்சவாயன். ஏமாந்துட்டான்'' என்று ஊரெல்லாம் சமுத்திரம் பரிகசிக்கப்படுவான், ''வெளைய வச்சு பறிகுடுத்துட்டான்'' என்று ஏளனம் செய்யப்படுவான். ''கண்ணைத் தொறந்துகிட்டு வெளக்கையும் புடிச்சுகிட்டுக் கெணத்துல வுழுற கில்லாடி நம்ம சமுத்திரம்தானய்யா. 'ஜெகத்துலேயே பெரிய ஏமாளி'ன்னு பட்டம் குடுக்கணுமா? சமுத்திரத்துக்குத்தான் குடுக்கலாம்'' என்று வகை வகையாகப் பேசி வக்கணை பாடும் ஊர். கை கொட்டிச் சிரிக்கும். காறித் துப்பும்!

இதை எல்லாவற்றையும்விட பெரிய விஷயம் - மாணிக்கம் மகா கில்லாடி. பிறவி வியாபாரி. நுட்பமும் திறமையும் நிறைந்த அனுபவசாலி. அவர் பார்த்து, ஒரு பந்தயத்துக்கு ஒருத்தனை இழுக்கிறார் என்றால்...

நிச்சயம் அவன் இழுபடத்தான் செய்வான். அவருக்கு நிச்சயமாக லாபமாகத்தான் இருக்கும். ஆதாயமில்லாமல் ஆற்றோடு போகமாட்டார் மாணிக்கம் என்பது சிறுபிள்ளைக்குக்கூடத் தெரிந்த விஷயம்.

சமுத்திரம் ரொம்ப யோசித்தான். தீர்க்கமான யோசிப்பு. நுட்பமான யோசிப்பு.

இது பந்தயம் மட்டுமல்ல, ஒரு வெள்ளாமையை அடகு வைப்பது மாதிரி. வட்டியில்லாத அடகு. நகை நட்டை அடகு வைக்கலாம். வெள்ளாமையை அடகு வைப்பது சம்சாரி பண்பல்ல. சம்சாரிக்கு அழகு இல்லை. ஒரு குடிகாரப்பயல்தான், வெள்ளாமையின் அருமை தெரியாமல் அடகு வைப்பான்.

ம்ஹூம்... இதில் சிக்கிவிடக்கூடாது. இவர் விரித்த வலையிலிருந்து எப்படியேனும் தப்பித்துவிட வேண்டும். எப்படித் தப்பிக்க...?

மாணிக்கத்தைத் தொடர்ந்து, மற்றவர்களும் சமுத்திரத்தைப் பார்த்து உரத்துக் கேட்டனர்.

''நீ ஏழுமூடை வரும்னே, அவரு எட்டு மூடை தாரேங்குறாரு. நீ என்ன சொல்றே?''

''சரி... அப்படின்னா... எட்டுமூடைக்கான பணம் முழுசையும் முன்கூட்டியே கட்டணும். கட்டுவாரா?''

''எதுக்கு இப்படி நீ கேக்குறே?''

''நாளைக்கு அவரு பேச்சு மாறிட்டா? மார்க்கெட்லே எள்ளு வெலை சரியுதுன்னு வைச்சுக் கிடுவோம். அப்ப இவரும் சரிஞ்சிட்டார்னா?''

''நீ கேட்குறதும் நல்ல பாயிண்டுதான்.''

மாணிக்கத்தை நோக்கித் திரும்பிய கதர்த்துண்டு —

''என்னய்யா சொல்றீரு? ரொக்கமா முழுத் தொகையையும் முன்பணமா கட்டுறீரா?''

''அது முடியாது...'' என்று மாணிக்கம் சுரத்து குறைய... 'இதுதான் சமயம்' என்று சமுத்திரம் ''ரொக்கம் கட்டுனா... நா சம்மதிக்கிறேன். பேச்சு மாறலை'' என்று சத்தம் உயர்த்தி, மாறி மாறி உத்தரவாதம் வழங்க...

'இதுதான் தருணம்' என்று கண்ணியைச் சுண்டினார் 'மாணிக்கம். ''அப்பச் சரி. நா ரொக்கம் கட்டத் தயார்.''

சமுத்திரம் பதறிப்போனான். வலையில் சிக்கி விட்டோமே என்று துடித்தான். 'எப்படிப் பின்வாங்க' என்று யோசித்தான். மனசுக்குள் மின்னலடிக்கிற ஓர் ஐடியா.

''வீட்டுலே மனைவியிடம் ஒரு வார்த்தை கேட்டுக்கிடுதேன்.''

''அதெல்லாம் முடியாது. பேச்சுன்னா... இங்கேயே முடியணும்.''

''அதெப்படி? இங்க பேசி முடிஞ்சுட்டா... வீட்லே என்ன பதில் சொல்றது? குடும்பத்துலே குளறுபடி வந்துருமே...''

''சமுத்திரம் சொல்றதும் வாஸ்தவம்தானே? குடும்பத்துக்குள் ஒரு குளறுபடி வர்றதுக்கு நாம காரணமாயிருந்துரக்கூடாதுல்லே?'' என்றார் மத்தியஸ்தம் பேசிய கதர்த்துண்டுப் பெரியவர்.

சமுத்திரத்துக்குத் தப்பிக்க ஒரு வழி கிடைத்ததே என்று ஆசுவாசம். செத்துவிடாமல் தப்பிக்க ஒருமாற்று வழி என்று ஆறுதல்பட்டான்.

*ஆனால்...*

*மாணிக்கம் விடாக்கண்டராக இருந்தார்.*

*''அட்வான்ஸைப் புடிக்கச் சொல்லுங்க. சம்மதிக்கச் சொல்லுங்க. முதல்லே ஆயிரரூவாயை வைச்சிருக்கட்டும். வீட்டுக்குப் போகட்டும். கேக்கட்டும். வேண்டாம்னு சரசு சொல்லிட்டா, அட்வான்ஸைத் திருப்பிக் கொண்ணாந்து குடுத்துரட்டும். நா வாங்கிக்கிருதேன்... மறுபேச்சு பேசலே. போதுமா?''*

*சண்டைக்காரர் மாதிரி கூப்பாடு போடுகிற மாணிக்கம். வழியில் போகிறவர், வருகிறவர் கவனத்தை ஈர்க்கிற நோக்கமுள்ள கூப்பாடு. ஊரைக் கூட்டுகிற உள்நோக்கமுள்ள எத்தனிப்பு.*

*''மாணிக்கம் சொல்றதும் ஞாயந்தான். நீ என்னப்பா சொல்லுதே?''*

*சமுத்திரத்தை நோக்கிய கேள்வி, மாணிக்க வலை. தந்திரக் கண்ணி. சமுத்திரத்திற்குள் திணறல், தவிப்பு, 'வாயைக் கொடுத்து, வம்பில் மாட்டிக் கொண்டோமே' என்ற உளைச்சல். பின்வாங்குவதைக்கூட கோழைத்தனம் என்று கருதுவார்களே என்கிற மனஉறுத்தல் வேறு. அவமானமாக உணர்ந்தான்.*

*என்ன செய்ய? எப்படிச் செய்ய?*

ஒரு குடிகாரனைப் போல கீழ்நிலைக்குத் தாழ்ந்து போவது கேவலம். ஏழுவண்டி வெள்ளாமையையே அடகு வைக்க முயல்வது ஒரு சம்சாரி குணமேயில்லை. எல்லாக் காலங்களிலும் தலைமுறை தலைமுறையாய்

சம்சாரிகள் வெள்ளாமையை அடகுவைத்த இவனைப் பற்றி பேசிப்பேசி ஏளனம் செய்வார்கள். கைகொட்டிச் சிரிப்பார்கள். படுகேவலம். இழிவு.

அசிங்கமான தலைகுனிவு. அவமானம். வீழ்ச்சி.

''என்னப்பா சொல்லுதே சமுத்திரம்?''

மீண்டும் அதே கேள்வி.

சமுத்திரம் ஆணியடித்த மாதிரி 'டாண், டாண்' என்று பதில் சொன்னான். ''மாணிக்கம் மாமா மிரட்ட வேண்டியதில்லே. நா ஒண்ணும் நாணயத்துல கொறைஞ்சவனில்லே. வீட்டுலே பேசணும். கேக்கணும். எனக்கு இஷ்டமிருந்தா... நாளைக்குப் பாக்கலாம்.''

அவன் பதிலிலிருந்த விழிப்புணர்ச்சியும் மனவெளிச்சமும் மற்றவர்களையும் ஆகர்ஷித்தது. ஆளும் பேருமாய் சேர்ந்து, மாணிக்கத்தைப் பேசிப் பேசி மடக்கினர்.

## 15

ஈஸ்வரி விரலைச் சூப்பிக்கொண்டே உறங்குகிறாள். பாயில் படுத்திருந்தவள். கொஞ்ச நேரத்திலேயே புரண்டு உருண்டு... பாய்க்கு வெளியே 'குண்டக்க, மண்டக்க' கிடந்தாள். அப்போதும் விரல் சூப்புவதை நிறுத்தவேயில்லை. தூக்க ராகத்திற்கான தாளமே அதுதான். ''சிப்ப்... சிப்ப்... சிப்ப்''

மார்கழிக் கூதல் வாசல் வழியாக நுழைகிறது. தடாலடியாகக் காட்டில் பாடுபட்டு வந்தவள். வீட்டிலும் அடுப்பில் வெந்தவள். சாப்பிட்டுப் படுத்தால் மனசுக்கு நிம்மதி. உடலுக்கு உயிர் வரும். சரசு உடம்பின் ஒவ்வொரு அணுவும் ''உறங்கு, உறங்கு'' என்று கெஞ்சிக் கூத்தாடியது.

ஆனால் சரசு இன்னும் சாப்பிடவில்லை. ஆக்கி வைத்த சோறு ஆறிப்போய்விட்டது. சாம்பார்சட்டியும் ரசமும் மூடி வைக்கப்பட்டிருக்கின்றன. கடிச்சிக்கிடை பீர்க்கைங்காய்ப் பொரியல்.

பசித்த வயிறு கொதிப்பு அடங்கிவிட்டது. பஞ்சாயத்து டி.வி.யில், ஏதோ நாடகம். மரத்துப்போன பசியில் எதுவும் தெரியவில்லை. நடையில் உட்கார்ந்திருந்தாள். சுவரில் சாய்ந்திருந்தாள். களைத்த உடம்பு மட்டுமல்ல, வேர்வை பூத்துப் பூத்து அடங்கி, கசகசக்கிற உடம்பு. குளிக்கக்கூட மனசில்லை. எந்த வேலையிலும் ஈடுபடுகிற ஆர்வமுமில்லை. தெம்பு மில்லை.

மனசு முழுக்க ஒரே குறி. ஒரே எதிர்பார்ப்பு.

'சமுத்திரம் வரட்டும். இன்னைக்கு ரெண்டுலே ஒண்ணு கேட்டுரணும். உண்டா, இல்லையான்னு வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டா கேட்டுரணும். என்ன ஆனாலும் சரி...' மனசுக்குள் ஒரு வைராக்கியம். வன்ம வைராக்கியம்.

ரெண்டு நாளாய் நடந்த வாய்ச் சத்தம். அனல் பறந்த குரல்கள். சிடுசிடுப்பும் கோபமுமாய்

இவளும் ஆசையைச் சொன்னாள். ஆத்திரமும் குமுறலுமாய் தனது வேட்கையை - கனாவை வார்த்தையாகப் பொரிந்தாள். வெளிப்படையாக பாணம் தொடுத்தாள்.

அவனும் மூர்க்கமாய் மறுத்துவிட்டான். அன்பாய் - மிருதுவாய் - புரியும் விதத்தில் இங்கிதமாய் யாருமே பேசவில்லை. எல்லாம் தடாலடிதான். 'தாட், பூட்' தர்பார்தான். காட்டுக்கத்தல்தான். உஷ்ணக் கூப்பாடுகள்தான்.

''ஏழைக்குத் தக்கன எள்ளுருண்டைன்னு சொலவடை. நீ வெடிகுண்டு வேணும்னு கேட்டா... எவன்கிட்டேயிருக்கு துட்டு? இங்க காசு பணம் காய்ச்சுக் கொட்டுதா? செடியிலே பூத்துக் குலுங்குதா? வெளைஞ்சதை வைச்சுக் கடன் ஒடனை அடைக்க முடியுமா, மானமரியாதையோட வீதில நடமாட முடியுமான்னு நா கவலைப்பட்டுப் போய்க் கெடக்கேன். படுத்தா ஒறக்கம் வரலை. கண்ணுலே கடங்காரன் நின்னு மிரட்டுதான். இவா என்ன டான்னா... வேனாம்... வாடகையாம்... கோயிலாம்... கொண்டாட்டமாம்... நல்லா இருக்கு கூத்து! இந்த நெனப்பையே வைச்சுக்காதே... சீரழுஞ்சுபோவே...''

என்று சீறிவெடித்த சமுத்திரம். சரவெடிச் சீறல்கள். அவளும் சளைக்கவில்லை. 'வாய்க்கு வாய், எதிர் வாய்' என்று பாணத்தை எடுத்துவிட்டாள். ''வாக்கப்பட்டு வந்து என்னத்தைக் கண்டேன்? எதைக் கண்டேன்?'' என்று கண்ணீரும் கொதிநீருமாய் தளதளத்தாள்.

ரெண்டு நாளாய் வீடு வீடாயில்லை. மனுசர் மனுசராயில்லை. ஒரே வெக்கையும் வேக்காடும் தான். வெளியே மழையும் தூறலுமாயிருக்க... உள்ளே கொதிநிலை.

சண்டையும் சத்தமுமாய்ப் போட்டு, மனசும் வாயும் உலர்ந்து போன நிலையில்தான் சாப்பாடும் வேலைகளுமாய் வாழ்க்கை யந்திரகதியில் நகர்கிறது.

இந்த நகர்வைச் சகிக்க முடியவில்லை சரசுவால். ஆமைநகர்வு. மனச்சுமைகளின் அழுத்தத்தில் நிகழ்கிற நகர்வு. தாங்க முடியாத மனஉளைச்சலைத் தருகிற நகர்வு.

இதைத் தாங்கமுடியலே. இன்னைக்கு வரட்டும். ரெண்டுலே ஒண்ணு பாத்துரணும். இன்னைக்குத்தான் கடைசி. கடைசி முயற்சி.

சரசுக்கு இப்போதுள்ள ஒரே உஷ்ணம், 'தன் சொல்லுக்கு மதிப்பேயில்லயா' என்ற கேள்வியில் தான். தனது உணர்வுகளும் தானும் அலட்சியப் படுத்தப்பட்டு... அவமதிக்கப்பட்டு... கால்தூசியாய் இழுவிய பிறகும்...

ஊமையாயிருக்கணுமா? பொறுத்துப் போகணுமா? தன்மானம் இல்லாமல், பொறுமை காத்து, மானம் கெட்டு உயிர் வாழணுமா?

இந்த உஷ்ணம்தான் அவளை இயக்கிக் கொண்டிருந்தது. மனசு முழுக்க இதே வேக்காடு. கொதிப்பு. தகிப்பு!

''வரட்டும், வரட்டும்'' என்று காத்திருந்தாள்.

முற்றத்தில் பாதங்களின் அதிர்வு. வெளிப் பானையில் கல்லில் ஏறிநிற்கிற சத்தம். தகரக் குவளையால் தண்ணீரை அள்ளுகிற சத்தம். காலில் ஊற்றுகிற சத்தம். பாத மண்ணை வாசல்படியில் தட்டி உதிர்க்கிற சத்தம். சமுத்திரம் வருகிறான்.

சரசு தடபுடவென்று எழுந்தாள். நெகிழ்ந்து தளர்ந்து நழுவிய கொண்டையை உதறி முடிந்து கொண்டாள். மாராப்பைச் சரிசெய்து கொண்டாள்.

''சோறு வைக்கட்டா?'' சரசுவின் உதட்டுக் கேள்வி. மனசிலிருந்து வராத கேள்வி. ஈரமற்று உலர்ந்த கேள்வி.

அந்தக் கேள்வியின் உலர்வே, அவள் மனசின் வேக்காட்டை உணர்த்தியது. சமுத்திரம் அதையும் அடி மனசில் உள்வாங்கினான்.

சுள்ளென்று கோபம் வந்தது. பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டான்.

''ம்... வை'' என்று இவனும் உறுமினான்.

சாப்பாட்டின் முன் உட்கார்ந்தான். ஏறிட்டு சரசுவைப் பார்த்தான். முறுக்கேறிக் கிடந்த மனசு, வெடுக்கென்று மறுபக்கம் திரும்பிய முகத்தில் தெரிந்தது.

சரசுவின் முகம் சிடுசிடுப்பாக இருந்தது. அடைக்கோழியின் முகம் போலிருந்தது. சமுத்திரத் திற்குள் வெறுப்புணர்வு. மனசே கிடந்து கசந்தது.

அலை அலையாக வந்து மோதி நனைத்து விட்டுப் போகிற பழைய சரசுகள் - புன்னகையும் சிரிப்புமாக, மகிழ்ச்சி நதியாக உலவிய அந்த சரசு.

'குடிசையில் கூலிக்காரியாகக் கிடந்த சிறுக்கியை ஒரு சம்சாரி குடும்பத்தின் தலைவியாக்கிய மகராசன்' என்ற உணர்வின் அசல் முகங்களோடு, மதிப்பும் மரியாதையுமாக நடந்துகொண்ட அந்த மிருதுச் சுபாவ சரசு. கனிவே இயல்பு என்றிருந்த சரசு.

காட்டிலும் உயிரை வற்றடித்துவிட்டு, வீட்டு அடுப்பு வெக்கையிலும் விழுந்து கருகிவிட்டு... பின்னும் பெருமிதப் பூ ஒளியும் வாசமுமாக மிளிரும் முகத்தோடு... தை நிலவாகத் திகழ்ந்த அந்தச் சரசு.

நினைத்தாலே மனசுக்குள் சிலிர்க்குமே...

கல்யாணமாகி வந்த புதிதில், அவள் அடைந்த உல்லாசம். சிறகு முளைத்த பறவையாக அவள் பறந்து திரிந்த குதூகலம். மஞ்சள் தேய்த்த குளிப்பும். மல்லிகைப் பூ வாசமுமாய் அவள் ததும்பி நின்ற இன்பப் பரவசம்.

ஈஸ்வரியை வயிற்றில் சுமந்த நாட்கள்.

''தலைப்பிரசவம் பார்க்கக் கூட எனக்கு தாய் வீடு லபிக்கலியே'' என்று அழுது புலம்பி, கதறிக்கலங்கி, மருகித் தவித்த சரசு.

''ஒனக்குத் தாய்வீடும் இதுதான். வாழ்வீடும் இதுதான். புரியுதா? நா ஒனக்குப் புருஷன் மட்டு மில்லே. அம்மாவும்தான். அம்மா பாசத்துக்கு ஏங்கித் தவிச்ச அம்மா'' என்று சமுத்திரம் சொல்லும் போதே தொண்டைக்குள் கலங்கிவிட்டான். சரசு அப்படியே நெக்குருகிப் போனாள். உள்ளிருந்து பீறிட்டு வெடித்த ஆனந்த அழுகைக் கதறலாக ''ஹ... ம்மா...'' என்று பெரிதாக அலறினாள். அப்படியே அவன் நெஞ்சில்

முகம் புதைத்தாள். அழுது கனிந்த உதடுகளின் குழைந்த ஈரமும் கண்ணீரின் வெப்பமும் அவன் நடுமார்பில் பட்டு மனசே புல்லரித்தது.

பாச நெகிழ்வில் நெக்குருகிப் போய் ஆனந்த உணர்ச்சித் தாண்டவமே ஆடினாள். அந்த உணர்ச்சித் தாண்டவத்திலிருந்து அவளைச் சமநிலைக்கு இறக்கிக் கொண்டுவருவதற்குள் இவன் பட்டபாடு...

அந்தச் சரசுகள். அன்பைக் கௌரவித்த சரசுகள். பாசத்துக்கு ஏங்கித் தவித்துப் புழுங்கிய இவன், காட்டிய பாசமழைக்கு அவள் தந்த கிரீடங்கள். இவன் கண்ணின் இமைகளாகத் திகழ்ந்த அவள்.

பரஸ்பர மனஒற்றுமையில் மலர்ந்த இன்பங்கள். பெற்று வழங்கிய சுகம். வழங்கிப் பெற்ற இன்பம். பெறுவதிலும் சுகம், வழங்குவதிலும் சுகம் என்று வாழ்வையே இன்பமயமாகக் கருதிய அந்தச் சரசு.

குளிர்ச் சரசு, மலர்ச் சரசு, கவிதைச் சரசு, கனிச் சரசு.

அந்தச் சரசுவா... இப்படியாகிப் போனாள்? எந்தச் சூறாவளி, இவளை இப்படி உலர்ந்து போக வைத்தது?

விறைத்த முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்ட இந்தச் சரசு. 'அடப் பாதகத்தி... எது ஒன்னை இப்படியாக்கிருச்சு? கோயில், கொளம், கொண்டாட்டம்னு ஆசைப்பட்டதுலே தப்புல்லே. அது சாத்தியமான்னு யோசிக்க வேண்டாமா? வீட்டுப் பொருளாதாரம் தாங்குமான்னு இவ யோசிக்க வேண்டாமா?

அட... அதுகூடக் கிடக்கட்டும். போக ஆசைப் பட்டா... நேருக்கு நேரா... வெள்ளையா... கேட்க வேண்டியதுதானே? எதுக்கு இந்தச் சாகசம்? பாவ்லா? ஏனிந்த சாடைபேச்சு? ஒளிவுமறைவு? ரகசியப் பேச்சு? அழுகைப்பாவலா? 'என்ன சொகத்தைக் கண்டேன்' என்ற ஒப்பாரிகள்? அங்கலாய்ப்புகள்? முடியுமா, முடியாதா என்ற மிரட்டல் கேள்விகள்? அப்புறம்... 'ஏங்கேள்விக்கு மதிப்பில்லையா'ங்கிற ஆவேசங்கள்? ஆத்திரம்? ஆங்காரம்?

சரசு, ஏம்மா... இப்படி? வா... பழைய சரசுவாக மாறி வா... பத்து வருஷம் தாம்பத்யத்துலே உயிருக்குள் பழகிய அந்த உயிர்ச் சரசுவாக... ஆத்ம தோழி சரசுவாக... மறுபடியும் மாறி வா...

மிரட்டி நிர்ப்பந்திக்கிற ராட்சசி சரசுவே, நீ வேண்டாம். என் ஆத்மபங்காளியான சரசுவாக மாறி வா... ரட்சகி சரசுவாக மாறி வா...

ஈர அலைகள் நெஞ்சுக்குள் மோதி நனைக்க... கண்ணோர இமைகளிலும் அந்த நனைவு . நனைந்த கண்களோடு சரசுவை நிமிர்ந்து பார்த்தான். பதில் இல்லாத பார்வை. மோதிப் பிரவகிக்கும் பார்வை. கிடைக்காத வெறும் பார்வை. ஏமாற்றம் 'சப்' பென்று நெஞ்சுக்குள் அறைய...

அரை உயிராக சாப்பிட்டு முடித்தான் சமுத்திரம். ஆனால், அவனுக்குள் ஆத்திரம் ஆத்திரமாக பொங்கிக் கொண்டு வந்தது.

# 16

**சா**ப்பிட்டு முடித்தான் சமுத்திரம். 'சோலையாய் பூத்துச் சிரித்த வீட்டை நரகமாக்கிவிட்டாளே' என்கிற ஆத்திரத் தீ உள்ளே ஜ்வாலை விட... அந்த ஜ்வாலையின் நாக்கு இவனது கண்வரை வந்தது. கழுவி முடித்த ஈரக்கையை மேல்துண்டால் துடைத்தான்.

மனசு கிடந்து தகித்தது.

அடுப்பங்கரை வாசலில் வந்து நின்றான். உட்கார்ந்திருக்கிற சமுத்திரத்துக்கு நேர் எதிராக அருகில் வந்து நின்ற சரசுவிடம் ஒரு விறைப்பு. முகத்தில் ஒரு மோதலுக்கான யத்தனிப்பு. கோபத்தை, ஆங்காரத்தை - உள்ளடக்கி மெல்லிசாகத் துடிக்கிற உதடுகள்.

ஒரு சண்டைக் கோழி மாதிரி வந்து நின்றாள்.

இறுகிப்போன குரலில், கடுமை தொனிக்கக் கேட்டாள்.

''இப்ப என்ன சொல்லுதீக? பொங்க வைக்க கோயிலுக்குப் போகவா, போகலியா?''

அவள் கேட்ட விதமே, எரிச்சலூட்டியது. மிரட்டும் தொனியிலிருந்தது. எதிராளியைச் சீண்டி விடுகிற மாதிரியான ஒரே குரோதத் தொனி. எதிர்மறைப் பதிலை உசுப்புகிற தொனி.

சும்மாவே ஆத்திரத்திலிருந்த சமுத்திரத்துக்கு அவள் கேட்ட விதம் சுள்ளென்றுபட்டது. மிளகாயை அரைத்துக் கன்னத்தில் அப்பிய மாதிரியிருந்தது.

சட்டென்று நிமிர்ந்த பார்வையிலேயே அக்னிச் சீறல்.

''அறிவுகெட்ட நாயி! ஒனக்கு எத்தினி தடவை சொல்றது? செவுட்டுக் கழுதையா? இல்லே? கிறுக்கு பிடிச்சிருச்சா?''

கோபம் கோபமாய் கையை நீட்டி நீட்டிக் கத்தினான். கத்திய கத்தலில் வீடே ஒரு நடுக்கம் நடுங்கியது.

''என்ன சொல்லுதீக?''

''ஒன்னோட அதட்டல் உருட்டலுக்கெல்லாம் பயந்து நடுங்க ஆளில்லை. கோயில் கொண்டாட்ட மெல்லாம், காடு கரை வெளைஞ்சு, கைத்துட்டு மிஞ்சுன பெறகு போவலாம்.''

''பொட்டச்சி சொல்லுக்கு இந்த வீட்லே மதிப்பு இல்லியா?''

''மதிக்குறதைத்தான் மதிக்கலாம்... எல்லாச் சொல்லுக்கும் கட்டுப்பட்டு, பயந்து நடுங்க முடியாது.''

''வக்கத்த வீட்லேயிருந்து வந்த நாதியத்த வங்கிற ஏளனத்துலேதானே, இப்படி எடுத்தெறிஞ்சு பேசுதீக?''

''ஆமாடி... ஆமா...! நீ என்ன உங்க ஆத்தாவீட்லே ஊஞ்சல் கட்டி ஆடிக்கிட்டிருந்த சீமான் பரம்பரையா? நாயி, பேசாம கெடையேன்...''

''ஆத்தா கீத்தான்னு மரியாதைக் கொறவா பேசக் கூடாது... பேசுனா... சரிப்படாது. பேச்சுக்குப் பேச்சு வரும்.''

''பேச்சு வருமா? பேசுருவீயோடி...? பல்லைக் கில்லை ஒடைச்சிருவேன்... நாயி...''

''எங்கே? உடைங்க பாப்போம்.''

ஏறிக்கொண்டே வந்த உஷ்ணம், உச்சகட்டமாகி விட்ட ஸ்தாயி. அக்கினிச் சீறலாக, எகிறிக்கொண்டே, பெரிதாகிவிட்ட உணர்ச்சி வெக்கை. கோப வார்த்தைகளின் உரசல் தீப்பொறிகள்.

ஆங்காரமாய் ஒரு எட்டு முன்வைத்தாள் சரசு. அந்தச் சவாலோடு அவ்வளவுதான்.

வெடித்துவிட்டான் சமுத்திரம். குபீரென்று எழுந்து பாய்ந்தான். வேகத்தில் ஓங்கிய கை மாறாமல், 'சப்' பென்று அறைந்தான். முகத்தில் அறைந்த அறையில் இவனது உள்ளங்கையே காந்தியது.

''ஐயய்யோ... பாவி! என்னைக் கொல்றானே...''

அவளது முடியை இடதுகையால் கொத்தாகப் பற்றி வெக்கென்று ஓர் இழுப்பு இழுத்தான். நிலை குலைந்து அலைபாய்ந்த சரசுவை வலதுகையால் ஆத்திரம் ஆத்திரமாக.

''பட்டா...ர்! பட்... டார்...! பட்... டார்!''

''ஐயய்யோ அம்மா... ஐயய்யோ அம்மா... என்னை அடிச்சுக் கொல்றானே... கேக்க நாதி யில்லையா?''

சரசுவின் அழுகைக் கதறல். வீறிட்ட கதறல்.

தெருஜனம் 'என்னமோ, ஏதோ'வென்று பதைப்பில் ஓடி வந்து எட்டிப் பார்த்தது. பார்த்தவர்கள் பதறினார்கள்.

*ஆணும் பெண்ணும் ஓடிவந்தனர். மத்திய வயசும் பெரிசுகளுமான ஆட்கள். எல்லோரும் வந்து, சமுத்திரத்தைச் சத்தம் போட்டனர். நெட்டித் தள்ளி, வெளிமுற்றத்துக்குக் கொண்டுவந்தனர்.*

*ஆள் ஆளுக்குச் சத்தம் போட்டுக் கண்டித்தனர். கோபமும் அதட்டலுமாய் புத்திமதி சொன்னார்கள்.*

*''ச்சேய்! மனுசப்பய செய்ற காரியமா? கட்ன பொண்டாட்டியை கைநீட்டி அடிக்கலாமா? அவளும் ஒரு மனுஷியில்லே?''*

*''எதுவாயிலிருந்தாலும் வாய்ட்டுத்தான் பேசணும். கைய்ட்டுப் பேச ஆரம்பிச்சா எப்படி? கை வலுத்தவன் வச்சது சட்டமாகிடவா?''*

*''அதானே.. பொம்பளையை அடிக்குறது கெட்டிக்காரத்தனமா? பேச்சுப் பிடிக்கலியா? எந்திருச்சு வெளியே போயிற வேண்டியதுதானே? அதுக்காக... எப்படி?''*

*''பொம்பளையும் எதுத்து அடிச்சா... என்ன பண்ணுவே? யாருக்குக் கேவலம்? ஒங்களுக்குத் தானே...?''*

*''சண்டைச் சத்தம் கேக்காத வீடு, சமுத்திரம் வீடுன்னு ஊர்லே ஒரு பேரு இருந்துச்சு. அதை நாசக் காடு பண்ணிட்டீயே பாவி.''*

*- இப்படி ஆண்கள் வெளிமுற்றத்தில் இவனை விளாச... வீட்டிற்குள் தலைவிரிகோலமாக அலங் கோலமாகக் கிடந்து அழுது கேவுகிற சரசுவிடம் ஆறுதல் வார்த்தைகளும் கண்டிப்புச் சொற்களுமாய் கிராமத்துப் பெண்கள்.*

இதெல்லாம் தெரியாமல் விரல் சூப்புகிற 'சிப், சிப், சிப்' பென்கிற சத்தக் கிறுகிறுப்பில் லயித்துப் போய் உறங்கிக் கொண்டிருக்கிறாள் ஈஸ்வரி.

சண்டை போட்டவர்களை விலக்கி விட்டு, சத்தம் போட்டு, கண்டித்து, உபதேசம் பண்ணி... அறிவுரைகள் கூறி...

''இனிமேயாச்சும் வீட்டுச்சத்தம் வெளியே வராம புத்தியோட நடந்துக்கோங்க'' என்று சமாதானம் செய்து வைத்துவிட்டு...

''நீ சாப்ட்டீயா...? சாப்டலியா... வவுறை காயப் போட்டுட்டு வாழ்ந்துர முடியாது. சாப்புடு. சாப்புட்டுட்டு ஆகுற வேலைகளைப் பாருங்க'' என்று இங்கிதமும் அன்புமாய் வாழ்க்கை நதியில் அவர்களைச் சுமுகமாக இறக்கிவிட்டு, இயல்பாக இயங்க வைத்துவிட்டு கிராமத்து மக்கள் அவரவர் வீட்டுக்குப் போக... சாமத்துக்கும் மேலாகிவிட்டது.

இந்தக் கிராமத்துப் பண்பாடு அந்த நள்ளிரவிலும் ஒளி குன்றாது பிரகாசித்துக் கொண்டிருந்தது.

எல்லோரும் போன பிறகு —

உள்ளே நுழைந்த சமுத்திரம்.

அடிபட்டுக் குலைந்து கிடந்த சரசு. தலைமுடியை அள்ளி முடிந்திருந்தாலும்... கிழித்துப் போட்ட கந்தல் காகிதச் சித்திரமாக சோகப்பிம்பமாகத் தோன்றிய சரசு.

வேதனையும் அவமான அவஸ்தையும் ததும்பிய அந்தக் கண்கள். அதில் துளிர்த்து நின்ற நீர் முத்து.

குத்துண்ட பறவையின் வலியோடு அவள் பார்த்த பார்வை. ஆத்மபங்காளியின் அந்தச் சோகம்...

சமுத்திரத்துக்குள் சமுத்திரப் பிரளயம். குற்ற உணர்வு முட்களின் குத்தல்கள். ''நா பாவியா யிட்டேன்... நா பாவியாயிட்டேன்'' என்று ஓயாமல் அரற்றுகிற உள் மனசு.

காயங்களை ஆற்றிக்கொண்டு நாளையும் பொழுதையும் தள்ளிக்கொண்டு நகர்கிறது வாழ்க்கை.

பத்து நாட்களுக்கும் மேலாயிற்று.

## 17

சமுத்திரம் எள்ளுப் புஞ்சையின் பொழியில் நடக்க, அவன் வலதுகைச் சுண்டுவிரலைப் பிடித்துக் கொண்டு ஈஸ்வரி வந்தாள்.

மார்கழி மாத வெயில், தங்கத் தூளைத் தூவின மாதிரியிருந்தது வெயில். நிலா வெளிச்சம் போல இதமாகவும் இருந்தது. பனியில் நனைந்த ஈரவெயில்.

புஞ்சையைப் பார்க்க மேல்துண்டை எடுத்து தோளில் போட்டவுடன்... ஈஸ்வரி, அய்யாவிடம் மழலைக் கொஞ்சலாகக் கேட்டாள். கழுத்தைச் சாய்த்துக் கொண்டு அவள் கேட்ட ஒயில்.

சமுத்திரத்துக்குள் மயக்கமாக இருந்தது.

''ய்யா... புஞ்சிக்கா... போறீக? ம்?''

''ஆமாம்மா...''

''எந்தப் புஞ்சிக்கி?''

''எள்ளுப்புஞ்சைக்கும்மா.''

''கர்சக்காட்டுக்கா?''

''ம்...''

''அங்க குயில் இருக்கும்லே? என்னய்யா...?''

''இருக்கும்மா... குயிலும் இருக்கும். குயில் மாதிரியே கூவுற செம்போத்தும் இருக்கும். கொக்கும் இருக்கும். மைனா இருக்கும். குருவி இருக்கும்.''

''பொன்வண்டு இருக்குமாய்யா?''

''இருக்கும்மா...''

'' நா உங்ககூட வரட்டா?''

''அம்புட்டுத் தூரம் நடந்துருவீயா?''

''ம்ம்... நடந்துருவேன்யா...''

''சரி, அப்ப வா..''

ஆயினும் ஊரைக் கடக்கிற வரைதான் அவளை நடக்கவிட்டான். அப்புறம் தூக்கிக்கொண்டான். ஈஸ்வரிகூட மறுத்தாள்.

''வேண்டாம்... வேண்டாம்'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

''ரொம்பத் தூரம்மா... ஒன்னாலே நடக்க முடியாதும்மா... அய்யா தூக்கிடுதேன். புஞ்சை கிட்டே வந்ததும் இறக்கிவுட்டுருதேன். ம்... சரிதானே?''

''ம்.''

அரைமனதாக சம்மதித்தாள். தோளில் உட்கார்ந்து கொண்டாள். இதோ புஞ்சைப் பொழி. இருவரும் நடந்து வருகின்றனர்.

மழை கொஞ்சம் பின்வாங்கிவிட்டது. பொழுதுக் காலும் தெரிகிறது. அஸ்தமனத்திலும் அழகாயிருப்பது அந்திச் சூரியன்தான். தங்கத் தகடாகத் தகதகத்தது. மேற்குத்தொடர்ச்சி மலை தெரியாமல் மேகக்கூட்டம். மேகம் பூராவும் அந்திச் சூரிய ஒளிபட்டு... ஒரு கனவுலோகமாக வார்த்தைப் படுத்த முடியாத வர்ணப் புதுமையாகத் தோற்ற மளித்தது.

எள்ளுச்செடிகளின் பசுமை மாறியிருந்தது. ஏறக்குறைய எல்லா இலைகளும் பழுத்து மஞ்சளாகி விட்டன. பல இலைகள் உதிர்ந்துவிட்டன. காய்கள் நிறைந்த சடைப்பின்னல்களாய் கிளைகள்.

ஒரு நல்ல வெள்ளாமையை செழித்த விளைச்சலை - பார்த்த ஒரு சம்சாரிக்குரிய பெருமிதம் சமுத்திரத்திற்குள். பார்த்துப் பார்த்துப் பூரித்தான். நற்சதுரமாய் விரிந்து கிடந்த அந்தக் கரிசல்காடு. மண் தெரியாத எள்ச்செடி அடர்த்தி. இடைஇடையே நெருஞ்சிச்செடிகள் தரையில் படர்ந்திருந்தன. அள்ளியிறைத்த ஆகாய நட்சத்திரங்களாக அதன் மஞ்சள் பூக்களின் ஒளி.

பொழி அகலமான பொழி. செஞ்சரள் போட்டு உயர்த்திய கரை. தகப்பனும் மகளும் சேர்ந்தாற்போல நடந்து வரப் போதுமான அகலம்.

சமுத்திரம் மனசு உழுத நிலமாக மிருதுவாகி யிருந்தது. ஒரு செழித்த விளைச்சலுக்குச் சொந்தக் காரன் என்ற மனநிலையின் மகிழ்ச்சி. மாணிக்கம் மாமாவே பார்த்து ஆசைப்படுகிற அளவுக்கு விளைச்சல். அந்தப் பெருமை. சந்தோஷம்.

அப்படிப்பட்ட பெருமைப் பூரிப்பில்... உழுத நிலமாகக் கனிந்திருந்த கணத்தில்தான் -

ஈஸ்வரி ஏதேதோ சொல்லி மிழற்றிக்கொண்டே வந்தாள். அவள் கேட்ட கேள்வியில் முழுசாக மனம் பதியாமல்... அரைகுறையாகவே. 'ம்' கொட்டி வந்தான். பட்டும் படாமல்... மகளின் பிஞ்சுக் கேள்விகளில் மனசு ஒட்டியும் ஒட்டாமல்... பழகிப் போன யந்திர கதியிலே பதில் சொல்லி வந்தான்.

மரம்... பூ... புல்வகை... பறவைகள். வண்ணத்துப்பூச்சி... தட்டான் பற்றியே மகளின் கேள்விகள்.

''மஞ்சணத்தி மரம் நல்ல மரம் இல்லேல் லேய்யா?''

''ஆமம்மா... நல்ல மரமில்லே.''

''ஏய்யா?''

''அது மண்ணோட சத்தையும் உறிஞ்சிரும். காத்தோட ஈரப்பதத்தையும் உறிஞ்சிரும். மனுசருக்கு நல்ல காத்தை வரவிடாது.''

''ஆனா... அந்த மரத்தோட பூ நல்லா மணக்கும்லே?''

''ஆமம்மா...''

''ஏய்யா?''

''எனக்குகெப்படியம்மா தெரியும்?''

''வெள்ளை மைனான்னு ஒரு மைனா இருக்குதாய்யா?

''ஆமம்மா...''

இப்படியான கேள்விகள், இப்படியான பதில்கள். மனத்தீவிரம்... முழுவதையும் தோட்டத்தில் - வெள்ளாமையில் - சீட்டுக்காரனிடம் அடகு வைத்த நகையில் - சொஸைட்டிக் கடனில் - கெட்ட கனாவாக நடந்த வீட்டுச் சண்டையில்... என்று நாலா திக்கும் செலுத்திவிட்டு... வெறும் உதடுகளால் ஈஸ்வரிக்குப் பதில் சொல்லிக்கொண்டே வந்தான்.

சாதாரணக் கேள்விகள்.

சாதாரணப் பதில்கள்.

பொழியில் நடந்துகொண்டேயிருந்தான். விரலைப் பிடித்துக்கொண்டு குதித்துக் குதித்து நடக்கும் ஈஸ்வரி. அவளது சின்ன உலகம். சிக்கல்களோ கடன்தொல்லைகளோ... மான அவமானங்களோ இல்லாத உலகம். தட்டான்களின் வர்ண உலகம். மைனாக்களின் - செம்போத்துகளின் இசை உலகம். பூக்களின் ஒளிமயமான வாச உலகம். குதூகல மனசின் உல்லாச உலகம்.

உள்மன உலகத்திலேயே லயித்துப்போய்... தேனில் சிக்கிய எறும்பாக மீள விரும்பாமல் திளைத்த சமுத்திரம்...

தூக்கியெறிந்த மாதிரி... அல்லது இழுத்து வீசின மாதிரி நிஜ உலகத்திற்கு வந்தான். திடுக்கிட்டு மனசின் வெலவெலப்போடு திகைத்தான். அவனை இழுத்து வீசினது... ஈஸ்வரியின் கேள்விதான்.

அவள் கேட்ட வேள்வி சட்டையைப் பிடித்து உலுக்கிய கேள்வி மட்டுமல்ல... நெஞ்சையே பற்றி உலுக்கிய கேள்வி!

''புதுச்சட்டை எப்பய்யா எடுப்பிக...?''

''ஏம்மா?''

''கிழிஞ்சு போச்சுய்யா. நல்ல சட்டை பாவாடை ஒண்ணும் இல்லே... ஏங்கூடப் படிக்குற ராசாத்திக் கொரங்கு இருக்குல்லே? அது சொல்லுது... அவளுக்கு நல்ல நல்ல பூப்போட்ட பாலியஸ்டர் பாவாடை இருக்காம். நீங்க எனக்கு எடுத்துத் தரமாட்டீகளாம். அப்படியில்லேல்லேய்யா? எடுத்துக் குடுப்பீக இல்லே? எப்பய்யா குடுப்பீக?''

''எடுத்துருவேம்மா... நல்ல பூப்போட்ட பாலியஸ்டர் பாவாடை ரெண்டு எடுத்துத் தாரேம்மா... இன்னும் பத்தே நாள்லே.''

''ஐய்ய்க்! எங்க அய்யா, நல்ல அய்யா... எங்க அய்யா, தங்க அய்யா'' கைதட்டிச் சிரித்துக் கூத்தாடுகிற ஈஸ்வரி.

அவள் குதூகலமும் கும்மியடிப்பும் பூஞ் சிரிப்பும் தகப்பன் மனசில் ஏதோ ஒரு பரவசத்தை நிகழ்த்துகிறது.

பாச நெகிழ்வில் பிசைகிற மனது. இந்தப் பூவின் கனவை பூர்த்தியாக்கணுமே... கனிவும் குழைவுமான இந்த வேண்டுதலை நிறைவேற்றணுமே. ஏக்கமும் ஆசையுமான வேண்டுகோள்.

இதை நிறைவேற்ற பணம் வேணுமே.

விளைந்த வெள்ளாமையில் நகையைத் திருப்பி, கடன்களை அடைக்கவா, வீட்டுக்கே செலவழித்து விடவா?

அவனுள் மருகித் தவிக்கிற நினைவுகள். மன உளைச்சலை ஏற்படுத்துகிற பணப்பிரச்சினைகள்.

*''அய்யா.''*

*''என்னம்மா?''*

*''மரம் அசையுமா?''*

*''அசையாதே...''*

*''மரம் ஓடுமாய்யா?''*

*''ஓடுமா? யாரு சென்னது? அதெப்படி ஓடும்?''*

*''இல்லேய்யா... ஓடுமாம். மரம் ஓடுமாம்...''*

*''யாரு சொன்னது?''*

*''மேலத்தெருவுலேயிருந்து ஏங்கூடப் படிக்கான்லே... அந்த வாசுப் பயதான் சொல்லுதான். அவன் சொன்னா, நெசமாத்தான் இருக்கும்.''*

*''என்ன சொல்லுதான்?''*

*''மரம் ஓடும்னு...''*

*''அதெப்படி ஓடும்?''*

*''இல்லேய்யா... மரம் ஓடுமாம். அவன் பாத்துருக்கானாம். மரம் பின்னாலேயே ஓடுமாம். சுத்திக்கிட்டே ஓடுமாம்.''*

*''அதெல்லாம்... சுத்தப்பொய். நம்பாதே...!''*

*''ஐயய்யே... அய்யாவுக்குத்தான் ஒண்ணும் தெரியலே. மரம் ஓடும்...''*

*''என்னம்மா... சொல்லுதே?''*

*''வாசுப் பய அவுக மாமா வீட்டாளுக கூட கொல தெய்வம் கோயிலுக்கு வேன்லே போனானாம். வேன் வேகம் வேகமாப் போவுமாம். பாட்டு படிச்சுக்கிட்டே போவுமாம். வேன்லே உக்காந்துக்கிட்டு, அவன் பாத்துக்கிட்டே போனானாம். மரமெல்லாம் சுத்திக் கிட்டே பின்னாலேயே ஓடுச்சாம். அவன் பொய்*

சொல்லமாட்டான். நெசமாத்தான் இருக்கும். மரம் ஓடும் இல்லே? என்னய்யா?''

''ஓடுற வேன்லே உக்காந்து பார்த்தா... மரம் ஓடுற மாதிரித்தான் தெரியும்மா. நெசந்தான்.''

''அய்யா... அய்யா... அய்யா...''

''என்னம்மா?''

''நானும் மரம் ஓடுறதைப் பாக்கணும்யா? முடியுமாய்யா?''

''ம்... ம்... ம்''

''நாம பாக்கணும்யா. மரம் ஓடுறதைப் பாத்தா... நல்லாயிருக்கும்லே? பாக்கணும்யா? பாப்போமாய்யா?''

அவனுக்குள் பூரான் ஊர்கிற உணர்வு. தர்ம சங்கடமான திணறல். என்ன பதில் சொல்ல? எப்படிச் சொல்ல. பணப்பிரச்சினை. வாழ்க்கைப் பிரச்சினை. வீட்டை பத்து நாளாக நரகமாக்கிய அதே பிரச்சினை. கனத்த பாறைப் பிரச்சினை. பாரப்பிரச்சினை. மகளைப் பார்த்தான். அந்தி வெயிலின் தங்க மின்னலாக கண்ணின் ஒளி. ஆர்வமும் ஆசையுமாய் வண்ணத்துப்பூச்சியின் பூஞ்சிறகாக சடசடக்கிற அவளது இமைகள். மனப் பரபரப்பும் மோகக் கிறுகிறுப்புமாய் மழலைத் தனமாய் கேட்கிற அவளது அவசரம். ஆர்வப் பட படப்பு... ஒரு பூவின் மெல்லிய கனவின் றெக்கையடிப்பு.

''பார்ப்போமாய்யா? பார்ப்போமாய்யா? ஓடுற வேன்லே உக்காந்துக்கிட்டு... ஓடுற மரத்தை நாமளும் பார்ப்போமா அய்யா?''

தன் ரத்தம். ரத்த நிழல். வம்சத்தொடர்ச்சி. அம்மாவின் குணத்தை உரித்துக்கொண்டு, அய்யாவின் சாயலை வரித்துக்கொண்டு வந்து பிறந்திருக்கும் தனது

வம்ச அம்சம். ஒற்றைமகள். பூங்கொத்து மாதிரி... மணிக்கொத்து மாதிரி... ஒரே மகள். ஆசைகளையும் கனவுகளையும் பூசிப்பூசி வளர்த்த பாச மகள். அவளது பூங்கனவை, வெகுளித் தனமான மழலை ஆசையை நசுக்கி எறிவதா? கசக்கிக் கீழே போடுவதா? இந்த அன்புபாசத்தை, நம்பிக்கையை அறுத்தெறிவதா?

அவன் மனம் பதறியது. குலைநடுங்கியது. அடிவயிற்றில் ஒரு பிசைவு. மனநெருக்கடி. ஆயினும் —

''ம் ம்... பாப்போமா... நாம பாப்போம்மா'' என்றான். அரை உயிராக, அரை மனசாக.

''முடியாதுய்யா... நம்மாலே முடியாது.''

''முடியும்மா.''

''அவுக பணக்காரவுக... நாம ஏழைக. இல்லேய்யா?''

''ஆமாம்மா... ஆனாலும் முடியும்மா... முடியும்னு காட்டுதேன். தலையை அடகுவைச்சாச்சும் முடியும்னு காட்டுதேம்மா...''

பரிகாசமாக கைதட்டிச் சிரிக்கிற ஈஸ்வரி.

''ஏம்மா...''

''நகையை அடகுவைச்சா... வாங்குவாக. தலையை அடகுவைச்சா... யாரு வாங்குவாக? அய்யாவுக்கு இதுகூடத் தெரியலே.''

''இல்லேம்மா... அய்யாவுக்குத் தெரியும். தலையை அடகுவைச்சா, வாங்க மாட்டாக. எள்ளு வெள்ளாமையை அடகுவைச்சா வாங்கத் தயாராயிருக்காக.''

ஏதோ தீவிர யோசனையோடும் வைராக்கிய மான உறுதியோடும் அய்யா சொல்கிற வினோதம். ஏதோ வெறிபிடித்தவர் போல எங்கோ வெறிக்கிற அய்யா.

அய்யாவையே புரியாமல் நிமிர்ந்து அண்ணாந்து பார்த்தாள். பார்வையில் குழப்பம். மர்மம் விலகாத குழப்பம்.

''நாம வேன்லே போகப் போறாமாய்யா?''

நம்பமுடியாமல், தலைகாட்டிய சந்தேகத்தில் வெடித்த பூக்கேள்வி.

''ஆமாம்மா... போகத்தான் போறோம்மா. புதுச் சட்டை போட்டு, பாட்டு படிக்குற வேன்லே... ஓடுற மரங்களைப் பார்த்துக்கிட்டு... கொலதெய்வம் கோயிலுக்குப் போகத்தான் போறோம்மா. தை பொறந்தவுடனே போவோம்மா...''

ஈஸ்வரிக்கு தாளமுடியாத சந்தோஷம்.

''அய்ய்க்... அய்ய்ய்க்... அடிசக்கை... அடிசக்கை...''

குதித்துக் கும்மாளமிடுகிற ஈஸ்வரி. கைதட்டலும் சிரிப்புமாக குதூகலிக்கிற அந்தப் பீர்க்கைப்பூ. பூவின் மலர்ச்சியோடும் ஒளிப் புன்னகையோடும் உற்சாக நதியாக சுழன்றோடுகிற உல்லாசச் சிட்டு. றெக்கை யடித்து ஆகாயமெல்லாம் மகிழ்ச்சியைப் பரப்புகிற சின்னப் பறவையின் சிரிப்புச் சலங்கை.

அவளது கும்மாளத்தையும் குதூகல மலர்ச்சியை யும் பார்க்கப் பார்க்க இவனுள் ஒரு நெகிழ்வு, பாசப் பரவசம். நரம்புகளின் உள்ளோடுகிற மனச்சிலிர்ப்பு. ஆனந்த மிகுதியில் கண்ணில் துளிர்க்கிற நீர்ப்பூ.

பத்து வருஷ பந்தத்தில், ஆத்மாவோடு கலந்து கரைந்துவிட்ட சரசுவதியால் சாதிக்க முடியாததை... நேற்று பிறந்த இந்தச் சின்னஞ்சிறு பூ... ரொம்பச் சுலபமாகச் சாதித்துவிட்டதே!

ஆங்காரத்தினாலும் ஆத்திரத்தினாலும், குடும்பத்தையே நரகமாக்கிய நிர்ப்பந்தத்தாலும் நிகழ்த்த முடியாததை... ஒரு சின்னப் பூவின் வாஞ்சையும் அன்பும் மழலைத்தன நச்சரிப்பும் நிகழ்த்திவிட்டதே... அன்பு இத்தனை வலியதா? பாசம், எந்தத் தியாகத்திற்கும் தயாராகுமா?

முன்னோடும் சுண்டெலி போன்ற தன் மகளை ஒரு பிரமிப்போடும் மலைப்போடும் பார்த்தான் சமுத்திரம்.

சூரியன் அஸ்தமித்து விட்டது. மேற்கு வான மேகங்கள் இன்னும் கனிந்த சிவப்பில் ஒளிர்ந்தன. அந்த வெளிச்சம் தலையெல்லாம் பரவியிருந்தது.

கிளிகளும் குருவிகளும் கொக்குகளும் கூட்டம் கூட்டமாக பறந்து சென்றன.

மகளைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு, ஊர் நோக்கி நடந்தான் சமுத்திரம். சந்தோஷப் பெருக்கில் கூத்தாடும் மகளை மனசுக்குள் ரசித்தான்.

## 18

“அய்யாவும் மகளும் எங்க போய்ட்டு வாரீக?”

மகிழ்ச்சியும் பூரிப்புமாக வியப்போடும் கேட்டாள் சரசு.

வாசலில் நின்றாள். அவள் அப்போதுதான் குளித்திருந்தாள். தலையைச் சாய்த்து, இடதுதோளில் சரிந்து கிடந்த ஈரக்கூந்தலை சிணுக்கொலியால் கோதிக் கோதிச் சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள். ‘‘எள்ளுப் புஞ்சைக்குப் போயிருந்தோம்.’’

என்ற சமுத்திரத்தை முந்திக்கொண்டு-

''யம்மா... யம்மா...'' என்று ஆவல் பரப்பும் சந்தோஷக் கூத்தாட்டமுமாய்... 'செய்தி' சொல்லப் பறந்த ஈஸ்வரியை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

''சரசு...''

''என்னங்க...''

''ஈஸ்வரி ஒரு முக்கிய விஷயம் சொல்லுவா.''

''என்ன விஷயம்?''

''சொல்லுவா, நாம் போயி... மாணிக்க மாமாவை பார்த்துட்டு வாரேன்...''

''அவரை எதுக்குப் பாக்கணும்?''

''பணத்துக்குத்தான்.''

''பணமா...? எதுக்கு...?''

''எள்ளுக்கு. எள்ளு வெள்ளாமைக்கு...''

''என்ன சொல்லுதீக? ஒண்ணும் புரியலே.''

''ஈஸ்வரி சொன்னா... ஒனக்கு எல்லாம் புரியும். நா போய்ட்டு வாரேன்.'' என்று சொல்லிவிட்டு தெருவில் இறங்குகிற புருஷனை ஒரு புதிரைப் பார்ப்பது போல புரியாமையோடு பார்த்தாள்.

அப்புறம் -

மகளைப் பார்த்தாள்

அவள்.

அவள் ஆனந்தப்பெருக்கு தாளாமல் தத்தளித்துக் கொண்டிருந்தாள். ஆசை ஆசையாக அந்த மகிழ்ச்சியை வார்த்தையாக்க முடியாமல், திண்டாடிக் கொண்டிருந்தாள், ஈஸ்வரி.

**நிறைந்தது**

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| மானுடம் வெல்லும் | (சிறுகதைத் தொகுப்புகள்) |
| சிபிகள் | " |
| பூக்காத மாலை | (அனந்தாச்சாரி அறக்கட்டளை விருது) |
| மானுடப் பிரவாகம் | " |
| பூச்சுமை | (லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது) |
| தாய்மதி | " |
| காகிதம் | " |
| கணக்கு | " |
| விரல் | " |
| உயிர்க்காற்று | (பாரத ஸ்டேட் வங்கி விருது) |
| என் கனா | " |
| மனப் பூ | (தமிழக அரசின் இலக்கிய விருது) |
| ஒருமாலைப் பூத்துவரும் | (தமிழக அரசின் இலக்கிய விருது) |
| அன்பூ வாசம் | (திருப்பூர் தமிழ்ச்சங்க, பாரத ஸ்டேட் வங்கி விருதுகள்) |
| வெண் பூ மனம் | " |
| மானாவாரிப் பூ | (அமரர் தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் இலக்கிய விருது) |
| ராசாத்தி | |
| மின்சாரப் பூ | (மத்திய அரசின் சாகித்ய அகாடமி விருது) |
| பூமனச் சுனை | |
| பூமாயன் | |
| பூக்கும் மாலை | |
| சூரிய வேர்வை | |
| கோடுகள் | (குறுநாவல் தொகுப்புகள்) |
| தழும்பு | |
| மரம் | |
| பாசத் தீ | |
| முற்றுகை (நாவல்) | (கல்கி பொன்விழா முதல் பரிசு) |
| இனி | |
| அச்சமே நரகம் | |
| ஆகாயச் சிறகுகள் | |
| ஊர்மண் | (பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது) |
| முழுநிலா | |

சிறுகதைப் படைப்பின் உள் விவாகரம்.

★ - ★ - ★

